# TNPSC தேர்வுப் பெட்டகம்

## நடப்பு நிகழ்வுகள் - ஜனவரி 2026

www.tnpscthervupettagam.com





SHANKAR IAS ACADEMY™
Best Academy for Civil Services Exam Coaching
SINCE 2004

107/255, AL - Block, 4th Avenue,
Anna Nagar, Chennai - 600 040.
Phone - 044-26216435, 4353 3445, Mobile: 9444166435
www.shankariasacademy.com

# உள்ளடக்கம்

TNPSC துளிகள் ........ 14
தமிழ்நாடு செய்திகள் ........ 25
தமிழ்நாடு ஓய்வூதியக் குழு அறிக்கை ........ 25
மதராஸ் பல்கலைக்கழக திருத்த மசோதா ........ 26
மதுரை மற்றும் கேம்பர்லே - இரட்டை நகரங்களின் உறவுகள் ........ 26
வால்கா முதல் கங்கை வரை புத்தகத்தின் தமிழ் மொழிபெயர்ப்பு ........ 26
பண்டைய வைணவ நினைவுச் சின்னம் ........ 27
வடகிழக்குப் பருவமழை 2025 ........ 27
2025 ஆம் ஆண்டில் வாகனப் பதிவுகள் ........ 28
2025 ஆம் ஆண்டில் PE–VC முதலீடுகள் ........ 29
ECMS வேலைவாய்ப்புகள் மற்றும் முதலீடு ........ 29
2025 ஆம் ஆண்டில் தமிழ்நாட்டின் கடன் நிலை ........ 30
தாமிரபரணி நதி மாசுபாடு வழக்கு ........ 32
தமிழ்நாடு அரசின் உறுதியளிக்கப்பட்ட ஓய்வூதியத் திட்டம் ........ 32
மாவட்ட கனிம அறக்கட்டளை விதிகள் ........ 32
தமிழ்நாடு அரசின் உறுதியளிக்கப்பட்ட ஓய்வூதியத் திட்டம் (TAPS) பகுப்பாய்வு ........ 33
சித்த மருத்துவ தினம் 2026 ........ 34
உ.வே. சுவாமிநாத ஐயரின் இசை படைப்புகள் ........ 34
TAPS திட்டம் ........ 35
உலகம் உங்கள் கையில் திட்டம் ........ 36
NTB பிராந்திய அலுவலகம் – ஈரோடு ........ 37
சிற்றாமைகளின் குஞ்சு பொரிக்கும் தளங்கள் ........ 37
தமிழ்நாடு-ஐ.நா. பெண்கள் கூட்டுறவு ........ 37
SCADA அடிப்படையிலான நீர்த்தேக்க மேலாண்மை ........ 38
பொதுக் கூட்டங்கள் குறித்த SOP ........ 38
உங்கள் கனவைச் சொல்லுங்கள் – வீடுவாரியான கணக்கெடுப்பு ........ 39
பசுந்தாள் உரத்தின் தாக்கம் ........ 39
சென்னையின் நகர்ப்புறப் போக்குவரத்தின் பரிமாற்றம் ........ 39
பழஞ்சோறு கஞ்சியின்/நொதித்த சோற்றின் ஆரோக்கிய நன்மைகள் ........ 40
யுனிசெஃப் - தமிழ்நாடு கூட்டாண்மை ........ 40
உள்ளார்ந்த தொழில்நுட்பம் சார்ந்த புத்தொழில் நிறுவனக் கொள்கை 2025–26 ........ 40
UmagineTN 2026 ........ 41
நம்ம அரசு வாட்ஸ்அப் சாட்பாட் ........ 41
TAPS குறித்த அரசாணை 2026 ........ 42
தமிழ்நாடு தகவல் ஆணைய விரிவாக்கம் ........ 42
தமிழ்நாடு மாநில குறிகாட்டி கட்டமைப்பு 2.0 ........ 42

**50 லட்சம் மெட்ரிக் அளவிலான நீண்ட நாள் கழிவுகள் அகற்றம்....43**
**செயலில் உள்ள கல்விக் கடன் கணக்குகள்....43**
**உலகத் தமிழ் புலம்பெயர்ந்தோர் தினம் 2026....43**
**iTNT–XeedQ குவாண்டம் ஒப்பந்தம்....44**
**தமிழ்நாடு மாநில விருதுகள் 2026....44**
**தமிழ்நாடு சுழற் பொருளாதார முதலீட்டுக் கொள்கை 2026....45**
**தமிழ்நாடு சேமிப்புக் கிடங்கு கொள்கை 2026....45**
**இந்தியாவின் முதல் இறையாண்மை AI பூங்கா....46**
**பழையாறை கோயிலில் கோபுரம் கட்டுமானம்....46**
**தமிழ்நாட்டில் மலேரியா ஒழிப்பு....47**
**தமிழ்நாட்டில் கழுகு வளங்காப்பு மண்டலங்கள்....47**
**பெருநிறுவன ஆராய்ச்சி மையம்....48**
**தமிழ்நாடு முதல்வரின் நான்கு வாக்குறுதிகள்....48**
**கொந்தகை ஏரி பருவநிலை ஆய்வு....48**
**எத்திலீன் கிளைகோல் பிரச்சினை....49**
**சமூக நீதி கண்காணிப்புக் குழு....49**
**இந்தி மொழி அல்லாத 7 மொழிகளுக்கான இலக்கிய விருது....49**
**தமிழ்நாட்டின் அயலகத் தமிழர் விருதுகள் 2026....50**
**பசுமைப் பள்ளிகளில் சூரிய ஆற்றல் ஆய்வு....50**
**தமிழ்நாடு மொழிபெயர்ப்பு மானியப் பட்டியல்....50**
**ஒசூர் விமான நிலைய திட்ட முன்மொழிவு....51**
**ஜான் டோ வழக்கு....51**
**இந்தியாவின் முதல் உலகளாவிய கல்வி உச்சி மாநாடு....51**
**2026 ஆம் ஆண்டு தமிழ்நாடு சட்டமன்றத்தில் ஆளுநர் உரை....52**
**குப்பைத் திருவிழா 2026....52**
**வடகிழக்குப் பருவமழையின் முடிவு....52**
**காற்றாலை மறு ஆற்றல் உற்பத்திக் கொள்கையில் திருத்தம்....53**
**மாற்றத்திற்கான இளம் தூதர்கள் முன்னெடுப்பு....53**
**உலகளாவிய சுற்றுலா உச்சி மாநாடு 2026....54**
**இயங்கலை சொத்து பதிவு - ஸ்பிரிண்ட் 1....54**
**சிறப்புப் பகுதி மேம்பாட்டு ஆணையம்....54**
**தமிழ்நாடு நீர்வள மசோதா, 2026....55**
**கலைஞர் கனவு இல்லம் திட்டம் – தமிழ்நாடு....55**
**சமூகப் பாதுகாப்பு ஓய்வூதிய விரிவாக்கம்....56**
**முன்னுரிமை நியமனத்தில் கட்டுப்பாடு....56**
**தமிழகத்தைச் சேர்ந்த பத்ம விருது பெற்றவர்கள்....56**
**மெட்ராஸ் முள்ளெலி ஆய்வு....57**
**இந்தியாவின் நீரிழிவு நோய் பெருந்தொற்று செறிந்த பகுதி....57**
**மக்களைத் தேடி மருத்துவம் – மாநில அளவிலான ஆய்வு....58**
**கனிமங்கள் அகழ்வு தொடர்பான விதிகள்....58**

இரும்புக்காலப் புதைகுழித் தளம் – கொடைக்கானல் ....58
TNWESafe திட்டம் மற்றும் HPV தடுப்பூசி இயக்கம் ....59
UGCயின் மொழிக் கொள்கை குறித்த அறிவிப்பு ....59
தமிழ்நாடு குடியரசு தின விருதுகள் 2026 ....60
நகராட்சிப் பத்திரங்கள் - கோயம்புத்தூர் மற்றும் திருப்பூர் ....60
**தேசியச் செய்திகள் ....61**
பயணிகள் உதவிக் கட்டுப்பாட்டு அறை (PACR) ....61
ஒரே சீரான தீவிரவாத எதிர்ப்புப் படை அமைப்பு ....61
தேசிய அதிர்வெண் ஒதுக்கீட்டுத் திட்டம் 2025 ....61
கப்பல் கட்டும் தொழிலுக்கான நிதி உதவித் திட்ட வழிகாட்டுதல்கள் 2025 ....62
வர்த்தக முத்திரைப் பதிவுகள் 2024–25 ....62
8வது மத்திய ஊதிய ஆணையம் ....63
சாலைகளின் பாதுகாப்பு கட்டுமானத்திற்கான தரநிலைகள் ....63
உலகின் மிகப்பெரிய அரிசி உற்பத்தியாளர் 2025 ....63
வாய்வழி நிம்சுலைடு மருந்துப் பயன்பாட்டிற்குத் தடை ....64
ECMS – கட்டம் III ....64
புதிய கலால் வரி மற்றும் வீத வரி ....64
நாடு தழுவிய VoWiFi சேவை ....65
புதிய முத்திரைச் சின்னம் மற்றும் உருவச் சின்னம் “சாங்க்யிகி” ....65
சமிமுல்லா மற்றும் பீகார் மாநில அரசு இடையிலான வழக்கு ....66
தேசியப் போதைப்பொருள் பயன்பாட்டுக் கணக்கெடுப்பு 2025–26 ....66
50வது PRAGATI கூட்டம் ....66
2026 ஆம் நிதியாண்டில் இந்தியாவின் முதலீடுகள் ....67
தேசியக் கல்வி ஆராய்ச்சி மற்றும் பயிற்சி சபைக்கு நிகர்நிலைப் பல்கலைக்கழக அந்தஸ்து ....67
தேசிய டிஜிட்டல் நில முன்னெடுப்பு – நிலப் பதிவு தரவுதளம் ....68
மருந்தியல் கண்காணிப்பில் இந்தியாவின் உலகளாவிய தரவரிசை ....68
வயது வந்தோர் திறன் மதிப்பீட்டு ஆய்வு 2026 ....69
Know Your Survey வழிகாட்டி ....69
இந்தியாவில் விவசாயிகளின் தற்கொலைகள் ....69
கலை-II நீர்மின் நிலையம் ....70
இந்தியாவில் ஓய்வூதியத் திட்டங்கள் ....70
இந்திய இராணுவத்திற்கான பிணையமாக்கல் ஆண்டு ....71
தேசிய சுற்றுச்சூழல் தர ஆய்வகம் ....71
தேசிய சூரிய மின்கல அளவுத்திருத்த மையம் ....72
நேரடி நிகழ்வுகள் மேம்பாட்டுப் பிரிவு ....72
மின்கலங்களுக்கான ஆதார் எண் ....73
இந்தியாவின் ரஷ்ய எண்ணெய் இறக்குமதி ....73
கற்கரி வர்த்தகக் கொள்கை ....74
பைரவ் ஆளில்லா விமானங்கள் பிரிவு ....74
வேளாண் சார் புத்தொழில் நிறுவனங்களுக்கான BHARATI ....74

வணிக ரீதியான உயிரி-நீலக்கீல் உற்பத்தி....75
உலகளாவிய மக்களாட்சி குறித்த மாநாடு - IICDEM 2026....75
DGMS அமைப்பின் 125ஆம் ஆண்டு ஸ்தாபன தினம்....75
இந்திய மக்கள் தொகை கணக்கெடுப்பு 2027 கால அட்டவணை....76
பூச்சிக்கொல்லி மேலாண்மை மசோதா, 2025....76
ரைசினா அறிவியல் தூதரக முன்னெடுப்பு (RSDI) 2026....77
தேசிய IED தரவு மேலாண்மை அமைப்பு (NIDMS)....77
பால் விவாஹ் முக்த் பாரத் பிரச்சாரம்....77
DLTT திட்டம்....78
PANKHUDI வலை தளம்....78
2025 ஆம் ஆண்டில் இந்தியாவின் தரவு மைய திறன் வளர்ச்சி....79
தேசிய விளையாட்டு வாரியம் (NSB)....79
ஷாக்ஸ்காம் பள்ளத்தாக்கு பிரச்சினை....80
இந்தியாவின் பால்வளத் துறையை டிஜிட்டல் மயமாக்குதல்....80
SHINE திட்டம்....81
ஆகாசா ஏர்....81
மாவட்ட தலைமையிலான ஜவுளித்துறைப் பரிமாற்ற (DLTT) முன்னெடுப்பு....81
2025 ஆம் ஆண்டில் உர உற்பத்தி....82
அகில இந்திய முக்கிய துறைமுக கலாச்சார நிகழ்ச்சி....82
உயிரிழப்பு இல்லா சாலைப் பாதுகாப்புத் திட்டம்....82
BHASHINI சமுதாயப் பயிலரங்கம்....83
DIME டிஜிட்டல் தளம்....83
ஊழல் தடுப்புச் சட்டத்தின் பிரிவு 17A....84
கடல் சார் உணவுப் பாதுகாப்பு உச்சி மாநாடு....84
சூரிய சக்தியில் இயங்கும் MAPSS கண்காணிப்பு ஆளில்லா விமானங்கள்....84
புதிய பாக்ஸ் சிலிக்கா உறுப்பினர் - இந்தியா....85
இந்திய வானிலை ஆய்வுத் துறையின் 151வது ஸ்தாபன தினம்....85
5வது ஸ்தாபன தினம் - CSIR–NIScPR....86
இந்திய கலங்கரை விளக்க விழா 2026....86
2025 ஆம் ஆண்டில் இந்தியாவின் தூய்மையான எரிசக்தி துறையின் சாதனை....86
தேசிய PNG இயக்கம் 2.0....87
NIRANTAR தளம்....87
ADMM-பிளஸ் தீவிரவாத எதிர்ப்பு சந்திப்பு 2026....88
நீதிபதி நீக்கத்திற்கான விசாரணைக் குழு....88
PM CARES தனியுரிமைகள்....89
ஒதுக்கீடு செய்யப்படாத இடங்கள் குறித்து உச்ச நீதிமன்றம்....89
உணவு விநியோகச் சீர்திருத்தச் செயல்பாடுகள்....89
NPS சீர்திருத்தக் குழு - M.S. சாஹூ....90
பெண் தொழில்முனைவோருக்கான தேசியப் பிரச்சாரம்....90
இந்தியாவின் உயிரிப் பொருளாதார வளர்ச்சி....91

UGC விதிமுறைகள் 2026 ....... 91
பழங்குடியினர் மருத்துவர்களுக்கான திட்டம் ....... 91
இந்தியாவின் முதல் பசுமை அம்மோனியா உற்பத்தித் திட்டம் – ஆந்திரப் பிரதேசம் ....... 92
உத்தி சார் வர்த்தக கட்டுப்பாடுகள் 2026 ....... 92
இந்திய அஞ்சல் வழியான முதல் ONDC விநியோகம் ....... 92
வன வளங்காப்பு வழிகாட்டுதல்கள் 2026 ....... 93
ஊக்கமளிக்கும் புதுமைப்பித்தன் திறன் முன்னெடுப்பு ....... 93
இந்தியாவின் நிலக்கரி மின் உற்பத்தி ....... 94
பசுமை இல்ல வாயு உமிழ்வு தீவிரத்திற்கான இலக்கு விதிகள், 2025 ....... 94
ராபி பயிர்ச் சாகுபடி பரப்பளவு 2025–26 ....... 95
கடல் ஆராய்ச்சி திட்டம்: சாகர் மைத்ரி-5 ....... 95
இந்தியாவின் இரண்டாவது LNG விநியோக நாடு – ஐக்கிய அரபு அமீரகம் ....... 95
சுற்றுச்சூழல் பாதுகாப்பு நிதி விதிகள் 2026 ....... 96
இந்தியாவின் முதல் கனிமக் கொள்கை ....... 96
எஃகு கசடு தொழில்நுட்பம் ....... 97
அடல் ஓய்வூதிய யோஜனா நீட்டிப்பு ....... 97
தேசிய சட்டமன்றக் குறியீடு ....... 98
அகில இந்திய சபாநாயகர் மாநாடு 2026 – உத்தரப் பிரதேசம் ....... 98
தேசிய மின்சாரக் கொள்கை வரைவு 2026 ....... 98
இராணுவ குவாண்டம் திட்டக் கொள்கை கட்டமைப்பு ....... 99
இந்தியாவின் முதல் நகர்ப்புறப் பருவநிலை நிகழ்வு ....... 99
PM SWANidhi கடன் அட்டை ....... 100
மீன் வளர்ப்பு திட்டம் ....... 100
கூட்டுறவு வலையமைப்பில் இந்தியாவின் தரவரிசை ....... 101
டெல்லி பிரகடனம் 2026 ....... 101
டிஜிட்டல் காலநிலை வரைபடம் ....... 101
இந்தியாவின் 77வது குடியரசு தினம் – முக்கிய அம்சங்கள் ....... 102
கிரந்த குடீர் ....... 102
100 GW நீரேற்ற சேமிப்பு ....... 103
குடியரசு தின அணிவகுப்பில் LR-AShM ஏவுகணை ....... 103
கார்பன் மதிப்பு வர்த்தகத் திட்ட விரிவாக்கம் ....... 103
இராணுவ கால்நடைப்பிரிவு அணிவகுப்பு 2026 ....... 104
இந்தியாவின் மலேரியா தடுப்பு முன்னேற்ற அறிக்கை ....... 104
இந்தியாவின் புதுப்பிக்கத்தக்க ஆற்றல் திறன் ....... 105
இந்தியாவின் முதல் தேசிய வருமான ஆய்வுகள் ....... 105
**சர்வதேசச் செய்திகள் ....... 106**
2,200 ஆண்டுகள் பழமையான சீன நெடுஞ்சாலை ....... 106
புதிய பண மதிப்புத் தொடர் - சிரியா ....... 106
கினியா அதிபர் தேர்தல் ....... 106
புதிய கிரிப்டோ சட்டம் – துர்க்மெனிஸ்தான் ....... 107

வருடாந்திர அணுசக்திப் பட்டியல் பரிமாற்றம் 2026 ...107
யூரோ மண்டலத்தின் 21வது உறுப்பினர் – பல்கேரியா ...107
ஐரோப்பிய ஒன்றியத்தின் பருவநிலை வர்த்தக நடவடிக்கை ...108
கங்கை நீர்ப் பகிர்வு குறித்த இருதரப்புப் பேச்சுவார்த்தைகள் ...108
UNSC சபையின் 2026 ஆம் ஆண்டிற்கான நிரந்தரமற்ற உறுப்பினர்கள் ...109
உலகளாவிய ஆளுகை முன்னெடுப்பு ...109
மன்றோ கோட்பாடு ...109
உலகளாவிய குறைந்தபட்ச வரி ஒப்பந்தம் ...110
அமெரிக்காவின் வெளியுறவுக் கொள்கை மாற்றம் ...110
ஓரினோகோ மண்டலம் மற்றும் கயானா கேடயப் பகுதி ...111
பிரிக்ஸ் அமைப்பின் தலைமைப் பதவி ...111
முக்கிய கனிமங்கள் குறித்த G7 பேச்சுவார்த்தைகள் ...111
வெய்மர் முக்கோணம் ...112
சர்வதேச புதுப்பிக்கத்தக்க எரிசக்தி முகமை ...112
ஏமனில் புதிய அரசியலமைப்பு ...113
ரஷ்ய புதைபடிவ எரிபொருள் இறக்குமதிகள் ...113
இந்தியா-ஜெர்மனி அரசுமுறை உறவுகள் ...114
ஐக்கிய நாடுகள் சபையின் பெருங்கடல் ஒப்பந்தம் ...114
ஐ.நா. அமைப்புகளிலிருந்து இஸ்ரேல் விலகல் ...114
உலகின் மிகப் பழமையான பாயும் நதி - ஃபின்கே நதி ...115
2025 ஆம் ஆண்டில் சீனாவின் மக்கள்தொகை சரிவு ...115
இந்தோ-பசிபிக் பெருங்கடல் முன்னெடுப்பு ...115
காசாவிற்கான 'அமைதி வாரியம்' ...116
உலக சுகாதார அமைப்பிலிருந்து அமெரிக்கா வெளியேற்றம் ...116
கார்னே கோட்பாடு ...117
உலகளாவிய எதிர்காலம் குறித்த மன்றங்களின் கூட்டம் ...117
இந்தியாவில் நான்காவது தொழில்துறைப் புரட்சி மையம் ...118
BRICS பிளஸ் கடற்படைப் பயிற்சி ...118
ECOSOCன் 80 ஆண்டுகள் ...118
ஐரோப்பிய ஒன்றியத்தின் வர்த்தக 'பசூக்கா' ...119
ஜப்பானில் UPI வசதி ...119
ASEAN-இந்தியா டிஜிட்டல் அமைச்சர்கள் கூட்டம் ...119
இந்தியா-ஐரோப்பிய ஒன்றியத்தின் முதல் பாதுகாப்புக் கூட்டாண்மை ...120
டாலர் குறியீடு வீழ்ச்சி ...120
பொருளாதாரச் செய்திகள் ...121
இந்தியாவின் பொருளாதார வளர்ச்சி ...121
இந்திய ரிசர்வ் வங்கியின் அறிக்கை ...121
NBFC வங்கிகளுக்கான அளவு சார் ஒழுங்குமுறை ...122
தொழில்துறை உற்பத்திக் குறியீட்டின் வளர்ச்சி - நவம்பர் 2025 ...122
சந்தை அணுகல் ஆதரவுத் திட்டம் ...122

நிதி நிலைத்தன்மை அறிக்கை 2026 ..... 123
புதிய சலுகைகளுடன் இணைக்கப்பட்ட கடன் திட்டங்கள் ..... 123
பண வழங்கீட்டு ஒழுங்குமுறை வாரியம் ..... 124
டெல்லி நிதி நிர்வாகச் சீர்திருத்தங்கள் ..... 124
இந்தியாவின் வெள்ளி இறக்குமதி ..... 124
2024–25 ஆம் நிதியாண்டில் இந்தியாவின் மீன் உற்பத்தி ..... 125
இணைய சங்கேதப் பண KYC விதிகள் ..... 125
வெளிநாட்டு உத்தரவாதங்கள் குறித்த புதிய FEMA விதிமுறைகள் ..... 126
CPI அடிப்படை ஆண்டு – 2024 ..... 126
ஒருங்கிணைந்த குறைதீர்ப்பு திட்டம் 2026 ..... 126
உணவுத் துறையில் பணவாட்டம் ..... 127
இந்தியாவின் பங்குச் சந்தை விரிவாக்கம் 2026 ..... 127
இணை இருப்பிடம் மற்றும் டார்க் ஃபைபர் வழக்குகளில் NSE தீர்வுகள் ..... 128
உயர் நடுத்தர வருமான நாடு அந்தஸ்து - இந்தியா ..... 128
இந்தியாவின் மின்னணு ஏற்றுமதி 2025 ..... 128
இந்திய மருந்து ஏற்றுமதிகள் 2025–26 ..... 129
2025 ஆம் ஆண்டில் கடன்-வைப்புத் தொகை விகிதம் ..... 129
இந்தியாவில் மக்கள்தொகை மாற்றம் ..... 130
நாராயண் ராமச்சந்திரன் குழு ..... 130
அறிவியல் மற்றும் தொழில்நுட்பச் செய்திகள் ..... 131
YJ-20 அதி மீயொலி கப்பல் எதிர்ப்பு எறிகணை ..... 131
லெஜியோனேயர்ஸ் நோய் ..... 131
உலகின் முதல் ITVISMA மரபணு சிகிச்சை ..... 131
ஓரெஷ்னிக் எறிகணைகள் ..... 131
தலாசீமியா இரத்த சோகைக்கான வாய்வழி மருந்து ..... 132
இந்தியாவின் முதல் AI மருத்துவமனை ..... 132
தானியங்கி வானிலை நிலையங்கள் ..... 132
ஆர்க்டிக் பெருங்கடல் நீரில் செட்டேசியன் மோர்பிலிவைரஸ் ..... 133
2026 ஆம் ஆண்டு பெருநிலவு ..... 133
பெயர்த்தகு உப்புநீக்க அமைப்பு ..... 133
தைமூர் எறிகணை ..... 134
வெண்ணிற குள்ளக்கோள் அமைப்பு ..... 134
எம்பெம்பா விளைவு ..... 134
விண்வெளி தூசுகளைக் கண்காணித்தல் ..... 135
ISO IEC 42001 தரநிலை – FSS ..... 135
நட்சத்திரமற்ற வாயு மேகம் – கிளவுட் 9 ..... 136
RRI மீக்குளிர் நிலையிலான அணு அளவீட்டு நுட்பம் ..... 136
ISS நிலையத்தில் இருந்து முன் கூட்டிய வருகை ..... 136
குறுங்கோள் 2025 MN45 ..... 137
இந்தியாவின் முதல் கால்கள் கொண்ட இடம் பெயரும் இயந்திரம் – SCORP ..... 137

ஆர்பிட்எய்டு நிறுவனத்தின் ஆயுல்சாட்......137
PSLV-C62 / EOS-N1 திட்டத்தில் முரண்பாடு......138
People-First AI தளம்......138
சீனாவின் EAST இணைவு உலை......138
குறைந்த கலோரி கொண்ட சர்க்கரை டேகடோஸ்......139
அல்ட்ராகோல்ட் அணு இயற்பியல்......139
கால்நடை இனங்கள் - கரன் ஃப்ரைஸ் மற்றும் விருந்தாவனி......139
வாயேஜர் 1 இன்டர்ஸ்டெல்லார் திட்டம்......140
உள்ளார்ந்த முறையில் ஒழுங்கற்றப் புரதங்கள்......140
வலுவான சூரிய கதிர்வீச்சு புயல்......141
பூமி கண்காணிப்பு செயற்கைக்கோள் திரள்......141
புரத AI கருவி......141
ASC ARJUN மனித உருவ ரோபோ......142
ஊதி பெரிதாக்கும் விண்வெளி வாழ்விடம்......142
**சுற்றுச்சூழல் செய்திகள்......143**
இந்தியாவின் அருமண் இருப்புக்கள் மற்றும் உற்பத்தி இடைவெளி......143
கங்கர் பள்ளத்தாக்கு தேசியப் பூங்கா......143
பார்வதி-அர்கா பறவைகள் சரணாலயம் - ESZ......143
அமேசான் தேனீக்களுக்கான சட்டப்பூர்வப் பாதுகாப்பு......144
2025 ஆம் ஆண்டில் புலிகளின் உயிரிழப்பு விகிதம்......144
நாடு தழுவிய புலிகள் கணக்கீட்டு நடவடிக்கையின் முதல் கட்டம்......145
கேரளாவில் விண்மீன் தவளைகள்......145
இந்தியாவின் முதல் நகர்ப்புற இரவு நேர சுற்றுலாப் பூங்கா......146
புதிய கீழ்மண் பாம்பு இனங்கள்......146
பெனி பச்சை சிறகுப் பறவை......146
ஆர்டிக் பெருங்கடலின் வெப்பமயமாதல் 2025......147
சிற்றாமைகளுக்கு செயற்கைக்கோள் கண்காணிப்புக் கருவி பொருத்தல்......147
தமிழ்நாட்டில் புதிய காப்புக்காடுகள்......148
புதிய வெட்டுக்கிளி இனங்கள் - காஷ்மீர்......148
MSTrIPES செயலி......148
அடையாரில் ஆற்று நீர்நாய்......149
காஷ்மீர் மார்க்கோர்......149
பூமியின் பெருங்கடல் வெப்ப உள்ளடக்கம்......149
இரண்டு புதிய தவளை இனங்கள் - அருணாச்சலப் பிரதேசம்......150
தென்னை வேர் வாடல் நோய்......150
சதுப்பு நில முதலை எண்ணிக்கை......150
உலகின் முதல் மலைகளின் பனி மாதிரிகள் களஞ்சியம்......151
பஃபர்ஃபிஷ் விஷமேற்றப் பாதிப்பு......151
இந்திய ஸ்கிம்மர் பறவை வளங்காப்புத் திட்டம்......152
இராட்சத கரும்பவளப் பாறை கண்டுபிடிப்பு......152

தமிழ்நாட்டில் முதல் மாநில அளவிலான இரைபிடிப் பறவை மதிப்பீடு.....153
புதிய துடுப்புக்கால் பூச்சி இனங்கள் .....153
இந்தியாவில் முதன்முறையாக பதிவு செய்யப்பட்ட பிரான்டு முள்ளெலி .....153
கும்பல்கர் வனவிலங்குச் சரணாலயம் - ராஜஸ்தான் .....154
இரண்டு புதிய அரிய ஈசல் இனங்கள் .....154
புதிய சிறுகண் காலிலி இனங்கள்.....154
இரண்டாவது நாடு தழுவிய டால்பின் கணக்கெடுப்பு .....155
அரியவகை ஆசிய காட்டு நாய் – செந்நாய்.....155
இந்தியாவின் இரண்டாவது பெரிய கங்கை நீர் முதலை வாழ்விடம்.....155
தமிழ்நாட்டில் வனவிலங்குத் தாக்குதல்கள்.....156
**அறிக்கைகள் மற்றும் குறியீடுகள்.....156**
NCB அறிக்கை 2025 .....156
நிலத்தடி நீர் வள மதிப்பீட்டு அறிக்கை 2025.....157
உலக வானிலை பண்புக்கூறு குறித்த வருடாந்திர அறிக்கை 2025.....157
இமயமலை பருவநிலை நடவடிக்கை.....157
மாநில நிதி குறித்த அறிக்கை 2023-24 .....158
நிதி ஆயோக் அறிக்கை 2025 .....158
ஐ.நா.வின் உலகப் பொருளாதார நிலை மற்றும் வாய்ப்புகள் அறிக்கை 2026.....159
UN DESA அறிக்கை 2025.....160
நிதி ஆயோக் அமைப்பின் வர்த்தக அறிக்கை 2026.....160
பாரத் பருவநிலை மன்றம் 2026.....160
வருடாந்திர நிலத்தடி நீர் தர அறிக்கை 2025 .....161
பொறுப்புள்ள நாடுகளின் குறியீடு 2026.....161
உலகளாவிய மதிப்பீட்டு அறிக்கை 2025.....162
உலகளாவியப் பொருளாதார வாய்ப்புகள் அறிக்கை 2026.....162
ஏற்றுமதி தயார்நிலை குறியீடு 2024.....163
உலகளாவிய அபாய அறிக்கை 2026.....163
பெர்க்லி புவி அறிக்கை .....164
வேலைவாய்ப்பு மற்றும் சமூகப் போக்குகள் அறிக்கை 2026.....164
சர்க்கரை-இனிப்பு பானங்கள் குறித்த WHO அறிக்கை .....164
MSME திட்டங்கள் குறித்த நிதி ஆயோக் அறிக்கை .....165
உலகளாவிய நீர் திவால்நிலை அறிக்கை 2026.....166
பொறுப்புள்ள நாடுகளின் குறியீடு 2026.....166
நம்பியோ பாதுகாப்புக் குறியீடு 2026 .....166
UNEP அறிக்கை 2026.....167
ஆசிய உற்பத்திக் குறியீடு 2026.....167
பசுமை மாற்றம் குறித்த நிதி ஆயோக் அறிக்கை .....168
இந்தியாவில் மின் கழிவுகள் .....168
உலகளாவிய முதலீட்டுப் போக்குகள் கண்காணிப்பு அறிக்கை .....169

மாநிலச் செய்திகள் ..... 169
எல்லை வரம்பிற்குட்படாத முதல் தகவல் அறிக்கை ..... 169
செயற்கை நுண்ணறிவு அடிப்படையிலான குறை தீர்க்கும் அமைப்பு ..... 170
கைமூர் வனவிலங்கு சரணாலயம் - புலிகள் சரணாலயம் ..... 170
'VijAIpatha' ஆய்வகங்கள் ..... 170
8வது மாநில ஊதியக் குழு ..... 171
இந்தியாவின் முதல் குடிசைப்பகுதி இல்லாத நகரம் ..... 171
ISO இணையவெளிப் பாதுகாப்பு சான்றிதழ் ..... 171
புரோட்டான் சிகிச்சை ..... 172
சூரிய உதய விழா 2026 ..... 172
இந்தூர் நீர் மாசுபாடு நெருக்கடி ..... 172
2025 ஆம் ஆண்டில் பதிவான உறுப்பு தானங்கள் ..... 173
பிறப்பின் போதான பாலின விகிதம் – ஹரியானா ..... 173
துண்டிக்கும் உரிமை மசோதா 2025 – கேரளா ..... 173
போராம்தேவ் வழித்தட மேம்பாட்டுத் திட்டம் ..... 174
இரண்டு குழந்தைகள் சட்டம் - தெலுங்கானா ..... 174
முதல் வணிக ரீதியான வெப்பமண்டல டிரவுட் மீன் பண்ணை ..... 174
முசி ஆற்றங்கரை மேம்பாட்டுத் திட்டம் ..... 175
நெறிமுறை கற்றல் முன்னெடுப்பு ..... 175
கிராம சபைகளுக்கான PESA விதிகள் ..... 175
வெண்டைக்காய் உற்பத்தி ..... 176
நீரியல் இயக்க விசைச் சுழலி தொழில்நுட்பம் ..... 176
இயற்கையோடு இயைந்த நலமான வாழ்வியல் கொண்ட இந்தியாவின் முதல் மாவட்டம் - கேயி பன்யோர் 177
மசாலாப் பொருட்கள் வர்த்தகப் பாதைகளின் வலையமைப்பு ..... 177
ஆந்திரப் பிரதேசம் - அமராவதி தலைநகர் ..... 177
தேசிய ஜவுளித் துறை அமைச்சர்கள் மாநாடு 2026 ..... 178
நாகௌரி அஸ்வகந்தா - புவிசார் குறியீடு ..... 178
சாகர் தீவு பாலத் திட்டம் ..... 179
இந்தியாவின் முதல் முழுமையான காகிதமில்லா மாவட்ட நீதிமன்றம் ..... 179
ICJS 2.0 தேசிய தரவரிசைகள் ..... 179
ஆரளம் வனவிலங்கு சரணாலயத்தின் பெயர் மாற்றம் ..... 180
மேற்கு வங்காளத்தின் ஹால்டியாவில் புதிய கடற்படைத் தளம் ..... 180
பூரியின் பாதுகாப்பான குழாய் நீர் ..... 180
உலகளாவிய கல்வி மையம் ..... 181
போடா தியோஹர் 2025 ..... 181
இந்தியாவின் பணக்கார உள்ளாட்சி அமைப்பு ..... 182
ஸ்வச் ஜல் அபியான் - மத்தியப் பிரதேசம் ..... 182
கத்புட்லி — இராஜஸ்தானின் பாரம்பரியப் பொம்மைக் கலை ..... 182
மலையாள மொழி மசோதா 2025 ..... 183
பத்ரகாளி கல்வெட்டு ..... 183

அக்கா படே திட்டம் ....183
பிரபாஸ் படான் கல்வெட்டுகள் மற்றும் சோம்நாத் கோயில் ....184
இராஜஸ்தானின் முதல் இயற்கை வேளாண் பஞ்சாயத்து ....184
இந்தியாவின் முதல் CKD பதிவேடு ....185
ஆமே பதிபா ஆமா பசாரே திட்டம் – ஒடிசா ....185
க்ருஹா லட்சுமி டிஜிட்டல் சந்தைப்படுத்துதல் வலை தளம் – கர்நாடகா ....185
ஸ்பிடுக் கஸ்டர் விழா – லடாக் ....186
பாண்டுரு காதி – புவிசார் குறியீடு ....186
இந்தியாவின் முதல் சூரிய சக்தியில் இயங்கும் ATM வேன் ....186
AI ஆய்வகங்களின் விரிவாக்கம் - உத்தரப் பிரதேசம் ....187
அழியாத மை ....187
ஹோப் தீவில் புதிய விண்வெளி நிலையம் ....187
லம்பாடா பழங்குடியினர் ....188
குய்லின்-பாரே நோய்க்குறி ....188
ஜம்மா பேன் நிலப் பதிவுகள் ....189
புகையிலை பொருட்கள் மீதான தடை ....189
பகுரும்பா துவோ 2026 ....189
மாநில நுண்ணுயிரி - பேசிலஸ் சப்டிலிஸ் ....190
லக்குண்டியில் புதிய கற்காலச் சின்னங்கள் ....190
பொது சிவில் சட்ட (திருத்த) அவசரச் சட்டம், 2026 ....191
**பிரபலமானவர்கள், விருதுகள், மற்றும் நிகழ்வுகள் ....191**
முன்னாள் வங்காளதேசப் பிரதமர் - கலீதா ஜியா ....191
ஜோஹ்ரான் மம்தானி – நியூயார்க் ....191
மொழிப்போர் தளபதி L. கணேசன் ....192
IFFCO சாகித்ய சம்மான் 2025 ....192
மிக நீண்ட கால பதவி வகித்த கர்நாடக முதல்வர் ....192
மாதவ் காட்கிலின் மறைவு ....193
பரிமாற்ற முடியாத அமைதிக்கான நோபல் பரிசு ....193
IREDA சிறப்பு விருது ....194
83வது கோல்டன் குளோப் விருதுகள் 2026 ....194
சுனிதா வில்லியம்ஸ் ஓய்வு ....194
பத்ம விருதுகள் 2026 ....195
பத்மஸ்ரீ விருது - கிருஷ்ணன் ....195
விஜய் குமார் - பத்மஸ்ரீ விருது ....196
வீரதீரச் செயலுக்கான அண்ணா பதக்கம் 2026 ....196
அசோக சக்ரா விருது 2026 - சுபான்ஷு சுக்லா ....196
பத்மஸ்ரீ 2026 - ஏ.இ.முத்துநாயகம் ....197
தமிழ்ப் பேரறிஞர் டி. ஞானசுந்தரம் மறைவு ....197
அஜித் பவார் மறைவு ....197

விளையாட்டுச் செய்திகள் ........ 198
கேலோ இந்தியா கடற்கரை விளையாட்டுப் போட்டிகள் 2026 ........ 198
முக்கிய தினங்கள் ........ 198
உலக பிரெய்லி தினம் 2026 - ஜனவரி 04 ........ 198
தேசிய பறவைகள் தினம் 2026 – ஜனவரி 05 ........ 198
போர்களால் ஆதரவிழந்தவர்களுக்கான உலக தினம் 2026 - ஜனவரி 06 ........ 199
பூமியின் சுழற்சி தினம் 2026 – ஜனவரி 08 ........ 199
உலக இந்தி தினம் 2026 - ஜனவரி 10 ........ 199
பிரவாசி பாரதிய திவாஸ் 2026 ........ 200
தேசிய இளையோர் தினம்/யுவ திவாஸ் 2026 - ஜனவரி 12 ........ 200
தேசிய சாலைப் பாதுகாப்பு வாரம் 2026 - ஜனவரி 11/17 ........ 200
இராணுவ தினம் 2026 - ஜனவரி 15 ........ 201
தேசிய புத்தொழில் நிறுவன தினம் 2026 - ஜனவரி 16 ........ 201
உலகளாவிய தடுப்பு ஊடுகதிரியல் தினம் 2026 - ஜனவரி 16 ........ 201
கோக்போரோக் தினம் 2026 / திரிபுரி மொழி தினம் 2026 - ஜனவரி 19 ........ 202
தேசிய பேரிடர் மீட்புப் படை உருவாக்க தினம் 2026 – ஜனவரி 19 ........ 202
திரிபுரா, மணிப்பூர் மற்றும் மேகாலயா மாநில உருவாக்க தினம் - ஜனவரி 21 ........ 202
தேசியப் பெண் குழந்தைகள் தினம் 2026 - ஜனவரி 24 ........ 203
சர்வதேச கல்வி தினம் 2026 - ஜனவரி 24 ........ 203
தேசிய சுற்றுலா தினம் 2026 - ஜனவரி 25 ........ 203
தேசிய வாக்காளர் தினம் 2026 - ஜனவரி 25 ........ 203
சர்வதேச சுங்கத் தினம் 2026 - ஜனவரி 26 ........ 204
தியாகிகள் தினம் 2026 - ஜனவரி 30 ........ 204
இமாச்சலப் பிரதேச மாநில தினம் 2026 - ஜனவரி 26 ........ 204
தூய்மையான ஆற்றலுக்கான சர்வதேச தினம் 2026 – ஜனவரி 26 ........ 205
இதரச் செய்திகள் ........ 205
படத்ரவா தான் ........ 205
ரோஹ்தாஸ்கர் கோட்டை ........ 205
மின்சார வேளாண் டிராக்டர்களுக்கான இந்திய தரநிலை ........ 206
பிப்ரவா நினைவுச்சின்னங்கள் ........ 206
பிரம்மஞான சபையின் 150வது சர்வதேச மாநாடு ........ 207
ஐக்கிய நாடுகள் சபையின் சர்வதேச ஆண்டு 2026 ........ 207
ப்ளூ கிராஸ் ஆஃப் இந்தியா - விலங்கு நலனில் 60 ஆண்டுகள் ........ 207
சோம்நாத் கோயில் - 1000 ஆம் ஆண்டு ........ 208
தட்சசீலாவில் குஷானர் கால நாணயங்கள் ........ 208
கால்நடை மேய்ச்சல் நிலங்களுக்கான சர்வதேச ஆண்டு ........ 209
ஒருங்கிணைந்த தரப்படுத்தல் இணையதளம் ........ 209
காஷ்மீரில் உள்ள ஜெஹான்போரா புத்த வளாகம் ........ 210
பெங்களூரு–கடப்பா–விஜயவாடா வழித்தடம் ........ 210
BRICS 2026 வலைத்தளம் மற்றும் முத்திரைச் சின்னம் ........ 210

**கம்பளி காண்டாமிருகத்திலிருந்து மரபணு மீட்பு....211**
**ஹென்லே கடவுச் சீட்டுக் குறியீடு 2026....211**
**லோக்பால் தினம் 2026....211**
**பராக்கிரம் திவாஸ் 2026....212**
**ஹைட்ரஜன் அழுத்த உயர்த்தி எந்திரத்தின் பாதுகாப்பு மதிப்பீடு....212**
**உலகின் மிகப் பழமையான குகை ஓவியம்....212**

# TNPSC துளிகள்

- மகளிர் சர்வதேசப் போட்டிகளில் 10,000 ரன்களைக் கடந்த இரண்டாவது இந்திய வீராங்கனை மற்றும் நான்காவது வீராங்கனை என்ற பெருமையை ஸ்மிருதி மந்தனா பெற்றுள்ளார்.
- தேசியப் புலனாய்வு முகமையின் (NIA) இடைக்காலத் தலைமை இயக்குநராக இந்தியக் காவல் பணி அதிகாரியான ராகேஷ் அகர்வாலை நியமிக்க அமைச்சரவையின் நியமனக் குழு ஒப்புதல் அளித்துள்ளது.
- புளோரிடாவில் நடைபெற்ற உயர்மட்ட இருதரப்பு பேச்சுவார்த்தைகளைத் தொடர்ந்து, அமெரிக்க அதிபர் டொனால்ட் டிரம்பிற்கு இஸ்ரேலின் மிக உயரிய குடிமகன் விருதான இஸ்ரேல் அமைதிக்கான பரிசு வழங்கப்படும் என்று இஸ்ரேல் அறிவித்துள்ளது.
- சீனாவின் தேசியப் பாதுகாப்பு தொழில்நுட்பப் பல்கலைக்கழகத்தின் (NUDT) ஆராய்ச்சியாளர்கள், ஒரு மாக்லெவ் (காந்த மிதவை) சோதனை வாகனத்தின் வேகத்தினை வெறும் இரண்டு வினாடிகளில் மணிக்கு 700 கிமீ வேகத்திற்கு முடுக்கி உள்ளனர்.
    - இது வரை உலகில் உள்ள வேகமான மீக்கடத்தி காந்த மிதவுந்து அமைப்பு என்று சாதனை படைத்த மாக்லெவ் என்று விவரிக்கப்படுகிறது.
- சந்திப்பூரில் உள்ள ஒருங்கிணைந்த சோதனைத் தளத்தில் (ITR) நீண்ட தூர தாக்குதல் வரம்பு கொண்ட வழிகாட்டப்பட்ட ஏவு கலத்தின் (LRGR-120) முதல் ஏவுதல் சோதனையை பாதுகாப்பு ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு அமைப்பு (DRDO) வெற்றிகரமாக நடத்தியது.
- கத்தாரின் தோஹாவில் நடைபெற்ற FIDE (Fédération Internationale des Échecs) 2025 ஆம் ஆண்டு உலக விரைவு சதுரங்க சாம்பியன்ஷிப் போட்டியில் இந்திய சதுரங்க வீரர்கள் கோனேரு ஹம்பி மற்றும் அர்ஜுன் எரிகைசி வெண்கலப் பதக்கங்களை வென்றனர்.
- புதுச்சேரியைச் சேர்ந்த திவ்யா அருள், ஐரோப்பாவின் மிகவும் உயரமான சிகரமான ரஷ்யாவில் உள்ள எல்ப்ரஸ் மலையின் உச்சியை (5,642 மீட்டர்) வெற்றிகரமாக அடைந்தார்.
- குளிர்கால வலசை காலத்தில் முதுமலை புலிகள் வளங்காப்பகத்தில் (MTR) ஓர் அரிய கிழக்கு இராசாளிக் கழுகு (அக்குய்லா ஹெலியாகா) தென்பட்டது.
- பாதுகாப்பு ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு அமைப்பானது ஒரே ஏவு அமைப்பிலிருந்து உள்நாட்டிலேயே தயாரிக்கப்பட்ட இரண்டு பிரளய் எறிகணைகளை ஒரே நேரத்தில் ஏவி சோதனையை மேற்கொண்டது.
- போதைப்பொருள் உபயோகக் கண்டுபிடிப்பை விரைவாகக் கண்காணிப்பதற்காக அறிவியல் மற்றும் தொழில்நுட்ப அமைச்சகம் ஆனது PathGennie எனும் புதிய திறந்த மூல மென்பொருளினை (அனைவருக்குமான) உருவாக்கியுள்ளது.
- 29வது தேசியப் பாறை மற்றும் கயிறு ஏறுதல் சாம்பியன்ஷிப் 2025 போட்டியில் இளம் வீராங்கனைகள் (17 வயதுக்குட்பட்டவர்கள்) பிரிவில் அமீரா கோஸ்லா தங்கப் பதக்கத்தை வென்றார்.
- மகளிர் ஆசிய கோப்பைப் போட்டியில் இந்திய மகளிர் ஹாக்கி அணி வெள்ளிப் பதக்கத்தினை வென்று 2025 ஆம் ஆண்டினை நிறைவு செய்தது.
- சீன இராணுவம் (PLA) ஆனது அதன் "நீதி திட்டம் 2025" என்ற திட்டத்தின் ஒரு பகுதியாக, தைவான் அருகே எறிகணைகளை ஏவி இராணுவப் பயிற்சிகளை நடத்தியது.

- சந்தாலி மொழியின் ஒல் சிக்கி எழுத்து வடிவத்தின் நூற்றாண்டு விழா ஜார்க்கண்டின் ஜாம்ஷெட்பூரில் நடைபெற்றது.
  - பண்டிட் இரகுநாத் முர்மு, ஒல் சிக்கி எழுத்து வடிவத்தின் தந்தையாகக் கருதப் படுகிறார்.
- கர்நாடக உத்தி சார் மற்றும் புலனாய்வுப் பிரிவானது, பல்கலைக்கழகங்கள், கல்லூரிகள், பயிற்சி நிறுவனங்கள் மற்றும் அரசு தரவுத் தளங்களிலிருந்து செயலி நிரலாக்க இடைமுகங்களை (API) ஒருங்கிணைக்க உள்ளது.
  - இந்த ஒருங்கிணைந்தத் தரவுத் தொகுப்பு, வளர்ந்து வரும் வாய்ப்புகள், துறை சார் இடைவெளிகள் மற்றும் பிராந்தியப் பணியாளர் தேவைகளை அடையாளம் காண ஒரு செயற்கை நுண்ணறிவு அமைப்பினால் செயலாக்கப்படும்.
- இந்திய இராணுவம் ஆனது iStent சிகிச்சை மூலம் இந்தியாவின் முதல் முப்பரிமாண ஃப்ளெக்ஸ் அக்வஸ் ஆஞ்சியோகிராஃபியை வெற்றிகரமாக மேற்கொண்டுள்ளது.
  - முன்னோடியான கிளகோமா (கண் அழுத்த நோய்) செயல்முறை ஆனது மீள முடியாத பார்வை இழப்பிற்கான முக்கியக் காரணத்தை துல்லியமாக கண்டறிதல் மற்றும் சிகிச்சையளிப்பதில் குறிப்பிடத்தக்க முன்னேற்றத்தினைக் குறிக்கிறது.
- 18 வயதான இந்திய மலையேறும் வீராங்கனையான மும்பையைச் சேர்ந்த காம்யா கார்த்திகேயன், தென் துருவத்தை அடைந்து, தென் துருவத்திற்கு பனிச்சறுக்கு செய்த இளம் இந்தியர் மற்றும் உலகின் இரண்டாவது இளம் பெண் என்ற பெருமையைப் பெற்றுள்ளார்.
- குஜராத்தின் அகமதாபாத்தில் உள்ள சிறுநீரக நோய்கள் மற்றும் ஆராய்ச்சி மையம் (IKDRC) ஆனது 2025 ஆம் ஆண்டில் 500 சிறுநீரக மாற்று அறுவை சிகிச்சைகளை நிறைவு செய்து, ஒரே ஆண்டில் இந்த மைல்கல்லை எட்டிய இந்தியாவின் ஒரே பொதுத்துறை மருத்துவமனையாக மாறியுள்ளது.
- கோட்டா-நாக்டா பிரிவில், இரயில் அதிகபட்சமாக மணிக்கு 180 கிமீ வேகத்தை எட்டியதுடன், வந்தே பாரத் ஸ்லீப்பர் வசதியுடன் கூடிய இரயிலின் இறுதிக் கட்டத்தின் மீதான அதிவேக இயக்கச் சோதனையை இந்திய இரயில்வே நிர்வாகம் வெற்றிகரமாக முடித்தது.
- 2025 ஆம் ஆண்டு நவம்பர் மாதத்தில், இந்தியாவின் அகலக் கற்றை சேவை சந்தாதாரர் தளம் ஆனது 100 கோடி (1 பில்லியன்) பயனர்களைத் தாண்டியது என்ற நிலையில் இந்தியாவில் இந்த எண்ணிக்கையை எட்டியது இது முதல் முறையாகும் என்பதோடு இது 2015 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் முதல் பதிவான ஆறு மடங்கு அதிகரிப்பைக் குறிக்கிறது.
- வாரன் பஃபெட் பெர்க்சையர் ஹாத்வேயின் தலைமை நிர்வாக அதிகாரி (CEO) பதவியில் இருந்து அதிகாரப்பூர்வமாக ஓய்வு பெற்றார் என்பதோடு அவருக்கு அடுத்த படியாக கிரெக் ஆபெல் நியமிக்கப்பட்டாலும், பஃபெட் தலைவராகத் தொடர்கிறார்.
- 44வது ஜூனியர் தேசிய கோ கோ சாம்பியன்ஷிப் போட்டியானது கர்நாடகாவின் பெங்களூருவில் தொடங்கியது.
- ஒவ்வோர் ஆண்டும் ஜனவரி 01 ஆம் தேதியன்று உலகளவில் அமைதி மற்றும் ஒற்றுமையை மேம்படுத்துவதற்காக உலகளாவிய குடும்ப தினம் ஆனது அனுசரிக்கப் படுகிறது என்பதோடு தேசியம், எல்லைகள் அல்லது இனத்தைப் பொருட்படுத்தாமல் அனைத்து மக்களும் ஒன்றோடொன்று இணைக்கப்பட்டுள்ளனர் என்பதை அது நன்கு வலியுறுத்துகிறது.

- பரதநாட்டிய நடனக் கலைஞர் ஊர்மிளா சத்தியநாராயணனுக்கு நிருத்ய கலாநிதி விருது வழங்கப்பட்டது.
- கலாச்சார மற்றும் பாரம்பரியச் சுற்றுலாவை வலுப்படுத்துவதற்கும், கேரளாவை உலகளாவியப் பாரம்பரியத் தளமாக நிலை நிறுத்துவதற்காகவும் என்று, கேரளாவின் கொச்சியில் மூன்று நாட்கள் அளவிலான சர்வதேச நறுமணப் பொருட்கள் வழித்தட மாநாடு நடைபெற உள்ளது.
- வெனிசுலா நாட்டின் அதிபர் நிக்கோலஸ் மதுரோ, போதைப் பொருள் கடத்தல், போதைப் பொருள் சார் தீவிரவாதம், கொக்கையின் இறக்குமதி மற்றும் சட்ட விரோத ஆயுதங்களை வைத்திருந்ததற்காக குற்றம் சாட்டப்பட்டு, 2026 ஆம் ஆண்டு ஜனவரி 03 ஆம் தேதியன்று, அமெரிக்க காவலில் வைக்கப்பட்டார்.
- மன ஆரோக்கியத்திற்கும் உடல் ஆரோக்கியத்திற்கும் இடையிலான தொடர்பு குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்காக என்று சர்வதேச மனம்-உடல் நல தினம் ஆனது ஒவ்வோர் ஆண்டும் ஜனவரி 03 ஆம் தேதியன்று அனுசரிக்கப்படுகிறது.
- கர்நாடக மாநிலம் அதன் விஜயநகர மாவட்டத்தில், இந்தியச் சிறுத்தையின் அரிய வெளிறிய இளஞ்சிவப்பு உருவத்திலான சந்தன சிறுத்தை முதன்முதலில் தென்பட்டு உள்ளதாக பதிவு செய்துள்ளது.
  - இதற்கு முன்பு ராஜஸ்தானில் காணப்பட்டதற்குப் பிறகு இது இந்தியாவில் பதிவு செய்யப் பட்ட இரண்டாவது பார்வை மட்டுமே,.
- 2026 ஆம் ஆண்டில் தமிழ்நாட்டின் முதல் ஜல்லிக்கட்டு நிகழ்வு ஆனது புதுக்கோட்டை மாவட்டத்தில் உள்ள தச்சங்குறிச்சி கிராமத்தில் நடைபெற உள்ளது.
- மத்திய உள்துறை அமைச்சர் அந்தமான் மற்றும் நிக்கோபார் தீவுகளில் கண்காணிப்பு, தகவல் தொடர்பு மற்றும் பல தரப்பு பாதுகாப்பு மற்றும் நிர்வாக முகமைகளுக்கிடையே ஒருங்கிணைப்பைச் செயல்படுத்துவதற்காக ஒருங்கிணைந்த கட்டளை மற்றும் கட்டுப்பாட்டு மையத்தை திறந்து வைத்தார்.
- விமான மேம்பாட்டு முகமை (ADA) ஆனது, பெங்களூருவில் 'Aeronautics 2047' என்ற தலைப்பிலான இரண்டு நாட்கள் அளவிலான தேசிய கருத்தரங்கைத் தொடங்கியது.
  - இந்த நிகழ்வு ஆனது, தேஜாஸ் எனும் இலகுரக போர் விமானத்தின் (LCA) 25 ஆண்டு கால வெற்றிகரமான பயணத்தினைக் குறிக்கிறது.
- ஆராய்ச்சி, கல்வி, புதுமை மற்றும் புத்தொழில் நிறுவனங்களில் அதன் உலகளாவிய இருப்பை விரிவுபடுத்துவதற்காக மதராஸின் இந்தியத் தொழில்நுட்பக் கல்விக் கழகத்தில் (IIT) IITM உலகளாவிய ஆராய்ச்சி அறக்கட்டளை தொடங்கப்பட்டது.
  - இந்த முன்னெடுப்பு மதராஸ் IIT நிறுவனத்தினை ஒரு பன்னாட்டுப் பல்கலைக் கழகமாக நிலைநி றுத்துவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.
- இம்பால் அகில இந்திய வானொலியிலிருந்து (ஆகாஷ்வாணி) தடௌ மொழியில் நேரடி வானொலி நிகழ்ச்சிகளை மீண்டும் தொடங்க பிரச்சார் பாரதி நடவடிக்கைகளைத் தொடங்கியுள்ளது.
  - தடௌ ஆனது 1956 ஆம் ஆண்டு குடியரசுத் தலைவரின் உத்தரவின் கீழ் அங்கீகரிக்கப் பட்ட மணிப்பூர் மாநிலத்தின் பெரும் தனித்துவமான பட்டியலிடப் பட்ட பழங்குடியினத்தைச் சேர்ந்தது ஆகும்.
- 72வது தேசிய கைப்பந்தாட்ட போட்டியானது, உத்தரப் பிரதேசத்தின் வாரணாசியில் நடைபெற்று வருகிறது.

- சீன நாட்டினர் ஆறு மாதங்கள் வரை இந்தியாவில் தங்கியிருக்க அனுமதிக்கும் புதிய இணையவழி உற்பத்தி முதலீட்டு வணிக நுழைவு இசைவுச் சீட்டினை (e-B-4) இந்தியா அறிமுகப் படுத்தியுள்ளது.
- வெனிசுலா நாட்டின் தேசிய சட்டமன்றமானது, டெல்சி ரோட்ரிகியுசை இடைக்கால அதிபராக நியமித்துள்ளது.
- ஆந்திரப் பிரதேசத்தில் உள்ள போகபுரம் சர்வதேசப் பசுந்தட விமான நிலையத் திட்டத்தின் முதல் கட்டம் அதிகாரப்பூர்வமாகத் தொடங்கப்பட்டுள்ளது.
- உத்தரப் பிரதேசம் பார்வைத் திறனற்றோருக்காக அர்ப்பணிக்கப்பட்ட அதன் முதல் பிரெய்லி நூலகத்தைத் திறந்துள்ளது.
- கோவா ஷிப்யார்ட் லிமிடெட் நிறுவனத்தினால் கட்டமைக்கப்பட்ட உள்நாட்டிலேயே வடிவமைக்கப்பட்ட முதல் மாசுக் கட்டுப்பாட்டுக் கப்பல் மற்றும் ICG கடற்படையில் மிகப்பெரிய கப்பலான இந்தியக் கடலோர காவல்படை கப்பல் (ICGS) சமுத்திர பிரதாப், கோவாவில் படையில் இணைக்கப்பட்டது.
- மூத்த காங்கிரஸ் தலைவரும் முன்னாள் மத்திய அமைச்சருமான சுரேஷ் கல்மாடி புனேவில் காலமானார்.
  - மத்திய இரயில்வே இணை அமைச்சராகப் பணியாற்றிய அவர் இந்திய ஒலிம்பிக் சங்கத்தின் (IOA) முன்னாள் தலைவராகப் பணியாற்றினார்.
- ஐக்கிய அரபு அமீரகத்தினைச் சேர்ந்த பாத்திமா அப்துல் ரஹ்மான் அல் அவதி, அண்டார்டிகாவில் உள்ள வின்சன் மலையில் ஏறிய இளம் அரேபியர் ஆனார்.
- மெக்சிகோவின் போபோகாட்பெட்ல் எரிமலையின் உள்ளக பாறைக் குழம்பின் இயக்கத்தை நன்கு புரிந்துகொள்வதற்கான அதன் முதல் முப்பரிமாண (3D) படங்களை அறிவியலாளர்கள் உருவாக்கியுள்ளனர்.
- சமூக மற்றும் தொழில்துறை உள்ளடக்கத்தின் அடிப்படையில், பெங்களூரு 53.29 என்ற அதிக நகர உள்ளடக்க மதிப்பெண்ணுடன் 2025 ஆம் ஆண்டில் இந்தியாவில் பெண்களுக்கு சிறந்த நகரமாக தரவரிசைப்படுத்தப்பட்டது.
- பால்வளத் துறையில் நிலைத்தன்மையை மேம்படுத்துவதிலும் விவசாயிகளின் நலனிலும் ஆற்றிய தலைமைப் பண்பிற்காக ஆவின் நிறுவனத்திற்கு 'டெய்ரி டைட்டன் விருது' வழங்கப்பட்டுள்ளது.
- ஹரியானாவில் உள்ள ஜிந்த் முதல் சோனிபட் வரையிலான வழித்தடத்தில் இந்தியாவின் முதல் ஹைட்ரஜன் எரிபொருள் மூலம் இயங்கும் ரயிலின் சோதனை ஓட்டங்களை இந்தியா தொடங்க உள்ளது.
- ராஜஸ்தான் மாநிலம் ஜெய்ப்பூரில் பிராந்திய செயற்கை நுண்ணறிவு தாக்கம் குறித்த மாநாடு நடைபெற உள்ளது.
  - இந்த மாநாட்டின் நிகழ்ச்சி நிரலானது, மக்கள், பூமி மற்றும் முன்னேற்றம் ஆகிய மூன்று சூத்திரங்கள் மற்றும் இந்திய செயற்கை நுண்ணறிவுத் திட்டத்தின் ஏழு சக்கரங்களை அடிப்படையாகக் கொண்டது.
- ஹிந்துஸ்தான் பெட்ரோலியம் கார்ப்பரேஷன் லிமிடெட் (HPCL), ஆந்திரப் பிரதேசத்தில் உள்ள விசாகப்பட்டினத்தில் உலகின் அதிகபட்ச மாற்றும் திறன் கொண்ட முதல் திரவ மாற்ற (LC-Max) அலகைத் தொடங்கியுள்ளது.

- ஆதார் புதுப்பித்தல், அங்கீகாரம், அகல்நிலை (ஆஃப்லைன்) சரிபார்ப்பு மற்றும் பாதுகாப்பான தரவுப் பகிர்வு ஆகியவற்றைப் பயனர்கள் புரிந்து கொள்ள உதவும் வகையில், இந்தியத் தனித்துவ அடையாள ஆணையமானது (UIDAI) 'உதய்' என்ற ஆதார் உருவச் சின்னத்தை அறிமுகப்படுத்தியுள்ளது.
- மத்திய இரயில்வே துறை அமைச்சர் புது டெல்லியில் 100 இரயில்வே துறை அதிகாரிகளுக்கு 70வது அதி விசிஷ்ட இரயில் சேவா புரஸ்கார் 2025 விருதை வழங்கினார்.
    - இந்திய இரயில்வே துறையில் வழங்கப்படும் மிகவும் உயர்ந்த விருதுகளில் ஒன்றான அதி விசிஷ்ட இரயில் சேவா புரஸ்கார் ஆனது புத்தாக்கம், செயல் பாட்டுத் திறன், பாதுகாப்பு, வருவாய் வளர்ச்சி, திட்ட நிறைவு, விளையாட்டு மற்றும் பிற சிறப்பான சேவைகளை உள்ளடக்கியது.
- இந்திய மொழிகள் குறித்த மூன்றாவது சர்வதேச மாநாடு ஆனது புது டெல்லியில் நடைபெற்றது.
- போதைப்பொருள் ஒருங்கிணைப்பு மையத்தின் (NCORD) 9வது உச்சநிலைக் கூட்டம் புது டெல்லியில் நடைபெற்றது.
- விசாகப்பட்டினத்தில் உள்ள ஆந்திரப் பல்கலைக்கழகத்தில் சாலைகளைச் சுத்தம் செய்யும் பெண் துப்புரவுப் பணியாளரான லக்ஷ்மம்மா என்பவர், குடியரசுத் தலைவர் திரௌபதி முர்முவின் வாழ்க்கை குறித்த புத்தகத்தை வெளியிட்டார்.
    - ‘அக்னி சரசுலோ விகாசிஞ்சின கமலம் திரௌபதி முர்மு’ என்ற தலைப்பிலான இந்த புத்தகத்தை யார்லகட்டா லட்சுமி பிரசாத் எழுதியுள்ளார்.
- ஐக்கிய நாடுகள் பாதுகாப்புச் சபையில் (UNSC) நிரந்தர உறுப்பினர் பதவிக்கான இந்தியாவின் விருப்பத்தை சிலி அதிகாரப் பூர்வமாக ஆதரித்துள்ளது.
- இராஜஸ்தானில் உள்ள பமன்வாஸ் கங்கர் பஞ்சாயத்து, முழுமையாக இயற்கை வேளாண்மை முறை கொண்ட பஞ்சாயத்து ஆக சான்றிதழ் பெற்ற மாநிலத்தின் முதல் கிராம அமைப்பாக மாறியுள்ளது.
- NLC இந்தியா லிமிடெட் (NLCIL) நிறுவனமானது அதன் நிதி மேலாண்மை, செயல்பாட்டு திறன் மற்றும் மதிப்பு உருவாக்கத்திற்காக நிதிச் செயல்திறனுக்கான SKOCH தங்க விருதை வென்றது.
    - NLCIL என்பது நிலக்கரி அமைச்சகத்தின் கீழ் உள்ள ஒரு நவரத்தினப் பிரிவு சார்ந்த மத்தியப் பொதுத்துறை நிறுவனமாகும் (CPSE).
- அருணாச்சலப் பிரதேசத்தில் மேற்கொள்ளப்படும் கமலா நீர்மின் நிலையத்தினை பொது முதலீட்டு வாரியம் அங்கீகரித்துள்ளது.
    - 1,720 மெகாவாட் நிறுவப்பட்ட திறனைக் கொண்டுள்ள இந்தத் திட்டம் 2070 ஆம் ஆண்டிற்குள் இந்தியாவின் புதுப்பிக்கத்தக்க எரிசக்தி இலக்குகள் மற்றும் நிகர-சுழிய உமிழ்வை ஆதரிப்பதை நோக்கமாகக் கொண்டுள்ளது.
- சத்தீஸ்கர் மாநிலம் ஆனது ராய்ப்பூரில் அமைக்கப்பட்டுள்ள வேளாண்மை மற்றும் பதப்படுத்தப்பட்ட உணவுப் பொருட்கள் ஏற்றுமதி மேம்பாட்டு ஆணையத்தின் (APEDA) பிராந்திய அலுவலகம் திறக்கப்பட்டது.
- விரைவான அஞ்சல் விநியோகத்தை வழங்குவதற்காக வேண்டி, விரைவு அஞ்சல் தொகுப்பிற்குள் மேம்பட்ட விரைவு விநியோக விருப்பத் தேர்வுகளான ஸ்பீட் போஸ்ட் 24 மற்றும் ஸ்பீட் போஸ்ட் 48 ஆகியவற்றை இந்திய அஞ்சல் துறை அறிமுகப் படுத்தி உள்ளது.

- கோவாவைச் சேர்ந்த தொழிலதிபர் ஸ்ரீனிவாஸ் டெம்போவுக்கு இத்தாலி கவாலியர் டெல்'ஆர்டைன் டெல்லா ஸ்டெல்லா டி'இட்டாலியா விருதினை வழங்கியது.
- பெங்களூருவைச் சேர்ந்த இந்திய இராணுவ அதிகாரி மேஜர் சுவாதி சாந்த குமார், ஈக்குவல் பார்ட்னர்ஸ் என்ற தனது திட்டத்திற்காக, நீடித்த அமைதிக்கான 2025 ஆம் ஆண்டுக்கான ஐ.நா. பொதுச் செயலாளர் விருதை வென்றுள்ளார்.
- சென்னை மெட்ரோ ரயில் லிமிடெட் (CMRL) கழகத்தின் நிலத்தடி சுரங்கப்பாதையின் மீது கட்டப்படுகின்ற இந்தியாவின் முதல் சாலை வழிப் பாலத்தில் முதல் தளத்தின் பணிகள் தொடங்கப்பட்டுள்ளன.
  - இது சென்னை தேனாம்பேட்டை-சைதாபேட்டை மேம்பாலம் இயங்கும் மெட்ரோ சுரங்கப்பாதையின் மேலே கட்டப்பட்ட உலகின் முதல் மேம்பாலமாகும்.
- ஜப்பானின் தேசிய தகவல் மற்றும் தொடர்பு தொழில்நுட்பக் கல்வி நிறுவனம் (NICT) ஆனது, வினாடிக்கு 2 டெராபிட்கள் (Tbit/s) என்ற வேகத்திலான உலகின் முதல் வளி மண்டல ஒளியியல் (FSO) தகவல் தொடர்பை அடைந்தது.
  - இந்த சோதனையானது செயற்கைக் கோள்கள் மற்றும் உயரமான தள நிலையங்களில் (HAPS) பொருத்தக்கூடிய சிறிய ஒளியியல் முனையங்களைப் பயன்படுத்தியது.
- குடிமை-இராணுவ ஒருங்கிணைப்பை வலுப்படுத்துவதற்காக என இந்திய இராணுவம் மகாராஷ்டிராவின் திகி மலைத்தொடரில் "சஞ்சா சக்தி" பயிற்சியை நடத்தியது.
  - இது தெற்கு படைப் பிரிவின் (மகாராஷ்டிரா, குஜராத் மற்றும் கோவா பகுதி) கீழ் நடைபெறும் ஒரு இராணுவ-குடிமை கலப்பு பயிற்சியாகும்.
- தமிழ்நாட்டின் கலை மற்றும் கலாச்சாரப் பாரம்பரியத்தை ஊக்குவிப்பதற்கும் கொண்டாடுவதற்குமான சென்னை சங்கமம் - நம்ம ஊரு திருவிழா 2026 என்ற நிகழ்ச்சியினை தமிழக முதல்வர் சென்னையில் தொடங்கி வைத்தார்.
- டிசம்பர் 13 ஆம் தேதியன்று இரண்டு அமெரிக்க வீரர்கள் மற்றும் ஒரு குடிமகனைக் கொன்ற தாக்குதலுக்குப் பதிலடி கொடுக்கும் விதமாக, 2026 ஆம் ஆண்டு ஜனவரி 10 ஆம் தேதியன்று சிரியாவில் ISIS மீது அமெரிக்க விமானம் வான்வழித் தாக்குதல்களை நடத்தியது.
- ஜனவரி 07 ஆம் தேதி நிலவரப்படி மாணவர்களுக்கு 50,60,941 அடையாள எண்களை உருவாக்கித் தானியங்கி நிரந்தரக் கல்விக் கணக்குப் பதிவேடு (APAAR) அமைப்பை செயல்படுத்துவதில் சத்தீஸ்கர் முதலிடத்தில் உள்ளது.
  - மாநிலம் முழுவதும் உள்ள 57,045 பள்ளிகளில் 57,10,207 மாணவர்களில் பதிவானது 88.63 சதவீத பரவலாகும்.
- பாதுகாப்பு ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு அமைப்பானது உள்நாட்டிலேயே உருவாக்கப் பட்ட மனிதனால் சுமந்து செல்லக் கூடிய வழி காட்டப்பட்ட பீரங்கி எதிர்ப்பு எறிகணையை (MPATGM) வெற்றிகரமாக ஏவி பரிசோதனை செய்தது.
  - MPATGM என்பது மூன்றாம் தலைமுறை நுட்பத்திலான ஒரு முறை ஏவப்பட்டு எந்த நடவடிக்கையும் தேவையற்ற எறிகணை ஆகும் என்பதோடு இது பகல் மற்றும் இரவு சூழல்களில் மேற்பரப்பிலிருந்து பீரங்கிகளைத் தாக்கி அழிக்கும்.
- சர்வதேச கிரிக்கெட் சபையின் (ICC) ஒருநாள் சர்வதேச (ODI) பேட்ஸ்மேன் தர வரிசையில் விராட் கோலி மீண்டும் முதலிடத்தைப் பிடித்தார்.

- இந்த இன்னிங்ஸின் மூலம், சச்சின் டெண்டுல்கருக்குப் பிறகு, ஆடவர் சர்வதேச கிரிக்கெட்டில் இரண்டாவது அதிக ரன்கள் எடுத்த வீரர் என்ற பெருமையை கோலி பெற்றுள்ளார்.

❖ பாதுகாப்பு ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு அமைப்பு ஆனது, 12 நிமிடங்களுக்கும் மேலாக நீடித்தச் செயல்திறனை வெளிப்படுத்திய, அதி குளிர் நிலையிலான மற்றும் முழு அளவிலான ஸ்க்ராம்ஜெட் எரிபொருளின் நீண்ட காலத் தரை இயக்கச் சோதனையை வெற்றிகரமாக நடத்தியது.

❖ முன்னாள் இந்திய வெளியுறவுச் சேவை (IFS) அதிகாரியான D. B. வெங்கடேஷ் வர்மா, 2026–27 ஆம் காலக் கட்டத்திற்கான ஆயுதக் குறைப்பு விவகாரங்கள் குறித்த ஐ.நா. ஆலோசனைக் குழுவின் தலைவராக தேர்ந்தெடுக்கப்பட்டார்.

❖ நவி மும்பை சர்வதேச விமான நிலையம், நவி மும்பையில் விவசாயிகள் மற்றும் உள்ளூர் உரிமைகள் இயக்கங்களுடன் தொடர்புடைய தலைவரான D B பாட்டீலின் பெயரால் பெயரிடப்பட உள்ளது.

❖ நெல்லூர் மாவட்டத்தில் உள்ள தகதர்த்தி பசுந்தட விமான நிலையத்திற்கு ஆந்திரப் பிரதேச அமைச்சரவை ஒப்புதல் அளித்தது.

- இந்த விமான நிலையம் ஆனது ஆந்திரப் பிரதேசத்தின் 8வது விமான நிலையமாக இருக்கும் என்பதோடு மேலும் பிராந்திய இணைப்பு, தொழில்துறை வளர்ச்சி மற்றும் துறைமுகம் சார்ந்தத் தளவாடங்களை மேம்படுத்துவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.

❖ இராமநாதபுரத்தின் பரமக்குடியில் இம்மானுவேல் சேகரனின் நினைவாக கட்டப் பட்டு உள்ள 'மணிமண்டபத்தை' தமிழக முதல்வர் திறந்து வைத்தார்.

❖ CSIR–தேசிய அறிவியல் தொடர்பு மற்றும் கொள்கை ஆராய்ச்சி நிறுவனம் (CSIR–NIScPR) 2026 ஆம் ஆண்டு ஜனவரியில் அதன் 5வது ஸ்தாபன தினத்தைக் கொண்டாடியது.

❖ இந்தியாவானது 28வது காமன்வெல்த் நாடுகளின் பேச்சாளர்கள் மற்றும் தலைமை அதிகாரிகள் (CSPOC) மாநாட்டை புது டெல்லியில் நடத்துகிறது.

- 1969 ஆம் ஆண்டில் நிறுவப்பட்ட CSPOC அமைப்பில் 53 காமன்வெல்த் நாடுகளைச் சேர்ந்த பேச்சாளர்கள் மற்றும் தலைமை அதிகாரிகள் இதில் அடங்குவர்.

❖ முன்னாள் படைவீரர்களின் சேவை மற்றும் தியாகத்தைக் கௌரவிக்கும் வகையில் இந்தியா ஜனவரி 14, 2026 ஆம் தேதியன்று நாடு தழுவிய அளவில் 10வது பாதுகாப்புப் படை வீரர்கள் தினத்தைக் கொண்டாடியது.

- இந்த நாள், ஜனவரி 14, 1953 அன்று ஃபீல்ட் மார்ஷல் K. M. கரியப்பா ஓய்வு பெற்றதை நினைவு கூரும் வகையில் கொண்டாடப் படுகிறது.

❖ தென் மாவட்டங்களில், டிராக் நெட் நடவடிக்கையின் போது, பிணையில் வெளிவர முடியாத பிடியாணைகள் (NBWs) நிலுவையில் இருந்த 598 நபர்களை தமிழ்நாடு காவல் துறையினர் கைது செய்தனர்.

❖ ஆர்மேனியாவில் நடைபெற்ற ஆண்ட்ரானிக் மார்கார்யன் நினைவுப் போட்டியில் 21 வயதான டெல்லியின் ஆர்யன் வர்ஷ்னி இந்தியாவின் 92வது சதுரங்க கிராண்ட் மாஸ்டர் ஆனார்.

❖ மும்பை பங்குச் சந்தையானது (BSE) ஹாங்காங் தலைமைத்துவ விருதுகள் மற்றும் CMO ஆசியா விருதுகளில் 2026 ஆம் ஆண்டுக்கான ஆசியாவின் சிறந்த முதலாளித்துவ நிறுவன விருதைப் பெற்றது.

- நீதிபதி ரேவதி மோஹிதே டெரே மேகாலயா உயர் நீதிமன்றத்தின் முதல் பெண் தலைமை நீதிபதியானார்.
- இந்தியக் குடியரசுத் தலைவர் பிரவீன் வஷிஸ்டாவை மத்திய ஊழல் கண்காணிப்பு ஆணையத்தின் (CVC) ஊழல் கண்காணிப்பு ஆணையராக நியமித்தார்.
- மத்திய உள்துறை அமைச்சர் புது டெல்லியின் பான்செரா பூங்காவில் 3வது சர்வதேச காற்றாடி (பட்டம் விடும்) விழா 2026 என்ற விழாவைத் தொடங்கி வைத்தார்.
- சீனாவிற்கு அடுத்தபடியாக 400 மில்லியனுக்கும் அதிகமான 5G பயனர்களுடன் இந்தியா உலகின் இரண்டாவது பெரிய 5G சந்தாதாரர் தளமாக மாறியுள்ளது.
- தொடர்ச்சியான அரசியல் நிச்சயமற்ற தன்மை மற்றும் நிர்வாகக் கருத்தாய்வுகளைக் காரணம் காட்டி, மிசோரம் ஆளுநர் சக்மா தன்னாட்சி மாவட்ட சபை பகுதியில் (CADC) ஆளுநர் ஆட்சியை மேலும் ஆறு மாதங்களுக்கு நீட்டித்தார்.
    - ஜூலை 7, 2025 அன்று CADC சபையின் செயல்பாடுகள் மற்றும் அதிகாரங்களை ஆளுநர் ஏற்றுக் கொண்டார்.
- ஆந்திரப் பிரதேச துணை முதல்வர் பவன் கல்யாண், பண்டைய ஜப்பானிய சாமுராய் வாள்வீச்சு கலையான கென்ஜுட்சுவில் சேர்க்கப்பட்ட முதல் இந்தியர் ஆனார்.
    - கென்ஜுட்சு என்பது ஒழுக்கம், துல்லியம், மன சமநிலை மற்றும் நெறிமுறை நடத்தை ஆகியவற்றில் கவனம் செலுத்தும் ஒரு பாரம்பரிய ஜப்பானிய தற்காப்புக் கலையாகும்.
- பயணிகளின் அடையாளச் சரிபார்ப்பை வலுப்படுத்தவும் சட்டவிரோத முன்பதிவு நடைமுறைகளைத் தடுக்கவும் இந்திய இரயில்வே ஒற்றைப் பயன்பாட்டுக் கடவுச்சொல் (OTP) அடிப்படையிலான பயணச் சீட்டு முறையை அறிமுகப் படுத்தி உள்ளது.
- மத்திய அரசின் சுகாதாரத் திட்ட (CGHS) பயனாளிகளுக்காக நிதிச் சேவைகள் துறை பரிபூரண மெடிக்ளைம் ஆயுஷ் பீமா திட்டத்தினை அறிமுகப்படுத்தியது.
    - இந்தக் கொள்கை இலவச வசதிகள், நவீன சிகிச்சைகள் மற்றும் பரந்த அளவிலான மருத்துவமனை வலையமைப்பை அணுகுவதற்கான வாய்ப்பினை வழங்குகிறது.
- குழந்தைகள் கடத்தலைத் தடுப்பதிலும், குழந்தைகளை மீட்பதிலும் ஆற்றிய சிறப்பான பணிக்காக RPF காவல் ஆய்வாளர் சந்தன சின்ஹாவுக்கு இந்திய இரயில்வேயின் மிக உயர்ந்த சேவை விருதான அதி விஷிஷ்ட் இரயில் சேவா புரஸ்கார் விருது வழங்கப் பட்டது.
- ஆசியாவிற்கு வெளியே அமைந்த மிக உயரமான சிகரமான அர்ஜென்டினாவில் உள்ள அகோன்காகுவா மலையை இந்திய மலையேற்ற நிபுணர் அரித்ரா ராய் வெற்றிகரமாக ஏறினார்.
- மைக்கோரைசல் பூஞ்சை வலையமைப்புகள் குறித்த தனது ஆராய்ச்சிக்காக அமெரிக்க உயிரியலாளர் டோபி கியர்ஸ் சுற்றுச்சூழல் சாதனைக்கான டைலர் பரிசை வென்றுள்ளார்.
- சிறந்த ஃபின்டெக் மற்றும் டிஜிட்டல் பொது உள்கட்டமைப்பு (DPI) ஏற்பிற்காக இந்திய வங்கிகள் சங்க (IBA) வங்கி தொழில்நுட்ப விருதை கர்நாடக வங்கி வென்றது.
    - சிறந்தத் தொழில்நுட்ப திறமை பிரிவில் கர்நாடக வங்கி இரண்டாம் இடத்தைப் பிடித்தது மற்றும் சிறந்தத் தொழில்நுட்ப வங்கி, சிறந்த டிஜிட்டல் நிதி உள்ளடக்கம் மற்றும் சிறந்த டிஜிட்டல் விற்பனைப் பிரிவுகளில் அது சிறப்பு அங்கீகாரத்தினைப் பெற்றது.

- இந்தியாவில் வந்தே பாரத் ஸ்லீப்பர் இரயிலின் முதல் வணிக ரீதியான இயக்கமானது வடகிழக்கு எல்லைப்புற இரயில்வே (NFR) மண்டலத்தினால் கௌஹாத்தி (காமக்யா) முதல் ஹவுரா வரை இயக்கப்பட உள்ளது.
- தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் கிழக்குக் கடற்கரைச் சாலையில் மாமல்லன் நீர்த்தேக்கத்திற்கு அடிக்கல் நாட்டினார்.
  - இந்த நீர்த்தேக்கம் சென்னையின் ஆறாவது குடிநீர் மூல ஆதாரமாகவும், இந்த மாநிலத்தின் முதல் கடலோர நன்னீர் நீர்த்தேக்கமாகவும் முன்மொழியப் பட்டு உள்ளது.
- தமிழ்நாடு அரசின் TNWeSAFE திட்டம், 2026 ஆம் ஆண்டுக்கான உலகளாவிய பெண்கள் உச்சி மாநாட்டை சென்னையில் ஏற்பாடு செய்ய உள்ளது.
- மத்திய அமைச்சர் டாக்டர் ஜிதேந்திர சிங், புதுதில்லியில் நடைபெற்ற இந்தியாவின் முதல் NAMO (நரேந்திர மோடி) புத்தக விழாவில் 'Gen V Bano' மற்றும் 'Mahatma' ஆகிய இரண்டு புத்தகங்களை வெளியிட்டார்.
- கூகுள் நிறுவனமானது, Gemma 3 உள்கட்டமைப்பில் கட்டமைக்கப்பட்ட, அதிக மற்றும் குறைந்த வளம் கொண்ட மொழிகள் உட்பட 55 உலகளாவிய மொழிகளை ஆதரிக்கின்ற செயற்கை நுண்ணறிவு (AI) அடிப்படையிலான TranslateGemma எனும் அனைவருக்குமான மொழிபெயர்ப்பு மாதிரியை அறிமுகப்படுத்தியுள்ளது.
- இந்திய மாநிலங்களில் 2025 ஆம் ஆண்டில் கேரளாவில் அதிக தனிப்பட்ட நான்கு சக்கர மின்சார வாகன (EV) ஏற்பு பதிவாகியுள்ளது.
- பாலின உள்ளடக்கிய அமைதிக் காப்புப் படைக்காக இந்திய இராணுவ மேஜர் சுவாதி சாந்த குமார் 2025 ஆம் ஆண்டுக்கான ஐக்கிய நாடுகள் சபையின் (ஐ.நா.) பொதுச் செயலாளர் விருதை வென்றார்.
- ஆறாவது ASEAN–இந்தியா டிஜிட்டல் அமைச்சர்கள் கூட்டம் (ADGMIN) ஆனது காணொளி வழியாக நடைபெற்றது.
- சீனா டைப் 096 டாங்-கிளாஸ் எனப்படும் அதன் மிகவும் மேம்பட்ட உந்துவிசை எறிகணை நீர்மூழ்கிக் கப்பலினை அறிமுகப்படுத்தியுள்ளது.
- உலகப் பொருளாதார மன்றத்தின் வருடாந்திரக் கூட்டம் ஆனது சுவிட்சர்லாந்தின் டாவோஸில் நடைபெற்றது.
- உலகளாவிய ஜனநாயக மாநாடு (GDC) ஆனது Confronting Public Support for Anti-Democratic Leaders என்ற கருத்துருவுடன் அமெரிக்காவில் நடைபெற உள்ளது.
- அமெரிக்காவில் உள்ள மெண்டோட்டா ஏரிக்கு அடியில் 5,200 ஆண்டுகள் பழமையான மரப் படகை அறிவியலாளர்கள் கண்டுபிடித்துள்ளனர், இது ஆரம்பகால மனித வாழ்க்கை மற்றும் மேம்பட்ட மரவேலைப்பாடுகள் திறன்கள் பற்றிய விவரங்களை வெளிப்படுத்துகிறது.
  - அவற்றில் பழமையான கிமு 3000 ஆம் ஆண்டிற்கு முந்தையது என்ற பதிவு காணப் படுவதுடன் மொத்தம் 16 பழங்கால தோணிப் படகுகள் கண்டுபிடிக்கப்பட்டன என்பதோடு இது மிகவும் ஒழுங்கமைக்கப்பட்ட சில மீன்பிடி நடவடிக்கைகளையும் குறிக்கின்றது.
- மென்கேஸ் நோயால் பாதிக்கப்பட்ட குழந்தைகளுக்குச் சிகிச்சையளிக்க ஜைகுபோ மருந்தினை அமெரிக்க உணவு மற்றும் மருந்து நிர்வாகம் (FDA) அங்கீகரித்தது.

- மென்கேஸ் நோய் என்பது உடலில் தாமிர வளர்சிதை மாற்றத்தைப் பாதிக்கும் ஒரு அரிய X குரோமோசோமுடன் இணைக்கப்பட்ட மரபணுக் கோளாறு ஆகும்.

❖ அருணாச்சலப் பிரதேசத்தின் சியாங் பள்ளத்தாக்கில் ஜிங்கிபெரேசி குடும்பத்தைச் சேர்ந்த பராகெம்ப்ஃபெரியா ஆல்பா என்ற புதிய இஞ்சி இனத்தை அறிவியலாளர்கள் கண்டுபிடித்தனர்.

❖ தெருநாய்களின் எண்ணிக்கையை மனிதாபிமான நடவடிக்கைகளுடன் நிர்வகிக்க பஞ்சாப் அரசு ஆனது லூதியானாவில் அதன் முதல் நாய் சரணாலயத்தைத் திறந்து உள்ளது.

❖ இந்தியா, இலங்கை மற்றும் மாலத்தீவுகள் ஆகிய நாடுகள் மாலத்தீவு அரசினால் நடத்தப் பட்ட DOSTI-17 என்ற 17வது கடலோரக் காவல்படைப் பயிற்சியை நிறைவு செய்தன.

❖ மகாராஷ்டிராவின் 11வது அஜந்தா-எல்லோரா சர்வதேச திரைப்பட விழாவில் பத்மபாணி விருதைப் பெறும் நபராக மூத்த இசையமைப்பாளர் இளையராஜா தேர்ந்தெடுக்கப் பட்டார்.

❖ ஒலிம்பிக் பதக்கம் வென்ற சாய்னா நேவால் 2026 ஆம் ஆண்டு ஜனவரியில் போட்டி முறை பாட்மிண்டன் விளையாட்டிலிருந்து ஓய்வு பெறுவதாக அறிவித்துள்ளார்.

❖ மாற்றுத் திறனாளிகளுக்கான தேசிய பவர் லிஃப்டிங் சாம்பியன்ஷிப் போட்டியானது உத்தரக்காண்ட் மாநிலம் ரூர்க்கியில் தொடங்கப்பட்டது.

❖ இராணிப்பேட்டை மாவட்டத்தில் அமைக்கப்பட்டுள்ள கிராமங்கள் மற்றும் சிறு நகரங்களை மையமாகக் கொண்ட தெரு (சமூக) நாய்களுக்கான சிறப்பு கால்நடை வளாகத்தைத் தமிழக முதல்வர் திறந்து வைத்தார்.

- இது தமிழ்நாட்டில் தெரு நாய்களுக்காக மட்டுமே பிரத்தியேகமாக வடிவமைக்கப் பட்டுள்ள இது போன்ற முதல் மையம் ஆகும்.

❖ சூரத்தைச் சேர்ந்த 20 வயது ரோல் பால் தடகள வீரர் யாஷ் அனில் ரஷியா, துபாயில் நடைபெற்ற 7வது ரோல் பால் உலகக் கோப்பை 2025 போட்டியில் தங்கப் பதக்கம் வென்றார்.

❖ பத்வாரி டெக்னாலஜிஸின் நிறுவனர் பகுல் லிம்பாசியா, 2026 ஆம் ஆண்டில் உற்பத்தித் திறன் தலைமைத்துவத்திற்கான ஆசிய உற்பத்தித்திறன் அமைப்பு (APO) தேசிய விருதைப் பெற்றார்.

❖ இந்திய இராணுவம், ஜம்மு & காஷ்மீர் காவல்துறை (சிறப்புச் செயல்பாட்டுக் குழு உட்பட) மற்றும் மத்திய சேமக் காவல் படை (CRPF) ஆகியவற்றின் ஒரு கூட்டு நடவடிக்கையான ஆபரேஷன் டிராஷி-I ஜம்மு & காஷ்மீரின் கிஷ்த்வாரில் தொடங்கியது.

- தீவிரவாதிகளை ஒழிப்பது, அவர்களின் மறைவிடங்களை அழிப்பது மற்றும் ஜம்மு பிராந்தியத்திலிருந்து காஷ்மீர் பள்ளத்தாக்குக்கு ஊடுருவல் பாதைகளைச் சீர் குலைப்பது இதன் நோக்கமாகும்.

❖ டெல்லி காவல்துறை, தீயணைப்பு, அவசர ஊர்தி மற்றும் பேரிடர் சேவைகளுக்கு 112 என்ற ஒரே அவசர எண்ணை அறிமுகப்படுத்த உள்ளது.

❖ விதர்பா கிரிக்கெட் அணியானது இரண்டு முறை சாம்பியனான "சௌவுராஷ்டிரா" அணியை வீழ்த்தி அதன் முதல் "விஜய் ஹசாரே டிராபி" கோப்பையை வென்றது.

❖ 2026 ஆம் ஆண்டு நம்பியோ உலகளாவியப் பாதுகாப்புக் குறியீட்டில் முதலிடத்தைப் பிடித்ததுடன், 2026 ஆம் ஆண்டில் தொடர்ந்து பத்தாவது ஆண்டாக உலகின் பாதுகாப்பான நகரமாக அபுதாபி தரவரிசைப்படுத்தப்பட்டது.

- குஜராத்தின் கோரஜில் ஒரு புதிய மாபெரும் கார் உற்பத்தி ஆலையை அமைப்பதற்கான முதலீட்டு ஒப்பந்தத்தில் மாருதி சுசுகி இந்தியா லிமிடெட் மற்றும் குஜராத் அரசு கையெழுத்திட்டுள்ளன.
- மொசாம்பிக் நாட்டு உரிமை ஆர்வலர் கிராகா மச்செலுக்கு அமைதி, ஆயுதக் குறைப்பு மற்றும் மேம்பாட்டுக்கான இந்திரா காந்தி பரிசு 2025 வழங்கப்பட்டது.
- இந்தியக் கடலோரக் காவல்படையும் ஜப்பான் கடலோரக் காவல்படையும் இணைந்து மும்பையில் அபாயகரமான மற்றும் நச்சுப் பொருட்கள் (HNS) பதிலெதிர்ப்பு தொடர்பான ஒரு கூட்டுப் பயிற்சி ஒத்திகையை நடத்தின.
- செர்பிய டென்னிஸ் வீரரான நோவாக் ஜோகோவிச், கிராண்ட் ஸ்லாம் போட்டிகளில் 400 ஒற்றையர் பிரிவு போட்டிகளில் வெற்றிகளைப் பெற்ற முதல் வீரராக மாறியுள்ளார்.
- குஜராத் மாநிலதில் உள்ள சனந்த் (கோராஜ்) என்னுமிடத்தில் இந்தியாவின் முதல் ஒருங்கிணைந்த தனியார் செயற்கைக்கோள் உற்பத்திப் பிரிவுக்கான அடிக்கல் நாட்டப் பட்டது.
- பிரதமர், அசாமில் உள்ள NH-715 நெடுஞ்சாலையில், 6,957 கோடி ரூபாய் மதிப்பீட்டில், 34.5 கிலோமீட்டர் நீளமுள்ள காசிரங்கா மேம்பால வழித்தடத்திற்கு அடிக்கல் நாட்டினார்.
    - இது சாலைக்குக் கீழே விலங்குகள் பாதுகாப்பாகக் கடந்து செல்ல அனுமதிப்பதன் மூலம் வனவிலங்குகளைப் பாதுகாக்கும் வகையில் வடிவமைக்கப் பட்டுள்ளது.
- லெப்டினன்ட் கே. எம். சுதா, தேசிய மாணவர் படை (NCC) அதிகாரிகளுக்கான பயிற்சி நிகழ்வில் தங்கப் பதக்கம் வென்ற இந்தியாவின் வடகிழக்கு மாநிலத்தைச் சேர்ந்த முதல் நபர் ஆக மாறியுள்ளார் .
- ஜம்மு காஷ்மீரின் ரஜௌரி மாவட்டத்திலிருந்து மத்திய ரிசர்வ் காவல் படை (CRPF) அதிகாரியாக இணைந்த முதல் பெண்ணாக சிம்ரன் பாலா என்பவர் உருவெடுத்து உள்ளார்.
- ஜார்க்கண்ட் மாநிலத்தின் மேற்கு சிங்பூம் மாவட்டத்தின் சரண்டா வனப்பகுதியில் இந்திய கம்யூனிஸ்ட் கட்சி (மாவோயிஸ்ட்) அமைப்புக்குப் எதிராக மெகாபுரு நடவடிக்கை எனும் ஒரு பெரிய அளவிலான மாவோயிசப் பதிலெதிர்ப்பு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.
- இனப்படுகொலையால் பாதிக்கப்பட்டவர்களை நினைவுகூரும் வகையில், ஜனவரி 27 அன்று சர்வதேச இனப்படுகொலை நினைவு தினம் அனுசரிக்கப்படுகிறது.
- ஒப்பந்தம் 108 கையெழுத்தானதைக் குறிக்கும் வகையில் தரவு தனியுரிமை தினம், ஜனவரி 28 அன்று அனுசரிக்கப்படுகிறது.
    - இது டிஜிட்டல் யுகத்தில் தரவுப் பாதுகாப்பு, தனியுரிமை உரிமைகள் மற்றும் தனிப்பட்ட தரவுகளைப் பொறுப்புடன் கையாள்வது குறித்து விழிப்புணர்வை ஏற்படுத்துவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.
- நெய்வேலி பழுப்பு நிலக்கரி நிறுவனமானது  ராஜஸ்தானில் உள்ள தனது 300 மெகாவாட் (MW) பார்சிங்கர் சூரிய மின்சக்தித் திட்டத்தை முழு அளவில் இயக்கத் தொடங்கியுள்ளது.
- மைக்ரோசாப்ட் நிறுவனம் Maia 200 என்ற செயற்கை நுண்ணறிவு சில்லுவை அறிமுகப் படுத்தியது என்பதோடு மேலும் ஒரு டாலருக்கு 30% அதிக செயல்திறனை வழங்கும் இது மைக்ரோசாப்ட் 365 கோபைலட் மற்றும் கிளவுட் AI சேவைகளுக்காக அமெரிக்கத் தரவு மையங்களில் பயன்படுத்தப்பட்டுள்ளது.

- வங்கதேசம் போட்டியிலிருந்து விலகியதைத் தொடர்ந்து, ஐசிசி ஆடவர் டி20 உலகக் கோப்பை 2026 தொடரில் ஸ்காட்லாந்து அணி வங்கதேசத்திற்குப் பதிலாக இடம் பெற்றுள்ளது.
- புவியியல், அறிவியல், ஆய்வுகள், வனவிலங்குகள் மற்றும் சுற்றுச்சூழல் பாதுகாப்பு ஆகியவற்றை முன்னிலைப்படுத்தும் வகையில் ஜனவரி 27 அன்று தேசியப் புவியியல் தினம் அனுசரிக்கப்பட்டது.
- மகாராஷ்டிரா மாநிலமானது, அரசு மருத்துவமனைகள் மற்றும் நகர்ப்புற சுகாதார மையங்களில் இந்தியாவின் முதல் மாதவிடாய் நிறுத்தம் சார்ந்த சிகிச்சை மையங்களைத் தொடங்கியுள்ளது.

# தமிழ்நாடு செய்திகள்

## தமிழ்நாடு ஓய்வூதியக் குழு அறிக்கை

- மூன்று உறுப்பினர்களைக் கொண்ட ஓய்வூதியக் குழு தனது இறுதி அறிக்கையை சென்னையில் தமிழக அரசிடம் சமர்ப்பித்தது.
- ககன்தீப் சிங் பேடி தலைமையிலான இந்தக் குழுவின் மற்ற உறுப்பினர்கள் K.R. சண்முகம் மற்றும் பிரதிக் தயாள் ஆகியோர் ஆவர்.
- 2025 ஆம் ஆண்டு ஏப்ரல் 01 ஆம் தேதி முதல் மத்திய அரசு ஊழியர்களுக்காக செயல்படுத்தப்பட்ட பழைய ஓய்வூதியத் திட்டம் (OPS), பங்களிப்பு சார் ஓய்வூதியத் திட்டம் (CPS) மற்றும் ஒருங்கிணைந்த ஓய்வூதியத் திட்டம் (UPS) ஆகியவற்றை இந்தக் குழு ஆய்வு செய்தது.
- 2003 ஆம் ஆண்டு ஏப்ரல் 01 ஆம் தேதிக்கு முன்பு பணியில் சேர்ந்த ஊழியர்கள் OPS திட்டத்தின் கீழ் கொண்டு வரப்பட்டனர் என்ற நிலையில் இது சுமார் 1.98 லட்சம் ஊழியர்களுக்கும் சுமார் 6.94 லட்சம் ஓய்வூதியதாரர்கள் மற்றும் குடும்ப ஓய்வூதிய தாரர்களுக்கும் பயனளிக்கிறது.
- 2003 ஆம் ஆண்டு ஏப்ரல் 01 ஆம் தேதிக்குப் பிறகுப் பணியமர்த்தப்பட்டவர்களுக்கு, 10% ஊழியர் பங்களிப்பு மற்றும் அதற்குச் சமமான அரசு பங்களிப்புடன் இந்த CPS திட்டம் பொருந்தும்.
- இது உள்ளாட்சி அமைப்புகளின் ஊழியர்கள் உட்பட சுமார் 6.24 லட்சம் நபர்களை உள்ளடக்கியது, அதே நேரத்தில் கொடுக்கப்பட்ட இந்தப் பிரிவின் கீழ் ஓய்வூதியம் பெறுபவர்களின் எண்ணிக்கை கிட்டத்தட்ட 44,000 ஆகும்.
- CPS திட்டத்தின் கீழ், 2025 ஆம் ஆண்டு மார்ச் மாதம் வரை வட்டியுடன் கூடிய பங்களிப்புகளாக சுமார் 84,507 கோடி ரூபாய் திரட்டப்பட்டது.
- 2024–25 ஆம் ஆண்டில் ஓய்வூதியம் தொடர்பான செலவினம் சுமார் 42,509 கோடி ரூபாய் (மொத்த வருவாய் வரவுகளில் 14.2%) ஆகும்.

## மதராஸ் பல்கலைக்கழக திருத்த மசோதா

- தமிழ்நாடு மதராஸ் பல்கலைக்கழக திருத்த மசோதா ஆனது குடியரசுத் தலைவரின் ஒப்புதலின்றி திருப்பி அனுப்பப்பட்டது.
- இந்த மசோதா 2022 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதத்தில் தமிழ்நாடு சட்டமன்றத்தால் நிறைவேற்றப்பட்டு ஒப்புதலுக்கு அனுப்பப்பட்டது.
- மதராஸ் பல்கலைக்கழகத்தின் துணைவேந்தரை (VC) நியமிக்கும் அதிகாரத்தை தமிழ்நாடு மாநில அரசுக்கு வழங்குவதை இந்த மசோதா நோக்கமாகக் கொண்டது.
- அது இந்த அதிகாரத்தை பதவி வழி வேந்தரான ஆளுநரிடமிருந்து அரசாங்கத்திற்கு மாற்றுவதன் மூலம் மதராஸ் பல்கலைக் கழக சட்டத்தைத் திருத்த முன்மொழிந்தது.
- 1923 ஆம் ஆண்டு சென்னைப் பல்கலைக்கழகச் சட்டத்தின் பிரிவு 11ல், 'வேந்தர்' என்ற வார்த்தையை 'அரசு' என்ற வார்த்தையால் மாற்ற இந்த மசோதா முயன்றது.
- UGC (பல்கலைக்கழக மானியக் குழு) விதிமுறைகளுடன் முரண்படுவது குறித்த சிக்கல்கள் காரணமாக இந்த மசோதா குடியரசுத் தலைவரின் பரிசீலனைக்கு அனுப்பப் பட்டது.
- இந்த மசோதா திருப்பி அனுப்பப்பட்ட பிறகு, தமிழ்நாடு சட்டமன்றம் அதனை மறு பரிசீலனை செய்ய வேண்டும்.

## மதுரை மற்றும் கேம்பர்லே - இரட்டை நகரங்களின் உறவுகள்

- மதுரை நகரானது, ஐக்கியப் பேரரசில் உள்ள கேம்பர்லே என்ற நகரத்துடன் இரட்டை நகரங்கள் கூட்டாண்மையில் கையெழுத்திட உள்ளது.
- இந்தக் கூட்டாண்மை பல்வேறு நாடுகளில் உள்ள நகரங்களுக்கு இடையேயான நீண்ட கால ஒத்துழைப்பாகும்.
- கல்வி மற்றும் ஆராய்ச்சி, கலாச்சாரம் மற்றும் பாரம்பரியம், சுற்றுலா, பொருளாதார மேம்பாடு மற்றும் நகர்ப்புற நிர்வாகம் மற்றும் நிலைத்தன்மை ஆகியவற்றில் ஒத்துழைப்பை ஊக்குவிப்பதை இது நோக்கமாகக் கொண்டுள்ளது.
- இந்த முன்னெடுப்பின் மூலம், தமிழ்நாட்டைச் சேர்ந்த மாணவர்கள் ஐக்கியப் பேரரசு பல்கலைக்கழகங்கள், பரிமாற்றத் திட்டங்கள் மற்றும் கூட்டு ஆராய்ச்சி வாய்ப்புகளைப் பெறுவார்கள்.

## வால்கா முதல் கங்கை வரை புத்தகத்தின் தமிழ் மொழிபெயர்ப்பு

- வால்கா முதல் கங்கை வரை என்பது இந்திய அறிஞரும் எழுத்தாளருமான ராகுல் சாங்கிருத்யாயன் (1893–1963) எழுதிய பிரபலமான புத்தகம் ஆகும்.
- இந்தப் புத்தகம் ஏழாவது முறையாக தமிழில் மொழிபெயர்க்கப்பட்டுள்ளது.
- சமீபத்திய தமிழ் மொழிபெயர்ப்பை நாடக பயிற்சியாளரும் ஆங்கில ஆசிரியருமான A. மங்கை செய்துள்ளார், இதன் தமிழ் பதிப்பு சீர் வாசகர் வட்டம் பதிப்பகத்தினால் வெளியிடப் பட்டது.
- இந்தப் புத்தகம் 6000 பொது சகாப்தத்திற்கு முந்தைய காலம் முதல் 1942 ஆம் ஆண்டு பொது சகாப்தம் வரையிலான மனிதச் சமூகத்தின் வரலாற்றை 20 அத்தியாயங்களில் விவரிக்கிறது.

## பண்டைய வைணவ நினைவுச் சின்னம்

- ஸ்ரீ வைணவ சமயத்தின் முதல் ஆச்சார்யரான நாதமுனிகளின் சிலை, 2000 ஆம் ஆண்டில் கங்கை கொண்ட சோழபுரம் அருகே கண்டுபிடிக்கப்பட்டது.
- இந்தக் கண்டுபிடிப்புத் தளம் ஆனது அரியலூர் மாவட்டத்தில் உள்ள சொர்க்கப் பள்ளத்தில் (செம்போடை என்றும் அழைக்கப்படுகிறது) உள்ளது.
- முன்னதாக, ஸ்ரீதேவி மற்றும் பூதேவியுடன் கூடிய ஸ்ரீனிவாசப் பெருமாளின் சிலை அதே இடத்தில் ஒரு மரத்தின் கீழ் பாதி புதைக்கப்பட்ட நிலையில் கண்டுபிடிக்கப்பட்டது.
- பின்னர் அந்த இடத்தில் ஸ்ரீனிவாசப் பெருமாள் மற்றும் நாதமுனிகளின் சிலைகளை வைக்க இரண்டு கோயில்கள் கட்டப்பட்டன.
- இந்த இடம் நாதமுனிகளின் திருவரசு (நினைவுச் சின்னம்) என்று அடையாளம் காணப் பட்டுள்ளது என்பதோடு இது அவரது இறுதி நாட்களில் அங்கு அவர் இருந்ததை உறுதிப் படுத்துகிறது.
- நாதமுனிகள் 9 ஆம் நூற்றாண்டு பொது சகாப்தத்தில் (கி.பி) வாழ்ந்தார்.
- நாலாயிர திவ்யப் பிரபந்தத்தின் (திராவிட வேதம்) 4,000 பாடல்களைத் தொகுத்த பெருமை அவருக்கு உண்டு.

## வடகிழக்குப் பருவமழை 2025

- 2025 ஆம் ஆண்டில் இயல்பை விட அதிகமான மழை பெய்யும் என்று கணிக்கப் பட்டதற்கு மாறாக தமிழ்நாட்டில் சாதாரண வடகிழக்குப் பருவமழை (அக்டோபர்-டிசம்பர்) பதிவானது.
- நீண்ட கால சம்பா-தாளடி-பிஷாணம் சாகுபடி காலத்தில் நெல் சாகுபடி பரப்பு இலக்கு எட்டப்பட்டுள்ளது.
- 33.9 லட்சம் ஏக்கர்கள் என்ற என்ற ஒட்டு மொத்த இலக்கிற்கு மாறாக, சாகுபடி பரப்பளவு 33.8 லட்சம் ஏக்கர்களாக இருந்தது என்ற நிலையில் அதில் சுமார் 13 லட்சம் ஏக்கர் காவிரி டெல்டாவிலும் மீதமுள்ளவை இம்மாநிலத்தின் இதர பிற பகுதிகளிலும் பதிவாகின.
- இங்கு ஐந்து ஆண்டு காலச் சராசரி சாகுபடிப் பரப்பளவு 34.8 லட்சம் ஏக்கர் ஆகும்.
- மார்ச்-செப்டம்பர் மாதங்களில் தமிழகத்தில் 58 செ.மீ மழைப் பொழிவு பதிவானதால், தொடர்ச்சியான நீர் கிடைப்பது அதற்கான ஒரு காரணமாக அமைந்தது.
- உண்மையில், 2025 ஆம் ஆண்டில், கோடை கால மழைப்பொழிவு மிகவும் அதிகமாக இருந்தது என்ற நிலையில் அதாவது மார்ச் மற்றும் ஏப்ரல் மாதங்களில் தமிழகத்தில் 25 செ.மீ. மழை பதிவாகியுள்ளது என்பதோடு இது இயல்பை விட கிட்டத்தட்ட இரு மடங்கு அதிகமாகும்.
- தென்மேற்குப் பருவமழையின் போது, எதிர்பார்க்கப்பட்ட மழை அளவு 33 செ.மீ. ஆகும்.
- வடகிழக்குப் பருவமழையில் எதிர்பார்க்கப்பட்ட 44 செ.மீ. மழைப் பொழிவிற்குப் பதிலாக 43 செ.மீ. மழை மட்டுமே பெய்தது என்பதோடு மேலும் நான்கு மாவட்டங்கள் (திருநெல்வேலி, தென்காசி, விருதுநகர் மற்றும் இராணிப்பேட்டை) மட்டும் அதிகப் படியான மழையைப் பெற்றிருந்தாலும், மிகவும் போதுமான அளவு நிலத்தடி நீர் நிலை மற்றும் குறிப்பாக டெல்டாவில் கிடைக்கப் பெற்ற உபரி காவிரி நீர் காரணமாக ஓராண்டிற்கான முக்கியச் சாகுபடி பருவம் இடையூறு இல்லாமல் இருந்தது.

- இந்தப் பருவத்தில், வழக்கமாக 5 லட்சம் டன்களுக்கு பதிலாக சுமார் 14.8 லட்சம் டன் நெல் கொள்முதல் செய்யப்பட்டது.
- வரும் எட்டு மாதங்களில், பற்றாக்குறைப் பருவம் உட்பட, சுமார் 38 லட்சம் டன் கூடுதலாக கொள்முதல் செய்யப்படும் என்று எதிர்பார்க்கப் படுகிறது.
- 2024-25 ஆம் ஆண்டில், கொள்முதல் செய்யப்பட்ட மொத்த உணவு தானியங்களின் அளவு சுமார் 48 லட்சம் டன்கள் ஆகும்.
- ஆறு ஆண்டு கால உபரியான மழைப் பொழிவு போக்கிற்குப் பிறகு, வடகிழக்குப் பருவமழை தமிழ்நாட்டில் இயல்பை விட சற்று குறைவான மழையுடன் முடிவடையும்.
- 2019 ஆம் ஆண்டு முதல் ஆறு ஆண்டு காலங்களுக்கு தொடர்ந்து இயல்பான அல்லது உபரியான மழையை பெற்ற பிறகு, இந்த ஆண்டு வடகிழக்குப் பருவமழையின் போது தமிழ்நாட்டில் இயல்பை விட சற்று குறைவான மழை பதிவாக வாய்ப்புள்ளது.
- தமிழ்நாட்டில் இதுவரை 42.7 செ.மீ. மழை பதிவாகியுள்ளது என்பதோடு இது பருவகால சராசரியான 43.8 செ.மீ. அளவினை விட 3% குறைவு ஆகும்.
- இந்திய வானிலை ஆய்வு மையம் (IMD) 19% வரையான பற்றாக்குறை அல்லது உபரி மழையை இயல்பானதாகக் கருதுகிறது.
- தென்கிழக்கு வங்காள விரிகுடாவில் வீசும் கிழக்கத்தியக் காற்றில் ஒரு தாழ்வு மண்டலம் உருவாகி இருப்பதால், குறிப்பாக தெற்கு தமிழ்நாடு மற்றும் மேற்குத் தொடர்ச்சி மலையை ஒட்டிய மாவட்டங்களில் லேசான மழை பெய்யும் என்று பிராந்திய வானிலை ஆய்வு மையம் (RMC) தெரிவித்துள்ளது.
- டிசம்பர் 31 ஆம் தேதியை வடகிழக்கு பருவமழையின் அதிகாரப்பூர்வ முடிவாக IMD கருதுகிறது.
- முந்தைய ஆண்டுகளில் பருவமழை ஜனவரி மாதத்திலும் பெய்துள்ளது.
- நவம்பர் மற்றும் டிசம்பர் மாதங்களில் இந்தியப் பெருங்கடலில் மேக உருவாக்கம் மற்றும் மழைப்பொழிவை அதிகரிப்பதில் முக்கியப் பங்கு வகிக்கும் பெரிய அளவிலான கிழக்கு நோக்கி நகரும் மண்டலமான மேடன்-ஜூலியன் அலைவு இல்லாதது நீடித்த வறட்சிக்கு முக்கியக் காரணமாகும்.
- வெப்பமண்டல வானிலை முறைகளைப் பாதிக்கும் வளிமண்டல அலை வடிவமான பூமத்திய ரேகை ரோஸ்பி அலை, டிசம்பர் மாத தொடக்கத்தில் டிட்வா புயல் மூலம் மழைப்பொழிவுக்கு உதவியிருந்தாலும், இந்த மாநிலம் முழுவதும் பரவலான மழைப் பொழிவை மீண்டும் பெற அது போதுமானதாக இல்லை.
- 2020 ஆம் ஆண்டிலிருந்து கடந்த ஐந்து ஆண்டு காலத்தில் சென்னையின் உபரி மழைப் பொழிவு காலம் இந்த ஆண்டு முடிவுக்கு வந்துள்ளது.

## 2025 ஆம் ஆண்டில் வாகனப் பதிவுகள்

- முந்தைய ஆண்டை விட 2025 ஆம் ஆண்டில் தமிழ்நாட்டில் வாகனப் பதிவுகள் 8.4% அதிகரித்துள்ளன.
- மாநிலத்தில் உள்ள 147 பிராந்தியப் போக்குவரத்து அலுவலகங்கள் (RTO) மற்றும் பிரிவு அலுவலகங்கள் (UO) ஆகியவற்றில் மொத்தம் சுமார் 21.18 லட்சம் வாகனங்கள் பதிவு செய்யப்பட்டுள்ளன.

- சுமார் 40 சதவீதத்திற்கும் அதிகமான பதிவுகள் சென்னை, செங்கல்பட்டு, திருவள்ளூர், கோயம்புத்தூர், மதுரை மற்றும் சேலம் மாவட்டங்களில் பதிவாகியுள்ளன.
- 2025 ஆம் ஆண்டில் சுமார் 16.4 லட்சம் பதிவுகளுடன் இரு சக்கர வாகனங்கள் மிகப் பெரிய பங்கைக் கொண்டுள்ளன.
- இப்பதிவுகளில் பெட்ரோல் வாகனங்கள் அதிக எண்ணிக்கையில் உள்ளன என்பதோடு இது பதிவு செய்யப் பட்ட மொத்த வாகனங்களில் சுமார் 75% ஆகும்.
- 2024 ஆம் ஆண்டில் 1.35 லட்சமாக இருந்த மின்சார வாகனங்களில், பெரும்பாலும் இரு சக்கர வாகனங்களின் பதிவுகள் 2025 ஆம் ஆண்டில் 1.74 லட்சமாக அதிகரித்தன.

## 2025 ஆம் ஆண்டில் PE–VC முதலீடுகள்

- தனியார் பங்கு மற்றும் துணிகர மூலதன முதலீட்டு (PE–VC) நிறுவனங்கள் 2025 ஆம் ஆண்டில் தமிழ்நாட்டைச் சேர்ந்த நிறுவனங்களில் 61 ஒப்பந்தங்களில் 3,513 மில்லியன் டாலரை முதலீடு செய்தன.
- துணிகர முதலீடு நுண்ணறிவு தரவுகளின்படி, இது 2024 ஆம் ஆண்டை விட மொத்த முதலீட்டு மதிப்பில் 20% அதிகரிப்பைக் குறிக்கிறது.
- 2025 ஆம் ஆண்டின் நான்காவது காலாண்டில் (Q4), PE–VC முதலீடுகள் 14 ஒப்பந்தங்களில் 421 மில்லியன் டாலராகக் கடுமையாகக் குறைந்தன.
- மூன்றாம் காலாண்டில் (Q3) முதலீடு செய்யப்பட்ட 1,461 மில்லியன் டாலரை விட Q4 முதலீட்டு அளவு கிட்டத்தட்ட 71% குறைவாக இருந்தது.
- 2024 மற்றும் 2025 ஆகிய ஆண்டுகளில் 46 ஒப்பந்தங்கள் பதிவு செய்யப் பட்டதுடன் தமிழ்நாட்டில் ஏஞ்சல் முதலீடுகள் மாறாமல் இருந்தன.
- தேசிய அளவில், PE–VC நிறுவனங்கள் 2025 ஆம் ஆண்டில் இந்திய நிறுவனங்களில் 1,164 ஒப்பந்தங்களில் சுமார் 33 பில்லியன் டாலரை முதலீடு செய்தன.

## ECMS வேலைவாய்ப்புகள் மற்றும் முதலீடு

- மின்னணு மற்றும் தகவல் தொழில்நுட்ப அமைச்சகம் (MeitY) ஆனது மூன்றாவது பிரிவில் மின்னணுக் கூறுகள் உற்பத்தி திட்டத்தின் (ECMS) கீழ் 22 புதிய திட்டங்களுக்கு ஒப்புதல் அளித்தது.
- இந்த 22 திட்டங்கள் இந்தியா முழுவதும் மொத்தம் 34,061 வேலை வாய்ப்புகளை உருவாக்கும் என்று எதிர்பார்க்கப் படுகிறது.
- டாடா எலக்ட்ரானிக்ஸ், மதர்சன் மற்றும் ஃபாக்ஸ்கான் ஆகியவற்றின் மூன்று திட்டங்களிலிருந்து தமிழ்நாட்டில் மட்டும் 23,451 வேலைவாய்ப்புகள் உள்ளன.
- தமிழ்நாட்டில் உள்ள ஃபாக்ஸ்கான் நிறுவனத்தின் யுஜான் தொழில்நுட்பத் திட்டம் ECMS திட்டத்தின் இந்த பிரிவின் கீழ் மிகப்பெரிய ஒப்புதலைப் பெற்றது.
- மூன்றாவது பிரிவில் அங்கீகரிக்கப்பட்ட மொத்த முதலீடு 41,863 கோடி ரூபாய் ஆகும்.
- இதில், 27,166 கோடி ரூபாய் மதிப்புள்ள திரட்டு முதலீடு தமிழ்நாட்டிலிருந்து மட்டுமே வருகிறது.

## 2025 ஆம் ஆண்டில் தமிழ்நாட்டின் கடன் நிலை

- 2010 ஆம் ஆண்டில், உத்தரப் பிரதேசத்தின் கடன் தமிழ்நாட்டின் கடனை விட இரண்டு மடங்கு அதிகமாக இருந்தது.
- இன்று, தமிழ்நாட்டின் கடன் நிலுவை உத்தரப் பிரதேசத்தை விட அதிகமாக உள்ளது.
- 2025-26 நிதியாண்டின்படி, தமிழ்நாட்டின் கடன் நிலுவை, மொத்த மாநில உள்நாட்டு உற்பத்தியில் (GSDP) 26.1% ஆக இருக்கும் என்று மதிப்பிடப்பட்டுள்ளது என்பதோடு இது 2024-25 ஆம் ஆண்டில் 26.4% ஆகவும், 2023-24 ஆம் ஆண்டில் 26.6% ஆகவும் இருந்தது.
- கோவிட்-19 உச்சநிலைக்குப் பிறகு தமிழ்நாட்டின் கடன் விகிதமானது படிப்படியாகக் குறைந்து வருகிறது, இருப்பினும் இது கோவிட்- தொற்றுக்கு முந்தைய நிலைகளை விட அதிகமாகவே உள்ளது.
- மாறாக, உத்தரப் பிரதேச மாநிலம் 2025-26 நிதியாண்டின் இறுதியில் மொத்த மாநில உள்நாட்டு உற்பத்தியில் 29.4% நிலுவைக் கடன்களுடன் முடிவடையும் என்று மதிப்பிடப் பட்டுள்ளது என்பதோடு இது 2024-25-ஆம் ஆண்டில் இருந்த 30.8% என்ற அளவிலிருந்து குறைந்துள்ளது.
- தமிழ்நாட்டின் மொத்தக் கடன் அளவு தற்போது அதிகமாக இருந்தாலும், அதன் பொருளாதாரத்தின் அளவோடு ஒப்பிடும் போது உத்தரப் பிரதேசமே தமிழ்நாட்டை விட அதிக கடன் சுமையுடன் உள்ளது.
- 2025-26 ஆம் ஆண்டில் தமிழ்நாட்டின் பொருளாதாரம் ₹35.7 லட்சம் கோடி மொத்த மாநில உள்நாட்டு உற்பத்தியுடன் உள்ளது என்ற நிலையில் உத்தரப் பிரதேசத்தின் மக்கள் தொகை ஏறக்குறைய மூன்று மடங்கு அதிகமாக இருந்த போதிலும், அதன் ₹30.8 லட்சம் கோடி பொருளாதாரத்தை விட தமிழ்நாட்டின் தனிநபர் பொருளாதாரம் கணிசமாகப் பெரியது.
- தமிழ்நாடு தனது வருவாய் வரவுகளில் ஒரு பெரிய பகுதியை வட்டித் தொகையினைச் செலுத்துவதற்காகச் செலவிடுகிறது என்ற நிலையில் இது 2025-26 ஆம் ஆண்டில் சுமார் 21% ஆகும்.
- இது தமிழ்நாட்டை அதிக வட்டிச் சுமை கொண்ட மாநிலங்களில் ஒன்றாக ஆக்குகிறது.
- தமிழ்நாட்டின் நிதிப் பற்றாக்குறை 2025-26 ஆம் ஆண்டில் மொத்த மாநில உள்நாட்டு உற்பத்தியில் 3% ஆக இருக்கும் என்று கணிக்கப்பட்டுள்ளது என்பதோடு இது 2024-25 ஆம் ஆண்டிற்கான திருத்தப்பட்ட மதிப்பீடான 3.3% என்பதை விடக் குறைவு மற்றும் நிதிப் பொறுப்பு மற்றும் வரவு செலவுத் திட்ட மேலாண்மை (FRBM) கட்டமைப்புக்குள் இது முழுமையாக உள்ளது.
- 2012-13 முதல் 2021-22 வரையிலான பத்து ஆண்டு காலத்தில், தமிழ்நாட்டின் சராசரி உண்மையான மொத்த உள்நாட்டு உற்பத்தி வளர்ச்சி, அதன் சராசரி உண்மையானப் பயனுள்ள வட்டி விகிதத்தை விட சுமார் 2.1 சதவீதப் புள்ளிகள் அதிகமாக இருந்துள்ளது.
- கோவிட் பெருந்தொற்று அதிர்ச்சியை உள்ளடக்கிய மிகச் சமீபத்திய ஐந்து ஆண்டு காலப் பகுதியில் கூட, வளர்ச்சிக்கும் வட்டிக்கும் இடையிலான வேறுபாடு 1.3 சதவீதப் புள்ளிகளாக நேர்மறையாகவே உள்ளது.
- வளர்ச்சி என்பது தொடர்ந்து பயனுள்ள கடன் வாங்கும் செலவை விட அதிகமாக இருக்கும் போது, முதன்மைப் பற்றாக்குறைகள் மிகவும் அதிகமாக இல்லாத வரையில், கடன் விகிதங்கள் நிலை பெறுகின்றன அல்லது குறைகின்றன.
- இதில் தமிழ்நாட்டின் நிலை, மாநில மொத்த உள்நாட்டு உற்பத்தியில் சுமார் 2%க்கும் குறைவாகவே இருந்துள்ளது.

- குறிப்பாக 2020-21 மற்றும் 2023-24- ஆகிய ஆண்டுகளுக்கு இடையில், தமிழ்நாடு சராசரியாக 7%க்கும் அதிகமான உண்மையான மாநில மொத்த உள்நாட்டு உற்பத்தி வளர்ச்சியைப் பராமரித்தது என்ற நிலையில் இதில் சேவைகள் மற்றும் உற்பத்தித் துறைகள் சீராக விரிவடைந்தன.
- பொருளாதாரம் கடனால் தேக்கமடையவில்லை, மாறாக அதன் மூலம் விரிவடைந்தது.
- 2023-24 ஆம் ஆண்டில் தமிழ்நாட்டின் தனி நபர் தலா வருமானம் ₹3.53 லட்சமாக இருந்தது என்ற நிலையில், இது உத்தரப் பிரதேசத்தின் ₹1.07 லட்சத்தை விட மூன்று மடங்கு அதிகமாகும்.
- இது பல தசாப்தங்களாக நீடித்த அதிக உற்பத்தித் திறன், தொழில்மயமாக்கல் மற்றும் மனித மூலதன உருவாக்கம் ஆகியவற்றைப் பிரதிபலிக்கிறது.
- தமிழ்நாடு அதிக அளவில் நகரமயமாக்கப் பட்டுள்ளது என்பதும் மிக முக்கியமானது, ஏனெனில் இது அதிக அளவு வரி வசூலிக்கும் திறன், சிறந்த சேவை வழங்கல் மற்றும் பன்முகப் படுத்தப் பட்ட வேலைவாய்ப்பு ஆகியவற்றுடன் தொடர்புடையது ஆகும்.
- மனித மேம்பாட்டுக் குறிகாட்டிகள் இந்த நிலையை மேலும் வலுப்படுத்துகின்றன.
- எழுத்தறிவு, சுகாதார வசதி மற்றும் மக்கள்தொகை மாற்றம் ஆகியவற்றில் தமிழ்நாடு பெரும்பாலான மாநிலங்களை விடத் தொடர்ந்து சிறப்பாகச் செயல்படுகிறது.
- இந்த விளைவுகள் சார்பு விகிதங்களைக் குறைப்பதன் மூலமும், தொழிலாளர் உற்பத்தித் திறனை மேம்படுத்துவதன் மூலமும் நீண்ட கால நிதி அழுத்தங்களைக் குறைக்கின்றன.
- முதலீடு மற்றும் பொருளாதாரக் கட்டமைப்பு ஆகியவற்றில் தான் தமிழ்நாட்டின் கதை அதனை மிகவும் தொலைநோக்குடையதாகிறது.
- 2025-26 ஆம் ஆண்டில், தமிழ்நாடு மூலதனச் செலவினங்களில் 22% அதிகரிப்பைத் திட்டமிட்டது.
- எதிர்கால உற்பத்தித் திறனுக்கு நிதியளிக்கும் கடனும், வருவாய் இடைவெளிகளை நிரப்புவதற்காக மட்டுமே வாங்கப்படும் கடனும் ஒன்றல்ல.
- செலவினங்களின் கட்டமைப்பு முக்கியமானது என்பதோடு தமிழ்நாட்டின் மூலதனம் சார்ந்த வரவு செலவுத் திட்டமானது, ஒரு பொருளாதாரம் இன்னும் முதலீட்டின் மூலம் முன்னேறிச் செல்கிறது என்பதைக் காட்டுகிறது.
- தமிழ்நாடு தனது வருவாய் வரவுகளில் 75% அளவை தனது சொந்த ஆதாரங்களில் இருந்து திரட்டுகிறது.
- 25% என்பது மத்திய வரிகளில் அதன் பங்கு மற்றும் மானியங்கள் மூலம் வருகிறது.
- மாறாக, உத்தரப் பிரதேசம் தனது வருவாய் வரவுகளில் பாதியளவிற்கு மேல் மத்திய அரசைச் சார்ந்துள்ளது.
- இது தமிழ்நாட்டில் வலுவான வரித் தளங்கள், அதிக வரி இணக்கம் மற்றும் அடர்த்தியான பொருளாதார நடவடிக்கைகளைப் பிரதிபலிக்கிறது.
- முன்கூட்டியே தொழில்மயமான, மனித மேம்பாட்டில் முதலீடு செய்த மற்றும் மக்கள் தொகை வளர்ச்சியைக் கட்டுப்படுத்திய மாநிலங்கள், தேசிய வளர்ச்சி மற்றும் வரி வசூலுக்கு விகிதாசாரமற்ற முறையில் தொடர்ந்து பங்களித்தாலும், இப்போது அவை மிகவும் கடுமையான கடன் வாங்கும் கட்டுப்பாடுகளையும் குறைந்த அளவு நிதிப் பரிமாற்றங்களையும் எதிர்கொள்கின்றன.
- மாநிலங்கள் தங்கள் கடன்களை என்ன செய்தன, அவைகள் என்ன மாதிரியான பொருளாதாரங்களை உருவாக்கின, மற்றும் என்ன மாதிரியான எதிர்காலங்களுக்கு நிதியளிக்கின்றன என்பதைப் பற்றியதுதான் இது.

## தாமிரபரணி நதி மாசுபாடு வழக்கு

- ❖ தாமிரபரணி நதியில் நிலவும் மாசுபாடு குறித்து ஆய்வு செய்வதற்காக சென்னை உயர்நீதிமன்றத்தின் மதுரை அமர்வு ஆனது, நீர் வளங்காவலர் இராஜேந்திர சிங்கை ஆணையராக நியமித்துள்ளது.
- ❖ இந்த உத்தரவு ஆனது, 2026 ஆம் ஆண்டு ஜனவரி 03 ஆம் தேதியன்று பிறப்பிக்கப் பட்டது.
- ❖ இராஜேந்திர சிங் ஒரு ரமோன் மகசேசே விருது பெற்ற நபர் ஆவார்.
- ❖ "இந்தியாவின் நீர் மனிதர்" என்றும் அழைக்கப்படும் ராஜேந்திர சிங், புகழ் பெற்ற இந்தியச் சுற்றுச்சூழல் ஆர்வலர் மற்றும் நீர் பாதுகாப்பாளர் ஆவார்.
- ❖ நதியின் நிலை குறித்து விரிவான ஆய்வு நடத்துவதற்கு அவருக்கு உத்தரவிடப் பட்டு உள்ளது.
- ❖ அவர் மாசுபாட்டைக் கட்டுப்படுத்தச் செய்வதற்கான தீர்வு நடவடிக்கைகளுக்கான பரிந்துரைகளை சமர்ப்பிப்பார்.

## தமிழ்நாடு அரசின் உறுதியளிக்கப்பட்ட ஓய்வூதியத் திட்டம்

- ❖ தமிழ்நாடு அரசானது, பழைய ஓய்வூதியத் திட்டத்தை (OPS) பெருமளவில் பின்பற்றுகின்ற தமிழ்நாடு அரசின் உறுதியளிக்கப்பட்ட ஓய்வூதியத் திட்டத்தை (TAPS) அறிமுகப்படுத்தியுள்ளது.
- ❖ TAPS திட்டத்தின் கீழான ஓய்வூதியம் ஆனது கடைசி மாதப் பணி காலத்தில் பெறப்பட்ட ஊதியத்தில் 50% ஆக நிர்ணயிக்கப்படும்.
- ❖ இந்தத் திட்டத்தில் 25 லட்சம் ரூபாய் என்ற அதிகபட்ச வரம்புடன், உயிரிழப்பு மற்றும் ஓய்வூதியப் பணிக்கொடை (DCRG) அடங்கும்.
- ❖ TAPS திட்டத்தின் கீழான குடும்ப ஓய்வூதியம் ஆனது ஓய்வூதியத் தொகையில் 60% ஆக இருக்கும்.
- ❖ பங்களிப்பு சார் ஓய்வூதியத் திட்டத்தின் (CPS) கீழ் பதிவு செய்துள்ள ஊழியர்கள் TAPS திட்டத்திற்கு மாற்றப்படுவார்கள் என்று எதிர்பார்க்கப்படுகிறது.
- ❖ ஓய்வூதிய விதிகளில் திருத்தங்கள் செய்யப்பட்ட பிறகு இந்தத் திட்டம் நடைமுறைக்கு வரும்.

## மாவட்ட கனிம அறக்கட்டளை விதிகள்

- ❖ தமிழ்நாடு மாநில அரசானது, மாவட்ட கனிம அறக்கட்டளை (DMF) விதிகளைத் திருத்தி அமைத்துள்ளது.
- ❖ 2025 ஆம் ஆண்டு தமிழ்நாடு மாவட்ட கனிம அறக்கட்டளை விதிகள், 2017 ஆம் ஆண்டில் உருவாக்கப்பட்ட முந்தைய விதிகளுக்கு மாற்றாக அமைகிறது.
- ❖ சுரங்கத்தினால் பாதிக்கப்பட்டப் பகுதிகள் மற்றும் சமூகங்களுக்கு DMF நிதிகளின் பயன்பாட்டை மேம்படுத்துவதே இந்தத் திருத்தத்தின் நோக்கமாகும்.
- ❖ புதிய விதிகளின் கீழ், சுரங்கக் குத்தகைதாரர்கள் விதி மீறல்களுக்கு வட்டியுடன் DMF பங்களிப்பைச் செலுத்த வேண்டும்.
- ❖ DMF நிதியில் குறைந்தபட்சம் 70% ஆனது நேரடியாக பாதிக்கப்பட்டப் பகுதிகளுக்காக செலவிடப்பட வேண்டும்.
- ❖ மாவட்ட கனிம அறக்கட்டளையின் தலைவராக மாவட்ட ஆட்சியர் செயல்படுவார்.

## தமிழ்நாடு அரசின் உறுதியளிக்கப்பட்ட ஓய்வூதியத் திட்டம் (TAPS) பகுப்பாய்வு

- இது பழைய ஓய்வூதியத் திட்டத்தின் (OPS) பிரதி ஆகும்.
- இது ஒருங்கிணைந்த ஓய்வூதியத் திட்டத்தின் (UPS) மேம்படுத்தப்பட்ட வடிவமாகும்.
- ஒவ்வோர் ஊதியக் குழுவும் அமைக்கப்படும் போது மாதாந்திர தனிநபர் பங்களிப்பு மற்றும் ஓய்வூதியத் திருத்தத்தைத் தவிர, முன்மொழியப்பட்ட ஓய்வூதியத் திட்டம் OPS திட்டத்தின் பரந்த வழிகாட்டுதல்களைப் பின்பற்றுகிறது.
- OPS திட்டத்தின் முக்கிய அம்சங்களில் ஒன்று இறப்பு மற்றும் ஓய்வூதியப் பணிக் கொடை (DCRG) ஆகும்.
- உதாரணமாக, 20 ஆண்டுகள் அல்லது அதற்கு மேற்பட்ட காலமாக பணியில் இருந்தவர் இறந்தால், 25 லட்சம் ரூபாய்க்கு மிகாமல் பணிக்கொடை வழங்கப்படும்.
- இந்த அம்சம் TAPS திட்டத்தில் சேர்க்கப்பட்டுள்ளது.
- OPS திட்டத்தினைப் போலவே, குடும்ப ஓய்வூதியம் ஆனது ஓய்வூதியத்தில் சுமார் 60 சதவீதத்திற்குச் சமமாக இருக்கும்.
- பணவீக்க விளைவிற்கான ஈடாக்க குறியீடும் மேற்கொள்ளப்படும்.
- TAPS திட்டத்தின் கீழான ஓய்வூதியம் கடைசி மாதப் பணிக் காலத்தில் பெறப்பட்ட சம்பளத்தில் 50 சதவீதத்தினை அடிப்படையாகக் கொண்டது அதே நேரத்தில் UPS திட்டத்தின் கீழான ஓய்வூதியம் கடைசி 12 மாத அடிப்படை ஊதியத்தின் சராசரியில் 50% ஆக வழங்கப்படும்.
- UPS திட்டத்தின் கீழ் ஓய்வூதியம் பெறுபவர் இறந்தால், சட்டப்பூர்வமாக திருமணமான வாழ்க்கைத் துணை மட்டுமே குடும்ப ஓய்வூதியப் பணத்தைப் பெற தகுதியுடையவர், அதே சமயம் குடும்பம், அதாவது ஓய்வூதியதாரரால் பரிந்துரைக்கப்பட்ட சட்டப்பூர்வ வாரிசுகளுக்கு TAPS திட்டத்தின் கீழ் ஓய்வூதியம் வழங்கப்படும்.
- UPS திட்டத்தில் இருக்கும் போது, 10 ஆண்டுகள் அல்லது அதற்கு மேற்பட்ட தகுதி வாய்ந்தப் பணிக்குப் பிறகு ஓய்வு பெற்றால் குறைந்தபட்ச உறுதி செய்யப்பட்ட பணம் செலுத்தப்படும்.
- TAPS திட்டத்தின் கீழ், பணிக் காலத்தின் நீளத்தைப் பொருட்படுத்தாமல் இது வழங்கப் படும்.
- பங்களிப்பு ஓய்வூதியத் திட்டத்தின் (CPS) கீழ் தற்போதுள்ள அனைத்து ஊழியர்களும், அதாவது தோராயமாக 6.24 லட்சம் பேர், தங்கள் ஓய்வூதியத் திட்டத்தைத் தேர்வு செய்ய அனுமதிக்கப்படுவார்கள் என்றாலும், TAPS திட்டத்திற்கு மாறுவார்கள் என்று எதிர்பார்க்கப் படுகிறது.
- ஆயுள் காப்பீட்டுக் கழகத்திற்கு (LIC) பதிலாக ஓய்வூதிய நிதி ஒழுங்குமுறை மற்றும் மேம்பாட்டு ஆணையத்தில் (PFRDA) ஓய்வூதிய நிதியை முதலீடு செய்ய அரசாங்கம் முடிவு செய்துள்ளது.
- இதுவரையில், 2003 ஆம் ஆண்டு ஏப்ரல் 01 அல்லது அதற்குப் பிறகு அரசுப் பணியில் சேர்ந்தவர்களை உள்ளடக்கிய CPS திட்டத்தின் கீழ் திரட்டப்பட்ட முழுத் தொகையும் LIC கழகத்தின் ஓய்வுறுதி நிதியில் முதலீடு செய்யப்படுகிறது.
- அத்தகைய நடவடிக்கையானது அதிக வருமானத்தை ஈட்டியிருக்கும் என்பதால், PFRDA நிதியை முதலீடு செய்ய பயன்படுத்தாததற்கு தலைமைக் கணக்கு தணிக்கையாளர் (CAG) மாநில அரசைக் குற்றம் சாட்டினார்.

- 2025 ஆம் ஆண்டு அக்டோபர் மாதத்தில், சட்டமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட 2023-24 ஆம் ஆண்டிற்கான மாநில நிதி குறித்த CAG அறிக்கையானது "முன்னர், LIC மற்றும் கருவூலப் பத்திரங்கள் ஆகிய இரண்டிலும் DCPS [வரையறுக்கப்பட்டப் பங்களிப்பு ஓய்வூதியத் திட்டம் அல்லது CPS] திரட்டல்களை மாநில அரசு முதலீடு செய்தது, இது பொது வருங்கால வைப்பு நிதி விகிதத்தை விட குறைந்த வட்டியை அளித்தது" என்று கூறியது.
- இந்தப் பிரச்சினையானது முந்தைய SFAR [மாநில நிதித் தணிக்கை அறிக்கைகள்] அறிக்கைகளில் முன்னிலைப்படுத்தப்பட்டது.
- தற்போது DCPS திரட்டல்களை, தற்போது 7.1% ஆக நிர்ணயிக்கப்பட்டுள்ள பொது வருங்கால வைப்பு நிதி விகிதத்துடன் இணைக்கப்பட்ட வட்டி விகிதங்களுடன், LIC கழகத்தில் மட்டுமே அரசு முதலீடு செய்து வருகிறது.
- குறைந்தபட்சம் அடுத்த 15 ஆண்டுகளுக்கு மாநிலச் சொந்த வரி வருவாயின் (SOTR) வளர்ச்சி விகிதம் குறித்து கணிப்புகள் செய்யப்பட்டுள்ளன.
- ஒவ்வோர் ஆண்டும் ஒதுக்கீட்டின் மதிப்பு அதிகரித்த போதிலும், ஓய்வூதியப் பொறுப்பின் விகிதம் SOTR வருவாயில் சுமார் 21% முதல் 22% வரை நிலை பெறும்.
- 2023-24 ஆம் ஆண்டிற்கான CAG அறிக்கையின்படி ஓய்வூதியங்கள் சுமார் 37,696.81 கோடி ரூபாயாகவும், SOTR 1,67,279 கோடி ரூபாயாகவும் இருந்ததனால் ஓய்வூதியங்கள் மற்றும் பிற ஓய்வூதியப் பலன்களின் பங்கு 22.5% ஆகும்.

## சித்த மருத்துவ தினம் 2026

- ஆயுஷ் அமைச்சகம் (ஆயுர்வேதம், யோகா மற்றும் இயற்கை மருத்துவம், யுனானி, சித்த மருத்துவம் மற்றும் ஹோமியோபதி) 9வது சித்த மருத்துவ தினத்தைக் கொண்டாடியது.
- தேசிய மற்றும் மாநில சித்த மருத்துவ நிறுவனங்களின் ஆதரவுடன் சென்னை கலைவாணர் அரங்கத்தில் இந்த நிகழ்வு நடைபெற்றது.
- அகத்திய முனிவரின் பிறந்தநாளைக் குறிக்கும் வகையில் ஒவ்வோர் ஆண்டும் ஜனவரி 06 ஆம் தேதியன்று சித்த மருத்துவ தினம் அனுசரிக்கப்படுகிறது.
- அகத்திய முனிவர் சித்த மருத்துவ முறையின் தந்தை என்று அழைக்கப்படுகிறார்.
- 2026 ஆம் ஆண்டிற்கான இத்தினத்தின் கருத்துரு, "Siddha for Global Health" என்பதாகும்.
- தமிழ்நாட்டில் தோன்றிய சித்த மருத்துவம் இந்தியாவின் பாரம்பரிய சுகாதார அமைப்புகளின் ஒரு பகுதியாகும்.

## உ.வே. சுவாமிநாத ஐயரின் இசை படைப்புகள்

- இசைக்கலைஞர்கள் மற்றும் இசை குறித்த உ.வே. சுவாமிநாத ஐயரின் படைப்புகளின் ஆங்கில மொழிபெயர்ப்பை தி மியூசிக் அகாடமி வெளியிட்டுள்ளது.
- உ.வே. சுவாமிநாத ஐயர் தமிழ்த் தாத்தா (தமிழின் முதுபெரும் மனிதர்) என்று அழைக்கப் படுகிறார்.
- இந்த மொழிபெயர்ப்பை நீதிபதி பிரபா ஸ்ரீதேவன் படைத்துள்ளார்.
- இந்தத் தொகுப்பில் 18 கட்டுரைகள் உள்ளன என்று நீதிபதி பிரபா ஸ்ரீதேவன் கூறினார்.

- இந்தப் புத்தகத்தில் கனம் கிருஷ்ண ஐயர், கோபால கிருஷ்ண பாரதி மற்றும் மகா வைத்தியநாத சிவன் ஆகியோர் பற்றிய மூன்று விரிவான படைப்புகள் உள்ளன.
- நந்தன் சரித்திரத்தின் ஆசிரியரான கோபால கிருஷ்ண பாரதியிடமிருந்து சுவாமிநாத ஐயர் இசையைக் கற்றுக் கொண்டார்.

## TAPS திட்டம்

- தமிழ்நாடு அரசின் உறுதியளிக்கப்பட்ட ஓய்வூதியத் திட்டம் (TAPS) ஆனது மாநில அரசு ஊழியர்கள் மற்றும் ஆசிரியர்களுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.
- இது அவர்களின் கடைசி மாத சம்பளத்தில் 50 சதவீதத்திற்குச் சமமான ஓய்வூதியத்தை உறுதி செய்யும்.
- 2003 ஆம் ஆண்டு முதல் பழைய ஓய்வூதியத் திட்டத்தினை (OPS) மீண்டும் கொண்டு வருவதற்கான அரசு ஊழியர்களின் 23 ஆண்டு கால போராட்டத்திற்குப் பிறகு இது கொண்டு வரப் பட்டது.
- ஊழியர்கள் தங்கள் அடிப்படை சம்பளத்தில் 10% ஓய்வூதிய நிதிக்குப் பங்களிப்பார்கள் என்ற நிலையில் மீதமுள்ள தொகையை அரசு ஏற்கும்.
- OPS திட்டத்தின் கீழ், அரசாங்கம் முழு ஓய்வூதிய நிதிப் பங்களிப்பையும் ஏற்றுக் கொண்டது.
- TAPS திட்டத்தினைச் செயல்படுத்துவதற்கான செலவை மாநில அரசு முழுமையாக ஏற்கும்.
- இது 2027 ஆம் ஆண்டு ஜனவரி 01 ஆம் தேதி முதல் அமலுக்கு வரும் என்று எதிர்பார்க்கப் பட்டது.
- ஓய்வூதிய நிதிக்கான ஒற்றை முறைப் பங்களிப்பு சுமார் 13,000 கோடி ரூபாய் மற்றும் ஒவ்வோர் ஆண்டும் 11,000 கோடி ரூபாய் கூடுதல் பங்களிப்புகள் வழங்கப்படுவதுடன், TAPS திட்டத்தின் கீழ் மாநிலத்தின் மீதான நிதிச் சுமை மிக கடுமையாக அதிகரிக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.
- சம்பள உயர்வுக்கு ஏற்ப வருடாந்திர ஓய்வூதியப் பங்களிப்பும் அவ்வப்போது திருத்தப் படும்.
- ஓய்வூதியதாரர்கள் பணியாற்றும் அரசு ஊழியர்களுக்கு இணையாக ஆறு மாதங்களுக்கு ஒருமுறை அகவிலைப்படி (DA) உயர்வுகளுக்கு தகுதி பெறுவார்கள்.
- ஓய்வூதியதாரர் இறந்தால், அவர்கள் கடைசியாகப் பெற்ற ஓய்வூதியத்தில் 60% ஆனது பரிந்துரைக்கப்பட்ட குடும்ப உறுப்பினர்களுக்கு குடும்ப ஓய்வூதியமாக வழங்கப் படும்.
- மேலும், ஓய்வூதியம் பெறும் போது அல்லது பணியில் இருக்கும் போது இறந்தால், பணிக் காலத்தின் நீளத்தின் அடிப்படையில் 25 லட்சம் ரூபாய் வரை பணிக் கொடை வழங்கப் படும்.
- ஓய்வூதியத்திற்கான தகுதி வாய்ந்த பணிக் காலத்தை முடிக்காமல் ஓய்வு பெறும் அனைத்து ஊழியர்களுக்கும் குறைந்தபட்ச ஓய்வூதியத்தை TAPS உறுதி செய்கிறது.
- பங்களிப்பு ஓய்வூதியத் திட்டத்தின் (CPS) கீழ் பணியில் சேர்ந்து, TAPS செயல்படுத்தப் படுவதற்கு முன்பு ஓய்வூதியம் இல்லாமல் ஓய்வு பெற்ற ஊழியர்களுக்கு சிறப்புக் கருணை ஓய்வூதியம் வழங்கப்படும்.

- 2025-26 ஆம் ஆண்டு மாநில அரசின் நிதி ஒதுக்கீட்டின் படி, தமிழ்நாடு அரசு 2,07,054 கோடி ரூபாயை உறுதிப்பாடு வழங்கப்பட்ட செலவினங்களுக்கு செலவிடும் என மதிப்பிடப் பட்டுள்ளது என்பதோடு இது அதன் மதிப்பிடப்பட்ட வருவாய் வரவுகளில் 62% ஆகும்.
- இதில் சம்பளம் (வருவாய் வரவுகளில் 28%), ஓய்வூதியங்கள் (14%) மற்றும் வட்டி செலுத்துதல்கள் (21%) ஆகியவை அடங்கும்.
- ஓய்வு பெற்ற ஊழியர்களுக்கு உறுதியான வருமானத்தை வழங்குவதற்காக பழைய ஓய்வூதியத் திட்டத்தை மீண்டும் அறிமுகப்படுத்திய முதல் மாநிலமாக சத்தீஸ்கர் மாறியுள்ளது.
- தேசிய ஓய்வூதியத் திட்டம் (NPS) ஆனது, 2004 ஆம் ஆண்டு ஜனவரி 01 ஆம் தேதி முதல் செயல்படுத்தப்பட்ட பிறகு, பழைய ஓய்வூதியத் திட்டத்தை (OPS) உடனடியாக ரத்து செய்யாத இரண்டு மாநிலங்கள் மேற்கு வங்காளம் மற்றும் திரிபுரா ஆகியவை மட்டுமே ஆகும்.
- திரிபுரா OPS திட்டத்தினை ரத்து செய்து 2015 ஆம் ஆண்டில் NPS திட்டத்தினைச் செயல் படுத்தியது.
- 2005–06 ஆம் ஆண்டில், மேற்கு வங்கத்தைத் தவிர, இந்தியாவில் உள்ள அனைத்து மாநிலங்களும் தங்கள் அரசு ஊழியர்களுக்கு NPS திட்டத்தினை ஏற்றுக்கொண்டன.
- NPS 2004 ஆம் ஆண்டில் மத்திய அரசில் உள்ள NDA அரசாங்கத்தால் அறிமுகப் படுத்தப் பட்டது.
- இமாச்சலப் பிரதேசம், சத்தீஸ்கர், இராஜஸ்தான், பஞ்சாப் மற்றும் ஜார்க்கண்ட் ஆகிய மாநிலங்களில் உள்ள தங்கள் மாநில அரசு ஊழியர்களுக்கு OPS மீண்டும் செயல் படுத்தப் பட்டுள்ளது.
- கர்நாடகா மற்றும் தெலுங்கானா ஆகியவையும் OPS திட்டத்திற்கு மாற திட்டமிட்டு உள்ளன.

## உலகம் உங்கள் கையில் திட்டம்

- சிவகங்கை மாவட்டத்தில் 'உலகம் உங்கள் கையில்' திட்டத்தின் கீழ் தமிழக அரசு 2026 ஆம் ஆண்டு ஜனவரி 05 ஆம் தேதியன்று இலவச மடிக்கணினி வழங்கல் திட்டத்தினைத் தொடங்கியது.
- இந்தத் திட்டம் தமிழ்நாடு முழுவதும் 20 லட்சம் மாணாக்கர்களுக்குப் படிப்படியாக மடிக்கணினி வழங்குவதை இலக்காகக் கொண்டுள்ளது.
- இதன் முதல் கட்டத்தில், 10 லட்சம் மாணாக்கர்களுக்கு மடிக்கணினிகள் வழங்கப் படுகின்றன.
- இது அரசு மற்றும் அரசு உதவி பெறும் கல்லூரிகளைச் சேர்ந்த மாணாக்கர்களையும், 7.5% இட ஒதுக்கீடு மற்றும் நலத்திட்டங்களின் கீழ் தகுதியான தனியார் கல்லூரி மாணாக்கர்களையும் உள்ளடக்கியது.
- மருத்துவம், பொறியியல், கலை மற்றும் அறிவியல், வேளாண்மை, சட்டம், பல்நுட்பக் கல்லூரி, செவிலியம் மற்றும் தொழில்துறைப் பயிற்சி நிறுவனங்கள் (ITI) மாணாக்கர்கள் இதில் அடங்குவர்.

## NTB பிராந்திய அலுவலகம் – ஈரோடு

- தமிழ்நாட்டின் ஈரோடு மாவட்டத்தில், தேசிய மஞ்சள் வாரியத்தின் (NTB) பிராந்திய அலுவலகம் மற்றும் அங்கீகாரம் பெற்ற மஞ்சள் பரிசோதனை ஆய்வகம் அமைக்கப் பட உள்ளதாக மத்திய அரசு அறிவித்துள்ளது.
- தெலுங்கானாவின் நிஜாமாபாத்தில் தலைமையகத்தினைக் கொண்டுள்ள NTB மேலும் வர்த்தகம் மற்றும் தொழில்துறை அமைச்சகத்தின் கீழ் செயல்படுகிறது.
- இந்திய வேளாண் ஆராய்ச்சி சபை (ICAR) ஈரோட்டில் மஞ்சள் பரிசோதனை ஆய்வகத்தை நிறுவ உள்ளது.
- அதிக குர்குமின் உள்ளடக்கம் கொண்ட புதிய மஞ்சள் வகைகளை உருவாக்குவதிலும் ICAR செயலாற்றும்.
- இணைய வழி வணிக தளங்கள் மூலம் மஞ்சள் சந்தைப்படுத்தலை ஊக்குவிக்கவும், விவசாயிகளின் சிறப்பான வருமானத்திற்காக மதிப்புக் கூட்டல், சேமிப்பு மற்றும் செயலாக்கத்தை ஆதரிக்கவும் அரசாங்கம் திட்டமிட்டுள்ளது.

## சிற்றாமைகளின் குஞ்சு பொரிக்கும் தளங்கள்

- 2025–26 ஆம் ஆண்டு குஞ்சு பொரிப்பிற்கான வலையமைக்கும் பருவத்திற்காக சென்னையில் சிற்றாமைகள்/ஆலிவ் ரெட்லி கடல் ஆமை குஞ்சு பொரிக்கும் தளங்கள் அமைக்கப்பட்டுள்ளன.
- பெசன்ட் நகர் கடற்கரையில் முழுமையாகச் செயல்படும் ஆலிவ் ரிட்லி குஞ்சு பொரிக்கும் தளம் நிறுவப்பட்டுள்ளது.
- நீலாங்கரை, கோவளம் மற்றும் பழவேற்காடு ஆகிய பகுதிகளில் அதன் புதிய குஞ்சுப் பொரிப்புத் தளங்கள் திட்டமிடப்பட்டுள்ளன.
- தமிழ்நாடு கடற்கரையில் ஆலிவ் ரெட்லி குஞ்சு பொரிக்கும் பருவம் டிசம்பர் மாதத்தில் தொடங்கி ஏப்ரல் மாதம் வரை நீடிக்கும்.
- ஆமைகள் மற்றும் அவற்றின் முட்டைகளைப் பாதுகாக்க தமிழ்நாடு வனத்துறை இரவு ரோந்து மற்றும் கூடு/வலை கண்காணிப்பைத் தொடங்கியுள்ளது.
- இதன் முந்தைய குஞ்சுப் பொரிப்பு பருவத்தில் அமைக்கப்பட்ட 60 குஞ்சுப் பொரிப்பு மையங்களுடன் ஒப்பிடும் போது, இந்தப் பருவத்தின் ஆரம்பத்தில் சுமார் 50 குஞ்சுப் பொரிப்பு மையங்கள் திட்டமிடப்பட்டுள்ளன.

## தமிழ்நாடு-ஐ.நா. பெண்கள் கூட்டுறவு

- தமிழ்நாடு அரசானது, ஐ.நா. பெண்கள் அமைப்புடன் சென்னையில் ஒரு புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் (MoU) கையெழுத்திட்டது.
- இந்தப் புரிந்துணர்வு ஒப்பந்தம் தமிழ்நாட்டில் பெண்கள் நலன், பாலின சமத்துவம் மற்றும் உள்ளடக்கிய வளர்ச்சியை வலுப்படுத்துவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.
- இது நிலையான மேம்பாட்டு இலக்குகளுடன் (SDGs) இணைந்த பாலினம் சார்ந்த நடவடிக்கைகளை மேற்கொள்ளக் கூடிய நிர்வாகம், திட்டமிடல் மற்றும் நிதி ஒதுக்கீட்டில் கவனம் செலுத்துகிறது.

- ஐ.நா. பெண்கள் அமைப்பானது, இதனைச் செயல்படுத்துவதற்காக தமிழ்நாடு அரசுக்கு தொழில்நுட்ப ஆதரவை வழங்கும்.
- சமூக நலம் மற்றும் மகளிர் உரிமைகள் துறை, உள்துறை, மதுவிலக்கு மற்றும் கலால் துறை, மற்றும் கிராமப்புற மேம்பாடு மற்றும் பஞ்சாயத்து ராஜ் துறை ஆகியவை இதில் ஈடுபடும்.
- பொருளாதார ஒத்துழைப்பு மற்றும் மேம்பாட்டு அமைப்பு (OECD), பொதுத்துறைப் புத்தாக்க ஆய்வகம் (OPSI), மற்றும் UNICEF புத்தாக்க அலுவலகம் (UNICEF–OoI) ஆகியவற்றுடன் முத்தரப்பு ஒத்துழைப்பு ஒப்பந்தமும் கையெழுத்தானது.

## SCADA அடிப்படையிலான நீர்த்தேக்க மேலாண்மை

- சென்னை நீர்த்தேக்கங்களுக்கான SCADA (மேற்பார்வைக் கட்டுப்பாடு மற்றும் தரவு கையகப் படுத்தல்) அடிப்படையிலான நீர்த் தேக்க மேலாண்மை அமைப்பு உடன் செயல் பாட்டுக்கு வரத் தயராக உள்ளது.
- 32 கோடி ரூபாய் மதிப்பிலான இந்தத் திட்டத்தினை உலக வங்கி ஆதரவுடன் நீர்வளத் துறை (WRD) செயல்படுத்துகிறது.
- சென்னையில் உள்ள ஒரு மையப்படுத்தப்பட்ட கண்காணிப்பு மையத்திலிருந்து நீர்த் தேக்க மதகுகளை தொலைவிலிருந்து இயக்க இந்த அமைப்பு அனுமதிக்கிறது.
- செம்பரம்பாக்கம், செங்குன்றம்/ரெட் ஹில்ஸ் மற்றும் பூண்டியில் உள்ள நீர்த் தேக்கங்களில் உணர்வுக் கருவிகள் மற்றும் தானியங்கி மழை அளவிகள் பொருத்தப் பட்டுள்ளன.
- நீர்த்தேக்கங்கள் அனைத்திலும் ஒன்றாக சுமார் 11,175 மில்லியன் கன அடி (mcft) தண்ணீர் சேமித்து வைக்கப் பட்டுள்ளன என்பதோடு இது அவற்றின் சேமிப்பு கொள்ளளவுத் திறனில் சுமார் 95% ஆகும்.
- வெள்ளம் மற்றும் நீர் விநியோகத்தை நிர்வகிப்பதற்காக வேண்டி நீர்வரத்து மற்றும் வெளியேற்றத்தின் நிகழ்நேரக் கண்காணிப்பை இந்த அமைப்பு ஆதரிக்கிறது.

## பொதுக் கூட்டங்கள் குறித்த SOP

- தமிழ்நாட்டில் பெரிய அளவில் நடைபெறும் பொதுக் கூட்டங்களை ஒழுங்கு படுத்துவதற்கான ஒரு சீர்தர இயக்கச் செயல்முறையை (SOP) தமிழ்நாடு மாநில அரசு அறிவித்துள்ளது.
- எதிர்பார்க்கப்படும் கூட்டம் 5,000 பேருக்கு மேல் இருக்கும் பொது நிகழ்வுகளுக்கு SOP பொருந்தும்.
- சென்னை உயர்நீதிமன்றத்தின் வழிகாட்டுதல்களைப் பின்பற்றி, அரசாங்க உத்தரவின் மூலம் இது வெளியிடப்பட்டது.
- மாவட்ட ஆட்சியர்கள் மற்றும் காவல்துறை ஆணையர்கள் பொதுக் கூட்டங்களுக்கான நியமிக்கப்பட்ட இடங்களை அறிவிப்பார்கள்.
- கூட்டத் திறன், காவல்துறையினர் பணியமர்த்தல், கழிப்பறைகள், குடிநீர் மற்றும் அவசர வசதிகளுக்கான SOP விதிகளை அமைக்கிறது.

## உங்கள் கனவைச் சொல்லுங்கள் – வீடுவாரியான கணக்கெடுப்பு

- தமிழ்நாடு அரசானது உங்கள் கனவைச் சொல்லுங்கள் (உங்கள் விருப்பங்களைப் பகிர்ந்து கொள்ளுங்கள்) என்ற மாநில அளவிலான வீடு வாரியான கணக்கெடுப்பைத் தொடங்குகிறது.
- இந்தக் கணக்கெடுப்பு ஆனது, தமிழ்நாடு முழுவதும் ஒரு மாதத்திற்கு நடத்தப்படும்.
- இது 50,000 பயிற்சி பெற்ற தன்னார்வலர்களின் வருகைகள் மூலம் சுமார் 1.91 கோடி குடும்பங்களில் நடத்தப்படும்.
- குடும்பங்கள் அரசாங்கத் திட்டங்கள் குறித்து கருத்து தெரிவிப்பார்கள் மற்றும் மூன்று முன்னுரிமை விருப்பங்களை பட்டியலிடுவார்கள்.
- கைபேசிப் பயன்பாட்டைப் பயன்படுத்தி விவரங்கள் டிஜிட்டல் மயமாக்கப்படும், மேலும் ஒவ்வொரு குடும்பத்திற்கும் ஒரு தனித்துவமான கண்காணிப்புக் குறியீடு வழங்கப் படும்.
- இந்தக் கணக்கெடுப்பு முதல்வரின் முகவரித் துறை மூலம் செயல்படுத்தப்படும்.

## பசுந்தாள் உரத்தின் தாக்கம்

- முதலமைச்சரின் மண்ணுயிர் காத்து மன்னுயிர் காப்போம் திட்டத்தின் கீழ் பசுந்தாள் உரத்தின் தாக்கத்தை தமிழ்நாடு அரசு மதிப்பாய்வு செய்தது.
- இந்தத் திட்டம், குறிப்பிட்டப் பயிர்கள் வளர்க்கப்பட்டு மண்ணில் கலக்கப்பட்டு மண் ஆரோக்கியத்தை மேம்படுத்தப்படுகின்ற பசுந்தாள் உரத்தை ஊக்குவிக்கிறது.
- தமிழ்நாட்டின் அனைத்து மாவட்டங்களிலும் உள்ள விவசாயிகளுக்கு பசுந்தாள் உர விதைகள் வழங்கப்பட்டன.
- இந்தத் தாக்க ஆய்வுகள் ஆனது நைட்ரஜன், பாஸ்பரஸ் மற்றும் பொட்டாசியம் போன்ற மண் ஊட்டச்சத்துக்களின் அதிகரிப்பு உள்ளதாகக் காட்டுகின்றன.
- பசுந்தாள் உரம் பயன்படுத்தப்படும் வயல்கள் குறிப்பாக நெல் சாகுபடியில் சிறந்த மண் அமைப்பு மற்றும் நீர்ப்பிடிப்புத் திறனைக் காட்டின.
- இந்த நடைமுறையானது இரசாயன உர பயன்பாட்டைக் குறைத்து நிலையான வேளாண்மையை மேம்படுத்த உதவியது.

## சென்னையின் நகர்ப்புறப் போக்குவரத்தின் பரிமாற்றம்

- பெருநகரப் போக்குவரத்துக் கழகம் (MTC) உலக வங்கியிடமிருந்து பாராட்டுகளைப் பெற்றுள்ளது.
- சென்னை நகரக் கூட்டாண்மை (CCP) MTC மூலம் பொதுப் பேருந்து சேவை மீண்டும் புத்துயிர் பெறுவதைப் பிரதிபலிப்பதன் மூலம் நிலையான போக்குவரத்து மாதிரியை உருவாக்கியதற்காக தமிழ்நாடு அரசாங்கத்திற்கும் உலக வங்கிக்கும் இடையே கையெழுத்தானது.
- இந்தத் திட்டத்தின் மூலம், சேவை வகைகளை மாற்றுவதன் மூலம், பேருந்து சேவையின் பயன்பாட்டை 87% ஆக மேம்படுத்துவதன் மூலம் MTC உயர் மட்டப் பயணிகள் சேவையை அறிமுகப்படுத்த முடியும்.

- MTC சமீபத்தில் நகர்ப்புறப் போக்குவரத்து இந்திய மாநாட்டில் "சிறந்தப் பொதுப் போக்குவரத்து அமைப்பைக் கொண்ட நகரம்" என்ற தேசிய விருதைப் பெற்றது.
- MTC கழகத்தில் 3,833 பேருந்துகள் உள்ளன என்ற நிலையில் அவை தாழ்தள டீசல் எரிபொருளில் இயங்குகின்ற, குளிரூட்டப்பட்ட வசதியுடன் கூடிய, மின்சார மற்றும் சிறிய பேருந்துகள் ஆகும்.

## பழஞ்சோறு கஞ்சியின்/நொதித்த சோற்றின் ஆரோக்கிய நன்மைகள்

- ஐந்து ஆண்டு கால ஆராய்ச்சி ஆய்விற்குப் பிறகு பழஞ்சோறு கஞ்சியின் ஆரோக்கிய நன்மைகள் குறித்த பொது விழிப்புணர்வை தமிழக அரசு அதிகரித்து வருகிறது.
- சென்னை அரசு ஸ்டான்லி மருத்துவக் கல்லூரி மருத்துவமனை (SMCH) இந்த ஆராய்ச்சியை நடத்தியது.
- பழஞ்சோறு கஞ்சியில் (பழைய சோறு) நார்ச்சத்து, எதிர்ப்புத் திறன் கொண்ட ஸ்டார்ச், புரதம் மற்றும் நுண்ணூட்டச் சத்துக்கள் உள்ளன என்று ஆய்வில் கண்டறியப் பட்டு உள்ளது.
- இது இரும்பு, துத்தநாகம், செலினியம் மற்றும் பி-காம்ப்ளக்ஸ் வைட்டமின்கள் போன்ற தாதுக்களை வழங்குகிறது.
- இந்த உணவில் குடல் ஆரோக்கியத்திற்கு நன்மை பயக்கும் பாக்டீரியாக்கள் உள்ளன.
- எரிச்சல் கொண்ட குடல் நோய்க்குறி (IBS) உள்ளிட்ட இரைப்பை குடல் கோளாறுகளில் இருந்து மீள இது உதவுகிறது.

## யுனிசெஃப் - தமிழ்நாடு கூட்டாண்மை

- உலகளவில் அதன் முதல் துணை-தேசிய அரசாங்கக் கூட்டாளியாக யுனிசெஃப் தமிழ்நாடு அரசாங்கத்துடன் ஒரு முக்கிய கூட்டாண்மையில் கையெழுத்திட்டுள்ளது.
- "துணை-தேசிய கூட்டாளர்" என்பது யுனிசெஃப் அமைப்பு அதிகாரப் பூர்வமாக தேசிய அரசாங்கத்துடன் மட்டுமல்லாமல், ஒரு மாநில அரசாங்கத்துடன் (தமிழ்நாடு) இணைந்து செயல்படுகிறது என்பதாகும்.
- இந்த ஒப்பந்தம் பொதுத்துறை கண்டுபிடிப்புகளை மிக நன்கு வலுப்படுத்துவதையும், குழந்தைகள் மற்றும் சமூகங்களுக்கான ஆதார அடிப்படையிலான தீர்வுகளை மேம்படுத்துவதையும் நோக்கமாகக் கொண்டுள்ளது.
- யுனிசெப் புத்தாக்க அலுவலகம் தமிழ்நாட்டின் பொது அமைப்புகளுக்குள் தொழில் நுட்ப திறன் மற்றும் கண்டுபிடிப்புகளை ஆதரிக்கும்.
- யுனிசெஃப் புத்தாக்க அமைப்பு மற்றும் உலகின் எந்தவொரு துணை-தேசிய அரசாங்கத்திற்கும் இடையிலான முதல் கூட்டுறவு இதுவாகும்.

## உள்ளார்ந்த தொழில்நுட்பம் சார்ந்த புத்தொழில் நிறுவனக் கொள்கை 2025–26

- சென்னையில் நடைபெற்ற UmagineTN 2026 நிகழ்வில் இந்தியாவின் முதல் பிரத்யேக உள்ளார்ந்த தொழில்நுட்பம் சார்ந்த புத்தொழில் நிறுவனக் கொள்கையை தமிழ்நாடு அரசு வெளியிட்டது.

- இந்தக் கொள்கை தமிழ்நாடு உள்ளர்ந்த தொழில்நுட்பம் சார்ந்த புத்தொழில் நிறுவனக் கொள்கை 2025–2026 (TNDTSP) என்று அழைக்கப்படுகிறது.
- இந்தக் கொள்கைக்கான முதன்மை அமலாக்க நிறுவனமாக iTNT மையம் செயல்படும்.
- இந்தக் கொள்கை 100 உள்ளர்ந்தத் தொழில்நுட்பம் சார்ந்த புத்தொழில் நிறுவனங்களை ஆதரிப்பதையும், பொது மற்றும் தனியார் முதலீடுகளில் 100 கோடி ரூபாய் நிதி திரட்டுவதையும் நோக்கமாகக் கொண்டுள்ளது.
- இது கல்வி மற்றும் ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு நிறுவனங்களிலிருந்து 10 தொழில் நுட்பப் பரிமாற்றம் அல்லது உரிம ஒப்பந்தங்களை இலக்காகக் கொண்டுள்ளது.
- செயற்கை நுண்ணறிவு, இயந்திரக் கற்றல், எந்திரவியல் மற்றும் உயிரி தொழில் நுட்பம் போன்ற உள்ளர்ந்த தொழில்நுட்பப் பகுதிகளில் சுமார் 10,000க்கும் மேற்பட்ட மாணவர்கள் மற்றும் நிபுணர்களுக்குப் பயிற்சி அளிக்க இந்தக் கொள்கை திட்டமிட்டு உள்ளது.

## UmagineTN 2026

- தமிழ்நாட்டின் 4வது முதன்மையான உலகளாவிய தொழில்நுட்பம் மற்றும் புத்தாக்க உச்சி மாநாடான UmagineTN 2026 நிகழ்வு சென்னையில் நடைபெற்றது.
- தமிழ்நாட்டில் தொழில்நுட்பம் சார்ந்த வளர்ச்சியை ஊக்குவிக்கப் புதுமையாளர்கள், முதலீட்டாளர்கள், புத்தொழில் நிறுவனங்கள் மற்றும் கொள்கை வகுப்பாளர்களை ஒரே தளத்திற்கு கொண்டு வருவதே இந்த நிகழ்வின் நோக்கமாகும்.
- இதன் முக்கிய கருத்துரு செயற்கை நுண்ணறிவு, தொடர் சங்கிலித் தொழில்நுட்பம், குவாண்டம் தொழில்நுட்பம், இணையவெளிப் பாதுகாப்பு மற்றும் AVGC-XR (இயங்கு படம், மெருகூட்டப்பட்ட காட்சிகள், விளையாட்டு, கேளிக்கைச் சித்திரங்கள்- உள்ளார்ந்த மெய்நிலைக் காட்சிகள்) போன்ற வளர்ந்து வரும் தொழில்நுட்பங்களில் கவனம் செலுத்துகிறது.
- இதில் முக்கியமாக கவனம் செலுத்தப்படும் பகுதிகளில் உள்ளர்ந்தத் தொழில்நுட்பம் சார்ந்த புத்தொழில் நிறுவனங்களை மேம்படுத்துதல், டிஜிட்டல் பொது உள் கட்டமைப்பு, அடுத்தத் தலைமுறை நுட்பத்திலான இணையவழி ஆளுகை, தரவு சார் பொருளாதாரம் மற்றும் உலகளாவிய திறன் மையங்கள் (GCCs) ஆகியவை அடங்கும்.

## நம்ம அரசு வாட்ஸ்அப் சாட்பாட்

- தமிழ்நாடு அரசானது குடிமக்களுக்கு வாட்ஸ்அப் (கட்செவி அஞ்சல்) மூலம் அரசு சேவைகளை வழங்குவதற்காக 'நம்ம அரசு' எனும் வாட்ஸ்அப் சாட்பாட்-ஐ அறிமுகப் படுத்தியுள்ளது.
- இந்த சாட்பாட் ஆனது UmagineTN 2026 நிகழ்வில் அறிமுகப்படுத்தப்பட்டது.
- குடிமக்கள் கட்செவி அஞ்சல் வழியே +91 7845252525 என்ற எண்ணுக்கு குறுஞ்செய்தி அனுப்புவதன் மூலம் இந்த சேவையைப் பெறலாம்.
- இது பல துறைகளிலிருந்து 51 அரசு சேவைகளை வழங்குகிறது.
- இதன் வழியே கிடைக்கும் சேவைகளில் சான்றிதழ்களைப் பதிவிறக்குதல், பயன்பாட்டுக் கட்டணம் மற்றும் வரிக் கட்டணங்களைச் செலுத்துதல், நலத்திட்டங்கள், குறைகளைத் தெரிவித்தல் உள்ளிட்ட இதர பலவும் அடங்கும்.

## TAPS குறித்த அரசாணை 2026

- தமிழ்நாடு அரசு, மாநில அரசு ஊழியர்களுக்காக தமிழ்நாடு அரசின் உறுதிப்படுத்தப் பட்ட ஓய்வூதியத் திட்டத்தை (TAPS) 2026 ஆம் ஆண்டு ஜனவரி 1 ஆம் தேதி முதல் செயல்படுத்தியுள்ளது.
- இந்தத் திட்டத்தைச் செயல்படுத்த, நிதித் துறை 2026 ஆம் ஆண்டு ஜனவரி 9 ஆம் தேதி அன்று ஓர் அரசாணையை (G.O.) வெளியிட்டது.
- 2026 ஆம் ஆண்டு ஜனவரி 1 ஆம் தேதி முதல் பணியில் சேரும் அனைத்து அரசு ஊழியர்களும் கட்டாயமாக TAPS திட்டத்தின் கீழ் உள்ளடங்குவர்.
- பங்களிப்பு ஓய்வூதியத் திட்டத்தின் (CPS) கீழ் உள்ள ஊழியர்களில், 2026 ஆம் ஆண்டு ஜனவரி 1 ஆம் தேதி அல்லது அதற்குப் பிறகு ஓய்வு பெறுபவர்கள் TAPS திட்டத்தின் கீழ் உள்ளடங்குவர்.
- 2026 ஆம் ஆண்டு ஜனவரி 1 ஆம் தேதிக்கு முன்பு CPS திட்டத்தின் கீழ் பணியில் இருந்த ஊழியர்கள், ஓய்வு பெறும் நேரத்தில் TAPS அல்லது CPS திட்டப் பலன்களில் ஏதேனும் ஒன்றைத் தேர்வு செய்யலாம்.
- TAPS திட்டத்தின் கீழ், ஊழியர்கள் கடைசியாகப் பெற்ற அடிப்படை ஊதியம் மற்றும் அகவிலைப்படியில் (DA) 50% தொகைக்குச் சமமான உறுதிப்படுத்தப்பட்ட ஓய்வூதியத்தைப் பெறுவார்கள் என்ற நிலையில் இதில் 10% பங்களிப்பு ஊழியரால் வழங்கப்படும் என்பதோடு மீதமுள்ள தொகை மாநில அரசால் செலுத்தப்படும்.

## தமிழ்நாடு தகவல் ஆணைய விரிவாக்கம்

- தமிழ்நாடு தகவல் ஆணையத்தில் மேலும் இரண்டு மாநிலத் தகவல் ஆணையர்களை நியமிக்க தமிழ்நாடு அரசு முடிவு செய்துள்ளது.
- இதன் மூலம், ஆணையத்தில் ஒரு மாநிலத் தலைமைத் தகவல் ஆணையர் (SCIC) மற்றும் எட்டு மாநிலத் தகவல் ஆணையர்கள் (SICs) இருப்பார்கள்.
- இந்த ஆணையம் 2005 ஆம் ஆண்டில் ஒரு SCIC மற்றும் இரண்டு SICகளுடன் உருவாக்கப் பட்டது, இது 2008 ஆம் ஆண்டில் ஆறு SIC-களாக அதிகரிக்கப்பட்டது.
- தற்போது, ஒரு SCIC மற்றும் ஐந்து SICகள் பணியில் உள்ளனர்.
- தகவல் அறியும் உரிமைச் சட்டம், 2005 என்பதின் பிரிவு 15(2)ன் கீழ், ஒரு மாநிலத்தில் 10 மாநிலத் தகவல் ஆணையர்கள் வரை இருக்கலாம்.

## தமிழ்நாடு மாநில குறிகாட்டி கட்டமைப்பு 2.0

- 2030 ஆம் ஆண்டிற்குள் ஐக்கிய நாடுகளின் நிலையான மேம்பாட்டு இலக்குகளில் (SDGs) முன்னேற்றத்தைக் கண்காணிக்க தமிழ்நாடு மாநிலக் குறிகாட்டி கட்டமைப்பு (SIF) 2.0 என்ற கட்டமைப்பினை வெளியிட்டுள்ளது.
- இந்தக் கட்டமைப்பு 17 SDG இலக்குகளுக்கான குறிகாட்டிகளின் எண்ணிக்கையயை 314 என்பதிலிருந்து 244 ஆகக் குறைக்கிறது என்பதோடு மேலும் இது 28 மாநிலத் துறைகளால் கண்காணிக்கப்படுகிறது.
- நிதி ஆயோக் அமைப்பின் படி, பீகாரில் 33.76% மற்றும் உத்தரப் பிரதேசத்தில் 22.93% என்பதுடன் ஒப்பிடும்போது தமிழ்நாட்டின் பல பரிமாண வறுமை விகிதம் 2.2% ஆக உள்ளது.

- ஐந்து வயதுக்குட்பட்ட குழந்தைகளின் இறப்பு விகிதம் 1,000 பிறப்புகளுக்கு 13 மற்றும் மருத்துவமனை சார் பிரசவங்களில் 99.98% ஆக உள்ளது.
- தமிழ்நாடு 2023–24 ஆம் ஆண்டிற்கான SDG இந்திய குறியீட்டில் 78 மதிப்பெண்களுடன் இரண்டாவது இடத்தில் உள்ளது.
- SIF 2.0 ஆனது ஐ.நா. உலகளாவிய குறிகாட்டி கட்டமைப்பு மற்றும் இந்தியாவின் தேசிய குறிகாட்டி கட்டமைப்புடன் (2025) இணைக்கப்பட்டுள்ளது.

## 50 லட்சம் மெட்ரிக் அளவிலான நீண்ட நாள் கழிவுகள் அகற்றம்

- சென்னை மாநகரக் கழகம் (GCC) ஆனது மொத்தம் 90 லட்சம் மெட்ரிக் டன் அளவிலான நீண்ட நாள் கழிவுகளில் கிட்டத்தட்ட 50 லட்சம் மெட்ரிக் டன் கழிவுகளை நுண்ணுயிர்க் கழிவுப் பிரிப்பு செயல்முறை மூலம் அகற்றியுள்ளது.
- மீதமுள்ள கழிவுகளை 2027 ஆம் ஆண்டு பிப்ரவரி மாதத்திற்குள் அகற்ற இலக்கு நிர்ணயிக்கப் பட்டது.
- பெருங்குடி குப்பை மேடு பகுதியில், ப்ளூ பிளானட் என்விரான்மெண்டல்ஸ் சொலியூசன்ஸ் நிறுவனத்தின் நுண்ணுயிர்க் கழிவுப் பிரிப்பு தொழில்நுட்பம் பயன்படுத்தப் படுகிறது.
- நுண்ணுயிர்க் கழிவுப் பிரிப்பு என்பது தாதுக்கள் மற்றும் பிற திடப்பொருட்களிலிருந்து பொதுவாக பாக்டீரியா, ஆர்க்கியா, பூஞ்சை அல்லது தாவரங்கள் போன்ற பல்வேறு நுண்ணுயிரிகளைப் பயன்படுத்தி உலோகங்களைப் பிரித்தெடுக்கும் நுட்பமாகும்.

## செயலில் உள்ள கல்விக் கடன் கணக்குகள்

- 2016 மற்றும் 2025 ஆகிய நிதியாண்டுகளுக்கு இடையில் இந்தியா முழுவதும் லட்சக் கணக்கிலான எண்ணிக்கையில் செயலில் உள்ள கல்விக் கடன்கள் இருந்தன.
- அந்தக் காலக் கட்டத்தில் இந்த எண்ணிக்கை சுமார் 27.4 லட்சத்திலிருந்து சுமார் 20.1 லட்சமாகக் குறைந்தது.
- இந்த எண்ணிக்கை அந்தக் காலக் கட்டத்தில் தமிழ்நாட்டில் சுமார் 9.1 லட்சத்திலிருந்து 3.1 லட்சமாகக் குறைந்துள்ளது.
- 2016 மற்றும் 2020 ஆகிய நிதியாண்டுகளுக்கு இடையில், இந்தியாவின் கல்விக் கடன்களில் சுமார் 30-35% ஆனது தமிழ்நாட்டில் உள்ள மாணவர்களால் பெறப்பட்டது.
- 2025 ஆம் நிதியாண்டில் இந்தியாவின் நிலுவையில் உள்ள கல்விக் கடன்களில் 15% தமிழ்நாட்டின் மாணவர்களால் பெறப்பட்டது என்பதோடு இது எந்த மாநிலத்திலும் பதிவாகாத அதிகபட்சமாகும்.

## உலகத் தமிழ் புலம்பெயர்ந்தோர் தினம் 2026

- 2026 ஆம் ஆண்டின் உலகத் தமிழ் புலம்பெயர்ந்தோர் தினமானது ஜனவரி 11–12 ஆகிய தேதிகளில் சென்னையில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.
- உலகளவில் உள்ள வெளிநாடு வாழ் தமிழர்களை (NRTs) இணைக்க தமிழ்நாடு அரசால் வெளிநாடு வாழ் தமிழர் நலத்துறை மூலம் இது ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

- இந்த நிகழ்வானது, தமிழ் மொழி, கலாச்சாரம், பாரம்பரியம் மற்றும் உலகளாவியத் தமிழ் ஒற்றுமையை மேம்படுத்துவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.
- இதில் புலம்பெயர்ந்த தமிழர்களின் சாதனைகளை முன்னிலைப்படுத்துவதற்கான கலந்துரையாடல் அமர்வுகள், கண்காட்சிகள் மற்றும் கலாச்சார நிகழ்ச்சிகள் ஆகியன அடங்கும்.
- 2026 ஆம் ஆண்டிற்கான இத்தினத்தின் கருத்துரு, "தமிழால் இணைவோம், தரணியில் உயர்வோம்" என்பதாகும்.

## iTNT–XeedQ குவாண்டம் ஒப்பந்தம்

- Umagine 2026 நிகழ்வில், தமிழ்நாட்டில் குவாண்டம் கணினித் திட்டங்களைத் தொடங்குவதற்காக, iTNT மையம் ஆனது ஜெர்மனியில் உள்ள XeedQ GmbH உடன் ஒரு உத்தேச ஒப்புதல் ஆவணத்தில் (LoI) கையெழுத்திட்டது.
- முதல் கட்டத்தில், மாணவர்கள் மற்றும் புத்தொழில் நிறுவனங்கள் XeedQ நிறுவனத்தினால் உருவாக்கப்பட்ட 4-கியூபிட் குவாண்டம் கணினியை தொலைவிலிருந்து அணுக இயலும்.
- இந்தத் திட்டம் தமிழக அரசாங்கத்தால் ஆதரிக்கப்படும் பொது-தனியார் முன்னெடுப்பான iTNT மையத்தினால் நடத்தப்படும்.
- இந்த மையம் சென்னை அண்ணா பல்கலைக்கழக வளாகத்தில் உள்ள iTNT மையத்தில் அமைந்திருக்கும்.
- XeedQ GmbH ஆனது குவாண்டம் வன்பொருள், தொழில்நுட்ப ஆதரவு மற்றும் கற்றல் உதவியை வழங்கும்.
- இரண்டாம் கட்டத்தில், அதன் புதுமை சூழல் அமைப்பிற்கான இயற்பியல் குவாண்டம் கணினியை வழங்கும் முதல் இந்திய மாநிலமாக தமிழ்நாடு மாறக் கூடும்.

## தமிழ்நாடு மாநில விருதுகள் 2026

- திருவள்ளுவர் விருது 2026 ஆனது டாக்டர் சத்தியவேல் முருகனாருக்கு வழங்கப்பட உள்ளது.
- காமராஜர் விருது 2025 இதயத்துல்லாவுக்கு வழங்கப்பட உள்ளது.
- மகாகவி பாரதியார் விருது 2025 நெல்லை ஜெயந்தாவிற்கும், 2025 ஆம் ஆண்டுக்கான பாவேந்தர் பாரதிதாசன் விருது கவிஞர் யுகபாரதிக்கும் வழங்கப்பட உள்ளன.
- தமிழ்த் தென்றல் திரு.வி.க. விருது 2025 ஆனது எழுத்தாளரும் முன்னாள் தலைமைச் செயலாளருமான இறையன்புவுக்கு வழங்கப்பட உள்ளது.
- திருவள்ளுவரின் கருத்துகளைப் பரப்பியதற்காக அய்யன் திருவள்ளுவர் விருது ஆனது அறிஞர் M.P. சத்தியவேல் முருகனாருக்கு வழங்கப்பட உள்ளது.
- சமூக நீதிக்காகப் பணியாற்றியதற்காக வழக்கறிஞர் A. அருள்மொழி தந்தை பெரியார் விருதுக்கு தேர்ந்தெடுக்கபட்டுள்ளார்.
- ஆதி திராவிடர் (பட்டியலிடப் பட்ட சாதியினர்) மற்றும் பழங்குடியினச் சமூகங்களுக்கான பணிக்காக அண்ணல் அம்பேத்கர் விருதை M. சிந்தனைச் செல்வன் பெற உள்ளார்.

- ❖ தி.மு.க. மூத்தத் தலைவரும் அமைச்சருமான துரைமுருகனுக்குப் பேரறிஞர் அண்ணா விருது வழங்கப்படவுள்ளது.
- ❖ விருது பெறும் ஒவ்வொருவருக்கும் 5 லட்சம் ரூபாய் ரொக்கமும், ஒரு தங்கப் பதக்கமும் வழங்கப்படும் என்பதோடு இந்த விருதினை முதல்வர் மு.க. ஸ்டாலின் வழங்குவார்.

## தமிழ்நாடு சுழற் பொருளாதார முதலீட்டுக் கொள்கை 2026

- ❖ தமிழ்நாடு முதலமைச்சர் 2026 ஆம் ஆண்டு தமிழ்நாடு சுழற் பொருளாதார முதலீட்டுக் கொள்கையை சென்னையில் வெளியிட்டார்.
- ❖ இந்தக் கொள்கை தமிழ்நாட்டில் சுழற்சிப் பொருளாதாரத் தொழில்களில் மறுசுழற்சி, வளத் திறன் மற்றும் முதலீட்டை ஊக்குவிப்பதை நோக்கமாகக் கொண்டுள்ளது.
- ❖ இந்தக் கொள்கை, 2021 ஆம் ஆண்டு MSME கொள்கை மற்றும் தமிழ்நாட்டின் MSME நிறுவனங்களின் தொழில்களை எளிதாக்குதல் (FaMe TN) ஸ்பான்சர்ஷிப் கொள்கையின் கீழான சலுகைகளுடன் கூடுதலாக, மறுசுழற்சி அலகுகள் மற்றும் தொழில் நுட்பத்தை செயல்படுத்தும் நிறுவனங்களுக்கு சிறப்புச் சலுகைகளை வழங்குகிறது.
- ❖ குறைந்தபட்சம் 20 கோடி ரூபாய் முதலீடு செய்து குறைந்தபட்சம் 25 நிகர புதிய வேலைவாய்ப்புகளை உருவாக்கும் நிறுவனங்கள், அதிகபட்சம் 3 கோடி ரூபாய் என்ற வரம்பிற்கு உட்பட்டு, தகுதியான நிலையான சொத்துக்களில் (EFA) 10% மூலதன மானியத்தைப் பெற தகுதியுடையவை.
- ❖ வணிக நடவடிக்கைகள் தொடங்கிய பின்னர் ஐந்து ஆண்டுகளுக்கு சமமான வருடாந்திரத் தவணைகளில் மூலதன மானியம் வழங்கப்படும்.
- ❖ தகுதியுள்ள அலகுகள் 50 ஊழியர்களுக்கு மட்டுமேயான, ஓராண்டிற்கான முதலாளியின் ஊழியர் வருங்கால வைப்பு நிதி (EPF) பங்களிப்பை திருப்பிச் செலுத்தும்.
- ❖ தமிழ்நாட்டில் வசிக்கும் தொழிலாளர்களுக்கு அவர்கள் ஒரு ஊழியருக்கு மாதத்திற்கு 10,000 ரூபாய் வரை பெறலாம்.
- ❖ இந்தக் கொள்கை திறன் வழங்கீடு ஊக்கத் தொகை மற்றும் ஊதிய மானியத்தையும் வழங்குகிறது.

## தமிழ்நாடு சேமிப்புக் கிடங்கு கொள்கை 2026

- ❖ தமிழ்நாடு முதலமைச்சர் சென்னையில் 2026 ஆம் ஆண்டு தமிழ்நாடு சேமிப்புக் கிடங்குக் கொள்கையை வெளியிட்டார்.
- ❖ இந்தக் கொள்கையானது நவீன கிடங்கு உள்கட்டமைப்பை மேம்படுத்துவதையும், தமிழ்நாட்டில் விநியோகச் சங்கிலி மற்றும் தளவாடங்களை வலுப்படுத்துவதையும் நோக்கமாகக் கொண்டுள்ளது.
- ❖ இந்தக் கொள்கையானது கிடங்குத் துறையில் சந்தைப் பங்கேற்பாளர்கள், சேவை வழங்குநர்கள் மற்றும் மேம்பாட்டாளர்களுக்கு ஐந்து ஆண்டுகளுக்கு ஊக்கத் தொகைகளை வழங்குகிறது.
- ❖ அந்தக் கிடங்குகள் தமிழ்நாட்டில் அமைந்திருக்க வேண்டும் என்பதோடு மேலும் ஊக்கத் தொகையைப் பெற மேம்பாட்டாளர் அல்லது சேவை வழங்குநர்கள் இந்த மாநிலத்தில் பதிவு செய்யப்பட்ட அலுவலகத்தைக் கொண்டிருக்க வேண்டும்.

- கொள்கை காலத்தில் செயல்படத் தொடங்கும் புதிய கிடங்குகள் மற்றும் அந்தக் கால கட்டத்தில் மேற்கொள்ளப்படும் ஏற்கனவே உள்ள கிடங்குகளின் விரிவாக்கங்களுக்கான ஊக்கத்தொகைக்கு தகுதியானவையாகும்.
- இப்புதிய கிடங்குகள் ஆனது பசுமை முன்னெடுப்பிற்கான செலவில், 25% வரையிலான பசுமை ஊக்கத்தொகையை அதிகபட்சம் 2 கோடி ரூபாய் வரை பெறலாம்.
- இந்தக் கொள்கை C வகை மற்றும் டெல்டா மாவட்டங்களில் மேற்கொள்ளப்படும் கிடங்கு மேம்பாட்டிற்கான பயிற்சி மானியங்கள் மற்றும் சிறப்பு ஊக்கத் தொகைகளையும் வழங்குகிறது.

## இந்தியாவின் முதல் இறையாண்மை AI பூங்கா

- 10,000 கோடி ரூபாய் மதிப்பிலான இந்தியாவின் முதல் இறையாண்மை செயற்கை நுண்ணறிவு (AI) பூங்காவை அமைப்பதற்காக தமிழ்நாடு அரசு சர்வம் AI அமைப்புடன் ஒரு புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டது.
- இந்தத் திட்டம் கணினி உள்கட்டமைப்பு, பாதுகாப்பான தரவு அமைப்புகள், ஆராய்ச்சி ஆய்வகங்கள் மற்றும் புத்தாக்கத் தொகுப்புகளுடன் கூடிய முழுமையான AI மாவட்டமாக நிறுவப்படும்.
- இது தமிழ்நாட்டில் சுமார் 1,000 உயர் திறன் கொண்ட உள்ளார்ந்தத் தொழில்நுட்ப வேலைவாய்ப்புகளை உருவாக்கும்.
- செயற்கை நுண்ணறிவுப் பூங்காவில் பொதுத்துறை AI பயன்பாட்டை ஆதரிப்பதற்காக ஆளுகையில் செயற்கை நுண்ணறிவு நிறுவனமும் இடம் பெறும்.
- இறையாண்மை மற்றும் பாதுகாப்பான AI சூழல் அமைப்பை உறுதி செய்வதற்காக தரவு, மாதிரிகள் மற்றும் கணினி ஆகியவை மாநிலத்தின் நம்பிக்கை எல்லைக்குள் இருக்கும்.
- இந்தியா AI திட்டத்தின் கீழ் தேர்ந்தெடுக்கப்பட்ட சர்வம் AI, இந்திய மொழிகள், குரல் மற்றும் பகுத்தறிவுக்கான அடிப்படை AI மாதிரிகளை உருவாக்கும்.

## பழையாறை கோயிலில் கோபுரம் கட்டுமானம்

- கும்பகோணம் அருகே பழையாறையில் உள்ள சோமநாதர் கோயிலில் இந்து சமய மற்றும் அறநிலையத் துறை (HR&CE) ஏழு அடுக்கு கோபுரத்தைக் கட்டத் தொடங்கி உள்ளது.
- தேசியத் தொழில்நுட்பக் கல்வி நிறுவனம் (NIT) மண் மற்றும் தற்போதுள்ள கோயில் அமைப்பை ஆய்வு செய்து, பரந்த அடித்தளத்துடன் பொருந்தக் கூடிய முந்தைய ஐந்து அடுக்குத் திட்டத்திற்குப் பதிலாக ஏழு அடுக்கு கோபுரத்தைக் கட்ட பரிந்துரைக்கிறது.
- இந்தக் கோயிலில் முன்னர் மொட்டை கோபுரம் (முடிக்கப்படாத கோபுரம்) என்று அழைக்கப்படும் புறக்கணிக்கப்பட்ட கிழக்கு நோக்கிய கோபுரம் இருந்தது.
- தலைநகர் தஞ்சாவூருக்கு மாற்றப்படுவதற்கு முன்பு பழையாறை ஒரு முக்கியமான சோழத் தலைநகராக இருந்தது.
- உத்தம சோழரின் அரச ஆணை பழையாறை அரண்மனையிலிருந்து பதிவு செய்யப் பட்டது என்பதோடு இது அதன் வரலாற்று முக்கியத்துவத்தை எடுத்துக்காட்டுகிறது.
- இந்தக் கோயில், அப்பர், சம்பந்தர் மற்றும் சுந்தரர் ஆகியோரின் பாடல்களில் பாராட்டப் பட்ட முக்கியமான சைவக் கோயில்களில் ஒன்றாகும்.

- ❖ இதன் மகாமண்டபம் (பிரதான மண்டபம்) ஒரு தேர் போல வடிவமைக்கப் பட்டு இருப்பதால் இது காரா கோயில் என்றும் அழைக்கப்படுகிறது.
- ❖ K.A. நீலகண்ட சாஸ்திரி குறிப்பிடுவது போல, இராஜராஜ சோழனின் சகோதரி குந்தவையின் வசிப்பிடமாகவும், சிறிது காலம் இராஜராஜனின் வசிப்பிடமாகவும் இருந்த ஒரு அரண்மனையுடன் பழையாறையில் அருள்மொழிதேவ-ஈஸ்வர கோயில் இருந்தது.
- ❖ இந்தக் கட்டுமானம், 1,000 ஆண்டுகள் பழமையான கோயில்களை மீட்டெடுத்து பழுது பார்க்கும் தமிழக அரசின் திட்டத்தின் ஒரு பகுதியாகும் மேலும் இத்திட்டத்தின் கீழ் சுமார் 4,000 கோயில்கள் ஏற்கனவே கும்பாபிஷேகம் செய்யப்பட்டுள்ளன.

## தமிழ்நாட்டில் மலேரியா ஒழிப்பு

- ❖ தமிழ்நாடு மாநிலமானது, கடந்த மூன்று ஆண்டுகளில் 38 மாவட்டங்களில் 33 மாவட்டங்களில் எந்தப் பாதிப்பும் பதிவாகாததுடன் மலேரியாவை ஒழிக்கும் ஒரு தருவாயில் உள்ளது.
- ❖ மாநிலத்தின் மலேரியா பாதிப்புகளில் 37%-45% பங்குடன் சென்னை, இராமநாதபுரம், தூத்துக்குடி, செங்கல்பட்டு மற்றும் சேலம் ஆகிய ஐந்து மாவட்டங்களில் இன்னும் மலேரியா பாதிப்புகள் பதிவாகியுள்ளன.
- ❖ தமிழ்நாட்டில் 2015 ஆம் ஆண்டில் 5,587 ஆக இருந்த மலேரியா பாதிப்புகள் 2025 ஆம் ஆண்டில் 321 ஆகக் குறைந்துள்ளதோடு சென்னையில் 2023 ஆம் ஆண்டில் 173 ஆக இருந்த மலேரியா பாதிப்புகள் 2025 ஆம் ஆண்டில் 121 ஆகவும் குறைந்துள்ளது.
- ❖ 2023 ஆம் ஆண்டில் பதிவான 384 பாதிப்புகளில் 330, 2024 ஆம் ஆண்டில் பதிவான 347 பாதிப்புகளில் 208 மற்றும் 2025 ஆம் ஆண்டில் பதிவான 321 பாதிப்புகளில் 203 என சமீபத்திய ஆண்டுகளில் பதிவான பெரும்பாலான மலேரியா பாதிப்புகள் உள்ளூர்ப் பரவலுக்குப் பதிலாக வேறொரு இடத்தில் இருந்து பரவியவையாகும்.
- ❖ பொது சுகாதாரம் மற்றும் நோய்த் தடுப்பு மருத்துவ இயக்குநரகம் இரத்தப் பரிசோதனை, ஆரம்ப சுகாதார நிலையங்கள் (PHC) மற்றும் அரசு மருத்துவ மனைகளில் (GHs) காய்ச்சல் பாதிப்புகளைக் கண்காணித்தல் மற்றும் புலம்பெயர்ந்த தொழிலாளர்களைக் கண்காணித்தல் மூலம் கண்காணிப்பை மேற்கொள்கிறது.
- ❖ வருடாந்திர ஒட்டுண்ணிப் பாதிப்பு 1 சதவீதத்திற்கும் குறைவாகக் குறைந்துள்ளது என்பதோடு மேலும் கடந்த மூன்று ஆண்டுகளில் மலேரியா தொற்று எதுவும் பதிவாக வில்லை.

## தமிழ்நாட்டில் கழுகு வளங்காப்பு மண்டலங்கள்

- ❖ கழுகு வளங்காப்பு மண்டலங்களை (VSZs) அமைப்பதற்கான செயல்முறை தொடங்கப் பட்டுள்ளதாக தமிழ்நாடு வனத்துறை சென்னை உயர் நீதிமன்றத்தில் தெரிவித்து உள்ளது.
- ❖ நீலகிரி உயிர்க்கோளக் காப்பகத்தில் உள்ள மோயார் நதிப் பள்ளத்தாக்கைச் சுற்றி முதல் VSZ உருவாக்கப்படும்.
- ❖ இது தமிழ்நாட்டில் கழுகு வளங்காப்புக்கான தொலைநோக்குத் திட்ட ஆவணத்தின் (VDVC) கீழ் 2025–2030 ஆம் கால கட்டத்தில் உருவாக்கப்படுகிறது.
- ❖ முதன்மைத் தலைமை வனப்பாதுகாவலர் மற்றும் தலைமை வனவிலங்கு காப்பாளர் (PCCF-cum-CWC) ஒரு கள அளவிலான கண்காணிப்புக் குழுவை அமைத்துள்ளார்.

- கழுகுகளைக் கொல்லும் டைக்ளோஃபெனாக் போன்ற தடை செய்யப்பட்ட கால்நடைப் பயன்பாட்டு ஸ்டெராய்டு அல்லாத அழற்சி எதிர்ப்பு மருந்துகளின் (NSAID) பயன்பாட்டை நிறுத்துவதே VSZ மண்டலங்களின் நோக்கமாகும்.

## பெருநிறுவன ஆராய்ச்சி மையம்

- கோரமண்டல் இன்டர்நேஷனல் லிமிடெட் நிறுவனமானது, மதராசின் இந்தியத் தொழில்நுட்பக் கல்விக் கழகத்துடன் (IIT) ஒரு புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டது.
- IIT மதராஸ் ஆராய்ச்சிப் பூங்காவில் ஒரு பெரு நிறுவன ஆராய்ச்சி மையத்தை அமைப்பதே இந்த புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் நோக்கமாகும்.
- IIT மதராஸ் உலக ஆராய்ச்சி அறக்கட்டளையின் தொடக்க விழாவின் போது இந்த அறிவிப்பு வெளியிடப்பட்டது.
- இந்த மையம் விவசாயம், நிலைத்தன்மை மற்றும் மேம்பட்ட வேளாண் தொழில் நுட்பத்தில் ஆராய்ச்சியை ஆதரிக்கும்.
- இந்தக் கூட்டாண்மை இந்தியாவிலும் வெளிநாட்டிலும் IIT மதராஸின் ஆராய்ச்சி மற்றும் கண்டுபிடிப்பு வசதிகளைப் பயன்படுத்தும்.

## தமிழ்நாடு முதல்வரின் நான்கு வாக்குறுதிகள்

- திருவள்ளுவர் தினத்தை முன்னிட்டு, தமிழக முதல்வர் மு.க. ஸ்டாலின், திருவள்ளுவர் முன் வைத்த நான்கு கொள்கைகள் அவரது ஆட்சியின் அடித்தளங்கள் என்றும், அவற்றைத் தமிழ்நாட்டில் தொடர்ந்து நிலை நிறுத்துவேன் என்றும் கூறினார்.
- அவை அஞ்சாமை, மனிதநேயம், அறிவாற்றல் மற்றும் ஊக்கம் ஆகியனவாகும்.
- மேலும், தமிழ்நாட்டில் பின்வரும் நான்கு வாக்குறுதிகளை அவர் வழங்கினார்.
    - சமூக அநீதி மற்றும் பிளவுபடுத்தும் வகுப்புவாத சக்திகளுக்கு எதிராக போராடுவதற்கான தைரியம்
    - ஏழைகளின் வாழ்க்கையை மேம்படுத்துவதற்கான மனிதாபிமான திட்டங்கள்
    - இளைய தலைமுறையின் அறிவுசார் திறனை வளர்ப்பதற்கான முயற்சிகள் மற்றும்
    - தொழில்துறை வளர்ச்சி மற்றும் பெண்களின் முன்னேற்றத்தை ஊக்குவிக்கும் ஆக்கப் பூர்வமான முயற்சிகள்.

## கொந்தகை ஏரி பருவநிலை ஆய்வு

- தமிழ்நாட்டின் சிவகங்கை மாவட்டத்தில் உள்ள கொந்தகை ஏரியிலிருந்து 4,500 ஆண்டு பருவநிலைப் பதிவை ஒரு அறிவியல் ஆய்வு வெளிப்படுத்தியது.
- அறிவியல் மற்றும் தொழில்நுட்பத் துறையின் (DST) கீழ் உள்ள பீர்பால் சாஹ்னி பழங்கால அறிவியல் நிறுவனம் (BSIP) இந்த ஆய்வை நடத்தியது.
- கடந்த காலப் பருவமழை முறைகள், மழைப்பொழிவு, தாவரங்கள் மற்றும் வெள்ளப் பாதிப்பு நிகழ்வுகளை மறுகட்டமைப்பதற்கு ஆராய்ச்சியாளர்கள் ஏரியின் வண்டல் படிவுகளை பகுப்பாய்வு செய்தனர்.

- இதன் கண்டுபிடிப்புகள் 4.2 ஆயிரம் ஆண்டு (ka) கால வறண்ட நிகழ்வு மற்றும் 3.2 ka வறண்ட காலக் கட்டம் போன்ற முக்கிய காலநிலைக் கட்டங்களை அடையாளம் கண்டன.
- இந்த ஆய்வு தமிழ்நாட்டில் நீர் மேலாண்மை, பேரிடர் அபாயத் திட்டமிடல் மற்றும் ஏரிப் பாதுகாப்பு ஆகியவற்றை ஆதரிக்கிறது.

## எத்திலீன் கிளைகோல் பிரச்சினை

- தமிழ்நாட்டின் மருந்துக் கட்டுப்பாட்டு இயக்குநரகம் ஆனது ஒரு குறிப்பிட்ட தொகுதி ஆல்மாண்ட்-கிட் சிரப்பை/மருந்தினை வாங்குதல், விற்பனை செய்தல் மற்றும் உட்கொள்வதற்கு எதிராக பொது அறிக்கையை வெளியிட்டுள்ளது.
- எத்திலீன் கிளைக்கோல் என்ற நச்சுப் பொருளுடன் கலப்படம் செய்யப்பட்டதாக ஆய்வக அறிக்கைகள் வெளியானதைத் தொடர்ந்து இந்த நடவடிக்கை எடுக்கப் பட்டது.
- எத்திலீன் கிளைகோல் ஒரு நிறமற்ற, மணமற்ற மற்றும் ஆவியாகாத திரவமாகும்.
- நச்சுத்தன்மை வாய்ந்தது மற்றும் சிறுநீரக செயலிழப்பு மற்றும் மரணம் உள்ளிட்ட கடுமையான தாக்கத்தினை ஏற்படுத்தும் என்பதால், எத்திலீன் கிளைகோலுடன் கலப்படம் செய்வது மிகவும் ஆபத்தானது.
- இது குறைந்த உறை திறன் மற்றும் அதிக கொதிநிலையைக் கொண்டுள்ளது மற்றும் உறைதல் தடுப்பு மற்றும் பனி நீக்கல் கரைசல்களில் பொதுவாகப் பயன்படுத்தப்படும் ஒரு மூலப்பொருளாகும்.

## சமூக நீதி கண்காணிப்புக் குழு

- தமிழ்நாடு அரசு சமூக நீதி கண்காணிப்புக் குழுவின் பதவிக் காலத்தை மேலும் இரண்டு ஆண்டுகள் நீட்டித்தது.
- கல்வி மற்றும் வேலைவாய்ப்பில் உறுதி செய்யப்பட நடவடிக்கை (இடஒதுக்கீடு) செயல்படுத்தப் படுவதை இந்தக் குழு கண்காணிக்கிறது.
- இது முதலில் 2021 ஆம் ஆண்டு டிசம்பரில் அமைக்கப்பட்டது.
- இந்தக் குழு முதலில் 2023 ஆம் ஆண்டு நவம்பரில் முதலில் நீடிக்கப்பட்டது, இரண்டாவதாக 2026 ஆம் ஆண்டு ஜனவரியில் நீடிக்கப் பட்டது.
- சுபா வீரபாண்டியன் தலைமையிலான இக்குழுவில், சுவாமிநாதன் தேவதாஸ், மனுஷ்யபுத்திரன், சாந்தி ரவீந்திரநாத் மற்றும் K. கருணாநிதி ஆகியோர் உறுப்பினர்களாக இடம் பெற்றுள்ளனர்.

## இந்தி மொழி அல்லாத 7 மொழிகளுக்கான இலக்கிய விருது

- தமிழ், வங்காளம் மற்றும் மராட்டியம் உள்ளிட்ட 7 மொழிகளில் வழங்கப்படும் வருடாந்திர இலக்கிய விருதுகளை தமிழக முதல்வர் அறிவித்தார்.
- முதல் கட்டமாக, 'செம்மொழி இலக்கிய விருது' என்ற பெயரில் விருது வழங்கப்படும்.
- இது தமிழ், தெலுங்கு, கன்னடம், மலையாளம், ஒடியா, வங்காளம் மற்றும் மராட்டியம் மொழிகளில் சிறந்த படைப்புகளுக்கு வழங்கப்படுகிறது.
- ஒவ்வொரு மொழிக்கும் இந்த விருதில் 5 லட்சம் ரூபாய் ரொக்கப் பரிசு வழங்கப்படும்.

## தமிழ்நாட்டின் அயலகத் தமிழர் விருதுகள் 2026

- தமிழக முதலமைச்சர் அயலகத் தமிழர்களை தங்கள் தமிழ் அடையாளத்தையும் வேர்களையும் ஒருபோதும் மறக்க வேண்டாம் என்று அழைப்பு விடுத்தார்.
- சென்னையில் ஏற்பாடு செய்யப்பட்ட இதன் கொண்டாட்டங்களில் 70க்கும் மேற்பட்ட நாடுகளைச் சேர்ந்த அமைச்சர்கள் உட்பட பல பிரதிநிதிகள் பங்கேற்றனர்.
- இந்த நிகழ்வின் போது, பின்வரும் விருதுகள் முதல்வரால் வழங்கப்பட்டன:
- பெரியார் அம்பேத்கர் சிந்தனை வட்டம் ஆஸ்திரேலியா அமைப்பின் தலைவர் டாக்டர் அண்ணாமலைக்கு தமிழ் மாமணி விருது.
- கணியன் பூங்குன்றனார் விருதுகள் முகமது ஹனிஃபா பின் அப்துல்லா (கல்வி), சரவணன் பத்மநாபன் மற்றும் செந்தில்குமார் இராமலிங்கம் (சமூக மேம்பாடு), கோகிலவாணி பிரகாஷ்தேவன் (பெண்கள்), அன்சாரி வாஹித் (வர்த்தகம்), திருமலைசாமி வேலவன் (அறிவியல் மற்றும் தொழில்நுட்பம்), கபிலன் தர்மராஜன் (மருத்துவம்) ஆகியோருக்கு வழங்கப்பட்டன.
- சிறந்தக் கலாச்சாரத் தூதர் விருது சாவ் சு து ஸார் எனும் தீபா இராணிக்கு வழங்கப் பட்டது.

## பசுமைப் பள்ளிகளில் சூரிய ஆற்றல் ஆய்வு

- சூரிய ஆற்றல் பயன்பாடு ஆனது தமிழ்நாடு அரசுப் பள்ளிகளில் மின் கட்டமைப்பு சார் மின்சாரப் பயன்பாட்டை சுமார் 46% குறைத்ததாக ஒரு ஆய்வு தெரிவிக்கிறது.
- இந்திய மனித குடியேற்ற நிறுவனத்துடன் (IIHS) இணைந்து இந்த அறிக்கை தயாரிக்கப் பட்டது.
- இந்த அறிக்கை மாநிலத்தின் பசுமைப் பள்ளிகள் முன்னெடுப்பின் கீழ் 97 அரசுப் பள்ளிகளை ஆய்வு செய்தது.
- ஒவ்வொரு பள்ளியும் ஆண்டுக்கு சராசரியாக 3,572 மின்சார அலகுகளையும் சுமார் 26,000 ரூபாயும் சேமித்தது.
- பசுமைப் பள்ளிகள் திட்டம் கிட்டத்தட்ட அனைத்து மாவட்டங்களிலும் சுமார் 300 அரசுப் பள்ளிகளுக்கு விரிவுபடுத்தப்பட்டுள்ளது.
- மாநில அளவிலான விரிவாக்கம் அரசு, உதவி பெறும் கல்வி நிறுவனங்கள் மற்றும் மருத்துவமனைகளில் 91% வரை மின் நுகர்வை ஈடுசெய்யும் என்று ஆய்வு மதிப்பிடுகிறது.

## தமிழ்நாடு மொழிபெயர்ப்பு மானியப் பட்டியல்

- பிற மொழிகளில் தமிழ் புத்தகங்களை ஊக்குவிப்பதற்காக என்று தமிழ்நாடு மொழி பெயர்ப்பு மானியப் பட்டியலை வெளியிட்டது.
- மொழிபெயர்ப்பு உரிமைகளுக்குக் கிடைக்கும் தமிழ் இலக்கியப் படைப்புகளை இந்தப் பட்டியல் பட்டியலிடுகிறது.
- இது தமிழ்நாடு மொழிபெயர்ப்பு மானியத் திட்டத்தின் ஒரு பகுதியாகும்.
- இந்தத் திட்டம் தமிழ் புத்தகங்களை இந்திய மற்றும் வெளிநாட்டு மொழிகளில் மொழி பெயர்ப்பதை ஆதரிக்கிறது.

- இது தமிழ்நாடு பாடநூல் மற்றும் கல்விச் சேவைகள் கழகம் (TNTESC) மூலம் செயல் படுத்தப் படுகிறது.
- தமிழ் இலக்கியத்தை உலகளாவிய வாசகர்களிடம் கொண்டு செல்வதே இதன் நோக்கம் ஆகும்.

## ஒசூர் விமான நிலைய திட்ட முன்மொழிவு

- ஒசூரில் விமான நிலையம் அமைக்கும் தமிழ்நாட்டின் திட்டத்தைப் பாதுகாப்புத் துறை அமைச்சகம் (MoD) நிராகரித்தது.
- இந்துஸ்தான் ஏரோநாட்டிக்ஸ் லிமிடெட் (HAL) இந்தப் பகுதியில் கட்டுப்படுத்தப்பட்ட வான்வெளியைக் கோருவதால் அந்தக் கோரிக்கை நிராகரிக்கப்பட்டது.
- தமிழ்நாடு அரசு முன்னதாக 2025 ஆம் ஆண்டு ஜூன் மாதத்தில் வான்வெளிக் கட்டுப்பாடுத் தளர்வை கோரியிருந்தது என்ற நிலையில் அதுவும் நிராகரிக்கப்பட்டது.
- ஒசூர் விமான நிலையம் 30 மில்லியன் பயணிகளுக்கான திறன் கொண்ட ஒரு சர்வதேச விமான நிலையமாக முன்மொழியப்பட்டுள்ளது.
- சூளகிரி தாலுகாவில் உள்ள இந்தத் திட்டத் தளம் சுமார் 2,300 ஏக்கர் பரப்பளவினைக் கொண்டுள்ளது.
- பெங்களூரு விமான நிலையத்திலிருந்து 150 கி.மீ தூரத்தில் அமைந்துள்ளதன் காரணமாகவும் இது இந்தத் தடையை எதிர்கொள்கிறது.

## ஜான் டோ வழக்கு

- நடிகர் கமல்ஹாசன் தனது ஆளுமை உரிமைகளைப் பாதுகாக்க சென்னை உயர் நீதிமன்றத்தில் வழக்குத் தொடர்ந்தார்.
- அவர் தெரியாத நபர்கள் அல்லது நிறுவனங்களுக்கு எதிராக எடுக்கப்பட்ட சட்ட நடவடிக்கையான ஜான் டோ வழக்கைத் தாக்கல் செய்தார்.
- தாக்கல் செய்யும் நேரத்தில் உரிமை மீறுபவர்களின் அடையாளம் தெரியாதபோது ஜான் டோ வழக்கு பயன்படுத்தப்படுகிறது.
- இந்த வழக்கு அவரது பெயர், முதலெழுத்துக்கள் (KH), படம், ஒப்புரு மற்றும் தலைப்புகளின் அங்கீகரிக்கப்படாத வணிகப் பயன்பாட்டை நிறுத்த முயல்கிறது.
- இது செயற்கை நுண்ணறிவு (AI), மறைபோலிகள் மற்றும் டிஜிட்டல் தொழில்நுட்பங்கள் மூலம் தவறாகப் பயன்படுத்துவதையும் உள்ளடக்கியது.
- ஆளுமை உரிமைகள் ஒரு தனிநபரின் அடையாளம், உருவம் மற்றும் நற்பெயரை அங்கீகரிக்கப்படாதப் பயன்பாட்டிலிருந்துப் பாதுகாக்கின்றன.

## இந்தியாவின் முதல் உலகளாவிய கல்வி உச்சி மாநாடு

- இந்தியா உலகளாவிய கல்வி உச்சி மாநாடு (IGES) 2026 ஆனது தமிழ்நாட்டின் சென்னையில் நடைபெறுகிறது.
- உலகளாவிய கூட்டாண்மைகளை வளர்ப்பதற்காக என்று இது தமிழ்நாடு அரசு மற்றும் தேசிய இந்திய மாணவர்கள் மற்றும் முன்னாள் மாணவர் சங்கத்தால் (NISAU) இணைந்து

ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

- ❖ உலகம் முழுவதிலுமிருந்து கல்வித் தலைவர்கள், பல்கலைக்கழகங்கள், முதலாளிகள் மற்றும் கொள்கை வகுப்பாளர்களை ஒன்றிணைப்பதை இந்த உச்சி மாநாடு முக்கிய நோக்கமாகக் கொண்டுள்ளது.
- ❖ அடுத்தப் பத்தாண்டுகளுக்கான உலகளாவியக் கல்வி மற்றும் திறன் செயல்பாட்டு நிரலை வடிவமைக்க IGES வடிவமைக்கப்பட்டுள்ளது.

## 2026 ஆம் ஆண்டு தமிழ்நாடு சட்டமன்றத்தில் ஆளுநர் உரை

- ❖ ஜனவரி 20 ஆம் தேதி மாநில சட்டமன்றத்தில் மாநில அரசாங்கத்தால் தயாரிக்கப்பட்ட தனது வழக்கமான உரையைப் படிக்க தமிழ்நாடு ஆளுநர் R.N. ரவி மறுத்து, அவையிலிருந்து வெளிநடப்பு செய்தார்.
- ❖ தொடர்ந்து நான்காவது ஆண்டாக ஆளுநர் அவையின் தொடக்க அமர்வின் போது அவையை விட்டு வெளியேறினார்.
- ❖ ஆனால், சபாநாயகர் M. அப்பாவு, அரசு தயாரித்த உரையை தமிழில் வாசித்த பிறகு மட்டுமே அவையில் ஒரு தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.
- ❖ அரசியலமைப்பின் 176வது சரத்தின் படி, சட்டமன்றத்திற்குப் பொதுத் தேர்தலுக்குப் பிறகு நடைபெறும் முதல் அமர்வின் தொடக்கத்திலும், ஒவ்வோர் ஆண்டின் முதல் அமர்வின் தொடக்கத்திலும் மாநிலச் சட்டமன்றங்களில் ஆளுநர் சிறப்பு உரை நிகழ்த்துவார்.
- ❖ ஆளுநர் தனது தனிப்பட்ட கருத்துக்களை அதில் சேர்க்கவோ அல்லது மாநில அரசு தயாரித்த உரையின் சில பகுதிகளை நீக்கவோ எந்த வாய்ப்பும் இல்லை.

## குப்பைத் திருவிழா 2026

- ❖ தமிழ்நாடு அரசு மூன்று நாட்கள் அளவிலான மாநிலம் தழுவிய குப்பைத் திருவிழா (குப்பை சேகரிப்பு இயக்கம்) நடத்தப்படும் என்று அறிவித்துள்ளது.
- ❖ இந்த இயக்கம் ஜனவரி 21 முதல் 23, 2026 ஆம் தேதி வரை தமிழ்நாட்டின் அனைத்து உள்ளாட்சி அமைப்புகளிலும் நடத்தப்படும்.
- ❖ இந்த முன்னெடுப்பு 2025 ஆம் ஆண்டில் அறிவிக்கப்பட்ட தூய்மைப் பிரச்சாரத்தின் (தூய்மை இயக்கம்) ஒரு பகுதியாகும்.
- ❖ முன்னதாக, 2025 ஆம் ஆண்டின் ஜூன் முதல் டிசம்பர் மாதம் வரை, அரசு அலுவலகங்களில் நான்கு கட்ட குப்பைச் சேகரிப்பு நடத்தப்பட்டு, 2,877 டன் கழிவுகள் சேகரிக்கப்பட்டன.
- ❖ சேகரிக்கப்பட்ட கழிவுகள் மறுசுழற்சி செய்யப்பட்டு 3.79 கோடி ரூபாய் வருவாய் ஈட்டப் பட்டது.
- ❖ சென்னை மாநகராட்சியில் (GCC), இந்த இயக்கத்திற்காக 200 குப்பை சேகரிப்பு மையங்கள் அமைக்கப்பட்டுள்ளன.

## வடகிழக்குப் பருவமழையின் முடிவு

- ❖ வடகிழக்குப் பருவமழை ஜனவரி 19, 2026 அன்று தமிழ்நாட்டிலிருந்து விலகியதாக, சென்னை பிராந்திய வானிலை ஆய்வு மையத்தினால் (RMC) உறுதிப்படுத்தப்பட்டது.

- பொதுவாக ஒவ்வொரு ஆண்டும் அக்டோபர் முதல் டிசம்பர் வரை பெய்யும் வடகிழக்குப் பருவமழை தமிழ்நாட்டிற்கு முக்கிய மழைக்காலமாகும்.
- குறைந்தபட்ச வெப்பநிலையானது பல இடங்களில் இயல்பை விட 2-3°C குறைவாக இருந்ததுடன் இந்த விலகல் மூடுபனி நிறைந்த காலை மற்றும் குளிர்ந்த இரவுகளுக்கு வழி வகுத்தது.
- ஜனவரி 20, 2026 அன்று, திருத்தணியில் மிகக் குறைந்த சமவெளிப் பகுதி வெப்பநிலை 15.2°C ஆகவும், கொடைக்கானலில் மலைப்பகுதிகளில் 6°C ஆகவும் பதிவாகியுள்ளது.
- தமிழ்நாடு மற்றும் புதுச்சேரியில் குளிரான இரவுகள் இருக்கும் என்று எதிர்பார்க்கப் படுவதுடன், வறண்ட வானிலை மற்றும் தெளிவான வானம் ஜனவரி 22, 2026 ஆம் தேதி வரை தொடரும்.
- தென்கிழக்கு வங்காள விரிகுடாவில் காற்று சுழற்சி அதிகரிப்பதால், ஜனவரி 23 முதல் கடலோரப் பகுதிகளில் தொடங்கி லேசானது முதல் மிதமான மழை பெய்ய வாய்ப்பு உள்ளது.
- பல மாவட்டங்களில் அதிகப்படியான மழை பதிவாகியுள்ளதுடன், ஜனவரி 1, 2026 ஆம் தேதி முதல் தமிழ்நாடு குளிர்கால மழைப் பொழிவு 25.8 மிமீ அதிகமாகப் பதிவாகி உள்ளது.

## காற்றாலை மறு ஆற்றல் உற்பத்திக் கொள்கையில் திருத்தம்

- தமிழ்நாட்டில் காற்றாலைகளுக்கான திருத்தப்பட்ட மறு ஆற்றல் உற்பத்திக் கொள்கையை தமிழக அரசு அறிவித்துள்ளது.
- ஏப்ரல் 1, 2016 ஆம் தேதிக்கு முன் இயக்கப்பட்ட காற்றாலை மின் உற்பத்தியாளர்களுக்கு, 20 ஆண்டுகள் செயல்பாட்டுக் காலம் முடிந்ததும், அதன் உரிமையாளர்கள் மறு ஆற்றல் அளிப்பு அல்லது புதுப்பித்தல் அல்லது செயல்பாட்டுக் கால நீட்டிப்பை கட்டாயமாகத் தேர்வு செய்ய வேண்டும்.
- ஏப்ரல் 1, 2016 அன்று அல்லது அதற்குப் பிறகு இயக்கப்பட்ட காற்றாலை மின் உற்பத்தியாளர்களைப் பொறுத்தவரை, 25 ஆண்டுகள் செயல்பாட்டுக் காலம் முடிந்த பிறகு மறு ஆற்றல் உருவாக்கத்தினை மேற்கொள்ள வேண்டிய தேவையைப் பயன்படுத்தலாம்.
- 20 ஆண்டு செயல்பாட்டுக் காலத்திற்குப் பிறகு, கடந்த மூன்று நிதியாண்டுகளில் NIWE போன்ற சுயாதீன நிறுவனத்தால் சான்றளிக்கப்பட்ட மதிப்பிடப்பட்ட உற்பத்தியில் 70 சதவீதத்திற்கும் குறையாத சராசரி உற்பத்தியைக் கொண்ட நிறுவனங்கள் செயல்பாட்டுக் கால நீட்டிப்புக்கு தகுதியுடையவை ஆகும்.

## மாற்றத்திற்கான இளம் தூதர்கள் முன்னெடுப்பு

- தமிழ்நாட்டின் திருச்சிராப்பள்ளியில் உள்ள ஒரு அரசுப் பள்ளி, மாற்றத்திற்கான இளம் தூதர்கள் முன்னெடுப்பினைத் தொடங்கியது.
- தினசரி பயிற்சி மூலம் ஒழுக்கம் மற்றும் குடிமை விழுமியங்களைக் கற்பிக்க காட்டூரில் உள்ள அரசு ஆதி திராவிடர் தொடக்கப்பள்ளியில் இந்தத் திட்டம் அறிமுகப் படுத்தப் பட்டது.
- இது நேர்மை, கருணை, மரியாதை, பொறுப்பு, ஒழுக்கம் மற்றும் நன்றியுணர்வு போன்ற விழுமியங்களில் கவனம் செலுத்தியது.

- மாணவர்கள் கதை சொல்லல், காலைக் கூட்டங்களின் போது அவற்றைப் பிரதிபலித்தல் மற்றும் பள்ளி மற்றும் வீட்டில் எளிய விழுமியம் அடிப்படையிலான செயல்கள் மூலம் கற்றுக்கொண்டனர்.
- வகுப்பறைக்கு வெளியே விழுமியங்களை வலுப்படுத்தப் பெற்றோர்கள் வாட்ஸ்அப் தொடர்பு மூலம் பங்கேற்றனர்.
- இந்த முன்னெடுப்பு ஆசிரியர்கள் மதிப்பெண்களை வழங்குவதற்குப் பதிலாக நடத்தை மாற்றத்தைக் கவனிக்கின்ற மதிப்பீடு சாராத அணுகுமுறையைப் பின்பற்றியது.

## உலகளாவிய சுற்றுலா உச்சி மாநாடு 2026

- தமிழ்நாடு அரசானது, மகாபலிபுரத்தில் 2026 ஆம் ஆண்டு தமிழ்நாடு உலகளாவிய சுற்றுலா உச்சி மாநாட்டினை ஏற்பாடு செய்து வருகிறது.
- இந்த உச்சி மாநாடு தமிழ்நாட்டின் சுற்றுலா மீதான பலங்களை வெளிப்படுத்தும் ஒரு உலகளாவியத் தளமாக நடத்தப்படும்.
- இது கொள்கை வகுப்பாளர்கள், உலகளாவிய முதலீட்டாளர்கள், தொழில் துறை தலைவர்கள் மற்றும் ஆக்க வல்லுநர்களை ஒன்றிணைக்கும்.
- புதிய யுக முதலீடுகளை ஈர்ப்பது மற்றும் சுற்றுலாப் பயணிகளின் வருகையை அதிகரிப்பதே இதன் நோக்கம் ஆகும்.
- டிஜிட்டல் மற்றும் பயணத் தொழில்நுட்பம், சுற்றுச்சூழல் சார் சுற்றுலா, பாரம்பரியச் சுற்றுலா மற்றும் கடல் சார் பொருளாதாரச் சுற்றுலா ஆகியவை முக்கிய கவனம் செலுத்தும் பகுதிகளில் அடங்கும்.
- புத்தொழில் நிறுவனங்கள், திறன்கள் மற்றும் சுற்றுலாவில் வேலைவாய்ப்பு மூலம் இளையோர் வாய்ப்புகள் குறித்தும் இந்த உச்சிமாநாடு கவனம் செலுத்துகிறது.

## இயங்கலை சொத்து பதிவு - ஸ்பிரிண்ட் 1

- தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் சொத்துப் பதிவை முழுமையாக டிஜிட்டல் மயமாக்க ஸ்பிரிண்ட் 1 தளத்தினைத் தொடங்கி வைத்தார்.
- ஸ்பிரிண்ட் 1 ஆனது STAR 3.0 (எளிமைப்படுத்தப்பட்ட மற்றும் வெளிப்படையான பதிவு நிர்வாகம்) அமைப்பின் கீழ் தொடங்கப்பட்டது.
- இது நேரடி ஆவணங்களை எடுத்துச் செல்ல வேண்டிய அவசியம் இல்லாமல் 30 பத்திர வகைகளுக்கும் காகிதமில்லா பதிவை வழங்குகிறது.
- விற்பனை மற்றும் குத்தகை பத்திரங்கள் உட்பட 10 ஆவண வகைகளுக்கு இருப்பு இல்லாத பதிவு கிடைக்கிறது.
- குடிமக்கள், துணைப் பதிவாளர் அலுவலகத்தை (SRO) பார்வையிடாமல் இயங் கலையில் முழுமையான பதிவு செயல் முறையையும் முடிக்கலாம்.
- TNREGINET வலை தளம் மற்றும் கைபேசி செயலி மூலம் இந்தச் சேவைகள் கிடைக்கின்றன.

## சிறப்புப் பகுதி மேம்பாட்டு ஆணையம்

- சிறப்புப் பகுதி மேம்பாட்டு ஆணையத்தை உருவாக்குவதற்கான மசோதாவை தமிழ்நாடு அரசு மாநில சட்டமன்றத்தில் தாக்கல் செய்தது.

- வரலாறு, சுற்றுச்சூழல், தொல்பொருள் அல்லது சுற்றுலா முக்கியத்துவம் வாய்ந்த பகுதிகளின் திட்டமிட்ட மேம்பாட்டினை உறுதி செய்வதை இந்த மசோதா நோக்கமாகக் கொண்டுள்ளது.
- சிறப்புப் பகுதி மேம்பாட்டு ஆணையத்தை அமைப்பதற்காக மாமல்லபுரம் மற்றும் கன்னியாகுமரி போன்ற பகுதிகள் அடையாளம் காணப்பட்டுள்ளன.
- முன்மொழியப்பட்ட இந்த ஆணையம் ஆனது நிலையான உள்கட்டமைப்பு மேம்பாட்டிற்கான சிறப்புப் பகுதி பெருந்திட்டத்தைத் தயாரிக்கும்.
- தமிழ்நாடு நகர மற்றும் கிராமத் திட்டமிடல் சட்டம், 1971 போன்ற தற்போதைய சட்டங்கள் இத்தகைய சிறப்புப் பகுதிகளுக்கு போதுமானவை அல்ல என்று மசோதா கூறுகிறது.
- புதிய கட்டமைப்பு உள்ளூர் அமைப்புகள் அல்லது பாரம்பரிய ஆணையத்தின் அதிகாரங்களைப் பாதிக்காமல் செயல்படும்.

## தமிழ்நாடு நீர்வள மசோதா, 2026

- தமிழ்நாடு சட்டமன்றம் 2026 ஆம் ஆண்டு தமிழ்நாடு நீர்வள (ஒழுங்குமுறை, மேலாண்மை மற்றும் பெருக்குதல்) மசோதாவினை ஜனவரி 24, 2026 அன்று நிறைவேற்றியது.
- இந்த மசோதா தமிழ்நாடு நீர்வள மேலாண்மை ஆணையத்தின் (TNWRMA) அரசியலமைப்பை வழங்குகிறது.
- இந்த மசோதா தமிழ்நாட்டில் உள்ள அனைத்து வகையான நீர்வளங்களையும் ஒழுங்குபடுத்துதல், நிர்வகித்தல் மற்றும் மேம்படுத்துவதை நோக்கமாகக் கொண்டு உள்ளது.
- தலைமைச் செயலாளர் அதன் தலைவராக இருப்பார் என்பதோடு மேலும் நீர்வளச் செயலாளர் TNWRMA ஆணையத்தின் உறுப்பினர் செயலாளராக இருப்பார்.
- இந்த ஆணையம் மாநில நீர் கொள்கை மற்றும் மாநில நீர்வள மேலாண்மை திட்டத்தைத் தயாரிக்கும்.
- வணிக ரீதியான நீர் பயன்பாட்டிற்கான கட்டணங்களை நிர்ணயிக்கவும், அங்கீகரிக்கப் படாத நீர் எடுப்புக்கான அபராதங்களை விதிக்கவும் இது அதிகாரம் அளிக்கிறது.

## கலைஞர் கனவு இல்லம் திட்டம் – தமிழ்நாடு

- கலைஞர் கனவு இல்லம் திட்டத்தின் கீழ் ஒரு லட்சம் புதிய வீடுகள் கட்டப்படும் என்று தமிழக அரசு அறிவித்துள்ளது.
- இந்த வீடுகள் மொத்தம் 3,500 கோடி ரூபாய் செலவில் கட்டப்படும்.
- இந்தத் திட்டம் தமிழக அரசால் செயல்படுத்தப்படும் மாநில வீட்டுவசதித் திட்டமாகும்.
- கிராமப்புறங்களில் உள்ள ஏழை மற்றும் வீடற்றக் குடும்பங்களுக்கு நிரந்தர கான்கிரீட் வீடுகளை வழங்குவதை இது நோக்கமாகக் கொண்டுள்ளது.
- வீடுகளில் குடிநீர், மின்சாரம் மற்றும் சுகாதாரம் போன்ற அடிப்படை வசதிகள் வழங்கப் பட்டுள்ளன.
- இந்தத் திட்டத்தின் கீழ் இரண்டு லட்சம் வீடுகளுக்கான பணிகள் ஏற்கனவே மாநிலம் முழுவதும் நடைபெற்று வருகின்றன.

## சமூகப் பாதுகாப்பு ஓய்வூதிய விரிவாக்கம்

- பகுதிநேர ஆசிரியர்களுக்கான சிறப்பு மதிப்பெண்கள் மற்றும் பல தொழிலாளர் குழுக்களுக்கான ஓய்வூதியத்தில் அதிகரிப்பை தமிழக முதல்வர் அறிவித்தார்.
- நிரந்தர ஆசிரியர் பணியமர்த்துதலில் அனுபவத்தின் அடிப்படையில் பகுதிநேர ஆசிரியர்களுக்கு சிறப்பு மதிப்பெண்கள் வழங்கப்படும் என்பதோடு விரைவில் அதற்கான அரசு உத்தரவு வெளியிடப்படும்.
- மாநில அரசு ஏற்கனவே பகுதிநேர ஆசிரியர்களுக்கு சம்பள உயர்வு மற்றும் மே மாத சம்பளத்தை வழங்கியுள்ளது என்பதோடு இது முன்னர் வழக்கமான ஆசிரியர்களுக்கு மட்டுமே வழங்கப்பட்டது.
- பிப்ரவரி 4, 2026 முதல் உங்களுடன் ஸ்டாலின் திட்டத்தின் கீழ் கூடுதலாக 1.80 லட்சம் பேர் மாதாந்திர ஓய்வூதியத்தைப் பெறுவார்கள்.
- ஓய்வூதியப் பலன்கள் 2 லட்சம் ரூபாயாக உயர்த்தப்பட்டுள்ளதுடன், மதிய உணவு அமைப்பாளர்கள், அங்கன்வாடி பணியாளர்கள் மற்றும் பஞ்சாயத்து ஒன்றிய எழுத்தர்களுக்கான ஓய்வூதியம் 2,000 ரூபாயிலிருந்து 3,400 ரூபாயாக உயர்த்தப் பட்டு உள்ளது.

## முன்னுரிமை நியமனத்தில் கட்டுப்பாடு

- அரசு ஊழியர்கள் முன்னுரிமை நியமனப் பலன்களை மீண்டும் பயன்படுத்துவதைத் தடுக்கும் மசோதாவை தமிழக அரசு அறிமுகப்படுத்தியது.
- இந்தத் திருத்தம், தமிழ்நாடு தமிழ் வழியில் படித்தவர்கள் (PSTM) சட்டம், 2010 உடன் தொடர்புடையது.
- தமிழக மனிதவள மேலாண்மைத் துறை அமைச்சர் என்.கயல்விழி செல்வராஜ், இந்த சட்டத் திருத்தத்தை சட்டசபையில் தாக்கல் செய்தார்.
- இந்தச் சட்டத்தின் கீழ், நேரடி ஆட்சேர்ப்பு காலியிடங்களில் 20 சதவீதம் தமிழ் வழியில் படித்தவர்களுக்கு ஒதுக்கப்பட்டுள்ளது.
- ஏற்கனவே PSTM முன்னுரிமையைப் பயன்படுத்தி அரசு வேலை பெற்ற நபர்கள் அதே ஊதியப் பதவி நிலைக்கு அதை மீண்டும் பயன்படுத்த முடியாது என்று இந்த மசோதா கூறுகிறது.
- அத்தகைய தேர்வர்கள் அதிக ஊதியம் பெறும் பதவிகளுக்கு மட்டுமே அந்த முன்னுரிமையைப் பயன்படுத்த முடியும்.
- பணியில் உள்ள அரசு ஊழியர்கள் மீண்டும் PSTM முன்னுரிமைக்குத் தகுதியற்றவர்கள் என்ற சென்னை உயர்நீதிமன்றத் தீர்ப்பைத் தொடர்ந்து இந்த மாற்றம் ஏற்பட்டுள்ளது.

## தமிழகத்தைச் சேர்ந்த பத்ம விருது பெற்றவர்கள்

- தமிழகத்தைச் சேர்ந்த 14 ஆளுமைகள் மதிப்புமிக்க பத்ம விருதுகளுக்காகத் தேர்ந்தெடுக்கப் பட்டுள்ளனர்.
- மொத்தமாக 13 பத்ம பூஷன் விருது பெற்றவர்களில் மூவர் தமிழகத்தைச் சேர்ந்தவர்கள் ஆவர்.

- 113 பத்மஸ்ரீ விருது பெற்றவர்களில் 11 பேர் தமிழ்நாட்டைச் சேர்ந்தவர்கள் ஆவர்.
- பத்ம விபூஷன் விருதுக்கு தமிழகத்திலிருந்து யாரும் தேர்ந்தெடுக்கப்படவில்லை.
- பத்ம விருதுகள் ஒவ்வொரு ஆண்டும் குடியரசு தினத்தை முன்னிட்டு அறிவிக்கப்பட்டு, இந்தியக் குடியரசுத் தலைவரால் வழங்கப்படுகின்றன.

## மெட்ராஸ் முள்ளெலி ஆய்வு

- தமிழ்நாடு வனத்துறையானது, தூத்துக்குடி மாவட்டத்தின் தேரி வனப்பகுதியில் மெட்ராஸ் முள்ளெலி குறித்த தனது முதல் ஆய்வைத் தொடங்கியுள்ளது.
- மெட்ராஸ் முள்ளெலியானது (Paraechinus nudiventris), உள்ளூரில் முள்ளெலி என்று அழைக்கப் படுகிறது என்பதோடு இது தென்னிந்தியாவைத் தாயகமாகக் கொண்ட ஒரு அரியவகை இரவு நேரப் பாலூட்டி ஆகும்.
- இந்த ஆய்வானது தூத்துக்குடி, திருநெல்வேலி, சேலம் மற்றும் கள்ளக்குறிச்சி மாவட்டங்களில் மேம்பட்ட வனவிலங்குப் பாதுகாப்பு நிறுவனம் (AIWC) தலைமையில் நடத்தப்படுகிறது.
- ரேடியோ தொலையளவியல் தொழில்நுட்பமானது, விலங்குகளின் நடமாட்டம், வாழ்விடப் பயன்பாடு மற்றும் நகரமயமாக்கல், பூச்சிக்கொல்லியின் தாக்கம் போன்ற அச்சுறுத்தல்களைக் கண்காணிக்கப் பயன்படுத்தப்படும்.
- இந்த ஆய்வானது ஒரு பாதுகாப்புச் செயல் திட்டத்தைத் தயாரிப்பதையும், IUCNன் செந்நிறப் பட்டியலில் "தீவாய்ப்புக் கவலை குறைந்த இனம்" என்ற நிலையிலிருந்து "அச்சுறு நிலையில்" உள்ள இனமாக மறுவகைப்படுத்துவதை ஆதரிப்பதையும் நோக்கமாகக் கொண்டுள்ளது.

## இந்தியாவின் நீரிழிவு நோய் பெருந்தொற்று செறிந்த பகுதி

- இந்திய மருத்துவ ஆராய்ச்சி மன்றம் – இந்தியா நீரிழிவு நோய் (ICMR–INDIAB) எனும் ஆய்வு, தமிழ்நாட்டில் நீரிழிவு மற்றும் நீரிழிவுக்கு முந்தைய நிலை நோய்களில் ஒரு பெரும் அதிகரிப்பு ஏற்பட்டுள்ளதாகத் தெரிவித்துள்ளது.
- தற்போது இந்தியாவில் சுமார் 101 மில்லியன் மக்கள் நீரிழிவு நோயுடனும், 136 மில்லியன் மக்கள் நீரிழிவு நோய்க்கு முந்தைய நிலையுடனும் வாழ்கின்றனர்.
- தமிழ்நாட்டில், 20 வயதுக்கு மேற்பட்ட மக்களிடையே 2008-2010 காலகட்டத்தில் 11.1 சதவீதமாக இருந்த நீரிழிவு நோயின் பாதிப்பு, 2022-2023 காலகட்டத்தில் 22.7 சதவீதமாக உயர்ந்து, 104 சதவீத அதிகரிப்பைக் காட்டியுள்ளது.
- அதே காலகட்டத்தில், மாநிலத்தில் நீரிழிவு நோய்க்கு முந்தைய நிலையின் பாதிப்பு 12.2% இலிருந்து 24.8% ஆக உயர்ந்துள்ளது, இது 103% அதிகரிப்பாகும்.
- தற்போது தமிழ்நாட்டில் சுமார் 12 மில்லியன் மக்கள் நீரிழிவு நோயால் பாதிக்கப் பட்டுள்ளனர் என்பதோடு மேலும் வரும் ஆண்டுகளில் மேலும் சுமார் 10 மில்லியன் பேருக்கு இந்த நோய் ஏற்படக் கூடும்.

## மக்களைத் தேடி மருத்துவம் – மாநில அளவிலான ஆய்வு

- ❖ மாநிலம் தழுவிய ஒரு ஆய்வானது, தமிழ்நாடு அரசின் 'மக்களைத் தேடி மருத்துவம்' (MTM) திட்டம், குறிப்பாகப் பெண்களுக்கும் கிராமப்புற மக்களுக்கும் நீரிழிவு மற்றும் உயர் இரத்த அழுத்தப் பராமரிப்புக்கான அணுகலை மேம்படுத்தியுள்ளது என்பதைக் கண்டறிந்துள்ளது.
- ❖ இந்த ஆய்வு, தமிழ்நாட்டின் அனைத்து 38 மாவட்டங்களிலும் பல்வேறு நபரகளிடம் ஒரே நேரத்தில் ஒரே மாதிரியான அளவுறுக்களின் அடிப்படையில் நடத்தப்பட்ட ஒரு மாநிலம் தழுவிய ஆய்வு ஆகும்.
- ❖ சுமார் 80% மக்களுக்கு, முக்கியமாக மக்களைத் தேடி மருத்துவத் திட்டத்தின் களப் பணியாளர்களால் வீட்டிலேயே நீரிழிவு மற்றும் உயர் இரத்த அழுத்தப் பரிசோதனை செய்யப்பட்டது.
- ❖ நோயறிதல் சோதனை செய்யப்பட்ட நோயாளிகளில் 95% க்கும் அதிகமானோர் சிகிச்சையில் இருந்தனர், ஆனால் நோயைக் கட்டுப்படுத்தும் வீதம் குறைவாக இருந்தது.
- ❖ நகர்ப்புறங்களை விட பெண்கள், கிராமப்புறவாசிகள் மற்றும் பட்டியல் சாதியினர் மற்றும் பழங்குடியினரிடையே (SC/ST) இதன் பரவல் அதிகமாக இருந்தன.

## கனிமங்கள் அகழ்வு தொடர்பான விதிகள்

- ❖ அரசு நிலங்கள் மற்றும் நீர்நிலைகளிலிருந்து மணல் மற்றும் பிற கனிமங்களை அகழ்வதை ஒழுங்குபடுத்துவதற்காக, தமிழ்நாடு அரசு 1959 ஆம் ஆண்டு தமிழ்நாடு சிறு கனிமச் சலுகை விதிகளைத் திருத்தியுள்ளது.
- ❖ அனுமதி பெற்றவர்கள், விண்ணப்பக் கட்டணத்துடன், உரிமைத் தொகையைப் போல இரண்டு மடங்கு தொகையைத் திரும்பப் பெறக் கூடிய வகையிலான பாதுகாப்பு வைப்புத் தொகையாகச் செலுத்த வேண்டும்.
- ❖ நிபந்தனைகள் மீறப்பட்டால், மாவட்ட ஆட்சியர்கள் சுரங்க அனுமதியை ரத்து செய்து, கூடுதலாக தேவைப்படும் கட்டணம் மற்றும் சீரமைப்புச் செலவுகளை வசூலிக்கலாம்.
- ❖ அனுமதி காலம் முடிந்த பிறகு அல்லது அனுமதிக்கப்பட்ட அளவு தீர்ந்த பிறகு, அதிகாரிகள் இணக்கத்தை ஆய்வு செய்து, அதற்கேற்ப பாதுகாப்பு வைப்புத் தொகையைத் திரும்ப வழங்குவார்கள்.
- ❖ அதிகப்படியான சுரங்கப் பணிகள் அல்லது சேதங்களுக்கான செலவுகள், அவை பாதுகாப்பு வைப்புத் தொகையை விட அதிகமாக இருந்தால், 1890 ஆம் ஆண்டு வருவாய் மீட்புச் சட்டத்தின் கீழ் வசூலிக்கப்படும்.

## இரும்புக்காலப் புதைகுழித் தளம் – கொடைக்கானல்

- ❖ தமிழ்நாட்டில் உள்ள கொடைக்கானலின் காமனூரில் உள்ள ஒரு இரும்புக்காலப் புதைகுழித் தளத்தில் இந்தியத் தொல்லியல் துறை (ASI) அகழ்வாராய்ச்சியைத் தொடங்கியுள்ளது.
- ❖ இந்தத் திட்டம், பழனி மலைகளில் உள்ள பல இடங்களை உள்ளடக்கிய மூன்று ஆண்டு கால அகழ்வாராய்ச்சித் திட்டத்தின் ஒரு பகுதியாகும்.

- தொல்பொருள் ஆராய்ச்சியாளர்கள் இப்பகுதியில் கல்வறைகள், கற்திட்டைகள், ஈமத் தாழிகள் மற்றும் குழிக் கல்லறைகளைக் கண்டறிந்துள்ளனர்.
- இது கொடைக்கானலில் இந்திய தொல்லியல் துறையால் மேற்கொள்ளப்படும் முதல் அகழாய்வு ஆகும் என்பதோடு இதற்கு முன்னர் 2004 மற்றும் 2006 ஆம் ஆண்டுகளில் தாண்டிக்குடியில் அகழாய்வுகள் நடத்தப்பட்டன.

## TNWESafe திட்டம் மற்றும் HPV தடுப்பூசி இயக்கம்

- தமிழ்நாடு முதலமைச்சர் மு. க. ஸ்டாலின், தமிழ்நாடு உலக மகளிர் உச்சி மாநாடு 2026-ல் தமிழ்நாடு மகளிர் வேலைவாய்ப்பு மற்றும் பாதுகாப்புத் திட்டம் (TNWESafe) மற்றும் மனித பாப்பிலோமா வைரஸ் (HPV) தடுப்பூசித் திட்டத்தைத் தொடங்கி வைத்தார்.
- மகளிரின் பாதுகாப்பு மற்றும் வேலைவாய்ப்பை மேம்படுத்துவதற்காக, உலக வங்கியின் கடனுதவியுடன் TNWESafe திட்டம் செயல்படுத்தப்படுகிறது.
- HPV தடுப்பூசித் திட்டம் அரியலூர், தருமபுரி, பெரம்பலூர் மற்றும் திருவண்ணாமலை மாவட்டங்களில் தொடங்கப்பட உள்ளது.
- இந்தத் தடுப்பூசித் திட்டத்தின் மூலம் 14 வயதுக்கு மேற்பட்ட 3,38,649 சிறுமிகள் பயனடைவார்கள்.
- கர்ப்பப்பை வாய்ப் புற்றுநோயைத் தடுக்க 14 வயது சிறுமிகளுக்கு மாநிலம் தழுவிய இலவச மனித பாப்பிலோமா வைரஸ் (HPV) தடுப்பூசி திட்டத்தைத் தொடங்கிய முதல் மாநிலமாக தமிழ்நாடு ஆனது.
- இந்தியாவின் முதல் உள்நாட்டிலேயே உருவாக்கப்பட்ட, மலிவு விலையில் குவாட்ரிவேலண்ட் தடுப்பூசி, CERVAVAC, சீரம் இன்ஸ்டிடியூட் ஆஃப் இந்தியா (SII) ஆல் உருவாக்கப் பட்டது.

## UGCயின் மொழிக் கொள்கை குறித்த அறிவிப்பு

- உயர்கல்வி நிறுவனங்களில் மூன்றாவது மொழியை அறிமுகப்படுத்துவது தொடர்பான பல்கலைக்கழக மானியக் குழுவின் (யுஜிசி) சுற்றறிக்கைக்குத் தமிழ்நாடு எதிர்ப்பு தெரிவித்துள்ளது.
- இந்தச் சுற்றறிக்கை, மாநிலம் நீண்ட காலமாகப் பின்பற்றி வரும் இருமொழிக் கொள்கைக்கு எதிரானது என்று மாநில அரசு கூறியுள்ளது.
- 1968 முதல் தமிழ்நாடு தமிழ் மற்றும் ஆங்கிலம் ஆகிய இருமொழித் திட்டத்தைப் பின்பற்றி வருகிறது.
- தமிழ்நாடு அரசானது, தேசிய கல்விக் கொள்கை (NEP) 2020ன் கீழ் முன்மொழியப் பட்ட மும்மொழித் திட்டத்தை நிராகரித்தது.
- கல்வி என்பது அரசியலமைப்பின் பொதுப் பட்டியலில் இருப்பதால், மத்திய-மாநில அரசுகளுக்கு இடையே கருத்து வேறுபாடுகள் ஏற்படுகின்றன.
- முன்னதாக, 2022ல், மத்திய அரசின் நிறுவனங்களில் இந்தியைப் பரப்புவதற்கான நடவடிக்கைகளைத் தமிழ்நாடு சட்டமன்றம் எதிர்த்தது.

## தமிழ்நாடு குடியரசு தின விருதுகள் 2026

- தமிழ்நாடு அரசின் 2026 ஆம் ஆண்டுக்கான வீரதீரச் செயலுக்கான அண்ணா விருது, பீட்டர் ஜான்சனுக்கு மரணத்திற்குப் பின் வழங்கப்பட்டது.
- கடந்த ஆண்டு தாமிரபரணி ஆற்றில் மூழ்கிய இரண்டு இளைஞர்களைக் காப்பாற்றும் முயற்சியில் அவர் உயிரிழந்தார்.
- தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறையைச் சேர்ந்த மூன்று வீரர்களான தீயணைப்பு ஓட்டுநர் வி. சங்கர், தீயணைப்பு வீரர் எஸ். ரமேஷ்குமார் மற்றும் தீயணைப்பு வீரர் பி. சுரேஷ் ஆகியோருக்கும் அண்ணா விருது வழங்கப்பட்டது.
- இவர்கள் தர்மகிரியில் திடீர் வெள்ளத்தில் சிக்கிய வாகனத்தில் இருந்த மூன்று பேரையும் மீட்டனர்.
- திருப்பூர் மாவட்டத்தைச் சேர்ந்த எம். கலிமுல்லாவுக்கு கோட்டை அமீர் விருது வழங்கப் பட்டது.
- விவசாயி ஜி. வீரமணிக்கு நாராயணசாமி நாயுடு நெல் உற்பத்தித் திறன் விருது வழங்கப்பட்டது.
- காவல்துறை ஆய்வாளர் பி. நடராஜன், உதவி ஆய்வாளர்கள் எம். சத்யானந்தன், எஸ். மணிகண்டன், கே. நடராஜன் மற்றும் காவலர் வி.பி. கண்ணன் ஆகியோருக்கு காந்தி அடிகள் காவல் பதக்கங்கள் வழங்கப்பட்டன.
- மாநிலத்தின் சிறந்த காவல் நிலையங்களுக்கான முதலமைச்சர் கோப்பை பிரிவில், மதுரை நகரம், திருப்பூர் நகரம் மற்றும் கோயம்புத்தூர் மாவட்டம் ஆகியவை முதல் மூன்று இடங்களைப் பிடித்தன.

## நகராட்சிப் பத்திரங்கள் - கோயம்புத்தூர் மற்றும் திருப்பூர்

- கோயம்புத்தூர் மற்றும் திருப்பூர் மாநகராட்சிகள் ஜனவரி 2026ல் நகராட்சிப் பத்திரங்கள் மூலம் நிதி திரட்டின.
- கோயம்புத்தூர் மாநகராட்சி பத்திரங்கள் மூலம் ₹150.85 கோடியும், திருப்பூர் மாநகராட்சி ₹100 கோடியும் திரட்டின.
- சென்னை மாநகராட்சியானது நகராட்சிப் பத்திரங்கள் மூலம் ₹205.59 கோடி நிதி திரட்டியுள்ளது.
- இந்த நிதியானது நிலத்தடி வடிகால் மற்றும் நகர்ப்புற மேம்பாட்டுத் திட்டங்களுக்குப் பயன்படுத்தப்படும்.
- சூரிய மின்னாற்றல் திட்டத்திற்காகப் பத்திரங்கள் மூலம் நிதி திரட்டிய இந்தியாவின் முதல் மாநகராட்சி இந்தூர் ஆகும்.

# தேசியச் செய்திகள்

## பயணிகள் உதவிக் கட்டுப்பாட்டு அறை (PACR)

- பொது விமானப் போக்குவரத்து அமைச்சகம் (MoCA) ஆனது விமானப் பயணிகளுக்காக 24×7 பயணிகள் உதவிக் கட்டுப்பாட்டு அறையை (PACR) நிறுவி உள்ளது.
- பயணிகள் மத்தியில் எழும் விமானங்கள், விமான நிலையங்கள் மற்றும் விமான நிறுவனங்கள் தொடர்பான குறைகளை விரைவாகவும் சரியான நேரத்தில் தீர்ப்பதை PACR உறுதி செய்கிறது.
- கட்டுப்பாட்டு அறை தேசிய இயங்கலைப் பயணிகள் குறை தீர்க்கும் தளமான AirSewa உடன் முழுமையாக ஒருங்கிணைக்கப்பட்டுள்ளது.
- விமான தாமதங்கள், ரத்து செய்தல், பணத்தைத் திரும்பப் பெறுதல் மற்றும் பயணப் பெட்டிகள் தொடர்பான சிக்கல்கள் பயணிகள் உறுதிமொழிகளின் படி தீர்க்கப் படுகின்றன.
- 2025 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் முதல், PACR 13,000க்கும் மேற்பட்டப் புகார்களை வெற்றிகரமாக தீர்த்து 500+ பயணிகள் அழைப்புகளை நிர்வகித்துள்ளது.

## ஒரே சீரான தீவிரவாத எதிர்ப்புப் படை அமைப்பு

- தேசியப் புலனாய்வு முகமை (NIA), 2025 ஆம் ஆண்டு தீவிரவாத எதிர்ப்பு மாநாட்டில் இந்தியா முழுவதும் ஒரே மாதிரியான தீவிரவாத எதிர்ப்புப் படை (ATS) அமைப்பின் அவசியத்தை எடுத்துரைத்தது.
- ஒருங்கிணைப்பை மேம்படுத்துவதற்காக NIA ஒரு பொதுவான ATS கட்டமைப்பைத் தயாரித்து, அதை மாநிலக் காவல் படைகளுடன் பகிர்ந்து கொண்டுள்ளது.
- புதுப்பிக்கப்பட்ட குற்றக் கையேடு, ஒழுங்கமைக்கப்பட்ட குற்ற வலையமைப்பு தரவுத் தளம் மற்றும் தொலைந்து போன மற்றும் மீட்கப்பட்ட ஆயுதங்கள் தரவுத் தளம் ஆகியவையும் NIA முகமையினால் தொடங்கப்பட்டன.
- ஒரே சீரான ATS அமைப்பு அனைத்து மாநிலங்களிலும் நிலையான நடைமுறைகள், விரைவான எதிர் நடவடிக்கை மற்றும் சிறந்த விசாரணையை உறுதி செய்வதை நோக்கமாகக் கொண்டுள்ளது.
- செயற்கை நுண்ணறிவு (AI) மற்றும் டிஜிட்டல் பரிவர்த்தனைகள் போன்ற கருவிகளைப் பயன்படுத்தித் தொழில்நுட்பம் சார்ந்ததாகவும், பிராந்திய ரீதியாகவும் மாறி வரும் நவீன தீவிரவாதத்தை இந்த முயற்சி நிவர்த்தி செய்கிறது.

## தேசிய அதிர்வெண் ஒதுக்கீட்டுத் திட்டம் 2025

- தகவல் தொடர்பு அமைச்சகத்தின் கீழ் உள்ள தொலைத்தொடர்பு துறை (DoT) ஆனது 2025 ஆம் ஆண்டு தேசிய அதிர்வெண் ஒதுக்கீட்டுத் திட்டத்தினை வெளியிட்டுள்ளது.
- இது இந்தியாவில் ரேடியோ-அதிர்வெண் அலைக்கற்றையின் மேலாண்மை மற்றும் ஒதுக்கீட்டிற்கு உதவும்.

- இந்தியாவின் அலைக்கற்றை (ஸ்பெக்ட்ரம்) மேலாண்மை 'பதிலளிக்கக் கூடிய, அதிக செயல் திறன் கொண்ட மற்றும் உலகளாவியத் தரநிலைகளுடன் நன்கு இணக்கமாக இருப்பதை உறுதி செய்வதை இது நோக்கமாகக் கொண்டுள்ளது.
- இது 8.3 kHz முதல் 3000 GHz வரையிலான பல்வேறு ரேடியோ தொடர்பு சேவைகளுக்கு ரேடியோ-அதிர்வெண் அலைக்கற்றை ஒதுக்கீட்டை உள்ளடக்கும்.
- உயர்-செயல்திறன் கொண்ட புவிநிலைச் சுற்றுப்பாதை (GSO) செயற்கைக் கோள்கள் மற்றும் பெரிய GSO அல்லாத செயற்கைக் கோள் திரள்களுக்கு (LEO/MEO) முக்கியமான செயற்கைக்கோள் அடிப்படையிலான சேவைகளுக்கான Ka, Q மற்றும் V கற்றைகளின் ஒதுக்கீட்டையும் NFAP உள்ளடக்கியது.

## கப்பல் கட்டும் தொழிலுக்கான நிதி உதவித் திட்ட வழிகாட்டுதல்கள் 2025

- துறைமுகங்கள், கப்பல் போக்குவரத்து மற்றும் நீர்வழிகள் அமைச்சகம் (MoPSW) ஆனது கப்பல் கட்டும் தொழிலுக்கான நிதி உதவித் திட்டம் (SBFAS) மற்றும் கப்பல் கட்டும் துறை மேம்பாட்டுத் திட்டம் (SbDS) ஆகியவற்றிற்கான வழிகாட்டுதல்களை அறிவித்து உள்ளது.
- இந்தியாவின் உள்நாட்டுக் கப்பல் கட்டும் தொழில் திறன் மற்றும் உலகளாவியப் போட்டித் தன்மையை வலுப்படுத்துவதற்காக இந்த இரண்டு திட்டங்களும் மொத்தம் 44,700 கோடி ரூபாய் செலவில் மேற்கொள்ளப்பட உள்ளன.
- SBFAS திட்டத்தின் கீழ், 24,736 கோடி ரூபாய் என்ற மொத்த நிதி ஒதுக்கீட்டுடன் கப்பல் வகையின் அடிப்படையில் ஒரு கப்பலுக்கு 15%–25% நிதி உதவி வழங்கப்படும்.
- SBFAS ஆனது இந்தியக் கப்பல் உடைப்புத் தளங்களில் கப்பல்களை அகற்றும் கப்பல் உரிமையாளர்களுக்கு பயனற்ற கழிவுப் பொருட்களின் மதிப்பில் சுமார் 40% வழங்கும் கப்பல் உடைப்பு கடன் வசதியையும் அறிமுகப்படுத்துகிறது.
- 19,989 கோடி ரூபாய் செலவினத்துடன் கூடிய SbDS, கப்பல் கட்டும் தளங்கள், பசுமைக் கப்பல் கட்டும் குழுக்கள் மற்றும் கடல்சார் ஆராய்ச்சி உள்கட்டமைப்பை நவீனமய மாக்குவதில் கவனம் செலுத்துகிறது.
- இரண்டு திட்டங்களும் 2036 ஆம் ஆண்டு மார்ச் 31 ஆம் தேதி வரை செல்லுபடியாகும், என்பதோடு இது கொள்கையளவில் 2047 ஆம் ஆண்டு வரை நீட்டிக்கப்பட திட்டமிடப் பட்டுள்ளது.

## வர்த்தக முத்திரைப் பதிவுகள் 2024–25

- இந்தியாவில் ஓராண்டில் இதுவரை பதிவாகாத வகையில் அதிகபட்சமாக 2024–25 ஆம் நிதியாண்டில் 5.5 லட்சத்திற்கும் மேற்பட்ட உள்நாட்டு வர்த்தக முத்திரைகள் பதிவு செய்யப் பட்டன.
- இந்தத் தகவலை மத்திய வர்த்தகம் மற்றும் தொழில்துறை அமைச்சகம் அறிவித்து உள்ளது.
- இந்த உயர்வு இந்தியாவில் வேகமான மற்றும் டிஜிட்டல் மயமாக்கப்பட்ட அறிவுசார் சொத்துரிமை (IP) பதிவு செயல்முறைகளைப் பிரதிபலிக்கிறது.
- இயங்கலை வழி தாக்கல், விரைவான பரிசோதனை மற்றும் குறைக்கப்பட்ட நிலுவைத் தொகை ஆகியவை அதிக பதிவுகளுக்கு ஆதரவாக அமைந்தன.

- அதிக எண்ணிக்கையிலான தாக்கல்கள் மருந்து, கால்நடை மற்றும் சுகாதாரத் துறைகளில் பதிவாகின.
- இந்தியாவில் வர்த்தக முத்திரைப் பாதுகாப்பு ஆனது 10 ஆண்டு செல்லுபடியாவதுடன், காலவரையின்றி புதுப்பிக்கத்தக்க தன்மையுடன் கூடிய 1999 ஆம் ஆண்டு வர்த்தக முத்திரைச் சட்டத்தால் நிர்வகிக்கப்படுகிறது.

## 8வது மத்திய ஊதிய ஆணையம்

- 8வது மத்திய ஊதிய ஆணையம் (CPC) 2025 ஆம் ஆண்டு நவம்பர் மாதத்தில் இந்திய அரசால் அறிவிக்கப்பட்டது.
- இது 2026 ஆம் ஆண்டு ஜனவரி 01 ஆம் தேதியன்று அமலுக்கு வரும், ஆனால் சம்பள திருத்தம் உடனடியாகத் தொடங்கப் பெறாது.
- மத்திய அரசு ஊழியர்கள் மற்றும் ஓய்வூதியதாரர்களின் ஊதியம், கொடுப்பனவுகள் மற்றும் ஓய்வூதியங்களை இந்த ஆணையம் மதிப்பாய்வு செய்யும்.
- அமைச்சரவையின் ஒப்புதலுக்குப் பிறகு, 2027 ஆம் ஆண்டின் பிற்பகுதியில் அல்லது 2028 ஆம் ஆண்டின் தொடக்கத்தில், உண்மையான அமலாக்கம் மேற்கொள்ளப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.

## சாலைகளின் பாதுகாப்பு கட்டுமானத்திற்கான தரநிலைகள்

- தேசிய சோதனை மையம் (NTH) ஆனது இந்திய தேசிய நெடுஞ்சாலை ஆணையத்துடன் (NHAI) ஒரு புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டது.
- தேசிய நெடுஞ்சாலை திட்டங்களில் தரக் கட்டுப்பாடு, வெளிப்படைத்தன்மை மற்றும் பாதுகாப்பை வலுப்படுத்துவதே இந்த ஒத்துழைப்பின் நோக்கமாகும்.
- NTH ஆனது, NHAI ஆணையத்திற்கான அங்கீகரிக்கப்பட்ட சோதனை ஆய்வகமாக பதிவு செய்யப்பட்டு, நெடுஞ்சாலை கட்டுமானப் பொருட்கள் மற்றும் அதனுடன் தொடர்புடைய பணிகளில் சோதனைகளை நடத்தும்.
- காசியாபாத், கொல்கத்தா, மும்பை, சென்னை, ஜெய்ப்பூர், கௌஹாத்தி, பெங்களூரு மற்றும் வாரணாசியில் உள்ள NTH மையத்தின் பிராந்திய ஆய்வகங்களில் சோதனை செய்யப்படும்.
- இந்தப் புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் NHAI ஆய்வக வசதிகளை மேம்படுத்துவதற்கான ஆதரவுடன், NHAI அதிகாரிகளுக்கான திறன் மேம்பாட்டுத் திட்டங்கள், பயிலரங்கங்கள் மற்றும் தொழில்நுட்ப வழிகாட்டுதல் ஆகியவை அடங்கும்.
- தேசிய சோதனை மையம் ஆனது நுகர்வோர் விவகாரங்கள், உணவு மற்றும் பொது விநியோக அமைச்சகத்தின் கீழ் செயல்படுகிறது.

## உலகின் மிகப்பெரிய அரிசி உற்பத்தியாளர் 2025

- அரிசி உற்பத்தியில் சீனாவை விஞ்சி இந்தியா உலகில் முதலிடத்தை எட்டியுள்ளது.
- அரிசி உற்பத்தியில் சீனாவை இந்தியா முந்தியது இதுவே முதல் முறையாகும்.
- இந்தியாவின் அரிசி உற்பத்தி 152 மில்லியன் மெட்ரிக் டன்களை எட்டியுள்ளது அதே நேரத்தில் சீனாவின் உற்பத்தி 146 மில்லியன் மெட்ரிக் டன்களாக உள்ளது.

- மொத்த உலகளாவிய அரிசி உற்பத்தியில் இந்தியாவின் பங்கானது 28 சதவீதத்திற்கும் அதிகமாக உள்ளது.
- உலகில் சுமார் 123,000 அரிசி வகைகள் உள்ளன என்ற நிலையில் அவற்றில் கிட்டத்தட்ட சுமார் 60,000 இந்தியாவில் காணப்படுகின்றன.
- 2024–25 ஆம் ஆண்டில், இந்தியா சாதனை அளவாக 450,840 கோடி ரூபாய் மதிப்புள்ள வேளாண் விளைபொருட்களை ஏற்றுமதி செய்தது என்ற ஒரு நிலையில் அதில் அரிசி சுமார் 24% என்ற மிகப்பெரிய பங்கைக் கொண்டுள்ளது.

## வாய்வழி நிம்சுலைடு மருந்துப் பயன்பாட்டிற்குத் தடை

- நிம்சுலைடு மருந்தின் 100 மில்லி கிராமிற்கு மேலான அளவிலான வாய்வழி உட்கொள்ளும் மருந்து தயாரிப்பிற்கான சூத்திரங்களின் உற்பத்தி, விற்பனை மற்றும் விநியோகத்தை மத்திய அரசு தடை செய்துள்ளது.
- இது வலி, காய்ச்சல் மற்றும் வீக்கத்திற்கு என்று பரிந்துரைக்கப்படும் பொதுவாகப் பயன்படுத்தப் படும் ஸ்டெராய்டு அல்லாத அழற்சி எதிர்ப்பு மருந்து (NSAID) ஆகும்.
- 1940 ஆம் ஆண்டு மருந்துகள் மற்றும் அழகு சாதனப் பொருட்கள் சட்டத்தின் 26A பிரிவின் கீழ் இந்தத் தடை பிறப்பிக்கப்பட்டுள்ளது.
- பிரிவு 26A ஆனது, நோயாளிகளுக்கு ஆபத்தை விளைவிக்கும் மருந்துகளை கட்டுப்படுத்தவோ அல்லது தடை செய்யவோ வேண்டி மத்திய அரசிற்கு அதிகாரம் அளிக்கிறது.

## ECMS – கட்டம் III

- மின்னணுக் கூறுகள் உற்பத்தி திட்டத்தின் (ECMS) மூன்றாம் கட்டத்தை மத்திய அரசு அங்கீகரித்துள்ளது.
- இந்தத் திட்டமானது 41,863 கோடி ரூபாய் மதிப்பிலான மொத்த நிதி ஒதுக்கீட்டில் அங்கீகரிக்கப்பட்டுள்ளது.
- ECMS ஆனது இந்தியாவில் உள்நாட்டு மின்னணுக் கூறு உற்பத்தியை வலுப்படுத்தச் செய்வதை நோக்கமாகக் கொண்டுள்ளது.
- டாடா எலக்ட்ரானிக்ஸ், சாம்சங் டிஸ்ப்ளே, டிக்சன் எலக்ட்ரானிக்ஸ் மற்றும் BPL போன்ற முக்கிய நிறுவனங்கள் இந்தத் திட்டத்தின் கீழ் ஒப்புதல்களைப் பெற்றுள்ளன.
- இந்தத் திட்டம் இறக்குமதி செய்யப்பட்ட மின்னணுக் கூறுகளை இந்தியா சார்ந்திருப்பதைக் குறைக்க முயல்கிறது.
- இது மின்னணுத் துறையில் முதலீடு, வேலைவாய்ப்பு உருவாக்கம் மற்றும் ஏற்றுமதி திறனை அதிகரிக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

## புதிய கலால் வரி மற்றும் வீத வரி

- 2026 ஆம் ஆண்டு பிப்ரவரி 01 ஆம் தேதி முதல் அமலுக்கு வரும் வகையில் புகையிலை மற்றும் பான் மசாலா மீதான புதிய கலால் வரி மற்றும் வீத வரி ஆகியவற்றை இந்திய அரசு அறிவித்துள்ளது.

- புகையிலை மற்றும் பான் மசாலா மீதான முந்தைய இழப்பீட்டு வீத வரி திரும்பப் பெறப் பட்டுள்ளது.
- புகையிலை மற்றும் புகையிலைப் பொருட்களுக்கு இனி கூடுதல் கலால் வரி விதிக்கப் படும்.
- பான் மசாலா மீது சுகாதார மற்றும் தேசியப் பாதுகாப்பு வரி விதிக்கப்படும்.
- சிகரெட், புகையிலை மற்றும் பான் மசாலா பொருட்கள் மற்றும் சேவைகள் வரி (GST) கீழ் 40 சதவீத வரி விதிக்கப்படும்.
- பீடிகளுக்குத் தொடர்ந்து 18 சதவீதம் என்ற குறைந்த GST விகிதம் விதிக்கப்படும்.

## நாடு தழுவிய VoWiFi சேவை

- பாரத் சஞ்சார் நிகாம் லிமிடெட் (BSNL) நாடு தழுவிய அளவிலான அருகலை வழி குரல் அழைப்பு (VoWiFi) சேவையை அறிமுகப்படுத்தியுள்ளது.
- VoWiFi பயனர்கள் கைபேசி இணைப்புச் சேவை கோபுரங்களுக்குப் பதிலாக அருகலை வலையமைப்பினைப் பயன்படுத்தி குரல் வழி அழைப்புகளைச் செய்யவும் செய்திகளை அனுப்பவும் அனுமதிக்கிறது.
- இந்தச் சேவையானது எந்தக் கூடுதல் செயலியும் இல்லாமல், பயனரின் தற்போதைய கைபேசி எண் மற்றும் தொலைபேசி எண் சுழற்றியைக் கொண்டு செயல்படுகிறது.
- இது IMS (IP பல் ஊடக ஆதரவு அமைப்பு) தொழில்நுட்பத்தை அடிப்படையாகக் கொண்டது மற்றும் அருகலை & கைபேசி வலையமைப்புகளுக்கு இடையிலான சீரான மாற்றத்தினை ஆதரிக்கிறது.
- கிராமப்புறங்களிலும் கைபேசி சமிக்ஞைகள் பலவீனமாக உள்ள கட்டிடங்களுக்குள் உள்ளவர்களுக்கு VoWiFi உதவுகிறது.
- இலவசமாக வழங்கப்படும் இந்தச் சேவை இந்தியாவில் உள்ள அனைத்து தொலைத் தொடர்பு வட்டங்களிலும் உள்ள பெரும்பாலான நவீன திறன் பேசிகளில் இயங்குகிறது.

## புதிய முத்திரைச் சின்னம் மற்றும் உருவச் சின்னம் “சாங்க்யிகி”

- புள்ளியியல் மற்றும் திட்ட அமலாக்க அமைச்சகம் (MoSPI) ஆனது ஒரு புதிய முத்திரைச் சின்னம் மற்றும் உருவச் சின்னத்தை அறிமுகப்படுத்தியுள்ளது.
- இந்தப் புதிய உருவச் சின்னமானது “மேம்பாட்டிற்கான தரவு” என்ற கருத்துருவினை அடிப்படையாகக் கொண்டது.
- இந்த உருவச் சின்னத்தில் அசோக சக்கரம், ரூபாய் (₹) சின்னம் மற்றும் மேம்பாட்டில் புள்ளி விவரங்களின் பங்கைக் காட்டும் வளர்ச்சிப் பட்டைகள் உள்ளன.
- MoSPI ஆனது, அதன் உருவச் சின்னத்தை “சாங்க்யிகி” (புள்ளி விவரம் என்று பொருள்) என்றும் அறிமுகப்படுத்தியது.
- கணக்கெடுப்புகள், விழிப்புணர்வுப் பிரச்சாரங்கள் மற்றும் பொது நிகழ்ச்சிகளில் இந்தச் சின்னம் பயன்படுத்தப்படும்.
- இந்த முன்னெடுப்பு ஆனது, தரவுகளில் பொதுமக்களின் பங்கேற்பு மற்றும் நம்பிக்கையை மேம்படுத்துவதற்காக தேசியப் புள்ளிவிவர அலுவலகத்துடன் (NSO) இணைக்கப்பட்டுள்ளது.

## சமிமுல்லா மற்றும் பீகார் மாநில அரசு இடையிலான வழக்கு

- சொத்துப் பதிவு மற்றும் பிறழ்வு விதிகள் குறித்து சமிமுல்லா மற்றும் பீகார் மாநில அரசு இடையிலான வழக்கில் உச்ச நீதிமன்றம் தீர்ப்பளித்தது.
- சொத்துப் பதிவுக்கு பிறழ்வுச் சான்றினைக் கட்டாயமாக்கிய பீகார் பதிவு விதிகளை (2019) நீதிமன்றம் ரத்து செய்தது.
- ஓர் ஆவணத்தைப் பதிவு செய்வது சொத்தின் உரிமை அல்லது பட்டையத்திலிருந்து வேறுபட்டது என்று அது கூறியது.
- உரிமை மற்றும் பட்டையம் பற்றிய விவாதங்களை துணைப் பதிவாளர்களால் அல்லாமல், உரிமையியல் நீதிமன்றங்களால் மட்டுமே தீர்மானிக்க முடியும்.
- பதிவு என்பது உரிமையின் மறுக்கக்கூடிய அனுமானத்தை மட்டுமே உருவாக்குகிறது, இறுதி ஆதாரத்தினை அல்ல.
- மோசமான கணக்கெடுப்புகள் மற்றும் பதிவு ஒருங்கிணைப்பு இல்லாததால் நிலப் பதிவுகளில் உள்ள கட்டமைப்பு சார் சிக்கல்களை இந்தத் தீர்ப்பு எடுத்துக்காட்டுகிறது.

## தேசியப் போதைப்பொருள் பயன்பாட்டுக் கணக்கெடுப்பு 2025–26

- மத்திய அரசானது, இந்தியா முழுவதும் உள்ள போதைப்பொருள் பயன்பாட்டு நிலைகள் குறித்து ஆய்வு செய்வதற்காக 2025–26 ஆம் ஆண்டு தேசிய மருந்து பயன்பாட்டுக் கணக்கெடுப்பை (NDUS) நடத்த உள்ளது.
- இந்தக் கணக்கெடுப்பு ஆனது அனைத்து மாநிலங்கள் மற்றும் ஒன்றியப் பிரதேசங்களிலும் வீட்டு ஆய்வுகள் மற்றும் பதிலளிப்பு சார்ந்த மாதிரிகள் மூலம் சுமார் 20 லட்சம் மக்கள் மத்தியில் நடத்தப்படும்.
- முதல் முறையாக, இந்தக் கணக்கெடுப்பில் உள்நாட்டு போதைப்பொருள் பயன்பாட்டின் வடிவங்கள் மற்றும் அவற்றுடன் தொடர்புடைய சமூக-பொருளாதார மற்றும் சுகாதாரக் கவலைகள் குறித்து ஆவணப்படுத்தப்படும்.
- இந்தக் கணக்கெடுப்பு ஆனது சிறைக் கைதிகள், பள்ளி மாணவர்கள் மற்றும் கல்லூரி மாணவர்கள் போன்ற குறிப்பிட்ட மக்கள் மத்தியில் நடத்தப்படும்.
- இது நாஷா முக்த் பாரத் அபியான் போன்ற முன்னெடுப்புகளின் தாக்கத்தை ஆராய்வதோடு, மனோவியல் சார்ந்த போதைப் பொருட்களின் பயன்பாடுகளில் வளர்ந்து வரும் போக்குகளை ஆய்வு செய்யும்.
- சமூக நீதி மற்றும் அதிகாரமளித்தல் அமைச்சகத்தினால் நிதியளிக்கப்படுகின்ற இந்தக் கணக்கெடுப்பு ஆனது, 2026 ஆம் ஆண்டின் இறுதிக்குள் நிறைவு செய்யப்படும் என்பதோடு மேலும் இந்த அறிக்கையானது 2027 ஆம் ஆண்டில் வெளியிடப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

## 50வது PRAGATI கூட்டம்

- PRAGATI 50வது கூட்டம் ஆனது, புது டெல்லியில் நடைபெற்றது.
- PRAGATI (செயல்பாடு சார் ஆளுகை மற்றும் சரியான நேரத்திலான அமலாக்கம்) என்பது 2015 ஆம் ஆண்டில் பிரதமரால் தொடங்கப்பட்ட தொழில்நுட்பம் சார்ந்த தளம் ஆகும்.

- இது உள்கட்டமைப்பு திட்டங்கள் மற்றும் பொது மக்களின் குறைகளை நிகழ்நேரத்தில் கண்காணிப்பதை நோக்கமாகக் கொண்டுள்ளது.
- இந்தக் கூட்டத்தின் போது, ஐந்து மாநிலங்களில் ஐந்து முக்கியமான உள்கட்டமைப்புத் திட்டங்கள், 40,000 கோடி ரூபாய்க்கும் அதிகமான மொத்தச் செலவில், மதிப்பாய்வு செய்யப் பட்டன.
- PRAGATI தளம் 85 லட்சம் கோடி ரூபாய்க்கும் அதிகமான மதிப்புள்ள திட்டங்களை விரைவுபடுத்தியுள்ளது என்பதோடு மேலும் அடையாளம் காணப்பட்ட சிக்கல்களில் சுமார் 94 சதவீதத்தினைத் தீர்த்துள்ளது.
- போகி பீல் பாலம், ஜம்மு-உதம்பூர்-ஸ்ரீநகர்-பாரமுல்லா இரயில் பாதை இணைப்பு, நவி மும்பை சர்வதேச விமான நிலையம், பிலாய் எஃகு ஆலை நவீனமயமாக்கல் மற்றும் கடர்வாரா மற்றும் LARA உயர் திறன் அனல் மின் நிலையங்கள் போன்ற நீண்ட காலமாக நிலுவையில் உள்ள திட்டங்களை முடிக்க இது உதவியது.
- இந்தத் தளம் கூட்டுறவு சார் கூட்டாட்சியை ஊக்குவிக்கிறது என்பதோடு மேலும் மத்திய அரசு, மாநில அரசுகள் மற்றும் மத்திய அமைச்சகங்களை ஒன்றிணைக்கிறது, என்ற நிலையில் இது தனித்தனிப் பிரிவுகள் அடிப்படையிலான செயல்பாட்டைத் தடுத்து பொறுப்புணர்வை மேம்படுத்துகிறது.
- PRAGATI, PM SHRI (Prime Minister Schools for Rising India-எழுச்சி பெறும் இந்தியாவிற்கான பிரதமர் பள்ளிகள்) பள்ளிகளைத் தேசிய அளவிலான திறன் மதிப்பீடுகளாக மாற்றச் செய்வதற்காக வேண்டி அவற்றைக் கண்காணித்து, சீர்திருத்தம், செயல்திறன் மற்றும் நிர்வாகத்தில் மாற்றத்தைக் கொண்டு வர வலியுறுத்துகிறது.

## 2026 ஆம் நிதியாண்டில் இந்தியாவின் முதலீடுகள்

- முதல் ஒன்பது மாதங்களில் முன்மொழியப்பட்ட மொத்த முதலீடுகளில் சுமார் 25.3 சதவீதத்தினைப் பெற்று, 2026 ஆம் நிதியாண்டில் ஆந்திரப் பிரதேசம் இந்தியாவின் சிறந்த முதலீட்டு இடமாக உருவெடுத்துள்ளது.
- இதில் 13.1% பங்குடன் ஒடிசா இரண்டாவது இடத்திலும், 12.8% பங்குடன் மகாராஷ்டிரா மூன்றாவது இடத்திலும் இருப்பதாக பாங்க் ஆஃப் பரோடா அறிக்கை தெரிவித்துள்ளது.
- ஆந்திரப் பிரதேசம், ஒடிசா மற்றும் மகாராஷ்டிரா ஆகியவை நாட்டின் மொத்த முன் மொழியப் பட்ட முதலீடுகளில் 51.2% பங்கினைக் கொண்டுள்ளன.
- 2026 ஆம் நிதியாண்டில் மொத்த முதலீட்டு அறிவிப்புகள் ஆண்டிற்கு 11.5% அதிகரித்து 26.6 லட்சம் கோடி ரூபாயாக உயர்ந்துள்ளது.
- தெலுங்கானா (9.5%), குஜராத் (7.1%), மற்றும் தமிழ்நாடு (4.9%) ஆகியவை பிற முக்கியப் பங்களிப்பாளர்களாக இருந்தன அதே நேரத்தில் உத்தரப் பிரதேசம் (2.7%) மற்றும் கர்நாடகா (2.1%) ஆகியவை குறைந்த பங்குகளைக் கொண்டிருந்தன.
- தொழில்துறை முதலீட்டு நடவடிக்கைகள் கிழக்கு மற்றும் தெற்கு இந்தியாவை நோக்கி நகர்ந்து வருவதாக இதில் தரவுகள் காட்டுகின்றன.

## தேசியக் கல்வி ஆராய்ச்சி மற்றும் பயிற்சி சபைக்கு நிகர்நிலைப் பல்கலைக்கழக அந்தஸ்து

- தேசியக் கல்வி ஆராய்ச்சி மற்றும் பயிற்சி சபை (NCERT) 2026 ஆம் ஆண்டு ஜனவரி மாத இறுதிக்குள் நிகர்நிலைப் பல்கலைக்கழக அந்தஸ்தைப் பெறக்கூடும்.

- இந்தத் திட்டமானது பல்கலைக்கழக மானியக் குழுவின் (UGC) வரவிருக்கும் கூட்டத்தில் ஒப்புதல் பெற உள்ளது.
- NCERT என்பது கல்வி அமைச்சகத்தின் கீழ் செயல்படுகின்ற, பள்ளி பாடத் திட்டங்கள் மற்றும் பாடப் புத்தகங்களைத் தயாரிக்கின்ற ஒரு தன்னாட்சி அமைப்பாகும்.
- நிகர்நிலைப் பல்கலைக்கழக அந்தஸ்து ஆனது 1956 ஆம் ஆண்டு பல்கலைக்கழக மானியக் குழுச் சட்டத்தின் கீழ் வழங்கப்படுகிறது.
- நிகர்நிலைப் பல்கலைக்கழக அந்தஸ்து பெற்ற நிறுவனங்கள் பாடநெறிகளை வடிவமைத்து அவற்றின் சொந்தப் பட்டங்களை வழங்கலாம்.

## தேசிய டிஜிட்டல் நில முன்னெடுப்பு – நிலப் பதிவு தரவுதளம்

- கிராமப்புற மேம்பாட்டு அமைச்சகம் (MoRD) ஆனது 'நிலப் பதிவு தரவுத் தளம்' என்ற திட்டத்தை அதன் முதல் வகையான தேசிய டிஜிட்டல் நில நிர்வாக முன்னெடுப்பாகத் தொடங்கியுள்ளது.
- 'நிலப் பதிவு தரவுத் தளம்' என்பது நிலம் மற்றும் சொத்துப் பதிவுகளுக்கான ஒரு ஒருங்கிணைந்த, GIS அடிப்படையிலான (புவியிட தகவல் அமைப்பு) டிஜிட்டல் தளம் ஆகும்.
- இது சண்டிகர் மற்றும் தமிழ்நாட்டில் ஒரு சோதனை அடிப்படையில் தொடங்கப்பட்டது.
- இந்த முன்னெடுப்பு ஆனது டிஜிட்டல் இந்தியா நிலப் பதிவுகள் நவீனமயமாக்கல் திட்டத்தின் (DILRMP) கீழ் அறிமுகப்படுத்தப்பட்டது.
- இதனுடன், MoRD 'வருவாய் விதிமுறைகளின் சொற்களஞ்சியத்தினையும்' (GoRT) அறிமுகப் படுத்தியது.
- GoRT, வட்டார மொழிகள், இந்தி, ஆங்கிலம் மற்றும் ரோமன் எழுத்து வடிவங்களில் நில வருவாய் தொர்பான சொற்கூறுகளின் தரமான விளக்கத்தினை வழங்குகிறது.
- இந்த முன்னெடுப்புகள் நிலப் பதிவு மேலாண்மையில் வெளிப்படைத்தன்மை மற்றும் அணுகலை மேம்படுத்துவதை நோக்கமாகக் கொண்டுள்ளன.

## மருந்தியல் கண்காணிப்பில் இந்தியாவின் உலகளாவிய தரவரிசை

- உலக சுகாதார அமைப்பின் (WHO) கீழ் மருந்தியல் கண்காணிப்பு (மருந்து பாதுகாப்பு கண்காணிப்பு) பங்களிப்புகளில் இந்தியா உலகளவில் 8வது இடத்தைப் பிடித்தது.
- இது ஒரு தசாப்தத்திற்கு முன்னதாக, 123வது தரவரிசையில் இருந்து பதிவான முன்னேற்றத்தைக் குறிக்கிறது.
- புது டெல்லியில் நடைபெற்ற இந்திய மருந்தியல் ஆய்வுக் கட்டுரை 2026 (10வது பதிப்பு) வெளியீட்டின் போது இந்த சாதனைப் பதிவு குறித்து அறிவிக்கப்பட்டது.
- இந்திய மருந்தியல் ஆய்வுக் கட்டுரை 2026 ஆனது 121 புதிய தனிக் கட்டுரைகளைச் சேர்த்ததுடன் அதன் மொத்த எண்ணிக்கை 3,340 ஆக உயர்ந்தது.
- முதன்முறையாக இருபது இரத்தக் கூறு தனிம விளக்கங்கள் சேர்க்கப்பட்டுள்ளதுடன், இந்தியா அவ்வாறு செய்த முதல் நாடாக மாறியது.
- இந்திய மருந்தியல் ஆய்வுக் கட்டுரை ஆனது 19 உலகளாவிய தென் நாடுகளில் அதிகாரப் பூர்வமாக அங்கீகரிக்கப்பட்டுள்ளது.

## வயது வந்தோர் திறன் மதிப்பீட்டு ஆய்வு 2026

- ❖ இந்தியா தனது முதல் நாடு தழுவிய வயது வந்தோர் திறன் மதிப்பீட்டு ஆய்வை 2026 ஆம் ஆண்டில் நடத்த உள்ளது.
- ❖ விரிவான மாதிரி ஆய்வு (CMS) கட்டமைப்பைப் பயன்படுத்தி புள்ளியியல் மற்றும் திட்ட அமலாக்க அமைச்சகத்தால் (MoSPI) இந்த ஆய்வு நடத்தப்படும்.
- ❖ திறன் மேம்பாடு மற்றும் தொழில்முனைவோர் அமைச்சகத்தின் (MSDE) வேண்டுகோளின் பேரில் இது மேற்கொள்ளப் படுகிறது.
- ❖ 18 வயது மற்றும் அதற்கு மேற்பட்ட நபர்களை உள்ளடக்கிய இந்தக் கணக்கெடுப்பு மூன்று மாதங்களுக்கு மேல் நடத்தப்படும்.
- ❖ வயது வந்தோருக்கான திறன்கள் அடிப்படை, இடைநிலை மற்றும் மேம்பட்ட நிலைகளாக வகைப்படுத்தப்படும்.
- ❖ வருடாந்திரத் தொழிலாளர் கணக்கெடுப்பில் (PLFS) உள்ளடக்கப்படாத உண்மையான திறன் நிலைகள் குறித்த தரவு இடைவெளியை நிரப்புவதே இந்தக் கணக்கெடுப்பின் நோக்கமாகும்.

## Know Your Survey வழிகாட்டி

- ❖ புள்ளியியல் மற்றும் திட்ட அமலாக்க அமைச்சகம் (MoSPI) ஆனது "Know Your Survey -உங்கள் கணக்கெடுப்பை அறிந்து கொள்ளுங்கள்" என்ற தலைப்பில் அதன் முதல் வாசகருக்கு உகந்த வகையிலான வழிகாட்டியை வெளியிட்டுள்ளது.
- ❖ இந்த வழிகாட்டியை தேசியப் புள்ளிவிவர அலுவலகம் (NSO) வெளியிட்டுள்ளது.
- ❖ இது ஒருங்கிணைக்கப்படாத துறை நிறுவனங்களின் (ASUSE) வருடாந்திர கணக்கெடுப்பை எளிய மற்றும் நுட்பம் சாராத வழியில் விளக்குகிறது.
- ❖ இந்த வெளியீடானது கணக்கெடுப்புப் பரவல், வழிமுறை மற்றும் தர உறுதி செயல் முறையை விவரிக்கிறது.
- ❖ கணக்கெடுப்பில் பதிலளிப்பவர்களுக்குத் தரவுச் சேகரிப்பு நடைமுறைகள் மற்றும் இரகசியத்தன்மைப் பாதுகாப்புகள் குறித்து இது தெரிவிக்கிறது.

## இந்தியாவில் விவசாயிகளின் தற்கொலைகள்

- ❖ மகாராஷ்டிரா மற்றும் கர்நாடகா ஆகிய மாநிலங்களில் இந்தியாவிலேயே மிக அதிக எண்ணிக்கையிலான விவசாயிகளின் தற்கொலை விகிதங்கள் பதிவாகியுள்ளன என்பதோடு இது தேசிய சராசரியை விட சுமார் 2.5 மடங்கு அதிகம்.
- ❖ 1995 மற்றும் 2023 ஆகிய ஆண்டுகளுக்கு இடையில், இந்தியாவில் 394,206 விவசாயிகள் மற்றும் வேளாண் தொழிலாளர்கள் தற்கொலை செய்து கொண்டனர்.
- ❖ அனைத்து விவசாயிகளின் தற்கொலைகளில் தெற்கு மற்றும் மேற்கு இந்தியாவின் பங்கு சுமார் 72.5% ஆகும்.
- ❖ Bt பருத்தியின் விரைவான பரவல் மற்றும் தொடர்ச்சியான பயிர் சாகுபடி வீழ்ச்சிகள் விவசாயிகள் மத்தியில் நிதி சார் நெருக்கடியை அதிகரித்தன.

- ❖ தற்கொலைகளில், தற்போது வேளாண் தொழிலாளர்களின் பங்கு, குறிப்பாக 2023 ஆம் ஆண்டில் விவசாயிகளை விட அதிகமான எண்ணிக்கையில் உள்ளது.
- ❖ மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை வாய்ப்பு உறுதிச் சட்டம் (MGNREGA), பயிர்க் காப்பீடு மற்றும் கடன் தள்ளுபடி ஆகியவை 2010 ஆம் ஆண்டிற்குப் பிறகு அவர்களின் தற்கொலைகளைக் குறைக்க உதவியது.
- ❖ 2023 ஆம் ஆண்டில், இந்தியாவில் 10,786 விவசாயிகளின் தற்கொலைகள் பதிவாகி உள்ளன என்பதோடு இது 2022 ஆம் ஆண்டுடன் ஒப்பிடும்போது 75% அதிகம் ஆகும்.

## கலை-II நீர்மின் நிலையம்

- ❖ அருணாச்சல பிரதேசத்தில் 1,200 மெகாவாட் (MW) திறன் கொண்ட கலை-II நீர்மின் நிலையத்திற்குச் சுற்றுச்சூழல் அனுமதியை வழங்க நிபுணர் மதிப்பீட்டுக் குழு (EAC) பரிந்துரைத்துள்ளது.
- ❖ இந்த நிலையம் அஞ்சாவ் மாவட்டத்தில் உள்ள லோஹித் ஆற்றில் கட்டமைக்கப்பட திட்டமிடப்பட்டுள்ளது.
- ❖ இதன் சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டு (EIA) அறிக்கை WAPCOS லிமிடெட் நிறுவனத்தால் தயாரிக்கப் பட்டது.
- ❖ ஆனால், இந்த நிலையம் அமைக்கப்பட உள்ள பகுதியில் காணப்படும் வெண்ணாரை பறவை பற்றி EIA குறிப்பிடவில்லை.
- ❖ வெண்ணாரை பறவைகள் ஆனது IUCN அமைப்பினால் மிக அருகி வரும் இனமாக பட்டியலிடப் பட்டுள்ளது.
- ❖ இந்த இனம் 1972 ஆம் ஆண்டு வனவிலங்குப் பாதுகாப்புச் சட்டத்தின் கீழ் சட்டப் பூர்வமாகப் பாதுகாக்கப்படுகிறது.

## இந்தியாவில் ஓய்வூதியத் திட்டங்கள்

- ❖ இந்தியாவில் பழைய ஓய்வூதியத் திட்டம் (OPS) மத்திய அரசால் ஓய்வூதிய சீர்திருத்தங்களின் ஒரு பகுதியாக ரத்து செய்யப்பட்டது.
- ❖ 2004 ஆம் ஆண்டு ஜனவரி 01 ஆம் தேதி முதல் ரத்து செய்யப்பட்ட, இது அகவிலைப் படிகள் (DA) போன்ற கூறுகளுடன், ஓய்வுபெறும் நேரத்தில் கடைசியாக ஒருவரால் பெறப் பட்ட ஊதியத்தில் (LPD), பாதி அளவிலான வரையறுக்கப்பட்ட பயன் (DB) ஓய்வூதியத்தைக் கொண்டிருந்தது.
- ❖ OPS என்பது pay-as-you-go (PAYG) என்ற வசதியின் அடிப்படையில் நிதியளிக்கப்பட்ட ஒரு நிதியளிக்கப்படாத ஓய்வூதியத் திட்டமாகும் என்பதோடு இதில் அரசாங்கத்தின் தற்போதைய வருவாய் அதன் ஓய்வு பெற்ற ஊழியர்களுக்கான ஓய்வூதியப் பலனை வழங்குவதற்கான நிதியளித்தது.
- ❖ பழைய ஓய்வூதியத் திட்டத்திற்கு மாற்றாக, தேசிய ஓய்வூதிய முறை எனப்படும் மறு சீரமைக்கப்பட்ட வரையறுக்கப்பட்டப் பங்களிப்பு (DC) ஓய்வூதியத் திட்டம் கொண்டு வரப் பட்டது.
- ❖ தேசிய ஓய்வூதிய அமைப்பு (NPS) என்பது இந்தியாவில் ஒரு வரையறுக்கப்பட்டப் பங்களிப்பு ஓய்வூதிய முறையாகும் என்பதோடு இது ஓய்வூதிய நிதி ஒழுங்குமுறை மற்றும் மேம்பாட்டு ஆணையத்தால் (PFRDA) கட்டுப்படுத்தப்படுகிறது.

- 2004 ஆம் ஆண்டு ஜனவரி 01 ஆம் தேதிக்குப் பிறகு பணியில் சேர்ந்த அனைத்து ஊழியர்களுக்கும் வரையறுக்கப்பட்ட பலன்களுடன் கூடிய ஓய்வூதியங்களை நிறுத்த இந்திய அரசு அறிவித்த முடிவோடு NPS தொடங்கியது.
- NPS என்பது சந்தையுடன் இணைக்கப்பட்ட வருடாந்திரத் தயாரிப்பு ஆகும்.
- 2003 ஆம் ஆண்டு ஏப்ரல் 01 அல்லது அதற்குப் பிறகு பணியில் சேர்ந்தவர்களுக்காக தமிழ்நாட்டில் பங்களிப்பு சார் ஓய்வூதியத் திட்டம் (CPS) தொடங்கப்பட்டது.
- பங்களிப்பு சார் ஓய்வூதியத் திட்டம் என்பது ஓர் ஓய்வூதிய சேமிப்புத் திட்டமாகும் என்பதோடு இதில் ஊழியர் மற்றும் முதலாளி (அல்லது அரசு/திட்ட வழங்குநர்) ஆகிய இருவரும் சம்பளத்தின் ஒரு குறிப்பிட்ட சதவீதமாக, மொத்தப் பங்களிப்புகள் மற்றும் முதலீட்டு வளர்ச்சியைப் பொறுத்து இறுதி ஓய்வூதியத் தொகையுடன், ஒரு தனிப்பட்ட கணக்கில் தொடர்ந்து நிதியைப் பங்களிக்கின்றனர்.
- 2026 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் முதல், தமிழ்நாடு அரசு நிலையான பங்களிப்பு சார் ஓய்வூதியத் திட்டத்திலிருந்து (CPS) புதிதாக அறிவிக்கப்பட்ட தமிழ்நாடு அரசின் உறுதி அளிக்கப்பட ஓய்வூதியத் திட்டத்திற்கு (TAPS) மாறியுள்ளது.
- ஒருங்கிணைந்த ஓய்வூதியத் திட்டம் (UPS) ஆனது மத்திய அரசு ஊழியர்களுக்கான தேசிய ஓய்வூதிய அமைப்புடன் (NPS) விருப்ப ஓய்வூதியத் திட்டமாக 2024 ஆம் ஆண்டில் இந்திய அரசால் அறிமுகப்படுத்தப்பட்டது.
- ஓய்வூதிய நிதி ஒழுங்குமுறை மற்றும் மேம்பாட்டு ஆணையத்தால் (PFRDA) ஒழுங்கு படுத்தப் பட்ட தற்போதைய NPS கட்டமைப்பிற்குள் UPS செயல்படுகிறது என்பதோடு குறிப்பிட்ட நிபந்தனைகளின் கீழ் பணியாற்றும் மற்றும் ஓய்வு பெற்ற ஊழியர்களுக்கு இது பொருந்தும்.

## இந்திய இராணுவத்திற்கான பிணையமாக்கல் ஆண்டு

- இந்திய இராணுவம் ஆனது 2026 ஆம் ஆண்டை பிணையமாக்கம் மற்றும் தரவு மையப் படுத்தல் ஆண்டாக அறிவித்துள்ளது.
- இந்த முன்னெடுப்பு ஆனது இராணுவ நடவடிக்கைகளில் டிஜிட்டல் ஒருங்கிணைப்பு மற்றும் நிகழ்நேரத் தரவுப் பகிர்வை மேம்படுத்துவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.
- இது முடிவெடுப்பதற்கான முக்கியமான செயல்பாடுகள் சார் சொத்தாக தரவைக் கருதுவதில் கவனம் செலுத்துகிறது.
- இந்தத் திட்டம் வீரர்கள், கட்டுப்பாட்டு மையங்கள் மற்றும் பாதுகாப்பு அமைப்புகளுக்கு இடையே சிறந்த ஒருங்கிணைப்பை ஆதரிக்கிறது.
- இது தொழில்நுட்ப ஏற்பு ஆண்டாகக் கடைப்பிடிக்கப்பட்ட 2024–25 ஆம் ஆண்டின் முந்தைய கருத்துருவினை அடிப்படையாகக் கொண்டது.

## தேசிய சுற்றுச்சூழல் தர ஆய்வகம்

- இந்தியா உலகின் இரண்டாவது தேசிய சுற்றுச்சூழல் தர ஆய்வகத்தை (NESL) புது டெல்லியில் உள்ள அறிவியல் மற்றும் தொழில்துறை ஆராய்ச்சி சபையின் (CSIR) தேசிய இயற்பியல் ஆய்வகத்தில் திறந்து வைத்துள்ளது.

- NESL ஆனது இந்தியப் பருவநிலை சூழல்களின் கீழ் காற்று மாசுபாடு கண்காணிப்பு கருவிகளைச் சோதித்தல், அளவுத் திருத்தம் செய்தல் மற்றும் சான்றளிப்பதற்கான ஓர் உச்ச நிலை தேசிய மையம் ஆகும்.
- இந்த ஆய்வகம் ஆனது இந்தியாவிற்கென குறிப்பிட்ட தரநிலைகளை உருவாக்குவதையும், தேசிய தூய்மையான காற்றுத் திட்டம் (NCAP) போன்ற மாசுக் கட்டுப்பாட்டுத் திட்டங்களை ஆதரிப்பதையும் நோக்கமாகக் கொண்டுள்ளது.
- இந்தியாவில் காணப்படும் வெப்பநிலை, ஈரப்பதம் மற்றும் தூசி மாசுபாடு நிலைகளுக்கான கருவிகளை அளவுத் திருத்தம் செய்வதன் மூலம் NESL துல்லியமான மற்றும் தரப்படுத்தப்பட்ட சுற்றுச்சூழல் தரவை வழங்குகிறது.
- இந்தியா மற்றும் ஐக்கியப் பேரரசு ஆகிய இரண்டு நாடுகள் மட்டுமே தேசிய அளவிலான சுற்றுச்சூழல் தர ஆய்வகங்களைக் கொண்டுள்ளன.

## தேசிய சூரிய மின்கல அளவுத்திருத்த மையம்

- இந்திய நாடானது, சூரிய மின்கல அளவுத்திருத்தத்திற்கான உலகின் ஐந்தாவது தேசிய முதன்மை தர மையத்தினை புது டெல்லியில் உள்ள CSIR - தேசிய இயற்பியல் ஆய்வகத்தில் திறந்து வைத்துள்ளது.
- இந்த மையம் துல்லியமான ஒளிமின்னழுத்த (PV) அளவீடுகளை உறுதி செய்வதற்காக சூரிய மின்கலங்களின் அதி துல்லியமான அளவுத்திருத்தத்தை வழங்குகிறது.
- இது சீரொளிக் கற்றை அடிப்படையிலான டிஃபெரன்ஷியல் ஸ்பெக்ட்ரல் ரெஸ்பான்ஸ்விட்டி (DSR) அமைப்பை அளவுத் திருத்தத்திற்காகப் பயன்படுத்துகிறது.
- இந்த மையம் உலகளாவிய தரநிலைகளை பூர்த்தி செய்யும் சுமார் 0.35% என்ற குறைந்த அளவீட்டு நிச்சயமற்ற தன்மையை அடைகிறது.
- இது ஜெர்மனியின் PTB (Physikalisch-Technische Bundesanstalt) உடன் இணைந்து உருவாக்கப் பட்டது.
- இந்த மையமானது வெளிநாட்டுச் சூரிய சக்தி அளவுத் திருத்தத்தை இந்தியா சார்ந்து இருப்பதைக் குறைக்கிறது மற்றும் உள்நாட்டுச் சூரிய மின்னாற்றல் உற்பத்தி தொழில் துறையை ஆதரிக்கிறது.

## நேரடி நிகழ்வுகள் மேம்பாட்டுப் பிரிவு

- இந்தியாவின் இசை நிகழ்ச்சி பொருளாதாரத்தை மேம்படுத்துவதற்காக தகவல் மற்றும் ஒளிபரப்பு அமைச்சகம் நேரடி நிகழ்வுகள் மேம்பாட்டுப் பிரிவினை (LEDC) அமைத்துள்ளது.
- LEDC ஆனது 2025 ஆம் ஆண்டு ஜூலை மாதத்தில் நேரடி நிகழ்வுகளுக்கான ஒற்றைச் சாளர வசதி அமைப்பாக உருவாக்கப்பட்டது.
- இந்தியா முழுவதும் இசை நிகழ்ச்சிகள், நேரடி நிகழ்ச்சிகள் மற்றும் பொழுதுபோக்கு நிகழ்வுகளின் வளர்ச்சியை ஆதரிப்பதை இது நோக்கமாகக் கொண்டுள்ளது.
- இந்தியாவின் ஒழுங்கமைக்கப்பட்ட நேரடி நிகழ்வுகள் சந்தை 2024 ஆம் ஆண்டில் 20,861 கோடி ரூபாய் மதிப்புடையதாக மதிப்பிடப்பட்டது.
- இந்தத் துறை 18% கூட்டு வருடாந்திர வளர்ச்சி விகிதத்தில் (CAGR) வளரும் என்று எதிர்பார்க்கப் படுகிறது.

- நேரடி நிகழ்வுகள் பெரிய அளவிலான வேலைவாய்ப்பை உருவாக்குகின்றன மற்றும் சுற்றுலா மற்றும் கலாச்சார நடவடிக்கைகளை ஆதரிக்கின்றன.

## மின்கலங்களுக்கான ஆதார் எண்

- மின்சார வாகனங்களின் (EV) மின்கலங்களுக்கான தனித்துவமான ஆதார் போன்ற அடையாள அமைப்பை போக்குவரத்து அமைச்சகம் முன்மொழிந்துள்ளது.
- வரைவு வழிகாட்டுதல்களின் கீழ், ஒவ்வொரு EV மின்கலங்களுக்கும் உற்பத்தியாளர் அல்லது இறக்குமதியாளரால் 21 எழுத்துகள் கொண்ட மின்கல ஆதார் எண் (BPAN) ஒதுக்கப் பட வேண்டும்.
- BPAN அமைப்பு மூலப்பொருள் பிரித்தெடுத்தல் மற்றும் உற்பத்தி முதல் பயன்பாடு, மறு சுழற்சி மற்றும் இறுதிக் கட்ட அகற்றல் வரை மின்கலங்களை மிக முழுமையாகக் கண்காணிக்க அனுமதிக்கும்.
- அவற்றைக் கண்காணிப்பதற்காக உற்பத்தியாளர்கள் மற்றும் இறக்குமதியாளர்கள் அதிகாரப்பூர்வ BPAN வலை தளத்தில் மின்கலத்தின் மாறுநிலை தரவையும் பதிவேற்ற வேண்டும்.
- ஒரு மின்கலம் மறுசுழற்சி செய்யப்பட்டாலோ அல்லது மீண்டும் அது பயன்படுத்தப் பட்டாலோ, அதே அல்லது ஒரு புதிய தயாரிப்பாளரால் ஒரு புதிய BPAN வழங்கப்படும்.
- இந்த அமைப்பு மின்கலச் சூழல் அமைப்பில் மறுசுழற்சி திறன், ஒழுங்குமுறை இணக்கம் மற்றும் நிலைத் தன்மையை மேம்படுத்துவதை நோக்கமாகக் கொண்டு உள்ளது.

## இந்தியாவின் ரஷ்ய எண்ணெய் இறக்குமதி

- ரஷ்யாவிலிருந்து இந்தியாவின் எண்ணெய் இறக்குமதி 2025 ஆம் ஆண்டு நவம்பர் மாதத்தில், கடந்த ஆறு மாதங்களில் இல்லாத அளவுக்கு உயர்ந்தது, அதே நேரத்தில் அமெரிக்காவிலிருந்து மேற்கொள்ளப்படும் இறக்குமதியும் அதிகரித்தது.
- இந்தியா ரஷ்யாவிலிருந்து 7.7 மில்லியன் டன் எண்ணெயை இறக்குமதி செய்தது என்ற நிலையில் இது 2025 ஆம் ஆண்டு நவம்பர் மாதத்தில் பதிவான மொத்த எண்ணெய் இறக்குமதியில் 35.1% ஆகும்.
- இது 2025 ஆம் ஆண்டு மே மாதத்திற்குப் பிறகு பதிவான மிக உயர்ந்த நிலையாகும், என்பதோடு இது 2024 ஆம் ஆண்டு நவம்பர் மாதத்தில் பதிவான இறக்குமதியை விட அதிகமாகும்.
- மதிப்பு அடிப்படையில், இந்தியா 2025 ஆம் ஆண்டு நவம்பர் மாதத்தில் 3.7 பில்லியன் டாலர் மதிப்புள்ள ரஷ்ய எண்ணெயை இறக்குமதி செய்தது.
- அமெரிக்காவிலிருந்து மேற்கொள்ளப்படும் எண்ணெய் இறக்குமதி கடந்த ஏழு மாதங்களில் இல்லாத அளவுக்கு உயர்ந்தது என்பதோடு இது இந்தியாவின் எண்ணெய் இறக்குமதியில் சுமார் 12.6% ஆகும்.
- ரஷ்யாவும் அமெரிக்காவும் சேர்ந்து, 2025 ஆம் ஆண்டு நவம்பர் மாதத்தில் இந்தியாவின் மொத்த எண்ணெய் இறக்குமதியில் சுமார் பாதி பங்கினைக் கொண்டிருந்தன.

## கற்கரி வர்த்தகக் கொள்கை

- இந்திய அரசு ஆனது குறைந்த சாம்பல் உள்ளடக்கம் கொண்ட உலோகவியல் கற்கரி மீதான இறக்குமதிக் கட்டுப்பாடுகளை நீக்கியுள்ளது.
- இந்த முடிவை வர்த்தகம் மற்றும் தொழில்துறை அமைச்சகத்தின் கீழ் உள்ள DGFT (வெளிநாட்டு வர்த்தக இயக்குநரகம்) அறிவித்துள்ளது.
- குறைந்த சாம்பல் உள்ளடக்கம் கொண்ட உலோகவியல் கற்கரி என்பது சுமார் 18 சதவீதத்திற்கும் குறைவான சாம்பல் உள்ளடக்கம் கொண்ட கற்கரியைக் குறிக்கிறது.
- இந்தத் தளர்வுகள் கற்கரி நுண்துகள்கள், கற்கரி துகள்கள் மற்றும் மிகக் குறைந்த பாஸ்பரஸ் உள்ளடக்கம் கொண்ட கற்கரியையும் உள்ளடக்கியது.
- உலோகவியல் கற்கரி எஃகு உற்பத்திக்கு, குறிப்பாக ஊது உலைகளில் ஓர் அத்தியாவசிய மூலப்பொருளாகும்.
- உள்நாட்டு எஃகு தொழில் துறைக்குப் போதுமான விநியோகத்தை உறுதி செய்வதையும் உள்ளீட்டு செலவுகளைக் கட்டுப்படுத்துவதையும் இந்த நடவடிக்கை நோக்கமாகக் கொண்டுள்ளது.

## பைரவ் ஆளில்லா விமானங்கள் பிரிவு

- இந்திய இராணுவமானது, பைரவ் என்ற புதிய நவீனப் போர் படையை உருவாக்கி உள்ளது.
- கண்காணிப்பு, உளவு பார்த்தல் மற்றும் துல்லியமான தாக்குதல்களுக்காக இந்தப் படையில் சுமார் 1 லட்சத்திற்கும் மேற்பட்டப் பயிற்சி பெற்ற ஆளில்லா விமான செயல்பாட்டாளர்கள் உள்ளனர்.
- இதில் எல்லைகளில் 25 படைப்பிரிவுகளாக விரிவுபடுத்த திட்டமிடப்பட்டுள்ளதுடன், 15 படைப் பிரிவுகள் உருவாக்கப்பட்டுள்ளன.
- பைரவ் உத்தி சார் மற்றும் செயல்பாட்டுப் பணிகளுக்காக துணை சிறப்புப் படைகள் (SF) மற்றும் வழக்கமான காலாட்படைக்கு இடையிலான இடைவெளியைக் குறைக்கிறது.
- தெற்கு படைப்பிரிவின் கீழ் ஒரு படைப்பிரிவு ஆனது பாலைவனப் பகுதியில், முக்கியமாக இராஜஸ்தானைச் சேர்ந்த படைப்பிரிவுகளுடன் நிலை நிறுத்தப் பட்டு உள்ளது.
- இராஜஸ்தானின் ஜெய்ப்பூரில் 2026 ஆம் ஆண்டு ஜனவரி 15 ஆம் தேதியன்று நடைபெறும் இந்திய இராணுவ தின அணிவகுப்பில் இந்த படைப் பிரிவுகள் பொது மக்கள் முன் அணிவகுப்பு மேற்கொள்ளும்.

## வேளாண் சார் புத்தொழில் நிறுவனங்களுக்கான BHARATI

- வேளாண் மற்றும் பதப்படுத்தப்பட்ட உணவுப் பொருட்கள் ஏற்றுமதி மேம்பாட்டு ஆணையம் (APEDA) BHARATI முன்னெடுப்பினைத் தொடங்கியது.
- BHARATI என்பது இந்தியாவின் வேளாண் தொழில்நுட்பம், மீள்தன்மை, முன்னேற்றம் மற்றும் ஏற்றுமதி செயல்படுத்தலுக்கான காப்பு மையத்தைக் குறிக்கிறது.
- இந்தத் திட்டம் வேளாண் உணவு மற்றும் வேளாண் தொழில்நுட்ப புத்தொழில் நிறுவனங்களை ஆதரிக்கிறது என்பதோடு மேலும் அவை உலகளாவிய சந்தைகளை அடைய உதவுகிறது.

- சர்வதேச அளவில் தங்கள் தயாரிப்புகளைக் காட்சிப்படுத்த சிறந்த 10 புத்தொழில் நிறுவனங்களை APEDA தேர்ந்தெடுக்கும்.
- APEDA ஆணையத்தின் வேளாண் ஏற்றுமதி ஆனது 2025–26 ஆம் ஆண்டு ஏப்ரல்-நவம்பர் மாத காலக் கட்டத்தில் சுமார் 7% அதிகரித்து, 18.6 பில்லியன் டாலரை எட்டியது.
- 2025–26 ஆம் நிதியாண்டில் இந்தியாவின் மொத்த வேளாண் ஏற்றுமதி 30 பில்லியன் டாலரைத் தாண்டும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.
- 120க்கும் மேற்பட்ட நாடுகளைச் சேர்ந்த பங்கேற்பாளர்களைக் கொண்ட உலகளாவிய உணவு மற்றும் பானங்கள் கண்காட்சியான Indusfood 2026 என்ற நிகழ்வில் இந்த முன்னெடுப்பு குறித்து அறிவிக்கப்பட்டது.
- APEDA வர்த்தகம் மற்றும் தொழில்துறை அமைச்சகத்தின் கீழ் செயல்படுகிறது.

## வணிக ரீதியான உயிரி-நீலக்கீல் உற்பத்தி

- சாலை அமைப்பதற்காக உயிரி-நீலக்கீலை (Bio-Bitumen) வணிக ரீதியாக உற்பத்தி செய்த உலகின் முதல் நாடாக இந்தியா உருவெடுத்துள்ளது.
- உயிரி-நீலக்கீலானது உயிரிசார் மற்றும் விவசாயக் கழிவுகளிலிருந்து தயாரிக்கப் படுகிறது என்பதோடு மேலும் இது பெட்ரோலிய அடிப்படையிலான நீலக்கீலுக்கு சுற்றுச்சூழலுக்கு உகந்த ஒரு மாற்றாகவும் செயல்படுகிறது.
- வழக்கமான நீலக்கீல் என்பது கச்சா எண்ணெயிலிருந்து பெறப்படும் ஒரு கருப்பு நிறமான, பிசுபிசுப்பான ஹைட்ரோகார்பன் ஆகும் என்பதோடு இது சாலைகளில் பிணைப்புப் பொருளாகச் செயல்படுகிறது.
- உயிரி-நீலக்கீலானது புதைபடிவ எரிபொருட்களைச் சார்ந்திருப்பதைக் குறைக்க உதவுவதுடன் இந்தியாவில் காற்று மாசுபாட்டின் ஒரு முக்கிய ஆதாரமான பயிர் தாளடிகளை எரிக்கும் பிரச்சனைக்கும் தீர்வு காண்கிறது.

## உலகளாவிய மக்களாட்சி குறித்த மாநாடு - IICDEM 2026

- இந்தியத் தேர்தல் ஆணையம், 2026-ஆம் ஆண்டுக்கான மக்களாட்சி மற்றும் தேர்தல் மேலாண்மை குறித்த இந்திய சர்வதேச மாநாட்டை (IICDEM) புது தில்லியில் நடத்தவுள்ளது.
- இந்த மாநாட்டை இந்தியத் தேர்தல் ஆணையத்தின் கீழ் செயல்படும் இந்திய சர்வதேச மக்களாட்சி மற்றும் தேர்தல் மேலாண்மை நிறுவனம் ஏற்பாடு செய்யவுள்ளது.
- இந்த மாநாட்டின் கருப்பொருள்: அனைவரையும் உள்ளடக்கிய, அமைதியான, மீள் திறன் கொண்ட மற்றும் நிலையான உலகத்திற்கான மக்களாட்சி என்பதாகும்.
- 2026 ஆம் ஆண்டில், சர்வதேச மக்களாட்சி மற்றும் தேர்தல் உதவி நிறுவனத்தின் உறுப்பு நாடுகளின் மன்றத்திற்கு இந்தியா தலைமை தாங்கும்.

## DGMS அமைப்பின் 125ஆம் ஆண்டு ஸ்தாபன தினம்

- சுரங்கப் பாதுகாப்பு தலைமை இயக்குநரகமானது (DGMS) ஜனவரி 7 அன்று தனது 125வது ஸ்தாபன தினத்தைக் கொண்டாடியது.
- 1902 ஆம் ஆண்டில் நிறுவப்பட்ட இது தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்பு அமைச்சகத்தின் கீழ் செயல்படுகிறது.

- இது நிலக்கரி, உலோகத் தாது மற்றும் எண்ணெய் சுரங்கங்களில் பணிபுரியும் தொழிலாளர்களின் பாதுகாப்பு, சுகாதாரம் மற்றும் நலனுக்கான சட்டப்பூர்வ அதிகாரம் ஆகும்.
- DGMS அமைப்பின் தலைமையகம் ஜார்கண்ட் மாநிலத்தின் தன்பாத்தில் அமைந்துள்ளது.
- இது, 1952 ஆம் ஆண்டு சுரங்கச் சட்டம் மற்றும் பிற சுரங்கப் பாதுகாப்பு விதிகளை அமல்படுத்துகிறது.
- சுரங்கங்களில் பாதுகாப்பான மற்றும் ஆபத்து இல்லாத பணிச்சூழலை உறுதி செய்வதே இதன் நோக்கமாகும்.

## இந்திய மக்கள் தொகை கணக்கெடுப்பு 2027 கால அட்டவணை

- 2027ஆம் ஆண்டின் மக்கள் தொகை கணக்கெடுப்பின் முதல் கட்டமான 'வீடுவாரியான பட்டியல் தயாரிப்புப் பணிகளானது', அனைத்து மாநிலங்கள் மற்றும் ஒன்றியப் பிரதேசங்களிலும் 2026 ஏப்ரல் 1 முதல் செப்டம்பர் 30 ஆம் தேதி வரை நடைபெறும்.
- இந்தக் கட்டத்தில், வீடுகள், அவற்றில் உள்ள வசதிகள், குடும்ப விவரங்கள் மற்றும் நுகர்வு முறைகள் குறித்த தரவுகள் சேகரிக்கப்படும்.
- வீடு வீடாகச் சென்று தரவுகளைச் சேகரிக்கும் பணி தொடங்குவதற்கு 15 நாட்களுக்கு முன்பே, சுயமாகத் தகவல்களைப் பதிவு செய்யும் வசதி வழங்கப்படும்.
- மக்கள் தொகை கணக்கெடுப்பு எனப்படும் இரண்டாம் கட்டப் பணி, 2027 ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் நடத்தப்படும்.
- மக்கள் தொகை கணக்கெடுப்பு கட்டத்தின் போது சாதி குறித்த விவரங்கள் சேகரிக்கப் படும்.
- இந்தியாவின் முதல் டிஜிட்டல்வழி மக்கள் தொகை கணக்கெடுப்பான இது ஒட்டு மொத்தமாக 16வது மக்கள் தொகை கணக்கெடுப்பாகும்.

## பூச்சிக்கொல்லி மேலாண்மை மசோதா, 2025

- மத்திய வேளாண்மை மற்றும் விவசாயிகள் நல அமைச்சகம், 2025 ஆம் ஆண்டுக்கான பூச்சிக்கொல்லி மேலாண்மை மசோதாவின் வரைவை வெளியிட்டுள்ளது.
- இந்த மசோதா, 1968 ஆம் ஆண்டு பூச்சிக்கொல்லி சட்டத்திற்குப் பதிலாக அமலுக்கு வரும்.
- இது இந்தியாவில் பூச்சிக்கொல்லிகளின் உற்பத்தி, இறக்குமதி, விற்பனை, சேமிப்பு, பரிமாற்றம் மற்றும் பயன்பாட்டை ஒழுங்குபடுத்தும்.
- பூச்சிக்கொல்லிகளுக்கு அளிக்கப்படும் ஒப்புதலைக் கட்டுப்படுத்த ஒரு மத்திய பூச்சிக்கொல்லி வாரியம் மற்றும் ஒரு பதிவுக் குழுவை இந்த மசோதா வழங்குகிறது.
- இது பூச்சிக்கொல்லிகளின் உரிமம், அடையாளக் குறிப்பிடல் மற்றும் டிஜிட்டல் பதிவு ஆகியவற்றை கட்டாயமாக்குகிறது.
- இதில் பூச்சிக்கொல்லிகளைப் பாதுகாப்பற்ற அல்லது சட்டவிரோதமான முறையில் பயன்படுத்துவதற்கான தண்டனைகளும் அடங்கும்.

## ரைசினா அறிவியல் தூதரக முன்னெடுப்பு (RSDI) 2026

- அறிவியல், தொழில்நுட்பம் மற்றும் தூதரகம் ஆகியவற்றுக்கு இடையேயான தொடர்பை வலுப்படுத்தும் நோக்கில், இந்தியா 2026 ஆம் ஆண்டிற்கான ரைசினா அறிவியல் தூதரக முன்னெடுப்பை (RSDI) தொடங்கியுள்ளது.
- புவிசார் அரசியல் மற்றும் புவிசார் பொருளாதாரம் குறித்த இந்தியாவின் முதன்மை மாநாடான ரைசினா உரையாடலில் அறிவியல் ராஜதந்திரத்தை ஒருங்கிணைப்பதை இது நோக்கமாகக் கொண்டுள்ளது.
- RSDI, வளர்ந்து வரும் தொழில்நுட்பங்களின் ஆளுகை, ஆராய்ச்சிப் பாதுகாப்பு, தொழில் நுட்பக் கட்டுப்பாட்டு விதிமுறைகள் மற்றும் உலகளாவியத் தரநிலைகளில் சமமான பங்கேற்பை உறுதி செய்தல் ஆகியவற்றில் இது கவனம் செலுத்துகிறது.
- இந்தத் தளமானது, முழுமையான அமர்வுகள் மற்றும் நிபுணர்களின் வட்டமேசை கூட்டங்கள் மூலம் அறிவியலாளர்கள், தூதர்கள், கொள்கை வகுப்பாளர்கள் மற்றும் தொழில் துறைத் தலைவர்களை ஈடுபடுத்தும்.
- இந்த முன்னெடுப்பு, 2026 ஆம் ஆண்டு மார்ச் 5 முதல் 7 ஆம் தேதி வரை புது தில்லியில் நடைபெறும் ரைசினா உரையாடலுடன் இணைந்து நடத்தப்பட உள்ளது.
- இது, உலகளாவிய அறிவியல்சார் தூதரக உறவில், குறிப்பாக உலகத்தின் தெற்கு நாடுகளுக்காக, இந்தியாவின் பங்கை மேம்படுத்துவதை நோக்கமாகக் கொண்டு உள்ளது.

## தேசிய IED தரவு மேலாண்மை அமைப்பு (NIDMS)

- மத்திய உள்துறை அமைச்சர் தேசிய IED தரவு மேலாண்மை அமைப்பை (NIDMS) தொடங்கி வைத்தார்.
- NIDMS என்பது மேம்படுத்தப்பட்ட வெடிக்கும் சாதனங்கள் (IED) தரவை சேமித்து பகுப்பாய்வு செய்வதற்கான ஒரு தேசிய டிஜிட்டல் தளமாகும்.
- இது தேசியப் பாதுகாப்புப் படையின் (NSG) தேசிய வெடிகுண்டு தரவு மையத்தால் உருவாக்கப் பட்டுள்ளது.
- இந்த அமைப்பானது, குண்டுவெடிப்புக்குப் பிந்தைய விசாரணைகள் மற்றும் தடயவியல் பகுப்பாய்விற்கு ஆதரவளிக்கும்.
- இது மாநிலக் காவல்துறை, மத்திய ஆயுதக் காவல் படைகள் (CAPF) மற்றும் மத்திய நிறுவனங்களிடையே தரவுப் பகிர்வை செயல்படுத்தும்.
- NSG உள்துறை அமைச்சகத்தின் (MHA) கீழ் செயல்படுகிறது.

## பால் விவாஹ் முக்த் பாரத் பிரச்சாரம்

- 2026 ஆம் ஆண்டிற்குள் குழந்தை திருமணத்தை 10% குறைத்து 2030 ஆம் ஆண்டிற்குள் நாடு முழுவதும் அந்த நடைமுறையை ஒழிப்பதற்கு அரசாங்கம் பால் விவாஹ் முக்த் பாரத் பிரச்சாரத்தைத் தொடங்கியுள்ளது.
- இந்த முன்னெடுப்பு ஆனது 2024 ஆம் ஆண்டு நவம்பர் மாதத்தில் பெண்கள் மற்றும் குழந்தைகள் மேம்பாட்டு அமைச்சகத்தால் தொடங்கப்பட்டது.

- இது குறிப்பாக பெண்கள் மற்றும் விளிம்பு நிலைச் சமூகங்களிடையே குழந்தை திருமணங்களை ஒழிப்பதில் கவனம் செலுத்துகிறது.
- சத்தீஸ்கரில் உள்ள பலோட் மாவட்டம் நாட்டின் முதல் குழந்தை திருமணம் பதிவாகாத மாவட்டமாக மாறியது.
- 436 கிராமப் பஞ்சாயத்துகள் மற்றும் 9 நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளில் தொடர்ந்து இரண்டு ஆண்டுகளாக குழந்தை திருமணங்கள் எதுவும் பதிவாகவில்லை.
- சத்தீஸ்கரில் உள்ள சூரஜ்பூர் மாவட்டம், 2025 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதத்தில் 75 கிராமப் பஞ்சாயத்துகளை குழந்தை திருமணம் இல்லாத பஞ்சாயத்துகளாக அறிவித்தது.

## DLTT திட்டம்

- இந்தியாவின் ஜவுளித் துறையில் உள்ளடக்கிய மற்றும் நிலையான வளர்ச்சியை ஊக்குவிப்பதற்காக ஜவுளி அமைச்சகம் ஆனது, மாவட்ட தலைமையிலான ஜவுளித் துறை பரிமாற்ற (DLTT) முன்னேடுப்பினைத் தொடங்கியுள்ளது.
- இந்தத் திட்டமானது, 100 உயர் திறன் கொண்ட மாவட்டங்களை உலகளாவிய ஏற்றுமதி சாம்பியன்களாக மாற்றுவதையும், 100 இலட்சிய நோக்கமிக்க மாவட்டங்களை சுய சார்பு மையங்களாக உருவாக்குவதையும் நோக்கமாகக் கொண்டுள்ளது.
- ஏற்றுமதி செயல்திறன், MSME நிறுவன சூழல் அமைப்பு மற்றும் பணியாளர் இருப்பு ஆகியவற்றின் அடிப்படையில் தரவு சார்ந்த மதிப்பிடல் முறையைப் பயன்படுத்தி மாவட்டங்கள் தேர்ந்தெடுக்கப்பட்டன.
- சாம்பியன் மாவட்டங்கள் மாபெரும் பொது வசதி மையங்கள் (CFC), தொழில்துறை 4.0 ஒருங்கிணைப்பு மற்றும் நேரடி ஏற்றுமதி சந்தை இணைப்புகள் மூலம் மேம்படுத்துதல் மற்றும் நுட்பப் படுத்தலில் கவனம் செலுத்துகின்றன.
- இலட்சிய நோக்க மிக்க மாவட்டங்கள் அடிப்படைத் திறன் மேம்பாடு, மூலப்பொருள் வங்கிகள் மற்றும் சுய உதவிக் குழுக்கள் (SHG) மற்றும் கூட்டுறவுகள் மூலம் நுண் நிறுவனங்களை மேம்படுத்துதல் ஆகியவற்றுடன் அடித்தளத்தை உருவாக்குவதில் கவனம் செலுத்துகின்றன.
- இந்த முன்னெடுப்பு பழங்குடியினர் மேம்பாடு, இணைப்பு மற்றும் கைவினைப் பொருட்களின் புவிசார் குறியீடு (GI) வழங்கீட்டினை ஆதரிப்பதுடன் கிழக்கு மற்றும் வட கிழக்கு மண்டலங்களில் பூர்வோதயா ஒருங்கிணைப்பை வலியுறுத்துகிறது.
- இந்தத் திட்டம் ஜவுளித்துறை குழுக்களை வலுப்படுத்தவும், அரசு-தொழில்துறை-கல்வித் துறை ஒத்துழைப்பு மூலம் மாவட்டங்கள் முழுவதும் வெற்றிகரமான மாதிரிகளைப் பிரதிபலிக்கவும் முயல்கிறது.

## PANKHUDI வலை தளம்

- இந்தியாவில் பெண்கள் மற்றும் குழந்தைகளின் வாழ்க்கையை எளிதாக்குவதற்காக மத்திய பெண்கள் மற்றும் குழந்தைகள் மேம்பாட்டு அமைச்சர் PANKHUDI வலை தளத்தினைத் தொடங்கி வைத்தார்.
- இந்த வலை தளமானது பெண்கள் மற்றும் குழந்தைகள் மேம்பாட்டு முன்னெடுப்புகளில் ஒருங்கிணைப்பு, வெளிப்படைத்தன்மை மற்றும் பங்குதாரர்களின் பங்களிப்பை மேம்படுத்தும் ஒரு ஒருங்கிணைந்த டிஜிட்டல் தளமாகும்.

- இது ஊட்டச்சத்து, சுகாதாரம், குழந்தைப் பருவப் பராமரிப்பு மற்றும் கல்வி, குழந்தைகள் நலன் மற்றும் பெண்கள் பாதுகாப்பு மற்றும் அதிகாரமளித்தல் போன்ற முக்கியப் பகுதிகளை உள்ளடக்கியது.
- இந்த வலை தளம் சுமார் 14 லட்சத்திற்கும் மேற்பட்ட அங்கன்வாடி மையங்கள், 5,000 குழந்தைப் பராமரிப்பு நிறுவனங்கள் மற்றும் கிட்டத்தட்ட 800 ஒற்றைத் தீர்வு மையங்கள் மூலம் சேவைகளை வலுப்படுத்தும்.

## 2025 ஆம் ஆண்டில் இந்தியாவின் தரவு மைய திறன் வளர்ச்சி

- இந்தியாவின் தரவு மையத்தின் கூடுதல் சேர்ப்பு செயல் திறன் 2025 ஆம் ஆண்டில் இரு மடங்கிற்கும் மேலாக அதிகரித்து, 2024 ஆம் ஆண்டில் இருந்த 191 மெகாவாட் தகவல் தொழில்நுட்பத் திறனுடன் ஒப்பிடும்போது சுமார் 387 மெகாவாட் தகவல் தொழில்நுட்ப திறனை எட்டியது.
- மெகாவாட் தகவல் தொழில்நுட்பத் திறன் என்பது தரவு மையங்களில் தகவல் தொழில்நுட்ப உள்கட்டமைப்பை ஆதரிக்கக் கிடைக்கும் மின்சார ஆற்றலைக் குறிக்கிறது.
- தரவு மையத் தேவை ஆனது 2025 ஆம் ஆண்டில் 407 மெகாவாட் தகவல் தொழில்நுட்பத் திறனிலிருந்து 427 மெகாவாட் தகவல் தொழில்நுட்ப திறனாக வளர்ந்தது என்பதோடு இது ஆண்டிற்கு 5% அதிகரிப்பைக் குறிக்கிறது.
- 2025 ஆம் ஆண்டில் மொத்த தேவையில் மும்பை மற்றும் சென்னை தோராயமாக 70% பங்கினைக் கொண்டுள்ளது.
- 2025 ஆம் ஆண்டின் இறுதியில், இந்தியாவின் செயல்பாட்டுத் தரவு மைய இருப்பு சுமார் 1,520 மெகாவாட் தகவல் தொழில்நுட்ப திறனை தாண்டியுள்ளது.
- இந்தியாவின் தரவு மைய திறன் 2030 ஆம் ஆண்டிற்குள் 4,000 மெகாவாட் தகவல் தொழில்நுட்பத் திறன் (4 ஜிகாவாட் தகவல் தொழில்நுட்பத் திறன்) மூன்று மடங்காக அதிகரிக்கும் என்றும், இது 23% கூட்டு வருடாந்திர வளர்ச்சி விகிதத்தில் (CAGR) வளரும் என்றும் இது நாட்டின் அதிகரித்து வரும் டிஜிட்டல் உள்கட்டமைப்பு தேவைகளைப் பிரதிபலிக்கிறது என்றும் அறிக்கை கூறுகிறது.

## தேசிய விளையாட்டு வாரியம் (NSB)

- தேசிய விளையாட்டு நிர்வாகச் சட்டம் பகுதியளவு நடைமுறைக்கு வந்துள்ளது.
- இது அனைத்து சக்திவாய்ந்த தேசிய விளையாட்டு வாரியம் (NSB) மற்றும் விளையாட்டு தகராறுகளைக் கையாள்வதற்கான ஒரு தீர்ப்பாயத்தை நிறுவுவதற்கான நடவடிக்கைகளை அமைக்கும்.
- பின்வருவனவற்றை உள்ளடக்கிய தேசிய விளையாட்டு அமைப்புகளின் ஸ்தாபனம் மற்றும் நிர்வாக கட்டமைப்போடு தொடர்புடைய விதிமுறைகள் நடைமுறைக்குக் கொண்டு வரப்பட உள்ளன:
    - தேசிய ஒலிம்பிக் குழு,
    - மாற்றுத் திறனாளிகளுக்கான தேசிய ஒலிம்பிக் குழு,
    - தேசிய விளையாட்டு கூட்டமைப்புகள் (NSF) மற்றும்
    - பிராந்திய விளையாட்டு கூட்டமைப்புகள்

- NSB மூன்று உறுப்பினர்களைக் கொண்ட அமைப்பாக நிறுவப்பட முன்மொழியப் பட்டு உள்ளது.
- பொது நிர்வாகம், விளையாட்டு நிர்வாகம், விளையாட்டுச் சட்டம் மற்றும் பிற தொடர்புடைய துறைகளில் சிறப்பு அறிவு அல்லது நடைமுறை அனுபவம் கொண்ட திறன், நேர்மை மற்றும் அந்தஸ்து கொண்ட நபர்களிடமிருந்து மத்திய அரசால் நியமிக்கப்படும் ஒரு தலைவர் மற்றும் உறுப்பினர்கள் NSB வாரியத்தில் நியமிக்கப் படுவர்.
- தேசிய விளையாட்டு கூட்டமைப்புகளுக்கு (NSF) இணைப்பு அந்தஸ்து வழங்குவதோடு மட்டுமல்லாமல், அவற்றின் நிதி நடவடிக்கைகளை கண்காணிக்கவும், இச்சட்டம் முழுமையாகச் செயல்பாட்டுக்கு வந்தவுடன் எந்தவொரு தவறுக்கும் தண்டனை விதிக்கவும் இது அதிகாரம் அளிக்கும்.
- அரசு நிதியுதவிக்கு தகுதி பெற NSF கூட்டமைப்புகள் NSB இணைப்பு அந்தஸ்தினைப் பெறுவது கட்டாயமாகும்.
- NSB வாரியத்தின் அனைத்து உறுப்பினர்களுக்கும் வயது வரம்பு 65 ஆக நிர்ணயிக்கப் பட்டுள்ளது என்பதோடு மேலும் அனைத்து உறுப்பினர்களும் வயது வரம்பிற்கு உட்பட்டு மீண்டும் ஒரு பதவிக் காலத்திற்கு மறுநியமனம் பெற தகுதியுடையவர்கள்.

## ஷாக்ஸ்காம் பள்ளத்தாக்கு பிரச்சினை

- ஷாக்ஸ்காம் பள்ளத்தாக்கு தனது பிரதேசத்தின் ஒரு பகுதி என்பதை இந்தியா மீண்டும் உறுதிப்படுத்தி, அந்தப் பகுதி வழியாகச் செல்லும் சீனா-பாகிஸ்தான் பொருளாதார வழித் தட (CPEC) பாதையை நிராகரித்துள்ளது.
- 1963 ஆம் ஆண்டு சீன-பாகிஸ்தான் எல்லை ஒப்பந்தம் சட்டவிரோதமானது ஆகும், என்பதோடு அது இந்தியாவால் அங்கீகரிக்கப்படவில்லை.
- சியாச்சின் பனிப்பாறைக்கு வடக்கே அமைந்துள்ள ஷாக்ஸ்காம் பள்ளத்தாக்கு பெரிய காஷ்மீர் பிராந்தியத்தின் ஒரு பகுதியாகும்.
- CPEC என்பது சீனாவின் ஜின்ஜியாங் பகுதியை பாகிஸ்தானின் குவாதர் துறைமுகத்துடன் இணைக்கும் ஒரு முக்கிய உள்கட்டமைப்பு வழித்தடமாகும்.

## இந்தியாவின் பால்வளத் துறையை டிஜிட்டல் மயமாக்குதல்

- தேசிய டிஜிட்டல் கால்நடை திட்டத்தின் (NDLM) கீழ் சுமார் 35.68 கோடிக்கும் மேற்பட்ட விலங்குகளுக்கு பசு ஆதார் வழங்கப்பட்டுள்ளது.
- பசு ஆதார் என்பது கால்நடைகளின் தடுப்பூசி, இனப்பெருக்கம் மற்றும் சிகிச்சை விவரங்களை பதிவு செய்யப் பயன்படுத்தப்படும் 12 இலக்க தனித்துவமான காதணி குறியீட்டு எண்ணாகும்.
- 54 பால் தொழிற்சங்கங்களில் 17.3 லட்சத்திற்கும் மேற்பட்ட பால் உற்பத்தியாளர்கள் டிஜிட்டல் பால் கட்டணம் மற்றும் தரப் பதிவுக்காக தானியங்கி பால் சேகரிப்பு முறையை (AMCS) பயன்படுத்துகின்றனர்.
- தரவு அடிப்படையிலான கண்காணிப்பு மற்றும் திட்டமிடலுக்காக சுமார் 198 பால் தொழிற்சங்கங்களும் 15 கூட்டமைப்புகளும் இணைய அடிப்படையிலான பால் தகவல் அமைப்பை (i-DIS) பயன்படுத்துகின்றன.

- போக்குவரத்து செலவு மற்றும் நேரத்தைக் குறைக்க தேசிய பால் மேம்பாட்டு வாரியம் (NDDB) புவியிடங்காட்டி (GIS) அடிப்படையிலான பால் வழித்தட செயலாக்கத்தினையும் அறிமுகப்படுத்தியுள்ளது.

## SHINE திட்டம்

- புது டெல்லியில் உள்ள இந்தியத் தரநிலைகள் வாரியத்தின் (BIS) 79வது ஸ்தாபன தினத்தன்று SHINE திட்டம் தொடங்கப்பட்டது.
- SHINE என்பது தரநிலைகள் ஆனது தகவல் மற்றும் அதிகாரம் பெற்ற பெண்களை மேம்படுத்துவதற்கு உதவுதல் என்பதைக் குறிக்கிறது.
- இந்தியாவின் தர நிர்ணய பயணத்தின் மையமாக பெண்களை வைப்பதற்காக BIS வாரியத்தினால் தொடங்கப்பட்ட ஒரு புதிய திட்டமாகும்.
- இந்தத் திட்டம் அரசு சாரா நிறுவனங்கள் (NGO) மற்றும் சுய உதவிக்குழுக்கள் (SHG) மூலம் பயிற்சி மற்றும் விழிப்புணர்வை வழங்குகிறது.
- இது வீடுகள் மற்றும் சமூகங்களில் தரநிலைகள், பாதுகாப்பு மற்றும் தரம் பற்றிய அறிவைப் பரப்புகிறது.

## ஆகாசா ஏர்

- 2020 ஆம் ஆண்டு நிறுவப்பட்ட இந்தியாவின் புதிய விமான நிறுவனமான ஆகாசா ஏர், சர்வதேச விமானப் போக்குவரத்து சங்கத்தில் (IATA) உறுப்பினராகியுள்ளது.
- உலகளவில் சுமார் 360க்கும் மேற்பட்ட விமான நிறுவனங்களை பிரதிநிதித்துவப் படுத்துகின்ற IATA அமைப்பு உலகளாவிய விமானப் போக்குவரத்தில் 80% பங்கிற்கும் அதிகமானவற்றை நிர்வகிக்கிறது.
- 2025 ஆம் ஆண்டு டிசம்பர் மாதத்தில் ஆகாசா IATA செயல்பாட்டுப் பாதுகாப்புத் தணிக்கையில் (IOSA) தேர்ச்சி பெற்றது.
- இந்தியாவில் இப்போது ஏர் இந்தியா, ஏர் இந்தியா எக்ஸ்பிரஸ், இண்டிகோ, ஆகாசா ஏர் மற்றும் ஸ்பைஸ்ஜெட் ஆகிய ஐந்து IATA உறுப்பினர் விமான நிறுவனங்கள் உள்ளன.
- 2030 ஆம் ஆண்டிற்குள் 226 போயிங் 737 MAX விமானங்களை இயக்க ஆகாசா திட்டமிட்டுள்ளது என்பதோடு மேலும் உலகளாவிய போட்டித்தன்மை வாய்ந்த விமான நிறுவனமாக மாறுவதையும் அது நோக்கமாகக் கொண்டுள்ளது.

## மாவட்ட தலைமையிலான ஜவுளித்துறைப் பரிமாற்ற (DLTT) முன்னெடுப்பு

- கௌகாத்தியில் நடைபெற்ற தேசிய ஜவுளி அமைச்சர்கள் மாநாட்டில் ஜவுளித் துறை அமைச்சகம் ஆனது மாவட்ட தலைமையிலான ஜவுளித்துறைப் பரிமாற்ற (DLTT) முன்னேடுப்பினைத் தொடங்கியது.
- இந்தத் திட்டம் ஜவுளித் துறையில், ஏற்றுமதியில் சுமார் 100 உலகளாவிய சாம்பியன் மாவட்டங்களையும் 100 இலட்சிய நோக்க மிக்க மாவட்டங்களையும் உருவாக்குவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.

- ஏற்றுமதி, குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில்துறை நிறுவனங்கள் (MSME) மற்றும் பணியாளர் வளம் பற்றிய தரவுகளைப் பயன்படுத்தி இந்த மாவட்டங்கள் தேர்ந்தெடுக்கப் படுகின்றன.
- மேம்பட்ட வளர்ச்சிக்காக சாம்பியன் மாவட்டங்களில் தொழில்துறை 4.0 தொழில் நுட்பம் மற்றும் மாபெரும் பொது வசதி மையங்கள் நிறுவப்பட உள்ளன.
- இலட்சிய நோக்க மிக்க மாவட்டங்கள் திறன் பயிற்சி, மூலப்பொருள் வங்கிகள் மற்றும் சுய உதவிக் குழுக்களுக்கான (SHGs) ஆதரவைப் பெறும்.

## 2025 ஆம் ஆண்டில் உர உற்பத்தி

- இந்தியா 2025 ஆம் ஆண்டில் 524.62 லட்சம் டன் உரங்களை உற்பத்தி செய்து, அதன் உள்நாட்டு தேவையில் சுமார் 73 சதவீதத்தை பூர்த்தி செய்துள்ளது.
- இதில் யூரியா, DAP (டை-அம்மோனியம் பாஸ்பேட்), NPK (நைட்ரஜன், பாஸ்பரஸ், பொட்டாசியம்) மற்றும் SSP (சிங்கிள் சூப்பர் பாஸ்பேட்) ஆகியவை அடங்கும்.
- உர உற்பத்தியானது, ஐந்து ஆண்டுகளில் படிப்படியாக அதிகரித்து, 2021 ஆம் ஆண்டில் 433.29 லட்சம் டன்னிலிருந்து 2022 ஆம் ஆண்டில் 467.87 லட்சம் டன்னாக உயர்ந்துள்ளது.
- இது 2023 ஆம் ஆண்டில் 507.93 லட்சம் டன்னாகவும், 2024 ஆம் ஆண்டில் 509.57 லட்சம் டன்னாகவும், 2025 ஆம் ஆண்டில் 524.62 லட்சம் டன்னாகவும் இருந்தது.

## அகில இந்திய முக்கிய துறைமுக கலாச்சார நிகழ்ச்சி

- 25வது அகில இந்திய முக்கிய துறைமுக கலாச்சார நிகழ்ச்சி 2025–26 ஆனது ஒடிசாவின் பாரதீப் துறைமுகத்தில் நிறைவடைந்தது.
- இந்த நிகழ்வை பாரதீப் துறைமுக ஆணையம் (PPA) முக்கிய துறைமுக விளையாட்டு கட்டுப்பாட்டு வாரியத்துடன் இணைந்து ஏற்பாடு செய்தது.
- சியாமா பிரசாத் முகர்ஜி துறைமுக ஆணையம் இந்த நிகழ்ச்சியின் ஒட்டுமொத்த சாம்பியனாக அறிவிக்கப்பட்டது என்ற நிலையில் இதில் மும்பை துறைமுக ஆணையம் இரண்டாம் இடத்தையும், தீனதயாள் மற்றும் கொச்சி துறைமுக ஆணையங்கள் மூன்றாம் இடத்தையும் பிடித்தன.
- இந்த நிகழ்ச்சி இந்தியாவின் துறைமுக ஊழியர்களிடையே கலாச்சாரப் பரிமாற்றம், ஒற்றுமை மற்றும் தோழமையை ஊக்குவிக்கிறது, மேலும் கடல்சார் துறையில் தேசிய ஒருங்கிணைப்பை வலுப்படுத்துகிறது.

## உயிரிழப்பு இல்லா சாலைப் பாதுகாப்புத் திட்டம்

- உத்தரப் பிரதேசம், தமிழ்நாடு, மகாராஷ்டிரா மற்றும் கர்நாடகா உள்ளிட்ட 15 மாநிலங்களில் உள்ள 100 அதிக ஆபத்துள்ள மாவட்டங்களில் தரவு சார்ந்த உயிரிழப்பு இல்லா சாலைப் பாதுகாப்புத் திட்டத்தை சாலைப் போக்குவரத்து மற்றும் நெடுஞ் சாலைகள் அமைச்சகம் (MoRTH) தொடங்கியது.
- விபத்துத் தரவு, முக்கியமான இட வரைபடம் மற்றும் இலக்கு வைக்கப்பட்ட அமலாக்கம் ஆகியவற்றைப் பயன்படுத்தி 2023-24 ஆம் ஆண்டில் கிட்டத்தட்ட 89,000 உயிரிழப்பு பதிவான சாலை விபத்து இறப்புகளை 2030 ஆம் ஆண்டுக்குள் சுமார் 50% குறைப்பதே இந்தத் திட்டத்தின் நோக்கமாகும்.

- குறைந்த செலவிலான சாலைப் பாதுகாப்புத் திட்டங்கள், மேம்பட்ட அதிர்ச்சி நல சேவை, ஆம்புலன்ஸ் சேவை வழங்கீட்டிற்கான வரைபடம், முதல் கட்ட நடவடிக்கை பயிற்சி மற்றும் பொது விழிப்புணர்வுப் பிரச்சாரங்கள் ஆகியவை முக்கிய நடவடிக்கைகளில் அடங்கும்.
- இந்த மாவட்டங்களைச் சேர்ந்த மாவட்ட ஆட்சியர்கள், போக்குவரத்து அமைச்சர்கள் மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர்கள் விபத்துத் தடுப்புக் குழுக்களை அமைத்து இதன் அமலாக்கத்தினை மேற்பார்வையிடுவார்கள்.
- இந்த முன்னெடுப்பு ஸ்டாக்ஹோம் சாலைப் பாதுகாப்புப் பிரகடனம் (2020) மற்றும் ஐக்கிய நாடுகளின் நிலையான மேம்பாட்டு இலக்குகளுடன் ஒத்துப்போகிறது.

## BHASHINI சமுதாயப் பயிலரங்கம்

- இந்தியாவின் மொழி செயற்கை நுண்ணறிவு (AI) சுற்றுச்சூழல் அமைப்பை வலுப்படுத்துவதற்காக மின்னணு மற்றும் தகவல் தொழில்நுட்ப அமைச்சகம் (MeitY) புது டெல்லியில் BHASHINI சமுதாயப் பயிலரங்கத்தினை ஏற்பாடு செய்தது.
- இது MeitY, வாத்வானி AI உடன் இணைந்து டிஜிட்டல் இந்தியா BHASHINI பிரிவினால் (DIBD) ஏற்பாடு செய்யப்பட்டது.
- இந்த நிகழ்வு தேசிய மொழிபெயர்ப்புத் திட்டத்தின் (NLTM) கீழ் மொழி AI சூழல் அமைப்பை வலுப்படுத்துவதில் கவனம் செலுத்தியது.
- இது மொழி வல்லுநர்கள், கல்வி நிறுவனங்கள், குடிமைச் சமூக அமைப்புகள் மற்றும் தரவுப் பயிற்சியாளர்களை ஒன்றிணைத்தது.
- இந்த அமர்வுகள் தள விரிவாக்கம், பங்கேற்பு சார் நிர்வாகம் மற்றும் பாஷாதான் மூலம் குடிமக்கள் தரவுப் பங்களிப்பு ஆகியவற்றை உள்ளடக்கியது.
- பொது டிஜிட்டல் உள்கட்டமைப்பிற்கான பன்மொழி தரவுத் தொகுப்புகளை மேம்படுத்துவதற்காக தரவுத் தொகுப்பு ஏற்பு ஆதரவுக் குழு (DOST) என்ற முன்னெடுப்பு தொடங்கப் பட்டது.

## DIME டிஜிட்டல் தளம்

- இந்திய இராணுவமானது DIME எனப்படும் புதிய டிஜிட்டல் தளவாடத் தளத்தை அறிமுகப்படுத்தியது.
- DIME என்பது நிலைய ஒருங்கிணைப்பு மேலாண்மை பதிப்பைக் குறிக்கிறது.
- இது தளவாட மேலாண்மையை நவீனமயமாக்குவதற்கும் நெறிப்படுத்துவதற்கும் தொடங்கப் பட்ட ஒரு இந்தியா முழுவதுமான இராணுவ டிஜிட்டல் தளமாகும்.
- இந்தத் தளம் ஓர் அலகு மட்டத்திலிருந்து இராணுவ தலைமையகம் வரையிலான தளவாடச் சொத்துக்களின் நிகழ்நேரத் தெரிவுநிலையை வழங்குகிறது.
- DIME ஆனது இந்திய இராணுவம் மற்றும் BISAG-N (பாஸ்கராச்சார்யா தேசிய விண்வெளிப் பயன்பாடுகள் மற்றும் புவியிடத் தகவல் நிறுவனம்) ஆகியவற்றினால் இணைந்து உருவாக்கப்பட்டது.
- இது தரப்படுத்தப்பட்ட டிஜிட்டல் பணிகளைப் பயன்படுத்திக் கிடங்குகள் மற்றும் அமைப்புகளுக்கு இடையே தளவாடத் தரவை ஒருங்கிணைக்கிறது.

- இந்தத் தளம் காகித வேலைகளை சுமார் 70% குறைப்பதையும், தளவாடச் சுழற்சியை கிட்டத் தட்ட மூன்றில் ஒரு பங்காகக் குறைப்பதையும் நோக்கமாகக் கொண்டுள்ளது.

## ஊழல் தடுப்புச் சட்டத்தின் பிரிவு 17A

- 1988 ஆம் ஆண்டு ஊழல் தடுப்புச் சட்டத்தின் 17A பிரிவின் அரசியலமைப்பு செல்லு படியாகும் தன்மை குறித்து இந்திய உச்ச நீதிமன்றம் ஒரு மாறுபட்ட தீர்ப்பை வழங்கி உள்ளது.
- ஊழல் தடுப்புச் (திருத்தம்) சட்டம், 2018 மூலம் பிரிவு 17A அறிமுகப்படுத்தப் பட்டது.
- உத்தியோகப்பூர்வக் கடமைகளை நிறைவேற்றுவதில் எடுக்கப்பட்ட முடிவுகளுக்கு ஒரு அரசு ஊழியருக்கு எதிராக எந்தவொரு விசாரணை அல்லது விசாரணையையும் நடத்துவதற்கு முன், தகுதி வாய்ந்த அதிகாரியின் முன் ஒப்புதல் தேவையாகும்.
- இந்த விதியை எதிர்த்து பொது நல வழக்கு மையம் (CPIL) வழக்கு தொடுத்தது.
- உச்ச நீதிமன்ற அமர்வு ஆனது 17A பிரிவின் செல்லுபடியாகும் தன்மை குறித்து மாறு பட்ட நீதித்துறை கருத்துக்களை வெளிப்படுத்தியது.

## கடல் சார் உணவுப் பாதுகாப்பு உச்சி மாநாடு

- இஸ்ரேலின் ஈலாட்டில் நடைபெற்ற "Blue Food Security: Sea the Future 2026" என்ற இரண்டாவது உலகளாவிய உச்சி மாநாட்டில் இந்தியா பங்கேற்றது.
- இந்த உச்சி மாநாடு உணவுப் பாதுகாப்பு, நிலையான மீன்வளம் மற்றும் மீன்வளர்ப்பு சார் புத்தாக்கங்களில் கவனம் செலுத்தியது.
- ஈலாட்டில் உள்ள தேசியக் கடல்சார் வளர்ப்பு மையம் (NCM), மீன் குஞ்சு வளர்ப்பு மேம்பாடு, குஞ்சு பொரிக்கும் தொழில்நுட்பங்கள் மற்றும் ஒருங்கிணைந்த பல் ஊட்ட மீன் வளர்ப்பை காட்சிப்படுத்தியது.
- தொழில்நுட்ப பரிமாற்றம், நிலையான மீன்பிடி நடைமுறைகள், திறன் மேம்பாடு மற்றும் வர்த்தகம் உள்ளிட்ட மீன் வளம் மற்றும் மீன் வளர்ப்பில் ஒத்துழைப்பை மேம்படுத்துவதற்கான கூட்டு அமைச்சகப் பிரகடனத்தில் இந்தியாவும் இஸ்ரேலும் கையெழுத்திட்டன.
- கடல் சார் உணவுப் பாதுகாப்பு துறையில் உலகளாவியத் தலைவர்கள், அறிவியல் ஆய்வாளர்கள் மற்றும் கொள்கை வகுப்பாளர்களின் பங்கேற்பும் இந்த உச்சி மாநாட்டில் இடம் பெற்றது.

## சூரிய சக்தியில் இயங்கும் MAPSS கண்காணிப்பு ஆளில்லா விமானங்கள்

- சூரிய சக்தியில் இயங்கும் இந்தியாவின் முதல் கண்காணிப்பு ஆளில்லா விமானமான நடுத்தர உயரத்தில் இயங்கும் நிலையான கண்காணிப்பு அமைப்பிற்கான (MAPSS) 168 கோடி ரூபாய் ஒப்பந்தத்தில் இந்திய இராணுவம் கையெழுத்திட்டது.
- பாதுகாப்பு அமைச்சகத்தின் சிறப்பான பாதுகாப்புத் துறை புத்தாக்கத்திற்கான (iDEX) கட்டமைப்பின் கீழ் பெங்களூருவில் உள்ள நியூஸ்பேஸ் ரிசர்ச் & டெக்னாலஜிஸ் MAPSS அமைப்பினை உருவாக்கியுள்ளது.

- சூரிய சக்தியில் இயங்கும் இந்த ஆளில்லா விமானம் மோதல் நிறைந்த எல்லைகளில் நீண்ட கால உளவு, கண்காணிப்பு மற்றும் உளவுப் (ISR) பணிகளை செயல்படுத்துகிறது.
- இதன் செயல்பாட்டு நன்மைகளில் இயக்கத்தைக் கண்காணித்தல், எல்லை செயல்பாட்டைக் கண்காணித்தல், தொலைதூரப் பகுதிகளில் தகவல் தொடர்புகளை ஆதரித்தல் மற்றும் அமைதியான மின்சார உந்துவிசை காரணமாக கண்டறியப் படுவதற்கான குறைக்கப்பட்ட வாய்ப்பு ஆகியவை அடங்கும்.
- MAPSS வடிவம் செயல்பாட்டு சூழல்களில் சோதனைகளை நிறைவு செய்துள்ளது மற்றும் சுமார் 26,000 அடி உயரத்தில் 24 மணி நேரத்திற்கும் மேலாக இயங்குந் தன்மையை நிரூபிக்கும் முந்தைய உயரமான இடத்திலும் சூரிய சக்தியில் இயங்கும் ஆளில்லா விமானச் சோதனைகளை நிறைவு செய்துள்ளது.

## புதிய பாக்ஸ் சிலிக்கா உறுப்பினர் - இந்தியா

- அமெரிக்க வெளியுறவுத்துறை தலைமையிலான பாக்ஸ் சிலிக்கா முன்னெடுப்பில் 2026 ஆம் ஆண்டின் பிப்ரவரி மாதத்திலேயே இந்தியா முழு உறுப்பினராக இணைய உள்ளது.
- பாக்ஸ் சிலிக்கா என்பது ஆற்றல் பாதுகாப்பு, முக்கியமான கனிமங்கள், குறைக் கடத்தி உற்பத்தி மற்றும் மேம்பட்ட செயற்கை நுண்ணறிவு (AI) மாதிரிகளை உள்ளடக்கிய ஒரு பாதுகாப்பான, நம்பகமான மற்றும் மீள்தன்மை கொண்ட உலகளாவிய தொழில்நுட்பச் சுற்றுச்சூழல் அமைப்பை உருவாக்குவதை நோக்கமாகக் கொண்ட ஒரு பலதரப்பு முன்னெடுப்பாகும்.
- இந்த முன்னெடுப்பு உலகளாவிய விநியோகச் சங்கிலிகளில் கட்டாய சார்புகளைக் குறைக்கவும், முக்கியமான பொருட்கள் அல்லது தொழில்நுட்பங்களுக்காக எந்தவொரு ஒற்றை நாட்டையும் அதிகமாக நம்புவதைத் தடுக்கவும் முயல்கிறது.
- இதன் உறுப்பினர்களில் அமெரிக்கா, ஜப்பான், தென் கொரியா, சிங்கப்பூர், நெதர்லாந்து, ஐக்கியப் பேரரசு, இஸ்ரேல், ஐக்கிய அரபு அமீரகம், ஆஸ்திரேலியா, தைவான், ஐரோப்பிய ஒன்றியம், கனடா மற்றும் OECD நாடுகள் அடங்கும்.
- இந்த முன்னெடுப்பு பங்கேற்கும் நாடுகளிடையே மேம்பட்டத் தொழில்நுட்பங்கள், AI நிர்வாகம் மற்றும் விநியோகச் சங்கிலிப் பாதுகாப்பு ஆகியவற்றில் ஒத்துழைப்பை மேம்படுத்துகிறது.

## இந்திய வானிலை ஆய்வுத் துறையின் 151வது ஸ்தாபன தினம்

- இந்தியா ஜனவரி 15, 2026 அன்று இந்திய வானிலை ஆய்வுத் துறையின் (IMD) 151வது ஸ்தாபன தினத்தைக் கொண்டாடியது.
- இது முக்கிய நகரங்களில் 200 தானியங்கி வானிலை நிலையங்களை (AWS) நிறுவியது.
- தானியங்கி வானிலை நிலையங்கள் (AWS) அதிக துல்லியம் மற்றும் அதிர்வெண்ணுடன் வானிலைத் தரவை தானாகவே பதிவு செய்து அனுப்புகின்றன.
- நகர்ப்புற மற்றும் குறிப்பிட்டப் பகுதியின் வானிலை முன்னறிவிப்பை மேம்படுத்துவதற்காக டெல்லி, மும்பை, சென்னை மற்றும் புனேவில் புதிய AWS பயன்படுத்தப் பட்டன.

- IMD ஆனது, புவி அறிவியல் துறை அமைச்சகத்தின் கீழ் செயல்படுகின்ற, வானிலை முன்னறிவிப்பு மற்றும் நில அதிர்வு அறிவியலுக்கான இந்தியாவின் முக்கிய நிறுவனம் ஆகும்.
- அதன் முன்னறிவிப்பின் துல்லியம் சமீபத்திய ஆண்டுகளில் கணிசமாக மேம்பட்டு உள்ளது என்பதோடு பேரிடர் தயார்நிலை மற்றும் முன் எச்சரிக்கை அமைப்புகளை இது வலுப்படுத்துகிறது.

## 5வது ஸ்தாபன தினம் - CSIR–NIScPR

- CSIR–தேசிய அறிவியல் தொடர்பு மற்றும் கொள்கை ஆராய்ச்சி நிறுவனம் (CSIR–NIScPR) 2026 ஆம் ஆண்டு ஜனவரியில் அதன் 5வது ஸ்தாபன தினத்தைக் கொண்டாடியது.
- CSIR–NIScPR அறிவியல் தொடர்பு, கொள்கை ஆராய்ச்சி மற்றும் பாரம்பரிய அறிவின் சரிபார்ப்பு ஆகியவற்றில் செயல்படுகிறது.
- பிராந்திய மொழிகளில் அறிவியல் பூர்வ தகவல் தொடர்புக்கு செயற்கை நுண்ணறிவு (AI) பயன்பாட்டை இந்த நிறுவனம் எடுத்துரைத்தது.
- பாரம்பரிய அறிவு டிஜிட்டல் நூலகம் (TKDL) இந்தியாவின் பாரம்பரிய அறிவின் உலகளவில் அங்கீகரிக்கப்பட்ட டிஜிட்டல் களஞ்சியமாக குறிப்பிடப்பட்டது.
- பல இந்திய மற்றும் வெளிநாட்டு மொழிகளில் அறிவியல் ரீதியாக சரி பார்க்கப்பட்ட பாரம்பரிய அறிவைப் பகிர்ந்து கொள்வதற்காக SVASTIK வலைதளம் தொடங்கப் பட்டது.

## இந்திய கலங்கரை விளக்க விழா 2026

- 3வது இந்திய கலங்கரை விளக்க விழா விசாகப்பட்டினத்தில் தொடங்கப்பட்டது.
- உள்ளூர் பொருளாதாரத்தை மேம்படுத்துவதற்காக வரலாற்று சிறப்புமிக்க கலங்கரை விளக்கங்களை சுற்றுலா மையங்களாக மேம்படுத்துவதே இந்த விழாவின் நோக்கம் ஆகும்.
- ஆந்திரப் பிரதேசத்தின் விசாகப்பட்டினத்தில் முதல் கலங்கரை விளக்க அருங்காட்சியகம் மற்றும் அசாமின் நதிக்கரைப் பகுதிகளில் நான்கு புதிய கலங்கரை விளக்கங்கள் ஆகியவை இந்தத் திட்டங்களில் அடங்கும்.
- கலங்கரை விளக்கச் சுற்றுலா கடலோரச் சமூகங்களின் அதிகாரமளித்தல், கலாச்சார பாரம்பரியம் மற்றும் நிலையான சுற்றுலாவை ஆதரிக்கிறது.

## 2025 ஆம் ஆண்டில் இந்தியாவின் தூய்மையான எரிசக்தி துறையின் சாதனை

- 2025 ஆம் ஆண்டில் இந்தியா தூய்மையான (புதைபடிவமற்ற எரிபொருள்) எரிசக்தி உற்பத்தி திறனில் சாதனை அதிகரிப்பைப் பதிவு செய்தது.
- இந்தியாவின் நிறுவப்பட்ட புதைபடிவமற்ற எரிசக்தி திறன் 2025 ஆம் ஆண்டில் 266.78 ஜிகாவாட் (GW) ஆக உயர்ந்தது.
- இது 2024 ஆம் ஆண்டில் 217.62 GW ஆக இருந்ததை விட 22.6% அதிகமாகும்.
- இந்த ஆண்டில் மொத்தம் 49.12 GW அளவிலான புதிய புதைபடிவமற்ற எரிசக்தி திறன் சேர்க்கப்பட்டது.

- சூரிய சக்தி உற்பத்தித் திறன் 135.81 GW ஆக அதிகரித்தது என்பதோடு மேலும் காற்றாலை மின் உற்பத்தித் திறன் 2025 ஆம் ஆண்டில் 54.51 GW அளவினை எட்டியது.
- உயிரி ஆற்றல் 11.61 GW ஆகவும், சிறிய அளவிலான நீர் மின் உற்பத்தித் திறன் 5.16 GW ஆகவும், பெரிய அளவிலான நீர் மின் உற்பத்தித் திறன் 50.91 GW ஆகவும் இருந்தது.

## தேசிய PNG இயக்கம் 2.0

- தேசிய PNG இயக்கம் 2.0 முன்னெடுப்பிற்காக GAIL இந்தியா லிமிடெட் பெட்ரோலியம் மற்றும் இயற்கை எரிவாயு ஒழுங்குமுறை வாரியத்துடன் (PNGRB) கூட்டு சேர்ந்துள்ளது.
- இந்த முன்னெடுப்பு ஜனவரி 01 முதல் மார்ச் 31, 2026 ஆம் தேதி வரை #NonStopZindagi பிரச்சாரத்தின் கீழ் இயங்குகிறது.
- இந்தியா முழுவதும் குழாய் வழி இயற்கை எரிவாயு (PNG) மற்றும் அழுத்தப்பட்ட இயற்கை எரிவாயு (CNG) ஆகியவற்றை ஏற்றுக் கொள்வதை ஊக்குவிப்பதை இது நோக்கமாகக் கொண்டுள்ளது.
- வீடுகள், வணிகங்கள் மற்றும் போக்குவரத்திற்கு தூய்மையான, பாதுகாப்பான மற்றும் செலவு குறைந்த எரிபொருளாக PNG மற்றும் CNG பயன்பாட்டை இது ஊக்குவிக்கிறது.
- இந்தியாவின் எரிசக்தி கலவையில் இயற்கை எரிவாயுவின் பங்கை அதிகரிப்பதற்கும், நாடு முழுவதும் நகர எரிவாயு விநியோக (CGD) வலையமைப்பை வலுப்படுத்துவதற்குமான பரந்த இலக்குகளை இந்த இயக்கம் ஆதரிக்கிறது.
- GAIL நிறுவனத்தின் பங்கேற்பு ஆனது, தொழில்துறை கூட்டாளர்களுடன் ஒரு இந்தியா முழுவதுமான பிரச்சாரத்தையும், எரிபொருள் ஏற்பினை அதிகரிப்பதற்கான வெளிப்புற நடவடிக்கைகளையும் சேர்க்கிறது.

## NIRANTAR தளம்

- சுற்றுச்சூழல், வனம் மற்றும் பருவநிலை மாற்ற அமைச்சகம் (MoEFCC) NIRANTAR தளத்தை அறிமுகப்படுத்தியது.
- NIRANTAR என்பது மத்திய மாசுக் கட்டுப்பாட்டு வாரியம் (CPCB), மாநில மாசுக் கட்டுப்பாட்டு வாரியங்கள் (SPCBs), இந்திய வன ஆய்வு (FSI) மற்றும் இந்திய விலங்கியல் ஆய்வு (ZSI) போன்ற MoEFCC நிறுவனங்களுக்கிடையே ஒருங்கிணைப்பை மேம்படுத்துவதற்கான ஒரு டிஜிட்டல் முகப்பு தளமாகும்.
- இந்தத் தளம் சுற்றுச்சூழல் அனுமதிகள், காட்டுத் தீ எச்சரிக்கைகள் மற்றும் வன விலங்கு கடத்தல் தரவுகளை நிகழ்நேரக் கண்காணிப்பைச் செயல்படுத்துகிறது.
- இது கொள்கை வகுப்பிற்காக ஒரே சாளரத்தின் கீழ் பல ஆராய்ச்சி அமைப்புகளின் பருவநிலை மற்றும் சுற்றுச்சூழல் தரவை ஒருங்கிணைக்கிறது.
- NIRANTAR ஆனது PARIVESH போன்ற முந்தைய முன்னெடுப்புகளை விரிவுபடுத்துகிறது மற்றும் நிறுவனங்களுக்கு இடையேயான ஒத்துழைப்பை மேம்படுத்துகிறது.
- தரவு சார்ந்தப் பாதுகாப்பு மூலம் நிலையான மேம்பாட்டு இலக்குகள் (SDG) 13 (பருவநிலை நடவடிக்கை) மற்றும் 15 (நிலவாழ் உயிரினங்கள்) ஆகியவற்றை இந்த தளம் ஆதரிக்கிறது.

## ADMM-பிளஸ் தீவிரவாத எதிர்ப்பு சந்திப்பு 2026

- தீவிரவாத எதிர்ப்பு தொடர்பான 16வது ASEAN பாதுகாப்பு அமைச்சர்களின் கூட்டம்-பிளஸ் (ADMM-பிளஸ்) நிபுணர்கள் பணிக்குழு புது டெல்லியில் நடைபெற்றது.
- ADMM-பிளஸ் கட்டமைப்பின் கீழ் 16வது நிபுணர்கள் பணிக் குழுவிற்கு இந்தியாவும் மலேசியாவும் கூட்டாக தலைமை தாங்குகின்றன.
- தீவிரவாத எதிர்ப்பு ஒத்துழைப்பில் கவனம் செலுத்தும் நிபுணர்கள் பணிக்குழுக்களின் 2024–2027 ஆம் ஆண்டு வரையிலான மூன்று ஆண்டு கால சுழற்சியின் ஒரு பகுதியாக இந்த சந்திப்பு உள்ளது.
- இந்தோ-பசிபிக் பிராந்தியத்தில் தீவிரவாத அச்சுறுத்தல்களை நிவர்த்தி செய்வதற்கான தகவல் பகிர்வு, செயல்பாட்டு ஒருங்கிணைப்பு, திறன் மேம்பாடு மற்றும் சிறந்த நடைமுறைகள் ஆகியவை இதன் விவாதங்களில் அடங்கும்.
- டேபிள் டாப் பயிற்சி திட்டமிடல் ஜனவரி 14, 2026 ஆம் தேதியன்று நடைபெற்றது.
- மலேசியா 2026 ஆம் ஆண்டின் பிற்பகுதியில் இந்தப் பயிற்சியை நடத்தும் என்பதோடு, இந்தியா 2027 ஆம் ஆண்டில் ஒரு களப் பயிற்சியை நடத்தும்.
- கடல்சார் பாதுகாப்பு, மனிதாபிமான உதவி, பேரிடர் நிவாரணம், அமைதிக் காப்பு, இராணுவ மருத்துவம், கண்ணிவெடி எதிர்ப்பு நடவடிக்கை மற்றும் இணையவெளிப் பாதுகாப்பு போன்ற துறைகளில் நடைமுறை பாதுகாப்பு ஒத்துழைப்புக்கான தளமாக ADMM-Plus செயல்படுகிறது.

## நீதிபதி நீக்கத்திற்கான விசாரணைக் குழு

- நீதிபதி யஷ்வந்த் வர்மாவை நீக்கியது குறித்து விசாரிப்பதற்காக மக்களவை சபாநாயகர் அமைத்த விசாரணைக் குழுவை உச்ச நீதிமன்றம் உறுதி செய்தது.
- ஒரு சபையில் (மக்களவை அல்லது மாநிலங்களவை) ஒரு தீர்மானத்தை நிராகரிப்பது மற்றொரு சபை விசாரணைக் குழுவை அமைப்பதைத் தடுக்காது.
- 124 (உச்ச நீதிமன்ற நீதிபதிகள்) மற்றும் 218 (உயர் நீதிமன்ற நீதிபதிகள்) ஆகிய சரத்துகள் நீதிபதிகளை நீக்குவது குறித்த விதிகளை கொண்டுள்ளன.
- நிரூபிக்கப்பட்ட தவறான நடத்தை அல்லது இயலாமை போன்ற சூழலில் மட்டுமே நீதிபதிகளை நீக்க முடியும்.
- விசாரணைக் குழுவில் உச்ச நீதிமன்ற நீதிபதி, உயர் நீதிமன்ற தலைமை நீதிபதி மற்றும் ஒரு புகழ்பெற்ற சட்ட வல்லுநர் ஆகியோர் உள்ளனர் என்பதோடு இது அந்தத் தீர்மானம் ஏற்றுக் கொண்ட பிறகு சபாநாயகர் அல்லது அவைத் தலைவரால் அமைக்கப் படுகிறது.
- இந்த தீர்மானத்திற்கு நாடாளுமன்றத்தின் இரு அவைகளிலும் சிறப்பு பெரும்பான்மை தேவைப்படுவதுடன் இந்தியக் குடியரசுத் தலைவரால் பதவி நீக்கம் செய்யப்படுகிறது.
- இதுவரையில் உயர் மட்ட நீதித்துறையின் எந்த நீதிபதியும் பதவி நீக்கம் செய்யப் படவில்லை.

## PM CARES தனியுரிமைகள்

- டெல்லி உயர் நீதிமன்றம் பிரதமரின் குடிமக்கள் உதவி மற்றும் அவசரகாலச் சூழ்நிலைகளில் நிவாரண (PM CARES நிதி) நிதியானது 2005 ஆம் ஆண்டு தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் (RTI) கீழ் தனியுரிமைக்கான உரிமையைக் கொண்டு உள்ளது.
- தனியுரிமைப் பாதுகாப்புகள் நீதித்துறை அல்லது அரசாங்கத்துடன் இணைக்கப்பட்ட நிறுவனங்களுக்கு நீட்டிக்கப்படலாம் என்று அமர்வு குறிப்பிட்டது.
- PM CARES வரி விலக்குகளை வெளியிடுவது தொடர்பான மத்திய தகவல் ஆணையத்தின் (CIC) உத்தரவை ரத்து செய்த ஒற்றை நீதிபதி அமர்வின் தீர்ப்பை எதிர்த்து மேல்முறையீடு செய்தபோது இந்தக் கருத்து வெளிவந்துள்ளது.
- நன்கொடையாளர்கள், பங்களிப்புகள், வரி விலக்குகள் மற்றும் நிதியின் செலவுகள் பற்றிய விவரங்களைக் கோரிய CIC உத்தரவை வருமான வரித் துறை எதிர்த்து வழக்கு தொடுத்தது.
- நீதிமன்றம் பிப்ரவரி 10, 2026 அன்று இம்மேல்முறையீட்டை தொடர்ந்து விசாரிக்கும் என்பதோடு மேலும் இறுதி முடிவு எட்டப்படும் வரை எந்த தகவலும் வெளியிடப்படாது.

## ஒதுக்கீடு செய்யப்படாத இடங்கள் குறித்து உச்ச நீதிமன்றம்

- இடஒதுக்கீடு செய்யப்படாத (பொது) பிரிவு இடங்கள் தகுதியின் அடிப்படையில் அனைத்து தேர்வர்களுக்கும் பொருந்தும் என்று இந்திய உச்ச நீதிமன்றம் தீர்ப்பளித்தது.
- பொதுத் தரநிலைகளில் தகுதி பெறும் SC, ST மற்றும் OBC தேர்வர்கள் இட ஒதுக்கீடு செய்யப்படாத இடங்களில் கணக்கிடப்பட வேண்டும்.
- இட ஒதுக்கீடு செய்யப்படாத இடங்கள் தகுதி அடிப்படையிலான வகையாகும் என்றும், பொதுப் பிரிவிற்கான தனி ஒதுக்கீடு அல்ல என்றும் நீதிமன்றம் தெளிவுபடுத்தியது.
- தகுதியால் மேற்கொள்ளப்பட்ட மாற்றம் (இட ஒதுக்கீட்டுச் சலுகைகளைப் பெறாமல் தேர்வு) என்ற கருத்தை தீர்ப்பு விளக்கியது.
- 2013 ஆம் ஆண்டு இந்திய விமான நிலைய ஆணைய (AAI) ஆட்சேர்ப்பு வழக்கில் இருந்து இந்த தீர்ப்பு வந்தது.
- இந்த முடிவு அரசியலமைப்பின் 14 மற்றும் 16 ஆகிய சரத்துக்களின் (சமத்துவம் மற்றும் சம வாய்ப்பு) அடிப்படையில் மேற்கொள்ளப்பட்டது.

## உணவு விநியோகச் சீர்திருத்தச் செயல்பாடுகள்

- பிளிங்கிட், ஜெப்டோ, ஜொமாடோ மற்றும் ஸ்விக்கி போன்ற முக்கிய உணவு விநியோகத் தளங்கள் 10 நிமிட உணவு விநியோகக் காலக்கெடுவை நீக்க ஒப்புக் கொண்டன.
- இணையவெளித் தொழிலாளர்களுக்குப் பாதுகாப்பு மற்றும் சிறந்த பணி நிலைமைகளை உறுதி செய்வதற்கான அரசாங்கத்தின் நடவடிக்கையைத் தொடர்ந்து இந்த முடிவு எடுக்கப் பட்டது.
- பிளிங்கிட் நிறுவனம் ஏற்கனவே 10 நிமிட வாக்குறுதியை அதன் விளம்பரத்திலிருந்து நீக்கியுள்ளது; மற்றவை விரைவில் இதனைப் பின்பற்றும்.

- இந்த நடவடிக்கையானது உணவு விநியோகப் பணியாளர்களின் பாதுகாப்பு மற்றும் கண்ணியத்திற்கு முன்னுரிமை அளிக்கிறது என்பதோடு மேலும் இது மனிதாபிமான மற்றும் நிலையான இணைய வணிக நடைமுறைகளில் அரசாங்கத்தின் கவனத்தைப் பிரதிபலிக்கிறது.

## NPS சீர்திருத்தக் குழு - M.S. சாஹூ

- தேசிய ஓய்வூதிய முறையின் (NPS) கீழ் உறுதியான கொடுப்பனவுகளுக்கான கட்டமைப்பை வடிவமைக்க ஓய்வூதிய நிதி ஒழுங்குமுறை மற்றும் மேம்பாட்டு ஆணையம் (PFRDA) ஒரு உயர் மட்டக் குழுவை அமைத்துள்ளது.
- இந்திய திவால்நிலை மற்றும் நொடிப்புநிலை வாரியத்தின் (IBBI) முன்னாள் தலைவர் M.S. சாஹூ தலைமையிலான இந்தக் குழுவில் 15 உறுப்பினர்கள் உள்ளனர்.
- NPS முறையின் கீழ் ஓய்வூதிய வருமானத்திற்கான சந்தை அடிப்படையிலான, சட்டப் பூர்வமாக செயல்படுத்தக்கூடிய வழிகாட்டுதல்களை உருவாக்குவதே இதன் முக்கியக் குறிக்கோள் ஆகும்.
- NPS என்பது 2004 ஆம் ஆண்டில் தொடங்கப்பட்ட, ஊழியர்கள் (10%) மற்றும் அரசாங்கத்தின் (14%) பங்களிப்புகளுடன் கூடிய ஒரு பங்களிப்பு சார்ந்த, சந்தையுடன் இணைக்கப்பட்ட ஓய்வூதியத் திட்டமாகும்.
- NPS வாத்சல்யா திட்டம் 2025, கல்வி மற்றும் மருத்துவ நோக்கங்களுக்காக பகுதியளவு பணம் எடுக்க அனுமதிக்கப்படுவதுடன் சிறார்களுக்கு சிறந்த நீண்டகால ஓய்வூதியச் சேமிப்பை வழங்குகிறது.
- இந்த முன்னெடுப்பு ஓய்வுக்குப் பிறகு வருமான உறுதிப்பாட்டை உறுதி செய்வதையும் நிதிப் பாதுகாப்பை மேம்படுத்துவதையும் நோக்கமாகக் கொண்டுள்ளது.

## பெண் தொழில்முனைவோருக்கான தேசியப் பிரச்சாரம்

- தீன்தயாள் அந்த்யோதயா யோஜனா - தேசிய கிராமப்புற வாழ்வாதாரத் திட்டம் (DAY-NRLM) கிராமப்புற பெண்களுக்கு வேளாண் அல்லாத வாழ்வாதார வாய்ப்புகளை விரிவுபடுத்துவதற்காக தொழில்முனைவோர் குறித்ததான தேசியப் பிரச்சாரத்தைத் தொடங்கியுள்ளது.
- இந்தப் பிரச்சாரம் ஆனது, மூன்று கோடி லட்சபதி தீதிக்களை (ஆண்டுதோறும் 1 லட்சம் அல்லது அதற்கு மேல் சம்பாதிக்கும் பெண்கள்) உருவாக்குவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.
- சமூக வள நபர்கள் சாத்தியமான நிறுவனங்களை அடையாளம் காணவும், பெண் தொழில்முனைவோருக்கு வழிகாட்டவும், நீண்ட கால ஆதரவை வழங்கவும் பயிற்சி அளிக்கப்படுவார்கள்.
- இந்தத் திட்டம் 50,000 சமூக வள நபர்களுக்குப் பயிற்சி அளிக்கும் மற்றும் 50 லட்சம் சுய உதவிக் குழு உறுப்பினர்களுக்குத் தொழில்முனைவோர் மேம்பாட்டுப் பயிற்சியினை அளிக்கும்.
- இந்த முன்னெடுப்பு உள்ளூர்ப் பொருளாதாரங்களை வலுப்படுத்தும் என்பதோடு நிதி உள்ளடக்கத்தை ஊக்குவிக்கும், பெண்கள் தலைமையிலான ஒரு சுய சார்பு கிராமப் புற வேளாண்மை சாராதப் பொருளாதாரத்தை உருவாக்கும் என்று எதிர்பார்க்கப் படுகிறது.

## இந்தியாவின் உயிரிப் பொருளாதார வளர்ச்சி

- குஜராத்தில் உயிரிப் பாதுகாப்பு நிலை-4 (BSL-4) உயிரிக் கட்டுப்பாட்டு வசதியின் தொடக்கத்தின் போது அறிவிக்கப்பட்டபடி, இந்தியாவின் உயிரிப் பொருளாதாரம் 2024 ஆம் ஆண்டில் 166 பில்லியன் அமெரிக்க டாலர்களை எட்டியது.
- இந்தியாவின் உயிரிப் பொருளாதாரத்தில் உயிரித் தொழில்நுட்பம், உயிரி மருந்துகள், உயிரி வேளாண்மை, உயிரி தொழில்துறை பொருட்கள், உயிரி ஆற்றல் மற்றும் சுகாதார அறிவியல் ஆகியவை அடங்கும்.
- இந்தத் துறை 2014 ஆம் ஆண்டில் 10 பில்லியன் அமெரிக்க டாலர்களிலிருந்து, சுமார் 16 மடங்கு வளர்ச்சியுடன் 2026 ஆம் ஆண்டில் சுமார் 165.7 பில்லியன் அமெரிக்க டாலர்களாக வளர்ந்தது.
- மிகப்பெரிய பங்கு உயிரி-தொழில்துறை (47%), அதைத் தொடர்ந்து உயிரி-மருந்து (35%), உயிரி ஆராய்ச்சி மற்றும் தகவல் தொழில்நுட்பம் (9%) மற்றும் உயிரி-வேளாண்மை (8%) ஆகும்.
- 2014 ஆம் ஆண்டில் 50 ஆக இருந்த உயிரித் தொழில்நுட்ப புத்தொழில் நிறுவனங்களின் எண்ணிக்கை 2026 ஆம் ஆண்டில் 11,000 க்கும் அதிகமாக அதிகரித்தது.
- குஜராத் மையம் உட்பட புதிய BSL-4 ஆய்வகங்கள், அதிக ஆபத்துள்ள நோய்க்கிருமி ஆராய்ச்சி மற்றும் பொது சுகாதாரத் தயார்நிலைக்கான இந்தியாவின் திறனை வலுப்படுத்துகின்றன.

## UGC விதிமுறைகள் 2026

- உயர்கல்வி நிறுவனங்களில் சாதி அடிப்படையிலான பாகுபாட்டைத் தடுக்க, பல்கலைக்கழக மானியக் குழு (UGC) 2026 ஆம் ஆண்டு ஜனவரியில் புதிய விதிமுறைகளை அறிவித்தது.
- இந்த விதிமுறைகள் பல்கலைக்கழக மானியக் குழு (உயர்கல்வி நிறுவனங்களில் சமத்துவத்தை மேம்படுத்துதல்) விதிமுறைகள், 2026 என்று பெயரிடப்பட்டுள்ளன.
- இந்த விதிகள் சாதி அடிப்படையிலான பாகுபாட்டின் கீழ் பட்டியலிடப்பட்ட சாதிகள் (SCs), பட்டியலிடப்பட்டப் பழங்குடியினர் (STs) மற்றும் இதரப் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் (OBCs) ஆகியோரை உள்ளடக்கியது.
- அனைத்து உயர்கல்வி நிறுவனங்களும் கட்டாயச் சமூகப் பிரதிநிதித்துவத்துடன் சம வாய்ப்பு மையங்கள் (EOC) மற்றும் சமத்துவக் குழுக்களை நிறுவ வேண்டும்.
- இந்த விதிமுறைகளைச் செயல்படுத்துவதை மேற்பார்வையிட UGC ஒரு தேசிய அளவிலான கண்காணிப்புக் குழுவை உருவாக்கும்.
- இணங்கத் தவறிய நிறுவனங்கள் UGC அங்கீகாரம், திட்டங்கள் அல்லது பட்டப்படிப்பு திட்டங்களை வழங்குவதற்கான ஒப்புதலை இழக்க நேரிடும்.

## பழங்குடியினர் மருத்துவர்களுக்கான திட்டம்

- பழங்குடியினர் விவகார அமைச்சகம் (MoTA), தெலுங்கானாவின் ஐதராபாத்தில் பழங்குடியினர் மருத்துவர்களுக்கான தேசிய திறன் மேம்பாட்டுத் திட்டத்தைத் தொடங்கியுள்ளது.

- இந்தியாவின் பொது சுகாதார சுற்றுச்சூழல் அமைப்பிற்குள் பழங்குடி மருத்துவர்களை கூட்டுப் பங்காளிகளாக முறையாக அங்கீகரித்து ஈடுபடுத்துவதை இந்த வகையான முதல் தேசிய முன்னெடுப்பு நோக்கமாகக் கொண்டுள்ளது.
- புவியியல் ரீதியாகவும் கலாச்சார ரீதியாகவும் தனிமைப்படுத்தப்பட்ட பழங்குடிப் பகுதிகளில் கடை நிலை சுகாதார சேவை விநியோகத்தை வலுப்படுத்த இது உதவுகிறது.
- DRISTI திட்டத்தின் கீழ் இந்தியாவின் முதல் பாரத் பழங்குடி சுகாதார ஆய்வகத்தை (B-THO) நிறுவ புவனேஸ்வரில் உள்ள ICMR-பிராந்திய மருத்துவ ஆராய்ச்சி மையத்துடன் ஒரு புரிந்துணர்வு ஒப்பந்தம் கையெழுத்தானது.
- பழங்குடியினர் வகைப்படுத்தப்பட்ட சுகாதாரத் தகவல் அமைப்பை உருவாக்குவதே DRISTI திட்டத்தின் நோக்கமாகும்.

## இந்தியாவின் முதல் பசுமை அம்மோனியா உற்பத்தித் திட்டம் – ஆந்திரப் பிரதேசம்

- இந்தத் திட்டம் பசுமை ஹைட்ரஜன் பள்ளத்தாக்காக திட்டமிடப்பட்டுள்ள காக்கிநாடாவில் உருவாக்கப்பட்டு வருகிறது.
- இது உலகின் மிகப்பெரிய பசுமை அம்மோனியா உற்பத்தித் திட்டமாகும்.
- இந்தத் திட்டம் 2027 ஆம் ஆண்டு ஜூன் மாதம் முதல் ஆண்டுக்கு 1.5 மில்லியன் டன் பசுமை அம்மோனியாவை உற்பத்தி செய்யும்.
- இதற்கு சுமார் 84,000 கோடி ரூபாய் முதலீடு தேவைப்படுகிறது.
- புதுப்பிக்கத்தக்க எரிசக்தி ஆதாரங்களில் இருந்து பசுமை ஹைட்ரஜனைப் பயன்படுத்தி பசுமை அம்மோனியா தயாரிக்கப்படுகிறது.

## உத்தி சார் வர்த்தக கட்டுப்பாடுகள் 2026

- உத்தி சார் வர்த்தக கட்டுப்பாடுகள் குறித்த தேசிய மாநாடு (NCSTC) 2026 புது டெல்லியில் நடைபெற்றது.
- இந்த மாநாட்டை வெளியுறவு அமைச்சகத்துடன் (MEA) இணைந்து வெளிநாட்டு வர்த்தக இயக்குநரகம் (DGFT) ஏற்பாடு செய்தது.
- இது இந்தியாவின் உத்தி சார் வர்த்தகக் கட்டுப்பாட்டு அமைப்பில், குறிப்பாக SCOMET (சிறப்பு இரசாயனங்கள், உயிரினங்கள், பொருட்கள், உபகரணங்கள் மற்றும் தொழில்நுட்பங்கள்) கட்டமைப்பில் கவனம் செலுத்தியது.
- பாதுகாப்பு மற்றும் தொழில்நுட்பம் தொடர்பான இரட்டைப் பயன்பாட்டு மற்றும் உணர்திறன் வாய்ந்த பொருட்களின் ஏற்றுமதியை SCOMET ஒழுங்குபடுத்துகிறது.
- இந்தியாவின் உத்தி சார் வர்த்தகக் கட்டுப்பாட்டு அமைப்பு குறித்த கையேட்டின் மூன்றாவது பதிப்பு இந்த நிகழ்வின் போது வெளியிடப்பட்டது.

## இந்திய அஞ்சல் வழியான முதல் ONDC விநியோகம்

- அஞ்சல் துறையானது தனது முதல் இயங்கலை வழி ஆர்டரை டிஜிட்டல் வர்த்தகத்திற்கான திறந்த வலையமைப்பு (ONDC) மூலம் வெற்றிகரமாக வழங்கியது.

- இந்திய அஞ்சல் ONDC அமைப்பின் கீழ் ஒரு தளவாடச் சேவை வழங்குநராக (LSP) செயல்பட்டு, அதன் பரந்த நேரடி வலையமைப்பை தொழில்நுட்பம் சார்ந்தத் தளவாட தீர்வுகளுடன் ஒருங்கிணைத்தது.
- கைவினைஞர்கள் மற்றும் விவசாயிகள் உட்பட கிராமப்புறத் தொழில்முனைவோரை ஆதரிக்கும் ONDC-இயக்கப்பட்ட UdyamWell முன்னெடுப்பில் இந்த முக்கிய ஆணையை வழங்கியது.
- இந்த விநியோகமானது, விற்பனையாளர்கள் டிஜிட்டல் முறையில் கைப்பற்றக் கோரி, தளவாடங்களுக்கு இந்திய அஞ்சலைத் தேர்ந்தெடுத்து மற்றும் சரக்குகளை நிகழ் நேரத்தில் கண்காணிக்க இயலும் 'கிளிக் & புக்' (சொடுக்குதல் மற்றும் முன்பதிவு செய்தல்) மாதிரியைப் பின்பற்றியது.
- இந்த ஒருங்கிணைப்பு என்பது டிஜிட்டல் வர்த்தகத் தளங்களில் இயங்குந்தன்மையை மேம்படுத்துவதோடு, நாடு தழுவியச் சந்தைகளுக்கு MSME நிறுவனங்கள் மற்றும் சிறு விற்பனையாளர்களுக்கான அணுகலை மேம்படுத்துகிறது.

## வன வளங்காப்பு வழிகாட்டுதல்கள் 2026

- சுற்றுச்சூழல், வனம் மற்றும் பருவநிலை மாற்ற அமைச்சகம் (MoEFCC), வன் (சன்ரக்சண் ஏவம் சம்வர்தன்) ஆதினியம், 1980 சட்டத்தின் கீழ் வன வளங்காப்பு வழிகாட்டுதல்களைத் திருத்தியது.
- தரமிழந்த வன நிலத்தை மீட்டெடுப்பதில் அரசு சாரா பங்கேற்பை அனுமதிப்பதை இது நோக்கமாகக் கொண்டுள்ளது.
- வன நிலத்தில் நடுதல் மற்றும் காடு வளர்ப்பு நடவடிக்கைகள் இப்போது "வனவியல் நடவடிக்கைகள்" என்று கருதப்படுகின்றன என்பதோடு மேலும் இழப்பீட்டுக் காடு வளர்ப்பு அல்லது நிகர தற்போதைய மதிப்பு (NPV) கொடுப்பனவுகள் தேவையில்லை.
- அரசு சாரா நிறுவனங்கள் மாநில வனத்துறைகளின் அங்கீகரிக்கப்பட்ட பணி அல்லது மேலாண்மைத் திட்டங்களின் கீழ் மறுசீரமைப்புப் பணிகளில் பங்கேற்கலாம்.
- தோட்டங்களைப் பயன்படுத்துதல் மற்றும் வருவாய் பகிர்வு குறித்து மாநிலங்களுக்கு விருப்புரிமை உள்ளது ஆனால் வன உரிமை அரசாங்கத்திடமே உள்ளது.
- இந்தத் திருத்தம் சுமார் 2.08 லட்சம் சதுர கி.மீ. அளவிலான தரமிழந்தக் காடுகளை மீட்டெடுப்பது, இந்தியாவின் 33% பசுமைப் பரப்பு இலக்கை அடைவது மற்றும் காகிதம் மற்றும் மரக்கன்றுகளை இறக்குமதி செய்வதைச் சார்ந்திருப்பதைக் குறைப்பதை நோக்கமாகக் கொண்டுள்ளது.
- இதில் உள்ள அபாயங்களில் ஒற்றைப் பயிர்ச் சாகுபடித் தோட்டங்கள், குறைக்கப்பட்ட பல்லுயிர்ப் பெருக்கம் மற்றும் காடு சார்ந்தச் சமூகங்களின் ஒதுக்கல் ஆகியவை அடங்கும்.

## ஊக்கமளிக்கும் புதுமைப்பித்தன் திறன் முன்னெடுப்பு

- இந்திய அரசாங்கத்திற்கான முதன்மை அறிவியல் ஆலோசகர் அலுவலகம் (PSA) புது டெல்லியில் உள்ள 'ஊக்கமளிக்கும் புதுமைப்பித்தன்கள் - நயே பாரத் கி நயி பெஹ்சான்' திறன் முன்னெடுப்பின் தொடக்க நிகழ்ச்சியைக் குறித்தது.

- நெட்ஃபிலிக்ஸ் ஃபண்ட் ஃபார் கிரியேட்டிவ் ஈக்விட்டியுடன் இணைந்து உருவாக்கப் பட்ட இந்தத் திட்டம் கிராஃபிட்டி ஸ்டுடியோசினால் செயல்படுத்தப்பட்டது.
- சமூகத் தாக்கம் கொண்ட புதுமைகளை முன்னிலைப்படுத்தும் குறும்படங்கள் மூலம் எட்டு இந்திய புத்தொழில் நிறுவனங்களை இது காட்சிப்படுத்தியது.
- இந்த முன்னெடுப்பு என்பது கதை சொல்லலை நடைமுறைத் திறன் மேம்பாட்டோடு இணைப்பதன் மூலம் புதுமை மற்றும் படைப்பாற்றல் சூழல் அமைப்புகளை இணைத்தது.

## இந்தியாவின் நிலக்கரி மின் உற்பத்தி

- இந்தியாவின் நிலக்கரி மின் உற்பத்தி சுமார் 50 ஆண்டுகளில் முதல் முறையாக 2025 ஆம் ஆண்டில் ஆண்டாண்டு வீதத்தில் குறைந்துள்ளது.
- 2024 ஆம் ஆண்டுடன் ஒப்பிடும்போது 2025 ஆம் ஆண்டில் நிலக்கரியிலிருந்து உற்பத்தி செய்யப்படும் மின்சாரம் கிட்டத்தட்ட 3% குறைந்துள்ளது.
- இந்த வீழ்ச்சி ஆனது COVID-19 தொற்றுநோய் காலத்தில் 2020 ஆம் ஆண்டில் முதல் முறையாக பதிவானதற்கு பிறகு, குறைந்தது அரை நூற்றாண்டில் பதிவான இரண்டாவது முழு ஆண்டு வருடாந்திரச் சரிவு மட்டுமே ஆகும்.
- இந்தியாவின் மின்சாரத் தேவையை அதிகமாகப் பூர்த்தி செய்யும் தூய்மையான எரிசக்தி (சூரிய, காற்று, நீர், அணுசக்தி) வளர்ச்சியின் அதிகமான வளர்ச்சியே இந்த சரிவுக்கு முக்கிய காரணம் ஆகும்.
- லேசான வானிலை மற்றும் மெதுவான தேவை வளர்ச்சியும் நிலக்கரி உற்பத்தியைக் குறைப்பதற்கு பங்களித்தன.
- இந்த மாற்றம் இந்தியாவின் மின்சார மூலங்கள் கலவையில் புதைபடிவமற்ற மூலங்களை நோக்கிய பரந்த மாற்றத்தைப் பிரதிபலிக்கிறது.

## பசுமை இல்ல வாயு உமிழ்வு தீவிரத்திற்கான இலக்கு விதிகள், 2025

- 2025 ஆம் ஆண்டு பசுமை இல்ல வாயு உமிழ்வு தீவிர (GEI) இலக்கு (திருத்தம்) விதிகளின் கீழ் கட்டாய உமிழ்வு-தீவிரக் குறைப்பு இலக்குகளின் இரண்டாவது சுற்று குறித்து மத்திய அரசு அறிவித்துள்ளது.
- தொழில்துறைப் பசுமை இல்ல வாயு உமிழ்வைக் குறைப்பதற்காக, 1986 ஆம் ஆண்டு சுற்றுச்சூழல் (பாதுகாப்பு) சட்டத்தின் கீழ் இந்த விதிகள் வெளியிடப்பட்டுள்ளன.
- அவை அக்டோபர் 09, 2025 அன்று அமலுக்கு வந்தன என்பதோடு மேலும் அவை இந்தியாவின் கார்பன் மதிப்பு வர்த்தகத் திட்டத்தை (CCTS) ஆதரிக்கின்றன.
- பெட்ரோலியச் சுத்திகரிப்பு நிலையங்கள், பெட்ரோ வேதியியல், ஜவுளி மற்றும் இரண்டாம் நிலை அலுமினியத் துறைகள் ஆகியவை இரண்டாவது சுற்றில் உள்ளடக்கப்பட்டுள்ளன.
- இந்த இலக்குகள் ஒரு அலகு உற்பத்திக்கு ஒரு டன் கார்பன் டை ஆக்சைடுக்குச் சமமான ($tCO_2e$) என அளவிடப்படும் உமிழ்வுத் தீவிரத்தை அடிப்படையாகக் கொண்டவை.
- எரிசக்தி திறன் வாரியம் (BEE) கார்பன் மதிப்புகளை வழங்குகிறது என்பதோடு அதே நேரத்தில் மத்திய மாசு கட்டுப்பாட்டு வாரியம் (CPCB) விதிகளின் இணக்கத்தை அமல்படுத்துகிறது.

- இந்த விதிகள் 2023–24 ஆம் அடிப்படை ஆண்டுடன் ஒப்பிடும் போது 2026–27 ஆம் ஆண்டளவில் உமிழ்வு தீவிரத்தை சுமார் 3–7% குறைப்பதை நோக்கமாகக் கொண்டு உள்ளன.

## ராபி பயிர்ச் சாகுபடி பரப்பளவு 2025–26

- வேளாண்மை மற்றும் விவசாயிகள் நல அமைச்சகம் ஆனது ஜனவரி 16, 2026 ஆம் தேதி நிலவரப்படி ராபி பயிர்ச் சாகுபடி பரப்பளவு குறித்த தரவை வெளியிட்டது.
- மொத்த ராபி பயிர்ச் சாகுபடி பரப்பளவு 652.33 லட்சம் ஹெக்டேரை எட்டியுள்ளது என்பதோடு இது கடந்த ஆண்டு இதே காலத்தை விட சுமார் 20.88 லட்சம் ஹெக்டேர் அதிகமாகும்.
- கோதுமை பரப்பளவு சுமார் 6.13 லட்சம் ஹெக்டேர் அதிகரித்து, வலுவான விதைப்பு முன்னேற்றத்தைக் காட்டுகிறது.
- பயறு வகைகளின் சாகுபடி பரப்பளவு 3.82 லட்சம் ஹெக்டேர் அதிகரித்துள்ளது என்பதோடு பருப்பு வகைகளின் சாகுபடி பரப்பளவு அதிகபட்சமாக சுமார் 4.66 லட்சம் ஹெக்டேர் அதிகரித்துள்ளது.
- எண்ணெய் வித்துக்களின் சாகுபடி பரப்பளவு 3.53 லட்சம் ஹெக்டேர் அதிகரித்துள்ளது என்பதோடு இதற்கு முக்கிய காரணம் ராப்சீட் மற்றும் கடுகு ஆகியனவற்றின் சாகுபடி ஆகும்.
- மக்காச்சோளம் மற்றும் பார்லி ஆகியவற்றின் சாகுபடியுடன், சிறு தானியங்கள் மற்றும் பருமணி தானியங்களின் சாகுபடி பரப்பளவு 2.79 லட்சம் ஹெக்டேர் அதிகரித்துள்ளது.

## கடல் ஆராய்ச்சி திட்டம்: சாகர் மைத்ரி-5

- இந்தியாவின் கடல்சார் ஆராய்ச்சி கப்பலான ஐஎன்எஸ் சாகர்த்வானி, சாகர் மைத்ரி-5 முன்னெடுப்பிற்காக கொச்சியிலிருந்து கொடியசைத்துத் தொடங்கப்பட்டது.
- 1994 ஆம் ஆண்டு ஜூலையில் படையில் இணைக்கப்பட்ட ஐஎன்எஸ் சாகர்த்வானி இந்தியக் கடற்படைக்கான கடல்சார் மற்றும் ஒலியியல் தரவுகளை சேகரிக்கிறது.
- சாகர் மைத்ரி-5 என்பது கடல்சார் மற்றும் தொடர்புடைய பல் துறைப் பயிற்சி மற்றும் ஆராய்ச்சி முன்னேடுப்பினைக் குறிக்கிறது என்பதோடு இது கடல் ஆராய்ச்சி ஒத்துழைப்பை ஊக்குவிக்கிறது.
- இந்தத் திட்டத்தில் ஓமன், மாலத்தீவுகள், இலங்கை, தாய்லாந்து, மலேசியா, சிங்கப்பூர், இந்தோனேசியா மற்றும் மியான்மர் உள்ளிட்ட எட்டு இந்தியப் பெருங்கடல் விளிம்போர (IOR) நாடுகள் அடங்கும்.
- இது மாலத்தீவுடன் அறிவியல் ஒத்துழைப்பு, சமூக-பொருளாதார ஒத்துழைப்பு மற்றும் கூட்டு கடல்சார் ஆய்வுகளை வலுப்படுத்துவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.

## இந்தியாவின் இரண்டாவது LNG விநியோக நாடு – ஐக்கிய அரபு அமீரகம்

- இந்தியாவும் ஐக்கிய அரபு அமீரகமும் திரவமாக்கப்பட்ட இயற்கை எரிவாயு (LNG) விநியோகத்திற்கான நீண்ட கால ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டன.

- இந்த ஒப்பந்தத்தின் கீழ், ஐக்கிய அரபு அமீரகம் இந்தியாவிற்கு ஆண்டுக்கு 0.5 மில்லியன் மெட்ரிக் டன் LNG வாயுவை வழங்கும்.
- இது கத்தாருக்குப் பிறகு இந்தியாவின் இரண்டாவது பெரிய LNG வழங்கீட்டு நாடாக ஐக்கிய அரபு அமீரகத்தினை மாற்றுகிறது.
- LNG என்பது மின் உற்பத்தி, தொழில் மற்றும் சமையல் எரிவாயுவுக்குப் பயன்படுத்தப்படும் ஒரு தூய்மையான புதைபடிவ எரிபொருளாகும்.
- இந்த ஒப்பந்தம் எரிசக்திப் பாதுகாப்பை வலுப்படுத்துகிறது மற்றும் இந்தியாவின் எரிசக்தி ஆதாரங்களைப் பல்வகைப்படுத்துகிறது.
- வர்த்தகம், பாதுகாப்பு, உணவுப் பாதுகாப்பு மற்றும் அணுசக்தி ஆகியவற்றில் ஒத்துழைப்பை விரிவுபடுத்தவும் இந்த இரு நாடுகள் திட்டமிட்டுள்ளன.

## சுற்றுச்சூழல் பாதுகாப்பு நிதி விதிகள் 2026

- 2026 ஆம் ஆண்டு சுற்றுச்சூழல் (பாதுகாப்பு) நிதியின் பயன்பாடு மற்றும் நிர்வாகத்திற்கான விரிவான விதிகளை மத்திய அரசு அறிவித்துள்ளது.
- இந்த நிதி 1986 ஆம் ஆண்டு சுற்றுச்சூழல் (பாதுகாப்பு) சட்டத்தின் கீழ் வழங்கப் படுகிறது.
- ஜன் விஸ்வாஸ் சட்டம், 2023 மூலம் வலுப்படுத்தப்பட்ட இது குற்றங்களை குற்றமற்றதாக்கியது, ஆனால் பண அபராதங்களைத் தக்க வைத்துக் கொண்டது.
- மாசுக் கட்டுப்பாடு, சுற்றுச்சூழல் மறுசீரமைப்பு மற்றும் கண்காணிப்புக்காக சேகரிக்கப்பட்ட அபராதங்களை இந்த நிதி பயன்படுத்துகிறது.
- இது சுற்றுச்சூழல், வன மற்றும் பருவநிலை மாற்ற அமைச்சகத்தால் நிர்வகிக்கப் படுகிறது.
- இந்த நிதி மாசுபாட்டைக் குறைத்தல், தூய்மையான தொழில்நுட்பம், ஆராய்ச்சி மற்றும் திறன் மேம்பாட்டை ஆதரிக்கிறது.

## இந்தியாவின் முதல் கனிமக் கொள்கை

- இந்திய அரசானது, முதல் விரிவான சுரங்கக் கழிவுகள் கொள்கையை அறிவித்தது.
- தாதுக்களிலிருந்து கனிமங்கள் பிரித்தெடுக்கப்பட்ட பிறகு எஞ்சியிருக்கும் கழிவுப் பொருட்கள் சுரங்கக் கழிவுகள் ஆகும்.
- இந்தக் கொள்கை, சுரங்கக் கழிவுகள், சுரங்கக் கழிவு சேமிப்புக் குளங்கள், கசடுகள் மற்றும் தொழில்துறை எச்சங்களிலிருந்து லித்தியம், கோபால்ட், நிக்கல் மற்றும் அருமண் கூறுகள் போன்ற முக்கியமான மற்றும் மூலோபாய தாதுக்களை மீட்டெடுக்க அனுமதிக்கிறது.
- இந்தியச் சுரங்க வாரியம் (IBM), மத்திய சுரங்கத் திட்டமிடல் & வடிவமைப்பு நிறுவனம் (CMPDI), மற்றும் அணு கனிம இயக்குநரகம் (AMD) ஆகியவை இந்தப் பொருட்களை ஆராய்ந்து மதிப்பிடும்.
- செலினியம், டெலூரியம், மாலிப்டினம், ஜெர்மானியம் மற்றும் வெள்ளி உள்ளிட்ட பல துணை தாதுக்கள் முதன்மை தாதுக்களுடன் உள்ளன.

- இந்தக் கொள்கை இறக்குமதி சார்புநிலையைக் குறைத்தல், தன்னம்பிக்கையை மேம்படுத்துதல் மற்றும் மின்கலங்கள், சூரிய மின் உற்பத்தித் தகடுகள் மற்றும் காற்றாலை விசையாழிகள் போன்ற பசுமைத் தொழில்நுட்பங்களை ஆதரிப்பதை நோக்கமாகக் கொண்டுள்ளது.

## எஃகு கசடு தொழில்நுட்பம்

- மலைப்பாங்கான மற்றும் இமயமலைப் பகுதிகளில் சாலை கட்டுமானத்திற்கு எஃகு கசடுகளைப் பயன்படுத்த மத்திய அமைச்சர் ஜிதேந்திர சிங் முன்மொழிந்தார்.
- எஃகு கசடு என்பது எஃகு உற்பத்தியில் இருந்து கிடைக்கும் ஒரு தொழில்துறை துணைப் பொருளாகும் என்பதோடு இது வலுவான மற்றும் நீடித்த சாலைகளை அமைக்கப் பயன்படுத்தப்படுகிறது.
- இந்த தொழில்நுட்பம் சாலையின் வலிமை, நீர் எதிர்ப்புத் திறனை மேம்படுத்துகிறது மற்றும் பழுதுபார்க்கும் நேரத்தைக் குறைக்கிறது.
- நிலச்சரிவுகள் மற்றும் கனமழைகள் சாலைகளைச் சேதப்படுத்தும் இமயமலை மாநிலங்களில் சிறப்பு கவனம் செலுத்தப்படுகிறது.
- எஃகு கசடுகளைப் பயன்படுத்தி, பயன்படுத்தத் தயாராக உள்ள பள்ளங்கள் பழுது பார்க்கும் கலவையான ECOFIX, தொழில்நுட்ப மேம்பாட்டு வாரிய ஆதரவுடன் CSIR-மத்திய சாலை ஆராய்ச்சி நிறுவனத்தால் உருவாக்கப்பட்டது.
- வணிகப் பயன்பாடு மற்றும் நிலையான சாலைகளை உருவாக்க ஆண்டுக்கு 2 லட்சம் டன் கொள்ளளவு கொண்ட கசடு செயலாக்க மையம் 2027 ஆம் ஆண்டில் அமைக்கப் பட திட்டமிடப்பட்டுள்ளது.

## அடல் ஓய்வூதிய யோஜனா நீட்டிப்பு

- அடல் ஓய்வூதிய யோஜனா (APY) திட்டத்தை 2030–31 ஆம் நிதியாண்டு வரை நீட்டிக்க மத்திய அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது.
- APY என்பது தொழிலாளர்கள், விற்பனையாளர்கள் மற்றும் வீட்டு உதவியாளர்கள் உள்ளிட்ட அமைப்புசாரா துறை தொழிலாளர்களுக்கான அரசாங்கத்தால் ஆதரிக்கப் படும் ஓய்வூதியத் திட்டமாகும்.
- மே 9, 2015 அன்று தொடங்கப்பட்ட இந்தத் திட்டம், 60 வயதிற்குப் பிறகு 1,000 முதல் 5,000 ரூபாய் வரை நிலையான மாதாந்திர ஓய்வூதியத்தை வழங்குகிறது.
- இந்தத் திட்டத்தை நிலையானதாக மாற்ற, விழிப்புணர்வுத் திட்டங்கள், பயிற்சி மற்றும் இடைவெளி ஆதரவு ஆகியவற்றை அரசாங்கம் தொடர்ந்து நிதியளிக்கும்.
- ஜனவரி 19, 2026 நிலவரப்படி, 8.66 கோடிக்கும் அதிகமான மக்கள் இந்தத் திட்டத்தில் சேர்ந்துள்ளனர்.
- APY தொழிலாளர்கள் தொடர்ந்து சேமிக்க உதவுவதோடு, முதுமையில் வருமானப் பாதுகாப்பை உறுதி செய்து, நிதி உள்ளடக்கத்தை ஊக்குவிக்கிறது.

## தேசிய சட்டமன்றக் குறியீடு

- தேசிய சட்டமன்றக் குறியீடு (NLI) ஆனது 86வது அகில இந்திய சபாநாயகர் மாநாட்டில் மக்களவை சபாநாயகரால் அறிவிக்கப்பட்டது.
- நாடாளுமன்றம் மற்றும் மாநிலச் சட்டமன்றங்களின் பணிகளை அளவிடுவதற்கும் ஒப்பிட்டுப் பார்ப்பதற்குமான ஒரு செயல்திறன் மதிப்பீட்டு முறை இதுவாகும்.
- கூட்டத்தொடரின் எண்ணிக்கை, சட்டமன்ற வெளியீடு, குழுப் பணிகள் மற்றும் அவை நேரத்தைப் பயன்படுத்துதல் போன்ற புறநிலைக் குறிகாட்டிகளை இந்த NLI குறியீடு பயன்படுத்துகிறது.
- சட்டமன்றங்களில் விவாதங்களின் செயல்திறன், பொறுப்புக்கூறல் மற்றும் தரத்தை மேம்படுத்துவதே இதன் நோக்கமாகும்.
- இது ஆரோக்கியமான போட்டி மற்றும் சிறந்த சட்டமியற்றுதலை ஊக்குவிக்க மாநிலங்கள் மற்றும் பாராளுமன்றத்திற்கு இடையே ஒப்பிட்டுப் பார்க்க அனுமதிக்கிறது.

## அகில இந்திய சபாநாயகர் மாநாடு 2026 – உத்தரப் பிரதேசம்

- 86வது அகில இந்திய சபாநாயகர் மாநாடு (AIPOC) லக்னோவில் நடைபெற்றது.
- இந்த மாநாடு பாராளுமன்றம் மற்றும் அனைத்து மாநில மற்றும் ஒன்றியப் பிரதேச சட்டமன்றங்களின் சபாநாயகர்களுக்கான உயர் நிலை தேசிய மன்றமாகும்.
- இது சட்டமன்றச் செயல்திறன், பொறுப்புக்கூறல், வெளிப்படைத்தன்மை மற்றும் விவாத தரத்தை மேம்படுத்துவதையும், பாராளுமன்றம் மற்றும் மாநிலச் சட்ட மன்றங்களிடையே சிறந்த நடைமுறைகளை வளர்ப்பதையும் நோக்கமாகக் கொண்டு உள்ளது.
- 24 மாநிலங்கள் மற்றும் ஒன்றியப் பிரதேசங்களில் இருந்து சுமார் 36 சபாநாயகர் அதிகாரிகள் இதில் கலந்து கொண்ட மாநாடு இன்று வரை மிகப்பெரிய AIPOC ஆக அமைகிறது.
- மாநிலச் சட்டமன்றங்களில் ஆண்டுக்கு குறைந்தது 30 அமர்வுகளை உறுதி செய்தல் மற்றும் சட்டமன்றச் செயல்திறனை ஒப்பிட்டு மேம்படுத்த தேசிய சட்டமன்றக் குறியீட்டை உருவாக்குதல் உள்ளிட்ட ஆறு முக்கியத் தீர்மானங்கள் இதில் நிறைவேற்றப் பட்டன.
- இது "Strong Legislature-Prosperous Nation" என்ற கருத்துருவில் நடைபெற்றது.

## தேசிய மின்சாரக் கொள்கை வரைவு 2026

- மின்சார அமைச்சகம் ஆனது, 2026 ஆம் ஆண்டு தேசிய மின்சாரக் கொள்கை (NEP) வரைவைப் பொதுமக்களின் ஆலோசனைக்காக வெளியிட்டது.
- இந்தக் கொள்கை NEP 2005 கொள்கைக்கு மாற்றாக அமைகிறது மற்றும் 2047 ஆம் ஆண்டிற்குள் இந்தியாவின் மின் உற்பத்தித் துறையை மாற்றுவதற்கான ஒரு செயல் திட்டத்தினை அமைக்கிறது.
- இந்தியா 2021 ஆம் ஆண்டு மார்ச் மாதத்திற்குள் பொதுவான வீட்டு மின் வசதி வழங்கலை அடைந்தது மற்றும் 2013 ஆம் ஆண்டு முதல் ஒருங்கிணைந்த தேசிய மின் கட்டமைப்பை இயக்கி வருகிறது.

- தனிநபர் மின்சார நுகர்வை 2030 ஆம் ஆண்டுக்குள் 2,000 kWh ஆகவும், 2047 ஆம் ஆண்டுக்குள் 4,000 kWh ஆகவும் உயர்த்துவது இதன் இலக்குகளில் அடங்கும்.
- 2030 ஆம் ஆண்டுக்குள் மொத்த உள்நாட்டு உற்பத்தியின் உமிழ்வு தீவிரத்தை 2005 ஆம் ஆண்டு நிலைகளிலிருந்து 45% குறைத்து 2070 ஆம் ஆண்டுக்குள் நிகர சுழியப் பசுமை இல்ல வாயு உமிழ்வை அடைவதை இந்தியா நோக்கமாகக் கொண்டுள்ளது.
- புதுப்பிக்கத்தக்க ஆற்றலை அதிகரித்தல், மின் கல ஆற்றல் சேமிப்பு அமைப்புகளை ஊக்குவித்தல், மொத்த தொழில்நுட்ப மற்றும் வணிக (AT&C) இழப்புகளைக் குறைத்தல் மற்றும் மின் கட்டமைப்பை நவீனமயமாக்குதல் ஆகியவை முக்கியச் சீர்திருத்தங்கள் ஆகும்.
- சேமிப்பு அடிப்படையிலான நீர் மற்றும் அனல்மின் ஒருங்கிணைப்பில் கவனம் செலுத்துவதுடன், அணுசக்தி திறன் உருவாக்கத்திற்கான இலக்கு 2047 ஆம் ஆண்டுக்குள் 100 GW ஆக நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

## இராணுவ குவாண்டம் திட்டக் கொள்கை கட்டமைப்பு

- பாதுகாப்புப் படைகளின் தலைவர் (CDS) இராணுவ குவாண்டம் திட்டக் கொள்கை கட்டமைப்பை வெளியிட்டார்.
- இது இந்திய ஆயுதப் படைகளில் குவாண்டம் தொழில்நுட்பங்களை ஒருங்கிணைப்பதற்கான ஒரு உத்தி சார் கொள்கை ஆவணமாகும்.
- இந்தக் கட்டமைப்பு கூட்டு மற்றும் ஒருங்கிணைந்த ஏற்பு மூலம் இராணுவம், கடற்படை மற்றும் விமானப்படை மீது கவனம் செலுத்துகிறது.
- இது குவாண்டம் தொடர்பு, குவாண்டம் கணினி, குவாண்டம் உணர்திறன் மற்றும் அளவியல், மற்றும் குவாண்டம் பொருட்கள் மற்றும் சாதனங்கள் ஆகிய நான்கு முக்கியப் பகுதிகளை உள்ளடக்கியது.
- இது சிவில்-இராணுவ இணைவு அணுகுமுறை மூலம் தேசிய குவாண்டம் திட்டத்துடன் பாதுகாப்புத் தேவைகளை சீரமைப்பதை நோக்கமாகக் கொண்டுள்ளது.
- இந்தக் கொள்கை பாதுகாப்பான தகவல் தொடர்பு, சிறந்த உணர்திறன் மற்றும் எதிர்காலப் போர்க்களத் தயார்நிலைக்கான ஒரு செயல் திட்டத்தினை வழங்குகிறது.

## இந்தியாவின் முதல் நகர்ப்புறப் பருவநிலை நிகழ்வு

- மும்பை நகரானது, பிப்ரவரி 17 முதல் 19 ஆம் தேதி வரை இந்தியாவின் முதல் நகர நிர்வாகத் தலைமையிலான பருவநிலை நடவடிக்கை முன்னெடுப்பான 2026 ஆம் ஆண்டு மும்பை பருவநிலை வாரம் என்ற கொண்டாட்டத்தினை நடத்த உள்ளது.
- பருவநிலை நடவடிக்கைகளை குழந்தை உரிமைகளுடன் இணைப்பதுடன், குழந்தைகள் மற்றும் இளைஞர்களை மையமாகக் கொண்டு குடிமக்களால் இயக்கப் படும் பருவநிலை தீர்வுகளை ஊக்குவிப்பதே இதன் நோக்கம் ஆகும்.
- யுனிசெஃப் இந்தியா மற்றும் YuWaah ஆகியவை இளைஞர்களை பருவநிலைக் கொள்கை மற்றும் செயல்பாட்டில் ஈடுபடுத்தும்.

- கல்லூரி மாணவர்களை அணி திரட்டவும், LiFE திட்டத்தின் (சுற்றுச்சூழலுக்கான வாழ்க்கை முறை) கீழ் மின்னணு கழிவு மேலாண்மையை முன்னிலைப்படுத்தவும் பிப்ரவரி 9 முதல் 16 வரை வளாக ரீதியான பருவநிலை சாலை நிகழ்ச்சிகள் நடைபெறும்.
- 16–24 வயதுடைய புதுமைப்பித்தர்கள் உணவு அமைப்புகள், நகர்ப்புற மீள்தன்மை மற்றும் ஆற்றல் மாற்றம் குறித்தத் தீர்வுகளை முன்வைக்க ஒரு இளைஞர் பசுமை புத்தாக்கச் சவால் அனுமதிக்கும்.

## PM SWANidhi கடன் அட்டை

- SWANidhi கடன் அட்டை, UPI-இணைக்கப்பட்ட RuPay கடன் அட்டையானது மறு சீரமைக்கப் பட்ட திட்டத்தின் கீழ் அறிமுகப்படுத்தப்பட்டது.
- டிஜிட்டல் கட்டணங்களை ஊக்குவிக்கும் அதே வேளையில், விற்பனையாளர்கள் அன்றாட பணப்புழக்கத் தேவைகளை நிர்வகிக்க உதவும் வட்டி இல்லாத, நெகிழ்வான கடன் வசதியாக இது வடிவமைக்கப்பட்டுள்ளது.
- இந்த அட்டை, அவசரகால வணிகம் மற்றும் தனிப்பட்ட தேவைகளைப் பூர்த்தி செய்வதற்காக தெருவோர வியாபாரிகளுக்கு உடனடியாக கடன் பெறுவதற்கான அணுகலை வழங்கும்.
- இரண்டாவது தவணை கடனைச் சரியான நேரத்தில் திருப்பிச் செலுத்தியப் பயனாளிகளுக்கு இந்த அட்டை கிடைக்கிறது.
- திருத்தப்பட்ட கடன் அமைப்பு, முதல் தவணையில் ரூ.15,000, இரண்டாவது தவணையில் ரூ.25,000 மற்றும் மூன்றாவது தவணையில் ரூ.50,000 வரை கடன் வாங்க அனுமதிக்கிறது.

## மீன் வளர்ப்பு திட்டம்

- இந்தியா அந்தமான் கடலில் தனது முதல் திறந்தவெளி கடல் மீன் வளர்ப்பு திட்டத்தைத் தொடங்கியுள்ளது.
- இந்தத் திட்டம் அந்தமான் மற்றும் நிக்கோபார் தீவு ஒன்றியப் பிரதேசத்தில் உள்ள ஸ்ரீ விஜய புரம், வடக்கு விரிகுடா அருகே அமைந்துள்ளது.
- இது பூமி அறிவியல் அமைச்சகம் (MoES) மற்றும் தேசிய கடல் தொழில்நுட்ப நிறுவனம் (NIOT) ஆகியவற்றால் செயல்படுத்தப்படுகிறது.
- இந்தத் திட்டம் கடல் ஃபின்ஃபிஷ் வளர்ப்பு மற்றும் ஆழ்கடல் கடற்பாசி வளர்ப்பிற்கு உள்நாட்டிலேயே வடிவமைக்கப்பட்ட திறந்தவெளி கடல் கூண்டுகளைப் பயன்படுத்துகிறது.
- இது கடலோர வாழ்வாதாரங்களை உருவாக்குதல், கடல் உணவுப் பாதுகாப்பை வலுப்படுத்துதல் மற்றும் இந்தியாவின் கடல் சார் பொருளாதாரக் கொள்கையை ஆதரித்தல் ஆகியவற்றை நோக்கமாகக் கொண்டுள்ளது.
- இந்த முன்னோடித் திட்டம் தொழில்நுட்பச் சாத்தியக்கூறுகளைச் சோதித்து, எதிர்கால பொது-தனியார் கூட்டாண்மை (PPP) மேம்பாடுகளுக்கு ஒரு மாதிரியை வழங்கும்.

## கூட்டுறவு வலையமைப்பில் இந்தியாவின் தரவரிசை

- 2025 ஆம் ஆண்டு நிலவரப்படி 8.5 லட்சத்திற்கும் அதிகமான பதிவு செய்யப்பட்ட கூட்டுறவுகளுடன், உலகளாவிய கூட்டுறவு சக்தி மையமாக இந்தியா உருவெடுத்து உள்ளது.
- உலகெங்கிலும் உள்ள அனைத்துக் கூட்டுறவுகளிலும் 27% பங்கினை இந்தியா கொண்டுள்ளது மற்றும் பெரும்பாலும் கிராமப்புறங்களில், கிட்டத்தட்ட 32 கோடி உறுப்பினர்களை உள்ளடக்கியுள்ளது.
- கூட்டுறவுகள் விவசாயிகளுக்கு கடன் அணுகலை வழங்குகின்றன என்பதோடு சிறு உற்பத்தியாளர்களை சந்தைகளில் (அமுல் போன்றவை) ஒருங்கிணைக்கின்றன என்பதோடு மேலும் உணவுப் பாதுகாப்பு மற்றும் நிலையான வாழ்வாதாரத்தை ஆதரிக்கின்றன.
- முதன்மை வேளாண் கடன் சங்கங்களை (PACS) டிஜிட்டல் மயமாக்குதல், தேசியக் கூட்டுறவு அமைப்புகளை உருவாக்குதல் மற்றும் பால் உற்பத்திக்கான வெண்மைப் புரட்சி 2.0 ஆகியவை முக்கிய முன்னெடுப்புகளில் அடங்கும்.
- 5,500 கோடி ரூபாய்க்கு மேல் மதிப்புள்ள ஏற்றுமதிகளுடன், இந்தியாவின் கூட்டுறவுகள் இப்போது உலகளாவிய இருப்பைக் கொண்டுள்ளன என்பதோடு மேலும் டிஜிட்டல் சீர் திருத்தங்கள் வெளிப்படைத்தன்மை மற்றும் செயல்திறனை மேம்படுத்துகின்றன.

## டெல்லி பிரகடனம் 2026

- புது டெல்லியில் நடைபெற்ற மக்களாட்சி மற்றும் தேர்தல் மேலாண்மை குறித்த சர்வதேச மாநாடு (IICDEM) 2026, டெல்லி பிரகடனம் 2026 என்பதை ஏற்றுக் கொண்டதுடன் நிறைவடைந்தது.
- உலகம் முழுவதிலும் உள்ள சுமார் 42 தேர்தல் மேலாண்மை அமைப்புகளால் இந்தப் பிரகடனம் ஒருமனதாக ஏற்றுக் கொள்ளப்பட்டது.
- இது பின்வரும் ஐந்து தூண்களை அடிப்படையாகக் கொண்டது: வாக்காளர் பட்டியல்களின் தெளிவு, தேர்தல்களை நடத்துதல், ஆராய்ச்சி மற்றும் வெளியீடுகள், தொழில்நுட்பத்தின் பயன்பாடு, மற்றும் பயிற்சி மற்றும் திறன் மேம்பாடு.
- இந்த மாநாட்டில், தேர்தல் தொடர்பான தகவல்கள் மற்றும் சேவைகளுக்கான இந்தியத் தேர்தல் ஆணையத்தின் ஒருங்கிணைந்த டிஜிட்டல் தளமான ECINET (இந்தியத் தேர்தல் ஆணைய வலையமைப்பு) தொடங்கப்பட்டது.

## டிஜிட்டல் காலநிலை வரைபடம்

- காலநிலை சார்ந்த சவால்களை எதிர்கொள்ள விவசாயிகளுக்கு உதவுவதற்காக, இந்திய அரசு இந்திய விவசாயத்தில் காலநிலை தழுவல் வரைபடத்தை (ACASA-இந்தியா) அறிமுகப்படுத்தியுள்ளது.
- இது இந்திய வேளாண் ஆராய்ச்சிக் கழகம் (ICAR) தலைமையிலான தேசிய வேளாண் ஆராய்ச்சி மற்றும் விரிவாக்க அமைப்பு (NARES) மற்றும் சர்வதேச மக்காச்சோளம் மற்றும் கோதுமை மேம்பாட்டு மையத்தின் (CIMMYT) கீழ் உள்ள போர்லாக் தெற்காசிய நிறுவனம் (BISA) ஆகியவை இணைந்து உருவாக்கப்பட்டது.

- இந்தத் தளம், அமைவிடம் சார்ந்த, தரவு அடிப்படையிலான வழிகாட்டுதலைக் கால நிலை தாங்குதிறன் கொண்ட விவசாய மேம்பாட்டிற்காக வழங்குகிறது.
- ACASA-இந்தியா வழங்கும் நுண்ணறிவுகள், காலநிலை இடர் குறைப்பு மற்றும் வாய்ப்புகளை விரிவுபடுத்துவதற்கான எதிர்கால முதலீடுகள் குறித்து முடிவெடுக்க அரசாங்க நிறுவனங்களுக்கு உதவும்.
- காலநிலை மாற்றத்திற்கு எதிராக இந்திய விவசாயத்தை வலுப்படுத்தும் நோக்குடன், தேசிய காலநிலை மீள்திறன் விவசாயத் திட்டமானது (NICRA) 2011 ஆம் ஆண்டில் இந்திய வேளாண் ஆராய்ச்சிக் கழகத்தால் (ICAR) தொடங்கப்பட்டது.
- காலநிலை தாங்குதிறன் கொண்ட விவசாயம் (CRA) என்பது, வறட்சி, வெள்ளம் மற்றும் தீவிர வானிலை போன்றப் பாதிப்புகளை விவசாய அமைப்புகள் தாங்கி, விரைவாக மீண்டு வர உதவுவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.
- இந்தியாவில் உள்ள கிராமப்புறக் குடும்பங்களில் சுமார் 57% பேர் விவசாயத்தையே சார்ந்துள்ளனர் என்பதோடு மொத்த சாகுபடிப் பரப்பில் சுமார் 51% மழைநீரை நம்பியே உள்ளது என்ற நிலையில் இது காலநிலை மாற்றங்களால் பாதிக்கப்படக் கூடியதாக அமைகிறது.

## இந்தியாவின் 77வது குடியரசு தினம் – முக்கிய அம்சங்கள்

- புது தில்லியின் கர்த்தவ்யா பாதையில் 2026 ஆம் ஆண்டு ஜனவரி 26 அன்று நடைபெற்ற 77வது குடியரசு தினக் கொண்டாட்டங்களின் போது, குடியரசுத் தலைவர் திரௌபதி முர்முவுடன் இணைந்து தேசியக் கொடியைப் பறக்கவிட்டு, விமானப் படை துணை நிலை தளபதியான அக்சிதா தங்கர் வரலாறு படைத்துள்ளார்.
- சிறப்பு விருந்தினர்களாக ஐரோப்பிய ஆணையத்தின் தலைவர் உர்சுலா வான் டெர் லேயன் மற்றும் ஐரோப்பிய கவுன்சிலின் தலைவர் அன்டோனியோ கோஸ்டா ஆகியோர் கலந்துகொண்டனர்.
- உர்சுலா வான் டெர் லேயன், இந்தியாவின் குடியரசு தினக் கொண்டாட்டங்களில் தலைமை விருந்தினராகப் பங்கேற்ற முதல் ஐரோப்பிய ஆணையத்தின் தலைவர் ஆவார்.
- இவ்வருட குடியரசு தின அணிவகுப்பின் மையக் கருப்பொருள் 'வந்தே மாதரம்' என்பதாகும்.
- முதன்முறையாக, இந்தியாவின் பாலைவன மற்றும் எல்லைப் பாதுகாப்புப் படைகளை முன்னிலைப்படுத்தும் வகையில், ஒரு பாக்ட்ரியன் ஒட்டகம் (இரட்டைத் திமில் ஒட்டகம்) அணிவகுப்பில் சேர்க்கப்பட்டது.
- குடியரசு தினம் என்பது, 1950 ஆம் ஆண்டு ஜனவரி 26 ஆம் தேதி நடைமுறைக்கு வந்த இந்திய அரசியலமைப்புச் சட்டம் ஏற்றுக் கொள்ளப் பட்டதைக் குறிக்கிறது.

## கிரந்த குடீர்

- குடியரசுத் தலைவர் திரௌபதி முர்மு, புது தில்லியில் உள்ள ராஷ்டிரபதி பவனில் 'கிரந்த குடீர்' என்ற புத்தக இல்லத்தைத் திறந்து வைத்தார்.
- கிரந்த குடிரில் தமிழ், சமஸ்கிருதம், கன்னடம், மலையாளம், ஒடியா, மராத்தி, பாலி, பிராகிருதம், அசாமி மற்றும் பெங்காலி உள்ளிட்ட 11 செம்மொழி இந்திய மொழிகளில் சுமார் 2,300 புத்தகங்களின் தொகுப்பு உள்ளது.

- இந்தத் தொகுப்பு காவியங்கள், தத்துவம், மொழியியல், வரலாறு, ஆட்சிமுறை, அறிவியல், பக்தி இலக்கியம் மற்றும் இந்திய அரசியலமைப்புச் சட்டம் போன்ற தலைப்புகளை உள்ளடக்கியது.
- சுமார் 50 பனை ஓலை, காகிதம், மரப்பட்டை மற்றும் துணி ஆகியவற்றில் எழுதப்பட்ட கையெழுத்துப் பிரதிகள் இந்தத் தொகுப்பில் உள்ளன.
- இந்தியாவின் கலாச்சார, இலக்கிய மற்றும் அறிவுசார் பாரம்பரியம் குறித்து விழிப்புணர்வை ஏற்படுத்துவதே இதன் நோக்கமாகும்.

## 100 GW நீரேற்ற சேமிப்பு

- 2047 ஆம் ஆண்டுக்குள் 100 ஜிகாவாட் மின்சாரத்தை உற்பத்தி செய்யும் அளவில் நீரேற்ற சேமிப்பிடத்தை அமைக்க இந்தியா திட்டமிட்டுள்ளது.
- மேல்நோக்கி நீரேற்ற செய்யப்பட்ட சேமிப்பிடமானது மேல்நோக்கி தண்ணீரை ஏற்றவும், அதிக்கப்பட்ச மின் தேவையின் போது மின்சாரம் தயாரிக்கவும் கூடுதல் மின்சாரத்தைப் பயன்படுத்துகிறது.
- இது மின்சார விநியோகத்தை நிர்வகிக்கவும், சூரிய மின்னாற்றல் மற்றும் காற்று ஆற்றல் போன்ற புதுப்பிக்கத்தக்க ஆற்றல் ஆதரிக்கவும் உதவும்.
- மத்திய மின்சார ஆணையம் (CEA) இந்தத் திட்டங்களுக்காக 120 சாத்தியமான இடங்களைக் கண்டறிந்துள்ளது.
- ஏற்கனவே சுமார் 22 ஜிகாவாட் அளவிலான திட்டங்கள் கட்டுமானப் பணியில் உள்ளன, மேலும் 50 முதல் 60 ஜிகாவாட் வரையிலான திட்டங்கள் படிப்படியாகச் செயல் படுத்துவதற்காகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளன.

## குடியரசு தின அணிவகுப்பில் LR-AShM ஏவுகணை

- DRDO அமைப்பானது, 77வது குடியரசு தின அணிவகுப்பில் LR-AShM அதிவேக இழைவியக்க ஏவுகணை அமைப்பை முதன்முறையாக காட்சிப்படுத்தியது.
- இந்த நீண்டதூரத் தாக்குதல் வரம்புடைய கப்பல் எதிர்ப்பு ஏவுகணையானது (LR-AShM) உள்நாட்டிலேயே உருவாக்கப்பட்ட ஒரு மீயொலி வேக இழைவியக்க ஏவுகணையாகும்.
- இது முக்கியமாக இந்திய கடற்படையின் கடலோர பாதுகாப்பு நடவடிக்கைகளுக்காக வடிவமைக்கப்பட்டுள்ளது.
- இது அதிக மதிப்புள்ள எதிரிக் கடற்படை இலக்குகளை அதிக துல்லியத்துடன் தாக்கும் திறன் கொண்டது.

## கார்பன் மதிப்பு வர்த்தகத் திட்ட விரிவாக்கம்

- சுற்றுச்சூழல், வனம் மற்றும் காலநிலை மாற்ற அமைச்சகமானது, கூடுதலாக 208 அதிக உமிழ்வு வெளியிடும் அலகுகளுக்கு பசுமை இல்ல வாயு உமிழ்வுச் செறிவுக் குறியீட்டு இலக்குகளை அறிவித்துள்ளது.

- இந்த அறிவிப்பு பெட்ரோலியச் சுத்திகரிப்பு நிலையங்கள், பெட்ரோ கெமிக்கல்ஸ், ஜவுளி மற்றும் இரண்டாம் நிலை அலுமினியம் ஆகிய நான்கு புதிய துறைகளை கார்பன் மதிப்பு வர்த்தகத் திட்டத்தின் கீழ் கொண்டு வந்துள்ளது.
- இந்தச் சேர்க்கையின் மூலம், இந்தத் திட்டத்தின் கீழ் உள்ள கட்டாய நிறுவனங்களின் மொத்த எண்ணிக்கை 490 ஆக அதிகரித்துள்ளது.
- முன்னதாக, அலுமினியம், சிமெண்ட், குளோர்-காரம் மற்றும் கூழ் மற்றும் காகிதத் துறைகளுக்கான பசுமை இல்ல வாயு வெளியேற்றச் செறிவுக் குறியீட்டு இலக்குகள் அக்டோபர் 2025ல் அறிவிக்கப்பட்டன.
- இந்தியக் கார்பன் சந்தையைச் செயல்படுத்தும் நோக்கில், கார்பன் மதிப்பு வர்த்தகத் திட்டம் (CCTS) 2023- அறிவிக்கப்பட்டது.
- இந்தத் திட்டம் அதிகப்படியான உமிழ்வுக் குறைப்புகளை அடையும் தொழில்கள் வர்த்தகத்திற்கான கார்பன் மதிப்பு சான்றிதழ்களைப் பெற அனுமதிக்கிறது.

## இராணுவ கால்நடைப்பிரிவு அணிவகுப்பு 2026

- இராணுவ கால்நடைப்பிரிவானது (RVC) 2026ஆம் ஆண்டு குடியரசு தின அணிவகுப்பில் முதன்முறையாக பங்கேற்றது.
- அதன் 247 ஆண்டுகால வரலாற்றில் முதல்முறையாக, இப்படைப்பிரிவுக்கு ஒரு பெண் அதிகாரி தலைமை தாங்கினார்.
- 2023-ல் RVC-யில் இணைந்த கேப்டன் ஹர்ஷிதா ராகவ் இந்தக் குழுவிற்குத் தலைமை தாங்கினார்.
- இந்த படைப்பிரிவு முதலில் 1779-ல் வங்காளத்தில் குதிரை துறை (Stud Department) என்ற பெயரில் நிறுவப்பட்டது, பின்னர் 1960-ல் முறையாக RVC எனப் பெயரிடப்பட்டது.
- RVC ஆனது இந்தியா முழுவதும் இராணுவ நடவடிக்கைகள், தளவாடங்கள், உளவுப்பணி, போர் ஆதரவு மற்றும் பேரிடர் நிவாரணப் பணிகளுக்கு ஆதரவு அளிக்கிறது.

## இந்தியாவின் மலேரியா தடுப்பு முன்னேற்ற அறிக்கை

- இந்தியா 2015 மற்றும் 2023க்கு இடையில் மலேரியா பாதிப்புகளைக் கிட்டத்தட்ட 80% குறைத்துள்ளதுடன், 2030 ஆம் ஆண்டுக்கான தனது ஒழிப்பு இலக்கை அடைவதற்கான பாதையில் உள்ளது.
- தேசிய மலேரியா ஒழிப்பு கட்டமைப்புத் திட்டத்தின் கீழ், 2030 ஆம் ஆண்டுக்குள் மலேரியாவை ஒழிக்க இந்தியா இலக்கு நிர்ணயித்துள்ளது.
- 2023 ஆம் ஆண்டில், திரிபுரா (5.69) மற்றும் மிசோரம் (14.23) தவிர, 34 மாநிலங்கள் மற்றும் ஒன்றியப் பிரதேசங்களில் 1,000 மக்கள் தொகைக்கு வருடாந்திர மலேரியா ஒட்டுண்ணி பாதிப்பு விகிதம் (API) 1க்கும் குறைவாக இருந்தது.
- 2025 ஆம் ஆண்டிற்குள், 23 மாநிலங்கள்/ஒன்றியப் பிரதேசங்களில் உள்ள 160 மாவட்டங்கள் 2022 மற்றும் 2024 ஆம் ஆண்டுகளுக்கு இடையில் பூர்வீக மலேரியா பாதிப்புகள் எதுவும் இல்லை என்று தெரிவித்துள்ளன.

## இந்தியாவின் புதுப்பிக்கத்தக்க ஆற்றல் திறன்

- இந்தியா தனது நிறுவப்பட்ட மின்சார உற்பத்தி அமைப்பில் 50 சதவீதத்தை புதை படிவமல்லாத எரிபொருள் மூலங்களிலிருந்து பெறுவதில், 2030 இலக்குக்கு ஐந்து ஆண்டுகளுக்கு முன்பே அந்த இலக்கை எட்டி வருகிறது.
- ஜூன் 30, 2025 நிலவரப்படி, இந்தியாவின் மொத்த நிறுவப்பட்ட மின் உற்பத்தித் திறன் 484.82 ஜிகாவாட் (GW) ஆகும்.
- இதில், 242.8 ஜிகாவாட் மின்சாரம் புதைபடிவமல்லாத எரிபொருள் மூலங்களிலிருந்து வருகிறது என்பதுடன் 8.78 ஜிகாவாட் அணுசக்தி, 49.38 ஜிகாவாட் நீர்மின்சக்தி மற்றும் 184.62 ஜிகாவாட் புதுப்பிக்கத்தக்க ஆற்றல் ஆகியவை அடங்கும்.
- புதுப்பிக்கத்தக்க ஆற்றல் மூலங்களில், சுமார் 5.10 ஜிகாவாட் சிறிய அளவிலான நீர் மின்னாற்றால் உற்பத்தி அமைப்பு, 51.67 ஜிகாவாட் காற்றாலை மின்சக்தி, 11.59 ஜிகா வாட் உயிரி ஆற்றல் மற்றும் 116.25 ஜிகாவாட் சூரிய மின்சக்தி ஆகியவை அடங்கும்.
- இந்தச் சாதனையானது, பாரீஸ் ஒப்பந்தத்தின் கீழ் இந்தியாவின் தேசிய அளவில் நிர்ணயிக்கப் பட்ட பங்களிப்புகளின் (NDCs) ஒரு பகுதியாகும்.

## இந்தியாவின் முதல் தேசிய வருமான ஆய்வுகள்

- தேசியப் புள்ளியியல் அலுவலகம் (NSO) குடும்ப வருமானம் மற்றும் பெருநிறுவனச் சேவைகள் குறித்த இந்தியாவின் முதல் நாடு தழுவிய ஆய்வுகளுக்குத் தயாராகி வருகிறது.
- இந்த ஆய்வுகளில் தேசிய குடும்ப வருமான ஆய்வு (NHIS) மற்றும் பதிவு செய்யப்பட்ட சேவைத் துறை நிறுவனங்களின் வருடாந்திர ஆய்வு (ASISSE) ஆகியவை அடங்கும்.
- ஏப்ரல் 2026ல் களப்பணியைத் தொடங்கும் இந்த இரண்டு ஆய்வுகளும் முழுமையாக டிஜிட்டல் முறையில் நடத்தப்படும்.
- NHIS ஆனது குடும்ப வருமானப் பங்கீடு, வாழ்க்கை நிலைமைகள், உழைப்பு, மூலதனம் மற்றும் நிலம் ஆகியவற்றிலிருந்து கிடைக்கும் வருமானம் குறித்த தரவுகளைச் சேகரித்து, கொள்கைத் திட்டமிடல் மற்றும் பொருளாதாரப் பகுப்பாய்விற்கு ஆதரவு அளிக்கிறது.
- ASISSE ஆனது, சரக்கு மற்றும் சேவை வரி வலையமைப்பு (GSTN) கட்டமைப்பைப் பயன்படுத்தி, ஒருங்கிணைக்கப்பட்ட சேவைத் துறை நிறுவனங்களில் கவனம் செலுத்தி, மொத்த மதிப்புக் கூட்டல், மூலதன உருவாக்கம், வேலைவாய்ப்பு மற்றும் ஊதியங்கள் போன்றவற்றைச் சேகரிக்கிறது.

# சர்வதேசச் செய்திகள்

## 2,200 ஆண்டுகள் பழமையான சீன நெடுஞ்சாலை

- தொல்பொருள் ஆராய்ச்சியாளர்கள் சீனாவில் பேரரசர் கின் ஷி ஹுவாங்கால் கட்டப் பட்ட 900 கி.மீ நெடுஞ்சாலையான 2,200 ஆண்டுகள் பழமையான கின் நேரடிச் சாலையைக் கண்டறிந்துள்ளனர்.
- சியான்யாங்கிலிருந்து ஜியுயுவான் வரை செல்கின்ற இந்த சாலை கிமு 212 மற்றும் கிமு 207 ஆகிய ஆண்டுகளுக்கு இடையில் ஜெனரல் மெங் தியனின் மேற்பார்வையின் கீழ் கட்டமைக்கப்பட்டது.
- சியாங்னு நாடோடிகளுக்கு எதிரான விரைவான வீரர்களின் நகர்வுகளுக்காக என்று வடிவமைக்கப் பட்ட இந்த சாலை திமித்த மண், நிரப்பப்பட்ட பள்ளத்தாக்குகள் மற்றும் நேரான அகழிகளுடன் 40-60 மீட்டர் அகலமுள்ள ஒரு சமமான பாதையாக உருவாக்கப் பட்டது.
- ஷான்சியின் யூலினில் நடைபெற்ற அகழ்வாராய்ச்சிகள், இறுக்கப்பட்ட சாலைப் படுகைகள், வலுவூட்டப்பட்ட சரிவுகள் மற்றும் அதிகப் பயன்பாட்டிற்கான சான்றுகளைக் கொண்ட 13 கி.மீ நீளமுள்ள ஒரு பகுதியை வெளிப்படுத்தின.
- அருகிலுள்ள ரிலே நிலையத்தில் கின்-டு-ஹான் மட்பாண்டங்கள் இருந்தன, இது அதன் நீண்டகால மூலோபாய மற்றும் வணிக முக்கியத்துவத்தை உறுதிப்படுத்துகிறது.
- "உலக நெடுஞ்சாலைகளின் மூதாதையர்" என்று கருதப்படுகின்ற இந்த நெடுஞ்சாலை அளவு மற்றும் பாதுகாப்புச் செயல்பாட்டில் சீனப் பெருஞ்சுவருக்கு அடுத்தபடியாக உள்ளது.

## புதிய பண மதிப்புத் தொடர் - சிரியா

- சிரியாவின் இடைக்கால அதிபர் அகமது அல்-ஷாரா நாட்டின் புதிய பணத் தாள்களை வெளியிட்டார்.
- பதவி நீக்கம் செய்யப்பட்ட தலைவர் பஷர் அல்-அசாத் மற்றும் அவரது தந்தை ஹபீஸ் அல்-அசாத்தின் படங்கள் அகற்றப்பட்டன.
- ஜனவரி 01 ஆம் தேதி புழக்கத்தில் வரும் புதிய பண மதிப்பில், ஏற்கனவே உள்ள பணத் தாள்களில் இருந்து இரண்டு சுழிகள் நீக்கப்பட்டதைத் தொடர்ந்து 10, 25, 50, 100, 200 மற்றும் 500 சிரிய பவுண்டுகள் மதிப்புகள் உள்ளன.
- 2023 ஆம் ஆண்டில், சிரிய பவுண்டின் மதிப்பு மாற்று விகிதம் ஒரு டாலருக்கு 15,000 பவுண்டுகளாகக் குறைந்துள்ளது.

## கினியா அதிபர் தேர்தல்

- கினியாவின் ஆட்சிக் கவிழ்ப்புக் குழுவின் தலைவர் மமாடி டூம்பௌயா அதிபராகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார்.
- 2021 ஆம் ஆண்டில் இராணுவம் கையகப்படுத்தியதிலிருந்து நாட்டில் நடைபெற்ற முதல் தேர்தல் இதுவாகும்.

- 2021 ஆம் ஆண்டில் அதிபர் ஆல்பா கோண்டேயிடமிருந்து அவர் அதிகாரத்தைக் கைப்பற்றினார்.
- கினியா உலகின் மிகப்பெரிய பாக்சைட் இருப்புக்களையும், சிமண்டோவில் உள்ள வெளிக் கொணரப்படாத இரும்புத் தாது இருப்புக்களையும் கொண்டுள்ளது.

## புதிய கிரிப்டோ சட்டம் – துர்க்மெனிஸ்தான்

- துர்க்மெனிஸ்தான் இணைய சங்கேதப் பண எடுப்பு மற்றும் பரிமாற்ற நடவடிக்கைகளை அதிகாரப்பூர்வமாக சட்டப்பூர்வமாக்கியுள்ளது.
- இந்தச் சட்டம் இணைய சங்கேதப் பணங்களை உரிமையியல் சட்டத்தின் கீழ் நிர்வகிக்கப் படும் மெய்நிகர் சொத்துக்களாக வகைப்படுத்துகிறது.
- டிஜிட்டல் நாணயங்கள் நாட்டில் சட்டப்பூர்வப் பணம், நாணயம் அல்லது பத்திரங்களாக அங்கீகரிக்கப்படவில்லை.
- இணைய சங்கேதப் பணப் பரிமாற்றங்களுக்கு உரிமங்கள் அவசியம் என்பதோடு மேலும் அவை துர்க்மெனிஸ்தானின் மத்திய வங்கியின் மேற்பார்வையின் கீழ் செயல் படும்.
- பொருளாதாரத்தின் மீது கடுமையான அரசு கட்டுப்பாட்டைப் பேணச் செய்யும் அதே வேளையில் இணைய சங்கேதப் பண நடவடிக்கைகளை ஒழுங்குபடுத்துவதே இந்தச் சட்டத்தின் நோக்கமாகும்.

## வருடாந்திர அணுசக்திப் பட்டியல் பரிமாற்றம் 2026

- 2026 ஆம் ஆண்டு ஜனவரி 01 ஆம் தேதியன்று இந்தியா மற்றும் பாகிஸ்தான் தங்கள் அணுசக்தி நிறுவல்களின் பட்டியல்களைப் பரிமாறிக் கொண்டன.
- அணுசக்தி நிறுவல்கள் மற்றும் மையங்களுக்கு எதிரான தாக்குதல்களைத் தடை செய்வதற்கான ஒப்பந்தத்தின் கீழ் இந்தப் பரிமாற்றம் மேற்கொள்ளப்பட்டது.
- இந்த ஒப்பந்தம் 1988 ஆம் ஆண்டு டிசம்பர் 31 ஆம் தேதியன்று கையெழுத்திடப்பட்டு, 1991 ஆம் ஆண்டு ஜனவரி 27 ஆம் தேதியன்று அமலுக்கு வந்தது.
- நம்பிக்கையை வளர்க்கும் நடவடிக்கையாக இந்த இரு நாடுகளும் ஒவ்வோர் ஆண்டும் ஜனவரி 01 ஆம் தேதியன்று இந்தப் பட்டியல்களைப் பரிமாறிக் கொள்கின்றன.
- இந்தப் பரிமாற்றம் புது டெல்லி மற்றும் இஸ்லாமாபாத்தில் உள்ள அரசுமுறை வழி முறைகள் மூலம் நடத்தப்பட்டது.
- 2008 ஆம் ஆண்டின் தூதரக அணுகல் ஒப்பந்தத்தின் கீழ் இந்தியாவும் பாகிஸ்தானும் கைதிகளின் பட்டியல்களைப் பரிமாறிக் கொண்டன.

## யூரோ மண்டலத்தின் 21வது உறுப்பினர் – பல்கேரியா

- பல்கேரியா நாடானது யூரோவை அதிகாரப்பூர்வமாக ஏற்றுக் கொண்டதுடன், யூரோ மண்டலத்தின் 21வது உறுப்பினராக மாறியது.
- பல்கேரியா 19 ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியிலிருந்து பயன்பாட்டில் இருந்த அதன் தேசியப் பண மதிப்பான லெவிற்கு மாற்றாக யூரோவினை ஏற்றது.

- பல்கேரியா ஐரோப்பிய ஒன்றியத்தில் (EU) இணைந்த சுமார் 20 ஆண்டுகளுக்குப் பிறகு இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.
- யூரோ ஏற்பு ஆனது வர்த்தகத்தை அதிகரிப்பது, விலைகளில் வெளிப்படைத் தன்மையை மேம்படுத்துவது மற்றும் வெளிநாட்டு முதலீட்டை ஈர்ப்பது ஆகியவற்றை நோக்கமாகக் கொண்டுள்ளது.
- யூரோ மண்டலம் என்பது யூரோவை (€) தங்கள் பொதுவான பண மதிப்பாகப் பயன்படுத்தும் ஐரோப்பிய ஒன்றிய நாடுகளின் குழுவாகும்.
- பல்கேரியாவின் சேர்ப்புடன், யூரோ தற்போது ஐரோப்பா முழுவதும் சுமார் 350 மில்லியனுக்கும் அதிகமான மக்களால் பயன்படுத்தப்படுகிறது.

## ஐரோப்பிய ஒன்றியத்தின் பருவநிலை வர்த்தக நடவடிக்கை

- ஐரோப்பிய ஒன்றியம் (EU) ஆனது கார்பன் எல்லைச் சீரமைப்புச் செயல்முறையை (CBAM) தொடங்கியது.
- CBAM ஆனது எஃகு, அலுமினியம், சிமெண்ட், இரசாயனங்கள், காகிதம், கண்ணாடி, உரங்கள் மற்றும் மின்சாரத் துறைப் பொருட்களின் இறக்குமதிக்கு கார்பன் வரியை விதிக்கிறது.
- உற்பத்தியில் வெளியாகும் அதிக கார்பன் உமிழ்வு காரணமாக எஃகு, இரும்பு மற்றும் அலுமினியத்தின் இந்திய ஏற்றுமதிகள் பாதிக்கப் படுகின்றன.
- பெரும்பாலான இந்திய எஃகு ஊது உலை–அடிப்படை ஆக்ஸிஜன் உலை (BF–BOF) முறையில் தயாரிக்கப்படுகிறது என்பதோடு இது அதிக உமிழ்வை உருவாக்குகிறது.
- தூய்மையான எஃகு உற்பத்தியானது எஃகுக் கழிவுகளை மறுசுழற்சி செய்யும் மின்சார விற்பொறி உலை (EAF) வழித்தடத்தைப் பயன்படுத்துகிறது.
- CBAM ஆனது இந்திய ஏற்றுமதியாளர்களுக்கான செலவுகளை அதிகரிக்கக் கூடும் மற்றும் குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில்துறை நிறுவனங்களை (MSME) அதிகம் பாதிக்கக் கூடும்.

## கங்கை நீர்ப் பகிர்வு குறித்த இருதரப்புப் பேச்சுவார்த்தைகள்

- இந்தியா மற்றும் வங்காளதேசம் ஆகிய நாடுகள் ஆனது 2026 ஆம் ஆண்டு டிசம்பர் மாதத்தில் காலாவதியாக உள்ள கங்கை நீர்ப் பகிர்வு ஒப்பந்தத்தை புதுப்பிப்பதற்காக பேச்சுவார்த்தைகளைத் தொடங்கியுள்ளன.
- ஃபராக்கா தடுப்பணையில் வறண்ட பருவ காலங்களில் கங்கையின் நீரைப் பகிர்ந்து கொள்வதற்காக இந்த ஒப்பந்தம் முதலில் 1996 ஆம் ஆண்டில் கையெழுத்தானது.
- மே 31 ஆம் தேதி வரை 10 நாட்களுக்கு ஒருமுறை கங்கை மற்றும் பத்மா நதிகளில் கூட்டு நீர் அளவீடுகளை அதிகாரிகள் மேற்கொண்டு வருகின்றனர்.
- இந்திய-வங்காளதேச கூட்டு நதி ஆணையம் ஆனது இரு நாடுகளுக்கும் இடையிலான நீர்ப் பகிர்வு விவகாரங்களை ஒருங்கிணைக்கிறது.
- இந்தியாவும் வங்காளதேசமும் 54 எல்லை தாண்டிய ஆறுகளைப் பகிர்ந்து கொள்கின்றன என்பதோடு ஃபரக்கா தடுப்பணை 1975 ஆம் ஆண்டில் கட்டப்பட்டது.

- அதிகரித்து வரும் நீர் நெருக்கடிக்கு மத்தியில் உள்நாட்டு நீர் தேவைகளைப் பிராந்திய ஒத்துழைப்புடன் சமநிலைப்படுத்துவதே இந்தப் பேச்சுவார்த்தைகளின் நோக்கம் ஆகும்.

## UNSC சபையின் 2026 ஆம் ஆண்டிற்கான நிரந்தரமற்ற உறுப்பினர்கள்

- பஹ்ரைன், கொலம்பியா, காங்கோ ஜனநாயகக் குடியரசு, லாட்வியா மற்றும் லைபீரியா ஆகியவை UNSC சபையின் நிரந்தரமற்ற உறுப்பினர்களாக இரண்டு ஆண்டு காலப் பதவிக் காலத்தைத் தொடங்கியுள்ளன.
- அவை கடந்த மாதம் பதவிக் காலம் முடிந்த அல்ஜீரியா, கயானா, கொரியக் குடியரசு, சியரா லியோன் மற்றும் ஸ்லோவேனியா ஆகியவற்றிற்குப் பதிலாக இணைந்துள்ளன.
- UNSC சபையில் நிரந்தரமற்ற இடங்களுக்கான தேர்தல் செயல்பாட்டில் பிராந்தியக் குழுக்கள் வேட்பாளர்களைப் பரிந்துரைக்கின்றன.
- அவற்றில் நான்கு பிராந்திய குழுக்கள் உள்ளன.
- UNSC 5 நிரந்தர (P5) மற்றும் 10 நிரந்தரமற்ற உறுப்பினர்களைக் கொண்டுள்ளது.
- 10 நிரந்தரமற்ற உறுப்பினர்களில், ஐந்து உறுப்பினர்கள் ஒவ்வோர் ஆண்டும் பொதுச் சபையால் இரண்டு ஆண்டு காலத்திற்கு தேர்ந்தெடுக்கப்படுகின்றன.

## உலகளாவிய ஆளுகை முன்னெடுப்பு

- சீனா தனது நான்கு உலகளாவிய முன்னெடுப்புகளின் மையமாக அதன் உலகளாவிய ஆளுகை முன்னெடுப்பினை (GGI) மீண்டும் வலியுறுத்தியுள்ளது.
- GGI என்பது தற்போதுள்ள உலகளாவிய ஆளுகை அமைப்பை சீர்திருத்துவதற்கான சீனாவின் முன்மொழிவாகும்.
- இது உலகளாவிய ஆளுகையை உள்ளடக்கியதாகவும், பிரதிநிதித்துவமாகவும், மக்களை மையமாகக் கொண்டதாகவும் மாற்றுவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.
- சர்வதேச முடிவெடுத்தல் நடவடிக்கையில் வளர்ந்து வரும் நாடுகளின் அதிக அளவுப் பங்கேற்பிற்கு GGI அழைப்பு விடுக்கிறது.
- இது சர்வதேச நிறுவனங்களின் சீர்திருத்தம் மற்றும் பருவநிலை மாற்றம், வர்த்தகம், நிதி மற்றும் செயற்கை நுண்ணறிவு (AI) ஆகியவற்றில் ஒத்துழைப்பை ஆதரிக்கிறது.
- உலகமயமாக்கலின் நன்மைகள் அனைத்து நாடுகளையும் மக்களையும் சென்று அடைவதை உறுதி செய்வதை இந்த முயற்சி நோக்கமாகக் கொண்டுள்ளது.

## மன்றோ கோட்பாடு

- வெனிசுலாவில் அமெரிக்க இராணுவ நடவடிக்கையை நியாயப்படுத்துவதற்காக அமெரிக்க அதிபர் டொனால்ட் டிரம்ப் மன்றோ கோட்பாட்டைப் பயன்படுத்தினார்.
- இந்தக் கோட்பாடு நவீன புவிசார் அரசியல் மற்றும் சர்வதேச உறவுகளைத் தொடர்ந்து பாதிக்கிறது.
- மன்றோ கோட்பாடு 1823 ஆம் ஆண்டில் அமெரிக்க அதிபர் ஜேம்ஸ் மன்றோவால் அறிவிக்கப் பட்டது.

- ஐரோப்பிய நாடுகள் மேற்கு அரைக்கோளத்தின் விவகாரங்களில் தலையிடக் கூடாது என்று மன்றோ கோட்பாடு கூறியது.
- அதற்கு ஈடாக, ஐரோப்பிய அரசியல் விவகாரங்களில் தலையிட மாட்டோம் என்று அமெரிக்கா அறிவித்தது.
- இந்தக் கோட்பாடு புதிதாக சுதந்திரம் பெற்ற இலத்தீன் அமெரிக்க நாடுகளை ஐரோப்பிய காலனித்துவத்திலிருந்து பாதுகாப்பதை நோக்கமாகக் கொண்டது.

## உலகளாவிய குறைந்தபட்ச வரி ஒப்பந்தம்

- பொருளாதார ஒத்துழைப்பு மற்றும் மேம்பாட்டு அமைப்பு (OECD) மற்றும் G20 நாடுகள் உலகளாவிய குறைந்தபட்ச வரித் தொகுப்பில் உடன்பட்டன.
- பன்னாட்டு நிறுவனங்களால் வரி வருவாய் ஏய்ப்பு மற்றும் இலாப மாற்றத்தை (BEPS) இந்த வரி இலக்காகக் கொண்டுள்ளது.
- இலாபம் ஈட்டும் நாடுகளுக்கு வரி விதிப்பு உரிமைகளை முதலாம் பிரிவு மறு ஒதுக்கீடு செய்கிறது.
- இரண்டாம் பிரிவு வரிப் போட்டியை தடுக்க உலகளாவியக் குறைந்தபட்ச நிறுவன வரியை 15% ஆக நிர்ணயிக்கிறது.
- இந்தத் தொகுப்பில் எளிமைப்படுத்தல் நடவடிக்கைகள், பாதுகாப்பான துறைமுகங்கள் மற்றும் பொருள் சார்ந்த வரிச் சலுகைகள் ஆகியவை அடங்கும்.
- 2016 ஆம் ஆண்டில் 147 நாடுகளுடன் தொடங்கப்பட்ட BEPS மீதான OECD/G20 உள்ளடக்கிய கட்டமைப்பில் இந்தியா உறுப்பினராக உள்ளது.

## அமெரிக்காவின் வெளியுறவுக் கொள்கை மாற்றம்

- டிரம்ப் நிர்வாகத்தின் கீழ், அமெரிக்கா 66 சர்வதேச அமைப்புகளிலிருந்து விலகுவதாக அறிவித்துள்ளது.
- இதில் 31 ஐக்கிய நாடுகள் சபையின் அமைப்புகளும் 35 ஐநாவுடன் தொடர்பில்லாத அமைப்புகளும் அடங்கும்.
- அமெரிக்கா மீண்டும் பாரிஸ் ஒப்பந்தத்திலிருந்து விலகவுள்ளது என்ற நிலையில் இது ஜனவரி 27, 2026 அன்று நடைமுறைக்கு வரும்.
- முக்கியமான உலகளாவிய காலநிலை ஒப்பந்தமான ஐக்கிய நாடுகள் சபையின் காலநிலை மாற்றத்திற்கான கட்டமைப்பு ஒப்பந்தத்திலிருந்தும் அமெரிக்கா விலகத் திட்டமிட்டுள்ளது.
- இந்த விலகலில், காலநிலை மாற்றத்திற்கான அரசுகளுக்கிடையேயான குழு, சர்வதேச புதுப்பிக்கத்தக்க எரிசக்தி முகமை மற்றும் சர்வதேச சூரிய சக்தி கூட்டமைப்பு போன்ற முக்கிய அமைப்புகள் அடங்கும்.
- அமெரிக்கா ஐக்கிய நாடுகள் பாதுகாப்பு சபை, உலக உணவுத் திட்டம் மற்றும் ஐக்கிய நாடுகளின் அகதிகள் அமைப்பு ஆகியவற்றில் உறுப்பினராகத் தொடரும்.

## ஓரினோகோ மண்டலம் மற்றும் கயானா கேடயப் பகுதி

- அமெரிக்காவானது வெனிசுலாவின் கனிம வளம் நிறைந்த ஓரினோகோ மண்டலம் மற்றும் கயானா கேடயப் பகுதி மீது கவனம் செலுத்தியுள்ளது.
- வெனிசுலாவில் உள்ள ஓரினோகோ மண்டலமானது, உலகின் மிகப்பெரிய கூடுதல் கன கச்சா எண்ணெய் இருப்புகளைக் கொண்டுள்ளது.
- இது குவாரிகோ, அன்சோவாடெகுய், மொனாகாஸ், அமகுரோ டெல்டா மற்றும் பொலிவார் மாநிலங்கள் முழுவதும் அமைந்துள்ள ஓரினோகோ நதிப் படுகையில் அமைந்துள்ளது.
- கயானா கேடயப் பகுதி என்பது வெனிசுலா, கயானா, சுரினாம், பிரெஞ்சு கயானா, பிரேசில் மற்றும் கொலம்பியா ஆகிய நாடுகளில் பரவியுள்ள ஒரு பழமையான ப்ரீகேம்ப்ரியன் காலப் புவியியல் பகுதியாகும்.
- இது பரந்த வெப்ப மண்டலக் காடுகள், நன்னீர் வளங்கள் மற்றும் தங்கம், பாக்சைட், வைரங்கள் மற்றும் இரும்புத் தாது போன்ற கனிமப் படிவுகளைக் கொண்டுள்ளது.
- இதில் ஏஞ்சல் நீர்வீழ்ச்சி, ரொரைமா மலை மற்றும் பிக்கோ டா நெப்லினா போன்ற புகழ்பெற்ற அம்சங்களும் அடங்கும்.

## பிரிக்ஸ் அமைப்பின் தலைமைப் பதவி

- பிரேசில் நாடானது, 2026 ஆம் ஆண்டிற்கான பிரிக்ஸ் (பிரேசில், ரஷ்யா, இந்தியா, சீனா, தென்னாப்பிரிக்கா) அமைப்பின் தலைமைப் பதவியை இந்தியாவிடம் ஒப்புவித்துள்ளது.
- இந்தியா 2026-ஆம் ஆண்டில் 18வது பிரிக்ஸ் உச்சி மாநாட்டை நடத்தவுள்ளது.
- இந்தியாவின் தலைமைப் பதவியானது பின்வரும் நான்கு முக்கியப் பகுதிகளில் கவனம் செலுத்துகிறது: மீள்தன்மை, புத்தாக்கம், ஒத்துழைப்பு மற்றும் சுற்றுச்சூழல் நிலைத்தன்மை.
- இந்தியாவானது சர்வதேச நாணய நிதியம் மற்றும் உலக வங்கி போன்ற சர்வதேச நிறுவனங்களை மாற்றுவதற்குப் பதிலாக, உலகளாவிய நிர்வாகத்தில் சீர்திருத்தங்களைக் கொண்டுவர நோக்கமாகக் கொண்டுள்ளது.
- இந்தியாவானது உலகளாவிய தெற்கு நாடுகளின் பிரச்சினைகளைப் பிரதிநிதித்துவப்படுத்துகிறது மற்றும் ஒரு பலதுருவ உலக ஒழுங்கை ஊக்குவிக்கிறது.
- பிரிக்ஸ் அமைப்பில் உலக மக்கள் தொகையில் சுமார் 49.5%, உலக மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 40%, மற்றும் உலக வர்த்தகத்தில் 26% ஆகியவை அடங்கியுள்ளன.

## முக்கிய கனிமங்கள் குறித்த G7 பேச்சுவார்த்தைகள்

- 2026 ஆம் ஆண்டு ஜனவரி மாதத்தில் வாஷிங்டனில் நடைபெறும் முக்கிய கனிமங்கள் குறித்த G7 நாடுகளின் நிதியமைச்சர்களின் பேச்சுவார்த்தையில் கலந்து கொள்ள அமெரிக்கா இந்தியாவையும் ஆஸ்திரேலியாவையும் அழைத்துள்ளது.
- பாதுகாப்பு, தொழில்நுட்பம் மற்றும் தூய்மையான எரிசக்திக்குத் தேவையான முக்கிய கனிமங்களின் விநியோகச் சங்கிலிகளைப் பாதுகாப்பதற்காக என்று இந்தக் கூட்டம் நடத்தப்படுகிறது.

- ஏழு நாடுகள் குழுவில் (G7) அமெரிக்கா, ஐக்கியப் பேரரசு (UK), ஜப்பான், பிரான்சு, ஜெர்மனி, இத்தாலி, கனடா மற்றும் ஐரோப்பிய ஒன்றியம் (EU) ஆகியவை அடங்கும்.
- ஆஸ்திரேலியாவில் அருமண் மற்றும் லித்தியத்தின் பெரிய அளவிலான இருப்புக்கள் உள்ளன என்பதோடு மேலும் அது 2025 ஆம் ஆண்டு அக்டோபர் மாதத்தில் கனிம ஒத்துழைப்பு குறித்து அமெரிக்காவுடன் ஒரு ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டது.
- லித்தியம், கோபால்ட், கிராஃபைட், தாமிரம் மற்றும் அருமண் போன்ற முக்கியமான கனிமங்களின் உலகளாவியச் சுத்திகரிப்பில் சீனா சுமார் 47% முதல் 87% வரையிலான பங்கை கொண்டுள்ளது.
- சீனாவைச் சார்ந்திருப்பதைக் குறைத்து உலகளாவிய கனிம விநியோகச் சங்கிலிகளைப் பன்முகப்படுத்துவதே இந்தப் பேச்சுவார்த்தையின் நோக்கமாகும்.

## வெய்மர் முக்கோணம்

- இந்தியாவின் வெளியுறவுத் துறை அமைச்சர் பிரான்சு, ஜெர்மனி மற்றும் போலந்துடன் சேர்ந்து வெய்மர் முக்கோண அமைப்புடனான இந்தியாவின் முதல் ஈடுபாட்டில் பங்கேற்றார்.
- வெய்மர் முக்கோணம் என்பது பிரான்சு, ஜெர்மனி மற்றும் போலந்து ஆகிய நாடுகளின் பிராந்திய அரசியல் குழுவாகும்.
- இது 1991 ஆம் ஆண்டு ஆகஸ்ட் 29 ஆம் தேதியன்று ஜெர்மனியின் வெய்மரில் வெளியிடப் பட்ட ஒரு கூட்டு அறிவிப்பின் மூலம் உருவாக்கப்பட்டது.
- ஜெர்மனிக்கும் போலந்துக்கும் இடையிலான நல்லிணக்கத்தில் பிரான்ஸை ஈடுபடுத்துவதே இதன் நோக்கங்களில் ஒன்றாகும்.
- மூன்று நாடுகளுக்கு இடையேயான அரசியல் பேச்சுவார்த்தை மற்றும் ஒத்துழைப்பை வலுப்படுத்துவதே மற்றொரு நோக்கம் ஆகும்.
- வட அட்லாண்டிக் ஒப்பந்த அமைப்பு (நேட்டோ) மற்றும் ஐரோப்பிய ஒன்றியத்தில் (EU) போலந்தின் ஒருங்கிணைப்பையும் இது ஆதரிக்கிறது.

## சர்வதேச புதுப்பிக்கத்தக்க எரிசக்தி முகமை

- இந்தியாவின் புதிய மற்றும் புதுப்பிக்கத்தக்க எரிசக்திக்கான மத்திய அமைச்சர் ஐக்கிய அரபு அமீரகத்தின் (UAE) அபுதாபியில் நடைபெற்ற சர்வதேச புதுப்பிக்கத்தக்க எரிசக்தி முகமையின் (IRENA) 16வது மாநாட்டில் பங்கேற்றார்.
- IRENA என்பது உலகளவில் புதுப்பிக்கத்தக்க எரிசக்தி பயன்பாட்டை ஊக்குவிப்பதற்காக 2009 ஆம் ஆண்டில் நிறுவப்பட்ட ஓர் அரசுகளுக்கிடையேயான அமைப்பாகும்.
- கொள்கை, தொழில்நுட்பம் மற்றும் நிதி சார் அறிவைப் பகிர்ந்து கொள்வதன் மூலம் நிலையான எரிசக்தி சார்ந்த எதிர்காலத்திற்கு மாறுவதில் உலக நாடுகளை இது ஆதரிக்கிறது.
- IRENA தலைமையகம் அபுதாபி, UAE மற்றும் 170 உறுப்பினர் நாடுகளைக் கொண்டு உள்ளது (169 நாடுகள் மற்றும் ஐரோப்பிய ஒன்றியம் (EU)) என்பதோடு இந்தியா இதன் ஒரு ஸ்தாபன உறுப்பினர் நாடாகும்.
- IRENA ஐக்கிய நாடுகள் சபையின் (UN) அதிகாரப்பூர்வப் பார்வையாளர் அமைப்பாகும்.

## ஏமனில் புதிய அரசியலமைப்பு

- பிரிவினைவாத குழுக்களின் கூட்டணியான ஏமனின் தெற்கு இடைக்கால சபை (STC), "தெற்கு அரேபியா அரசிற்கான" புதிய அரசியலமைப்பை அறிவித்தது.
- அவை வடக்கு ஏமனில் இருந்து சுதந்திரத்தை பெறுவதை நோக்கமாகக் கொண்டு உள்ளனர்.
- STC ஆனது ஐடாரஸ் காசெம் அல்-ஜுபைடியின் கீழ் 2017 ஆம் ஆண்டில் உருவாக்கப் பட்டது.
- இது ஆரம்பத்தில் ரியாத் ஒப்பந்தத்தின் மூலம் ஏமன் அரசாங்கத்தில் இணைந்தது ஆனால் பின்னர் ஏடனை மீண்டும் கைப்பற்றி 2020 ஆம் ஆண்டில் சுயாட்சியை உறுதிப்படுத்தியது.
- 2025 ஆம் ஆண்டு டிசம்பர் மாதத்தில், STC "ஆபரேஷன் பிராமிசிங் ஃபியூச்சர்" நடவடிக்கையைத் தொடங்கி, ஹட்ராமவுட் மற்றும் அல்-மஹ்ரா ஆளுகைகளின் கட்டுப்பாட்டைக் கைப்பற்றியது.
- இந்தப் பகுதி ஏமனின் 80% எண்ணெய் இருப்புக்களைக் கொண்டுள்ளது.
- சவுதி தலைமையிலான தாக்குதல்கள் விரைவில் இழந்த பிரதேசங்களை மீண்டும் கைப்பற்றின என்பதோடு மேலும் திரு. அல்-ஜுபைடி அதிபர் சபையில் இருந்து நீக்கப் பட்டு ஐக்கிய அரபு அமீரகத்திற்குத் தப்பிச் சென்றார்.
- STC தெற்கு ஏமனுக்கு சுயாட்சியை பெற தொடர்ந்து முயல்கிறது ஆனால் பிராந்திய மற்றும் உள்நாட்டு எதிர்ப்பின் காரணமாக இரு அரசு சூழலை அடைவதில் சவால்களை எதிர்கொள்கிறது.

## ரஷ்ய புதைபடிவ எரிபொருள் இறக்குமதிகள்

- ரஷ்யாவிலிருந்து கச்சா எண்ணெய் இறக்குமதி குறைந்ததால், 2025 ஆம் ஆண்டு டிசம்பர் மாதத்தில் ரஷ்யாவிலிருந்து புதைபடிவ எரிபொருட்களை வாங்குபவர்களில் இந்தியா மூன்றாவது இடத்திற்குச் சென்றது.
- 2025 ஆம் ஆண்டு நவம்பரில் 3.3 பில்லியன் யூரோவாக இருந்த இந்தியாவின் ரஷ்ய ஹைட்ரோ கார்பன் இறக்குமதி 2025 ஆம் ஆண்டு டிசம்பரில் 2.3 பில்லியன் யூரோவாக குறைந்தது.
- இது இந்தியாவை துருக்கிக்குப் பின்னால் (சுமார் 2.6 பில்லியன் யூரோ) தள்ளிய அதே நேரத்தில் சிறந்த இறக்குமதியாளர்களில் ஏற்றுமதி வருவாயில் 48% பங்குடன் சீனா மிகப் பெரிய புதைபடிவ எரிபொருள் வாங்குபவராக இருந்தது.
- இந்தியாவின் ரஷ்ய எரிசக்தி இறக்குமதியில் கச்சா எண்ணெய் 78% (1.8 பில்லியன் யூரோ) ஆகும்; நிலக்கரி (424 மில்லியன் யூரோ) மற்றும் எண்ணெய் பொருட்கள் (82 மில்லியன் யூரோ) மீதமுள்ளவை ஆகும்.
- இந்தியாவின் மொத்த கச்சா எண்ணெய் இறக்குமதியில் ரஷ்யா டிசம்பரில் சுமார் 25% பங்கினைக் கொண்டிருந்தது என்பதோடு இது 2025 ஆம் ஆண்டு நவம்பரில் 35% ஆக இருந்தது.
- அமெரிக்கத் தடைகள், G7 தலைமையிலான விலை நிர்ணய வரம்புக் கொள்கை மற்றும் தனியார் மற்றும் அரசுக்குச் சொந்தமான இந்தியச் சுத்திகரிப்பு நிறுவனங்களின் குறைக்கப் பட்ட கொள்முதல்கள் காரணமாக இந்தச் சரிவு ஏற்பட்டது.
- இந்தத் தரவு எரிசக்தி மற்றும் சுத்தமான காற்று ஆராய்ச்சி மையம் (CREA) மூலம் சிறப்பிக்கப் பட்டது.

## இந்தியா-ஜெர்மனி அரசுமுறை உறவுகள்

- இந்தியாவும் ஜெர்மனியும் 2026 ஆம் ஆண்டில் அவற்றின் 75 ஆண்டுகால அரசுமுறை உறவுகளைக் கொண்டாடுகின்றன.
- இந்தியாவிற்கும் ஜெர்மனிக்கும் இடையிலான அரசுமுறை உறவுகள் 1951 ஆம் ஆண்டில் நிறுவப்பட்டன.
- இரு நாடுகளும் 2025 ஆம் ஆண்டில் உத்தி சார் கூட்டாண்மையின் 25 ஆண்டுகளை நிறைவு செய்தன.
- வர்த்தகம், முதலீடு, தொழில்நுட்பம், பருவநிலை நடவடிக்கை மற்றும் உலகளாவிய நிர்வாகம் போன்ற துறைகளில் இந்தியாவும் ஜெர்மனியும் ஒத்துழைப்பினை மேற்கொள்கின்றன.

## ஐக்கிய நாடுகள் சபையின் பெருங்கடல் ஒப்பந்தம்

- ஐக்கிய நாடுகள் சபையின் பெருங்கடல் ஒப்பந்தம் ஜனவரி 18, 2026 அன்று அதிகாரப் பூர்வமாக நடைமுறைக்கு வர உள்ளது.
- இந்த ஒப்பந்தம் தேசிய அதிகார வரம்பிற்கு அப்பாற்பட்டப் பகுதிகளின் கடல்சார் உயிரியல் பன்முகத்தன்மையின் பாதுகாப்பு மற்றும் நிலையான பயன்பாடு குறித்த ஒப்பந்தம் (BBNJ) என்று அழைக்கப்படுகிறது.
- இது உலகின் மூன்றில் இரண்டு பங்கு பெருங்கடல்களையும் சுமார் 10 மில்லியன் உயிரினங்களையும் உள்ளடக்கிய சர்வதேச நீர்ப்பரப்பில் உள்ள கடல்வாழ் உயிரினங்களைப் பாதுகாப்பதை நோக்கமாகக் கொண்டுள்ளது.
- 2023 ஆம் ஆண்டு ஜூன் மாதத்தில் ஏற்றுக் கொள்ளப் பட்டதிலிருந்து 148 நாடுகள் இந்த ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டுள்ளன; மேலும் 81 நாடுகள் தங்கள் தேசியச் சட்டங்கள் மூலம் அதை முழுமையாக அங்கீகரித்துள்ளன.
- பலாவ், கியூபா, மாலத்தீவுகள், சீனா, ஜெர்மனி, ஜப்பான், பிரான்சு மற்றும் பிரேசில் ஆகியவை ஒப்புதல் அளித்த நாடுகளில் அடங்கும்.
- இந்த ஒப்பந்தம் பெருங்கடல்களில் பாதுகாப்பு, நிலையான பயன்பாடு, நன்மை-பகிர்வு, பாதுகாக்கப்பட்டப் பகுதிகள் மற்றும் அறிவியல் ஆராய்ச்சிக்கான பிணைப்பு விதிகளை அமைக்கிறது.

## ஐ.நா. அமைப்புகளிலிருந்து இஸ்ரேல் விலகல்

- 2026 ஆம் ஆண்டு ஜனவரியில் ஏழு ஐக்கிய நாடுகள் சபை (ஐ.நா.) நிறுவனங்கள் மற்றும் அதனுடன் இணைந்த அமைப்புகளிலிருந்து இஸ்ரேல் விலகுவதாக அறிவித்தது.
- ஐ.நா. பெண்கள், ஐ.நா. வர்த்தகம் மற்றும் மேம்பாட்டு மாநாடு (UNCTAD), மேற்கு ஆசியாவிற்கான ஐ.நா. பொருளாதார மற்றும் சமூக ஆணையம், ஐ.நா. நாகரிகங்களின் கூட்டணி, ஐ.நா. எரிசக்தி மற்றும் இடம்பெயர்வு மற்றும் மேம்பாட்டுக்கான உலகளாவிய மன்றம் ஆகியவை இந்த நிறுவனங்களில் அடங்கும்.
- அமெரிக்கா 66 சர்வதேச அமைப்புகளிலிருந்து வெளியேறியதைத் தொடர்ந்து நடத்தப் பட்ட மறுஆய்வுக்குப் பிறகு இந்த முடிவு எடுக்கப்பட்டது.

- இஸ்ரேலுக்கு எதிரான அரசியல் சார்பு மற்றும் அதிகாரத்துவ திறமையின்மை ஆகியவை அதன் விலகலுக்கான காரணங்களாக இஸ்ரேல் குறிப்பிட்டது.
- 2024 ஆம் ஆண்டில் ஆயுத மோதலில் உள்ள குழந்தைகளுக்கான பொதுச்செயலாளரின் சிறப்பு பிரதிநிதி அலுவலகத்துடனான உறவுகளை இஸ்ரேல் முன்பு துண்டித்திருந்தது.
- உலக நாடுகள் ஐ.நா. சபையை விட்டு வெளியேறாமல் ஐ.நா. நிறுவனங்களிலிருந்து மட்டும் விலகலாம்.

## உலகின் மிகப் பழமையான பாயும் நதி - ஃபின்கே நதி

- புவியியல் சான்றுகளின் அடிப்படையில் ஃபின்கே நதி உலகின் மிகப் பழமையான பாயும் நதியாக அங்கீகரிக்கப்பட்டுள்ளது.
- இது 300–400 மில்லியன் ஆண்டுகள் பழமையானது, அதாவது டைனோசர்களின் காலத்தினை விட பழமையானது என்று நம்பப்படுகிறது.
- இந்த நதி மத்திய ஆஸ்திரேலியாவில் உள்ள வடக்குப் பகுதி மற்றும் தெற்கு ஆஸ்திரேலியா வழியாகப் பாய்கிறது.
- இது அரெர்ன்டே மக்களால் லாராபிண்டா என்றும் அழைக்கப்படுகிறது.
- இந்த நதி முற்சான்று (மலைகளின் மேலெழும்பலுக்கு முன்பே இருக்கும் நதி) எனப் படும் புவியியல் செயல்முறை காரணமாக மெக்டோனல் மலைத்தொடர்களின் குறுக்கே பாய்கிறது.
- இடைவெளிகள் இல்லாமல் இருந்தாலும், அது அதே பண்டைய நதி அமைப்பின் ஒரு பகுதியாகவே உள்ளது.

## 2025 ஆம் ஆண்டில் சீனாவின் மக்கள்தொகை சரிவு

- குழந்தை பிறப்புகளுக்கான புதிய ஊக்கக் கொள்கைகள் இருந்த போதிலும் 2025 ஆம் ஆண்டில் சீனாவின் மக்கள் தொகை மீண்டும் குறைந்தது.
- சீனாவின் மக்கள் தொகை 2025 ஆம் ஆண்டில் சுமார் 3 மில்லியன் குறைந்து, தொடர்ந்து நான்காவது ஆண்டாக சரிவைக் குறிக்கிறது.
- குழந்தை பிறப்புகள் 2025 ஆம் ஆண்டில் 7.92 மில்லியனாகக் குறைந்தன.
- பிறப்பு விகிதம் 1,000 பேருக்கு 5.63 பிறப்புகளாகக் குறைந்தது என்பதோடு இது இது வரையில் பதிவு செய்யப் படாத மிகக் குறைவு ஆகும்.
- சீனாவின் கருவுறுதல் விகிதம் சுமார் 1 என மதிப்பிடப்பட்டுள்ளது என்பதோடு இது 2.1 என்ற மாற்று நிலைக்குக் கீழே உள்ளது.
- பிரசவத்தை ஊக்குவிக்க பண ஊக்கத்தொகை மற்றும் கொள்கை மாற்றங்கள் இருந்த போதிலும் இந்த சரிவு தொடர்கிறது.

## இந்தோ-பசிபிக் பெருங்கடல் முன்னெடுப்பு

- இந்தியாவின் வெளியுறவு அமைச்சரிடம் அணுகல் பிரகடனத்தை ஒப்படைப்பதன் மூலம் ஸ்பெயின் இந்தோ-பசிபிக் பெருங்கடல் முன்னெடுப்பில் (IPOI) இணைந்தது.

- IPOI என்பது கடல்சார் ஒத்துழைப்புக்கான ஒரு தன்னார்வ, ஒப்பந்தமற்ற கட்டமைப்பு ஆகும் என்பதோடு 2019 ஆம் ஆண்டில் SAGAR (பிராந்தியத்தில் உள்ள அனைவருக்கும் பாதுகாப்பு மற்றும் வளர்ச்சி) கோட்பாட்டின் கீழ் இந்தியாவால் இது தொடங்கப் பட்டது.
- சுதந்திரமான, தடையற்ற, உள்ளடக்கிய மற்றும் விதிகள் சார்ந்த இந்தோ-பசிபிக் பிராந்தியத்தை ஊக்குவிப்பதே இதன் நோக்கம் ஆகும்.
- இது கடல்சார் பாதுகாப்பு, சூழலியல், வளங்கள், பேரிடர் மேலாண்மை, அறிவியல் & தொழில்நுட்பம், வர்த்தகம் மற்றும் இணைப்பு ஆகியவற்றில் நடைமுறை சார் ஒத்துழைப்பில் கவனம் செலுத்துகிறது.
- உலக நாடுகள் தானாக முன்வந்து தனிப்பட்ட கருத்துருப் பிரிவுகளை வழிநடத்த முடியும் என்பதோடு மேலும் இந்த முன்னெடுப்பு ராணுவம் அல்லாத, தொகுதி அல்லாத அணுகுமுறையை மேற்கொள்கிறது.

## காசாவிற்கான 'அமைதி வாரியம்'

- டாவோஸில் நடைபெற்ற அமெரிக்க அதிபர் டொனால்ட் டிரம்ப் தலைமையிலான "அமைதி வாரியம்" சாசன அறிவிப்பை இந்தியா புறக்கணித்தது.
- இந்த அமைதி வாரியம் டிரம்ப் நிர்வாகத்தின் காசா அமைதி திட்டத்தின் 2 ஆம் கட்டத்தின் ஒரு பகுதியாகும்.
- இது காசா பகுதியில் பாதுகாப்பு, மனிதாபிமான உதவி, புனரமைப்பு ஆகியவற்றை மேற்பார்வையிடுவதற்கானதாகும்.
- இந்த வாரியம் அதன் முன்னேற்றம் குறித்து ஆறு மாதங்களுக்கு ஒருமுறை 15 உறுப்பினர்களைக் கொண்ட பாதுகாப்பு சபைக்கு அறிக்கை அளிக்க வேண்டும்.
- ஒரு தலைவராக, டிரம்ப் சாசனத்தின் விளக்கத்தில் இறுதி நிலை முடிவெடுப்பு அதிகாரியாக விளங்குகிறார் மற்றும் உறுப்பினர் நீக்கம் மற்றும் நிர்வாகக் குழுவின் நடவடிக்கைகள் உள்ளிட்ட முக்கிய முடிவுகளில் வீட்டோ அதிகாரத்தை கொண்டு உள்ளார்.
- உறுப்பினர் நாடுகள் வாரியத்தின் செயல்பாடுகளுக்கு நிதியளிக்கவும் நிரந்தர உறுப்பினர் அந்தஸ்து பெறவும் தலா 1 பில்லியன் டாலர் செலுத்தாவிட்டால், அவை மூன்று ஆண்டு காலத்திற்கு மட்டுமே உறுப்பினராக இருக்கும்.

## உலக சுகாதார அமைப்பிலிருந்து அமெரிக்கா வெளியேற்றம்

- ஜனவரி 23, 2026 அன்று அமெரிக்கா சுமார் 260 மில்லியன் அமெரிக்க டாலர்கள் நிலுவைத் தொகையை செலுத்தாமல், உலக சுகாதார அமைப்பிலிருந்து (WHO) அதிகாரப் பூர்வமாக வெளியேறியது.
- அதிபர் டொனால்ட் டிரம்ப் தனது இரண்டாவது பதவிக் காலத்தின் தொடக்கத்தில் கையெழுத்திட்ட நிர்வாக உத்தரவைத் தொடர்ந்து இந்த முடிவு எடுக்கப்பட்டது.
- உலக சுகாதார அமைப்பிற்கான அனைத்து நிதியுதவிகளையும் அமெரிக்கா நிறுத்தியுள்ளது மற்றும் WHO அலுவலகங்கள் மற்றும் அமைப்புகளில் இருந்து அதன் பணியாளர்களை திரும்பப் பெற்றுள்ளது.

- 2022–2023 ஆம் காலக் கட்டத்தில் கிட்டத்தட்ட 1.3 பில்லியன் அமெரிக்க டாலர்களை வழங்கி, உலக சுகாதார அமைப்பிற்கு அமெரிக்கா மிகப்பெரிய பங்களிப்பை வழங்கியது.
- 1948 ஆம் ஆண்டு அமெரிக்கக் காங்கிரஸின் தீர்மானத்தின் கீழ், உலக சுகாதார அமைப்பிலிருந்து வெளியேற ஓராண்டு முன் அறிவிப்பு மற்றும் நிலுவைத் தொகையை செலுத்த வேண்டும்.

## கார்னே கோட்பாடு

- டாவோஸில் உள்ள உலகப் பொருளாதார மன்றத்தில் கனடா பிரதமர் மார்க் கார்னேயால் கார்னே கோட்பாடு முன்மொழியப் பட்டது.
- அமெரிக்க-சீனப் போட்டியில் தரப்புகளைத் தேர்ந்தெடுப்பதைத் தவிர்ப்பதற்கு நடுநிலை நாடுகளுக்கு "மூன்றாவது பாதை"யை இது பரிந்துரைக்கிறது.
- இந்த அணுகுமுறை அதே நேரத்தில் உலகளாவிய ஒத்துழைப்பை ஊக்குவித்து, தனிப்படுத்தச் செய்யும் கொள்கையை ஊக்குவிக்காமல் உத்தி சார் சுயாட்சியை ஊக்குவிக்கிறது.
- நடுநிலை நாடுகள் இறையாண்மையைப் பாதுகாக்கவும், உலகளாவிய விவகாரங்களில் தங்கள் செல்வாக்கை வலுப்படுத்தவும் ஒன்றிணைந்து செயல்பட வேண்டும் என்று கார்னே வலியுறுத்தினார்.
- சீனா, கத்தார், இந்தியா, ஆசியான் நாடுகள் மற்றும் மெர்கோசூர் ஆகியவற்றுடன் உத்தி சார் கூட்டாண்மைகள் மூலம் கனடா இந்தக் கோட்பாட்டைச் செயல்படுத்தி உள்ளது.
- இந்தக் கோட்பாடு இந்தியா போன்ற பெரும் வல்லரசு நாடுகளின் போட்டியை வழி நடத்தும் நாடுகளுக்கு மிகவும் பொருத்தமானது.

## உலகளாவிய எதிர்காலம் குறித்த மன்றங்களின் கூட்டம்

- உலகப் பொருளாதார மன்றத்துடன் (WEF) ஒரு புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கையெழுத்திட்ட பிறகு, ஐக்கிய அரபு அமீரகம் அடுத்த ஐந்து ஆண்டுகளுக்கு உலகளாவிய எதிர்காலம் குறித்த மன்றங்களின் (GFCs) கூட்டங்களை நடத்தவுள்ளது.
- GFCகள் என்பது WEF அமைப்பின் பல்துறை அறிவுசார் வலையமைப்பாகும் என்பதோடு இது உலகளாவியச் சவால்கள் மற்றும் எதிர்காலப் போக்குகள் குறித்த நுண்ணறிவுகளை வழங்க 2013 ஆம் ஆண்டில் நிறுவப்பட்டது.
- இந்தக் குழுக்கள் அழைப்பின் பேரில் மட்டுமே இணைக்கப்பட்டு இரண்டு ஆண்டு காலத்திற்குச் செயல்படுகின்றன என்பதோடு இவை பல துறைகளைச் சேர்ந்த நிபுணர்களை வரவழைத்து, ஆராய்ச்சி அடிப்படையிலான ஆலோசனைகளை வழங்குகின்றன.
- GFCயின் வெளியீடுகள் கொள்கை வகுத்தலை ஆதரிப்பதுடன் WEF முன்முயற்சிகள் மற்றும் டாவோஸ் நிகழ்ச்சி நிரலுடன் ஒருங்கிணைக்கப்படுகின்றன.
- அரசுகள் மீள்திறன் கொண்ட மற்றும் நீடித்த வளர்ச்சி மாதிரிகளை உருவாக்குவதற்கு உதவுவதற்காக, அபாயங்கள், வளர்ந்து வரும் தொழில்நுட்பங்கள் மற்றும் வாய்ப்புகளைக் கண்டறிவதே இந்த மன்றத்தின் நோக்கமாகும்.

## இந்தியாவில் நான்காவது தொழில்துறைப் புரட்சி மையம்

- உலகப் பொருளாதார மன்றமானது (WEF), இந்தியாவில் உள்ள ஆந்திரப் பிரதேசம் உட்பட, நான்காவது தொழில்துறைப் புரட்சிக்காக ஐந்து புதிய மையங்களை அமைத்து வருகிறது.
- இந்தியா ஏற்கனவே மும்பை மற்றும் தெலுங்கானாவில் இது போன்ற இரண்டு மையங்களைக் கொண்டுள்ளது.
- இந்த மையங்கள் செயற்கை நுண்ணறிவு (AI) புத்தாக்கம், எரிசக்தி மாற்றம், இணையப் பாதுகாப்புத் திறன் மற்றும் அதிநவீனத் தொழில்நுட்பங்கள் ஆகியவற்றில் கவனம் செலுத்தும்.
- இதன் நோக்கம், வளர்ந்து வரும் தொழில்நுட்பங்களுக்கான கொள்கைக் கட்டமைப்பு, முன்னோடித் திட்டங்களை வழங்குவது மற்றும் சர்வதேச ஒத்துழைப்பை வளர்ப்பது என்பதாகும்.
- புதிய தொழில்நுட்பங்களின் பொறுப்பான மற்றும் பாதுகாப்பான வளர்ச்சியை உறுதி செய்வதற்காக, இந்த வலையமைப்பு அரசாங்கங்கள் மற்றும் தொழில்துறைகளுடன் இணைந்து செயல்படுகிறது.
- மற்ற புதிய மையங்கள் பிரான்ஸ், ஐக்கியப் பேரரசு மற்றும் ஐக்கிய அரபு அமீரகத்தில் அமைக்கப்படவுள்ளன.

## BRICS பிளஸ் கடற்படைப் பயிற்சி

- இது BRICS அமைப்பின் நிறுவனமயமாக்கப் பட்ட செயல்பாடு அல்ல என்று கூறி, இந்தியா 'Will for Peace 2026' என்ற BRICS பிளஸ் கடற்படைப் பயிற்சியைத் தவிர்த்துள்ளது.
- BRICS பிளஸ் கடற்படைப் பயிற்சி என்பது, முறையான BRICS கட்டமைப்புக்கு வெளியே நடத்தப்படுகின்ற ஒரு புரவலர் நாட்டால் வழி நடத்தப்படுகின்ற மற்றும் நிறுவன மயமாக்கப் படாத ஒரு கடல்சார் பயிற்சியாகும்.
- இந்தக் கூட்டுப் பயிற்சியானது கேப் டவுனுக்கு அருகிலுள்ள சைமன்ஸ் டவுன் கடற்கரையில் தென்னாப்பிரிக்காவால் நடத்தப்பட்டது.
- இதில் இந்தியா பங்கேற்காத நிலையில், சீனா, ரஷ்யா, ஈரான், ஐக்கிய அரபு அமீரகம் மற்றும் தென்னாப்பிரிக்கா ஆகிய நாடுகளின் கடற்படைகள் பங்கேற்றன.
- முக்கியமான கப்பல் போக்குவரத்துப் பாதைகள் மற்றும் கடல்சார் பொருளாதார நடவடிக்கைகளின் பாதுகாப்பை உறுதி செய்வதற்கான கூட்டு நடவடிக்கைகள் என்பதே இதன் மையக்கருத்தாக இருந்தது.

## ECOSOCன் 80 ஆண்டுகள்

- ஐக்கிய நாடுகள் சபையின் பொருளாதார மற்றும் சமூக மன்றமானது (ECOSOC) தனது 80வது ஆண்டு நிறைவை 2026 ஆம் ஆண்டு ஜனவரி 23 அன்று கொண்டாடியது.
- ECOSOC என்பது ஐ.நா.வின் ஆறு முக்கிய அங்கங்களில் ஒன்றாகும்.
- இது 1945 ஆம் ஆண்டில் ஐ.நா. சாசனத்தின் கீழ் நிறுவப்பட்டது மற்றும் அதன் முதல் கூட்டம் 1946 ஜனவரி 23 அன்று லண்டனில் நடைபெற்றது.
- இந்தியப் புத்தொழில் நிறுவனமான ஆகாஷ்லப்தி, 'அந்தரிக்ஸ்ஹேப்' (AntarikshHAB) எனப்படும் நாட்டின் முதல் காற்றடைக்கும்/ ஊதி பெரிதாக்கும் விண்வெளி வாழ்விடத்தை வெளியிட தயாராகி வருகிறது.
- இந்தத் திட்டம் பெங்களூரில் உள்ள இந்திய அறிவியல் கழகத்தில் (IISc) ஆதரவளிக்கப் பட்டு வருகிறது.
- AntarikshHAB ஆனது ஒரு சிறிய தொகுதியை விண்வெளியில் செலுத்தி, அதை விரிவடையச் செய்ய அனுமதிக்கிறது என்ற நிலையில் இதன் மூலம் பயன்படுத்தக் கூடிய வசிப்பிடத்தின் பரப்பளவு 70 கன மீட்டரிலிருந்து இறுதி வடிவத்தில் 300 கன மீட்டராக அதிகரிக்கிறது.
- இந்தச் சோதனைகளில், அழுத்தம், கசிவு, வெப்பச் சுழற்சி, தாக்கம் மற்றும் நிலை நிறுத்தல் சோதனைகள் அடங்கும் என்பதால் இதன் மூலம் தொழில்நுட்பத் தயார் நிலை எனபது நிலை 6-ஐ அடைந்து, தொடர்புடைய சூழலில் அமைப்பின் சரிபார்ப்பு உறுதி செய்யப்படுகிறது.
- ஸ்பெயின் நாட்டைச் சேர்ந்த PLD ஸ்பேஸ் நிறுவனத்தின் விண்கலம் மூலம், ஜூலை 2026-ல் செலுத்தப்பட உள்ள இதில் கட்டுப்படுத்தப்பட்ட சுற்றுப்பாதை விலகல் மற்றும் வளிமண்டல மறு நுழைவு சோதனைகளும் அடங்கும்.

# சுற்றுச்சூழல் செய்திகள்

## இந்தியாவின் அருமண் இருப்புக்கள் மற்றும் உற்பத்தி இடைவெளி

- இந்தியா சுமார் 6.9 மில்லியன் டன் அருமண் ஆக்சைடு (REO) இருப்புடன் உலகளவில் 3வது இடத்தில் உள்ளது.
- உலகளாவிய அருமண் இருப்புக்களில் இந்தியா சுமார் 6 முதல் 7 சதவீதத்தினைக் கொண்டிருந்தாலும், உலகளாவிய உற்பத்தியில் சுமார் 1% சதவீதத்திற்கும் குறைவான பங்கையே கொண்டுள்ளது.
- 2024 ஆம் ஆண்டில், இந்தியா 2,900 டன்களை மட்டுமே உற்பத்தி செய்ததுடன், அருமண் உற்பத்தியில் உலகில் 7வது இடத்தைப் பிடித்தது.
- பெரும்பாலான இந்திய அருமண் இருப்புக்கள் தோரியமும் (கதிரியக்கக் கூறு) காணப் படுகின்ற மோனசைட் நிறைந்த கடலோர மணலில் உள்ளன.
- கதிரியக்கத்தன்மை காரணமாக அந்த தனிமங்களின் சுரங்கம் கடுமையாக ஒழுங்கு படுத்தப் படுகிறது என்பதோடு மேலும் முக்கியமாக இது முன்னதாக இந்திய அருமண் தாது லிமிடெட் (IREL) நிறுவனத்தினால் கையாளப்பட்டது.
- இந்தியாவில் மிகக் குறைந்தச் செயலாக்க மற்றும் சுத்திகரிப்பு வசதிகளே உள்ளதால், இது பெரிய அளவிலான உற்பத்தியை மெதுவாக்குகிறது.

## கங்கர் பள்ளத்தாக்கு தேசியப் பூங்கா

- கங்கர் பள்ளத்தாக்கு தேசியப் பூங்கா என்பது சத்தீஸ்கரின் பஸ்தார் மாவட்டத்தில் ஜக்தல்பூருக்கு அருகில் அமைந்துள்ள ஒரு பாதுகாக்கப்பட்ட வனப் பகுதியாகும்.
- யுனெஸ்கோ அமைப்பின் உலகப் பாரம்பரிய பட்டியலில் இந்தப் பூங்காவைச் சேர்க்க சத்தீஸ்கர் அரசானது அதன் முயற்சிகளைத் தீவிரப்படுத்தியுள்ளது.
- ஒப்புதல் அளிக்கப்பட்டதும், சத்தீஸ்கரில் இருந்து யுனெஸ்கோ உலகப் பாரம்பரிய அந்தஸ்தைப் பெறும் முதல் தளமாக இது மாறும்.
- சுமார் 200 சதுர கிலோமீட்டர் பரப்பளவைக் கொண்டுள்ள இந்தப் பூங்கா, கிழக்குத் தொடர்ச்சி மலைகள்-மத்திய இந்திய மலைப்பகுதிகளில் அமைந்துள்ளது.
- இது திரத்கர் நீர்வீழ்ச்சி, சுண்ணாம்புக் கல் குகைகள், அடர்ந்த காடுகள் மற்றும் வளமான பல்லுயிர்ப் பெருக்கத்திற்கு நன்கு அறியப்பட்டதாகும்.

## பார்வதி-அர்கா பறவைகள் சரணாலயம் - ESZ

- உத்தரப் பிரதேசத்தின் கோண்டா மாவட்டத்தில் உள்ள பார்வதி-அர்கா பறவைகள் சரணாலயத்தை இந்திய அரசு சுற்றுச்சூழல் தாங்குதிறன் மண்டலமாக (ESZ) அறிவித்து உள்ளது.
- 1986 ஆம் ஆண்டு சுற்றுச்சூழல் (பாதுகாப்பு) சட்டத்தின் கீழ் இந்த அறிவிப்பு வெளியிடப் பட்டது.
- சுற்றுச்சூழல், வனம் மற்றும் பருவநிலை மாற்றத்திற்கான இணை அமைச்சர் (EFCC) இந்த அறிவிப்பை வெளியிட்டார்.

- இந்த சரணாலயம் சுமார் 1,084 ஹெக்டேர் பரப்பளவைக் கொண்டுள்ளது.
- இது அப்பகுதியைச் சேர்ந்த பறவைகள் மற்றும் மத்திய ஆசியா மற்றும் திபெத்திலிருந்து வரும் முதன்மையாக குளிர்காலத்தில் வலசை போகும் பறவைகளை ஆதரிக்கிறது.
- ஒரு சுற்றுச்சூழல் தாங்கு திறன் மண்டலம் (ESZ) என்பது பாதுகாக்கப்பட்ட பகுதிகளைச் சுற்றியுள்ள செயல்பாடுகளைக் கட்டுப்படுத்தவும் பல்லுயிர் மற்றும் இயற்கை வாழ்விடங்களைப் பாதுகாப்பதற்குமான ஒரு ஒழுங்குபடுத்தப்பட்ட இடையகப் பகுதி ஆகும்.

## அமேசான் தேனீக்களுக்கான சட்டப்பூர்வப் பாதுகாப்பு

- அமேசானிய கொசுத் தேனீக்கள் சட்டப்பூர்வ உரிமைகளைப் பெற்ற உலகின் முதல் பூச்சிகளாக மாறியது.
- பெரு நாட்டின் நகராட்சிகள் அவற்றின் இருப்பு மற்றும் செழிப்புக்கான உரிமையை அங்கீகரித்து ஒரு முக்கிய அவசரச் சட்டத்தினை நிறைவேற்றின.
- இந்தச் சட்டம் இயற்கையில் அவற்றின் இருப்பு மற்றும் செழிப்புக்கான உரிமையை அங்கீகரிக்கிறது.
- கொசுத் தேனீக்கள் வெப்பமண்டலக் காடுகளில், குறிப்பாக அமேசான் மழைக்காடுகளில் காணப்படும் முதன்மையான மகரந்தச் சேர்க்கை இனமாகும்.
- பெரு நாட்டில் 170 க்கும் மேற்பட்ட கொசுத் தேனீக்கள் உள்ளன.
- இந்த முடிவு பல்லுயிர்ப் பெருக்கம் (உயிரினங்களின் பன்முகத் தன்மை) மற்றும் வன சுற்றுச்சூழல் அமைப்புகளைப் பாதுகாப்பதை நோக்கமாகக் கொண்டுள்ளது.

## 2025 ஆம் ஆண்டில் புலிகளின் உயிரிழப்பு விகிதம்

- தேசியப் புலிகள் வளங்காப்பு ஆணையம் (NTCA) வெளியிட்ட சமீபத்தியத் தரவுகளின் படி, 2025 ஆம் ஆண்டில் இந்தியாவில் 166 புலிகள் இறப்பு பதிவாகியுள்ளது.
- இந்த எண்ணிக்கை 2024 ஆம் ஆண்டில் பதிவான 126 புலி இறப்புகளை விட 40 அதிகம் ஆகும்.
- 1973 ஆம் ஆண்டில் புலிகள் வளங்காப்புத் திட்டம் தொடங்கப்பட்டதிலிருந்து இது மிக அதிக வருடாந்திரப் புலி இறப்பு விகிதமாகும்.
- மத்தியப் பிரதேசத்தில், இந்த ஆண்டில் 55 இறப்புகள் பதிவாகியுள்ளதுடன் இந்தியாவிலேயே அதிக எண்ணிக்கையிலான புலி இறப்புகள் பதிவாகியுள்ளன.
- குறிப்பிடத்தக்க புலி இறப்புகள் பதிவான பிற மாநிலங்களில் மகாராஷ்டிராவில் 38 இறப்புகள், கேரளாவில் 13 இறப்புகள் மற்றும் அசாமில் 12 இறப்புகள் பதிவாகின.
- 2025 ஆம் ஆண்டில் பதிவான மொத்த புலி இறப்புகளில், 31 புலிக் குட்டிகள் ஆகும் என்ற நிலையில், இது இளம் புலிகளின் எளிதில் பாதிக்கப்படக் கூடிய நிலையை எடுத்துக் காட்டுகின்றன.
- புலிகள் இறப்பு எண்ணிக்கை அதிகரிப்பதற்கு இட நெருக்கடியால் எழும் பிராந்திய மோதல்கள் ஒரு முக்கிய காரணமாக நிபுணர்கள் அடையாளம் கண்டுள்ளனர்.

- இழப்புகள் இருந்தபோதிலும், உலகின் புலிகளின் எண்ணிக்கையில் சுமார் 75% புலிகள் இந்தியாவில் உள்ளன என்ற நிலையில் 2018 ஆம் ஆண்டில் 2,967 ஆக இருந்த புலிகளின் எண்ணிக்கை 2022 ஆம் ஆண்டில் 3,682 ஆக அதிகரித்துள்ளது.

## நாடு தழுவிய புலிகள் கணக்கீட்டு நடவடிக்கையின் முதல் கட்டம்

- 2026 ஆம் ஆண்டு அகில இந்தியப் புலிகள் மதிப்பீட்டின் (AITE) முதல் கட்டம் தொடங்கப் பட உள்ளதாக தமிழ்நாடு வனத்துறை அறிவித்துள்ளது.
- இது உலகின் மிகப்பெரிய வனவிலங்கு கண்காணிப்புப் பயிற்சியின் ஒரு பகுதியாகும்.
- AITE நான்கு ஆண்டுகளுக்கு ஒரு முறை தேசியப் புலிகள் வளங்காப்பு ஆணையம் மற்றும் இந்திய வனவிலங்கு நிறுவனம் ஆகியவற்றால் நடத்தப்படுகிறது.
- இது புலிகள், சிறுத்தைகள், காட்டு நாய்கள் மற்றும் கழுதைப் புலிகள் போன்ற இணை வேட்டையாடி இனங்களை மதிப்பிடுவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.
- காட்டெருமை, சம்பார் மான், புள்ளிமான் மற்றும் குரைக்கும் மான் (செம்மான்) உள்ளிட்ட மாபெரும் தாவர உண்ணிகளின் இரை எண்ணிக்கையை மதிப்பிடச் செய்வதையும் இது நோக்கமாகக் கொண்டுள்ளது.
- இது அங்க அடையாள ஆய்வுகள், உடலில் வரிகளின் குறுக்குவெட்டுகள், ஒளிப்படக் கருவிப் பதிவுப் பயிற்சிகள் மற்றும் மரபணு மாதிரி மூலம் விரிவான வாழ்விட மதிப்பீட்டையும் உள்ளடக்கியது.
- தமிழ்நாட்டில் களக்காடு முண்டந்துறை, ஆனைமலை, முதுமலை, சத்தியமங்கலம் மற்றும் ஸ்ரீவில்லிபுத்தூர்-மேகமலை ஆகிய ஐந்து புலிகள் வளங்காப்பகங்கள் உள்ளன.
- 2018 ஆம் ஆண்டில் 264 ஆக இருந்த மாநிலத்தில் உள்ள புலிகளின் எண்ணிக்கை 2022 ஆம் ஆண்டில் 306 ஆக அதிகரித்துள்ளது.
- இந்தப் பயிற்சி அனைத்துப் புலிகள் சரணாலயங்கள், பிற புலி வாழ்விடங்கள் மற்றும் குறிப்பிடத்தக்க மாமிச உணவு இருப்பு உள்ள தனியார் தோட்டங்களை உள்ளடக்கும்.
- முன்னணி ஊழியர்கள், தன்னார்வலர்கள் மற்றும் ஒளிப்படக் கருவி நிறுவல்கள் மற்றும் M-STrIPES கண்காணிப்பு அமைப்பு போன்ற தொழில்நுட்பம் ஆகியவை இந்த நடவடிக்கைக்காகப் பயன்படுத்தப்படும்.

## கேரளாவில் விண்மீன் தவளைகள்

- கேரளாவின் மேற்குத் தொடர்ச்சி மலைகளில் உலகின் அரிதான விண்மீன் தவளைகளில் ஏழு (மெலனோபாட்ராக்கஸ் இண்டிகஸ்) மறைந்து விட்டன, அதாவது இறந்து விட்டதாகக் கருதப் படுகிறது.
- இந்தத் தவளைகள் கேரளாவின் மேற்குத் தொடர்ச்சி மலைகளில் மட்டுமே காணப்படும் சிறிய நீர்நில வாழ் இனங்கள் ஆகும்.
- ஆராய்ச்சியாளர்கள் 2020 ஆம் ஆண்டு மார்ச் மாதத்தில் சிதைந்த மரக்கட்டைகளின் கீழ் ஏழு தவளைகளைக் கண்டுபிடித்தனர்.
- 2020 ஆம் ஆண்டு ஜூன் மற்றும் 2021 ஆம் ஆண்டு ஏப்ரல் காலகட்டத்திற்கு இடையில், புகைப்படக் கலைஞர்கள் மரக்கட்டைகளை கவிழ்த்து, அதிக ஒளிர்வு மிக்க வெட்டொளிகளைப் பயன்படுத்தி அவற்றின் வாழ்விடத்தை இடையூறு செய்தனர்.

- 2021–2022 ஆம் ஆண்டில் ஆராய்ச்சியாளர்கள் திரும்பி வந்த போது, ஏழு தவளைகளும் மறைந்து விட்டன.
- இந்த இனம் சர்வதேச இயற்கைப் பாதுகாப்பு ஒன்றியத்தால் (IUCN) எளிதில் பாதிக்கப் படக்கூடியதாகப் பட்டியலிடப்பட்டுள்ளது என்பதோடு வாழ்விட இழப்பு, நிலச்சரிவுகள் மற்றும் புகைப்படச் சுற்றுலாவால் இது அச்சுறுத்தப்படுகிறது.

## இந்தியாவின் முதல் நகர்ப்புற இரவு நேர சுற்றுலாப் பூங்கா

- லக்னோ நகரின் வடக்குப் புறநகரில் உள்ள குக்ரெயில் வனப்பகுதியில் இந்தியாவின் முதல் நகர்ப்புற இரவு சுற்றுலா வசதி/சஃபாரி நிறுவப்பட உள்ளது.
- இந்த இரவு நேர சஃபாரி உத்தரப் பிரதேச மாநிலத்தின் லக்னோ நகர எல்லைக்குள் கட்டுப்படுத்தப் பட்ட இரவு நேர வனவிலங்குப் பார்வை அனுபவமாக இருக்கும்.
- இது சிங்கப்பூர் இரவு நேர சஃபாரி மாதிரியால் ஈர்க்கப்பட்டு, இருள் நேரத்தில் வன விலங்குகளைக் கண்காணிப்பதை நோக்கமாகக் கொண்டுள்ளது.
- இந்தத் திட்டத்தில் விலங்குகளுக்கு இடையூறு ஏற்படுவதைக் குறைக்க கட்டுப்படுத்தப் பட்ட இயக்கம் மற்றும் குறைந்த செறிவுடைய விளக்குகள் கொண்ட இரவு நேர சஃபாரி பாதைகள் அடங்கும்.
- இந்த மேம்பாடு குக்ரெயில் வனப்பகுதிக்குள் இருக்கும் முதலை, கங்கை நீர்முதலை மற்றும் ஆமை வளங்காப்பு மையங்களில் வசதிகளை மேம்படுத்தும்.
- உள்கட்டமைப்பில் சுற்றுச்சூழலுக்கு உகந்த பாதைகள், மூங்கில் குடிசைகள், இயற்கை வழியான நடைப்பயணங்கள் மற்றும் சுற்றுச்சூழல் சார் சுற்றுலா மற்றும் பாதுகாப்பு விழிப்புணர்வை ஊக்குவிக்க வேண்டி வழிகாட்டப்பட்ட கல்வித் திட்டங்கள் ஆகியவை அடங்கும்.

## புதிய கீழ்மண் பாம்பு இனங்கள்

- கலமாரியா மிசோரமன்சிஸ் என்ற புதிய விஷமற்ற கீழ் மண்/நாணல் பாம்பு மிசோரமில் கண்டுபிடிக்கப்பட்டது.
- இந்த இனம் தற்போது உலகளவில் 69 அங்கீகரிக்கப்பட்ட இனங்களைக் கொண்டுள்ள கலமாரியா இனத்தைச் சேர்ந்தது.
- இரவு நேரங்களில் வாழக்கூடிய மற்றும் குழிகளைப் பறித்து வாழும் கலமாரியா மிசோரமன்சிஸ் கடல் மட்டத்திலிருந்து 670 முதல் 1,295 மீட்டர் வரையிலான உயரத்தில் உள்ள ஈரப் பதமான காடுகள் நிறைந்த மலைகளில் வாழ்கிறது.

## பெனி பச்சை சிறகுப் பறவை

- அறுபது ஆண்டுகளுக்கும் மேலாக, பொலிவியாவின் பெனி புல்வெளிக் காடுகளில் உள்ள ஒரு சிறிய ஆலிவ்-பச்சை நிறப் பறவையானது தவறாக வகைப்படுத்தப் பட்டது, ஆனால் புதிய ஆராய்ச்சி அதை ஒரு தனித்துவமான இனமாக உறுதிப்படுத்தியது.
- இதன் அறிவியல் பெயரான ஹைலோபிலஸ் மோக்சென்சிஸ் இது மஸ்கிகாபிடே குடும்பத்தைச் சேர்ந்தது.

- இது வடக்குப் பொலிவியாவின் வெப்பமண்டல ஈரப்பதமான தாழ்நிலக் காடுகளில், பெரும்பாலும் வனங்களின் மர விதானங்கள் மற்றும் விளிம்புகளில் வாழ்கிறது.
- இது வாழ்விட இழப்பு, மாறிய மழைப்பொழிவுப் போக்கு, மனித நடவடிக்கைகள் மற்றும் நதி அல்லது வெள்ளப்பெருக்கு மாற்றங்கள் போன்ற அச்சுறுத்தல்களை எதிர் கொள்கிறது என்பதோடு இது இன்னும் IUCN அமைப்பின் செந்நிறப் பட்டியலால் மதிப்பிடப் படவில்லை.

## ஆர்டிக் பெருங்கடலின் வெப்பமயமாதல் 2025

- தேசியப் பெருங்கடல் மற்றும் வளிமண்டல நிர்வாகம் (NOAA) ஆனது 2025 ஆம் ஆண்டு ஆர்டிக் பெருங்கடல் அறிக்கையை வெளியிட்டது.
- ஆர்டிக் பகுதி புவிக் கிரகத்தின் மற்ற பகுதிகளை விட மிக வேகமாக வெப்பமடைந்து வருவதை இந்த அறிக்கை காட்டுகிறது.
- 1900 முதல் 2024 ஆம் ஆண்டு அக்டோபர் முதல் 2025 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் வரை ஆர்டிக் பகுதியின் மேற்பரப்பு காற்று வெப்பநிலைப் பதிவில் மிக அதிகமாக இருந்தது.
- கடந்த பத்து ஆண்டுகள் ஆர்டிக் பகுதியில் இது வரை பதிவு செய்யப்பட்ட வெப்பமான தசாப்தமாகும்.
- கீழ் மட்டநிலை அட்சரேகைகளிலிருந்து வரும் வெதுவெதுப்பான நீர் மற்றும் உயிரினங்களின் வருகையைக் குறிக்கும் அட்லாண்டிக் மயமாதல், கடல் பனி உருகுவதற்கும் கடல் சுழற்சியைப் பாதிப்பதற்கும் காரணமாகிறது.
- உருகும் நிரந்தர உறைபனி தண்ணீரில் இரும்புத் தாதுவினைக் கசிய விட்டதனால், ஆர்டிக் அலாஸ்காவில் உள்ள ஆறுகள் ஆரஞ்சு நிறமாக மாறிவிட்டன, இது மீன் மற்றும் வட்டார நீர் விநியோகத்தைப் பாதித்தது.
- 1990 ஆம் ஆண்டுகளின் பிற்பகுதியிலிருந்து ஆர்க்டிக் பகுதியின் பசுமையாக்கம் துந்த்ரா தாவரங்களை மிக அதிகரித்துள்ளது என்பதோடு இது நிலப்பரப்புகள், வன விலங்குகள் மற்றும் நிரந்தர உறைபனி நிலைமைகளைப் பாதிக்கிறது.
- ரஷ்யாவின் ஆர்க்டிக் கடற்கரையில் உள்ள வடக்கு கடல் பாதை கடல் பனி உருகும் போது கப்பல் போக்குவரத்துக்குப் பெருகிய முறையில் பயன்படுத்தக் கூடியதாகி வருகிறது.

## சிற்றாமைகளுக்கு செயற்கைக்கோள் கண்காணிப்புக் கருவி பொருத்தல்

- சென்னையில் ஒரு முன்னோடி முயற்சியாக, சென்னை கடற்கரைகளில் சிற்றாமைகளுக்கு செயற்கைக்கோள் மூலம் கண்காணிக்கும் கருவிகள் பொருத்தும் பணி தொடங்கியது.
- முட்டையிடுவதற்காக கரைக்கு வந்த இரண்டு சிற்றாமைகளுக்கு (ஆலிவ் ரிட்லி கடல் ஆமைகள்) செயற்கைக்கோள் கண்காணிப்பு கருவி பொருத்தப்பட்டு மீண்டும் கடலில் விடப்பட்டன.
- 2025–2027 வரையிலான இந்த இரண்டு ஆண்டு காலத் திட்டம், ஆமைகளின் இயக்கம் மற்றும் கூடு கட்டுதலைப் பற்றி ஆய்வு செய்ய செயற்கைக்கோள் தொலை அளவியல் தொழில்நுட்பத்தைப் பயன்படுத்துகிறது.
- இந்தத் திட்டம் இந்திய வனவிலங்கு நிறுவனம் (WII) மற்றும் வண்டலூரில் உள்ள மேம்பட்ட வனவிலங்குப் பாதுகாப்பு நிறுவனம் (AIWC) ஆகியவற்றால் செயல்படுத்தப் படுகிறது.

- இந்த ஆய்வு தமிழ்நாட்டில் உள்ள சென்னை கடற்கரை மற்றும் காவிரி டெல்டா பகுதிகளை உள்ளடக்கும்.
- மொத்தம் 10 ஆமைகளுக்கு செயற்கைக்கோள் மூலம் கண்காணிக்கக்கூடிய கருவிகள் பொருத்தப்படும் என்பதோடு மேலும் 1,000 ஆமைகளுக்கு துடுப்புகளில் அடையாளக் குறியிடப் படும்.

## தமிழ்நாட்டில் புதிய காப்புக்காடுகள்

- தமிழ்நாடு அரசு 2021-2025 காலகட்டத்தில் 100 வனப்பகுதிகளைக் காப்புக்காடுகளாக அறிவித்துள்ளது.
- இதன் மூலம் இந்த மாநிலத்தில் சுமார் 13,495 ஹெக்டேர் நிலப்பரப்பு சட்டப்பூர்வ வனப் பாதுகாப்புக்குள் கொண்டு வரப்பட்டுள்ளது.
- இந்த அறிவிப்புகள் 1882 ஆம் ஆண்டு தமிழ்நாடு வனச் சட்டத்தின் பிரிவு 16-இன் கீழ் வெளியிடப்பட்டன.
- புதிய காப்புக்காடுகள் திண்டுக்கல், நீலகிரி மற்றும் தேனி உட்பட 10 மாவட்டங்களில் அமைந்துள்ளன.
- திண்டுக்கல் மாவட்டத்தில் அதிகபட்சமாக 37 புதிய காப்புக்காடு தொகுதிகள் உள்ளன.
- கள்ளக்குறிச்சி மாவட்டமானது 4,118 ஹெக்டேர் பரப்பளவில் அதிகப்படியான புதிதாக இணைக்கப்பட்ட பகுதியைக் கொண்டுள்ளது.

## புதிய வெட்டுக்கிளி இனங்கள் - காஷ்மீர்

- ஜம்மு காஷ்மீரில் மூன்று புதிய புல்வெளி வெட்டுக்கிளி இனங்கள் கண்டுபிடிக்கப் பட்டுள்ளன.
- இந்த இனமானது கோனோசெபாலஸ் பேரினத்தைச் சேர்ந்தது.
- அந்தப் புதிய இனங்களுக்கு கோனோசெபாலஸ் உஸ்மானி, கோனோசெபாலஸ் நாகரியென்சிஸ் மற்றும் கோனோசெபாலஸ் காந்தர்பாலி எனப் பெயரிடப் பட்டுள்ளன.
- இந்தப் பூச்சிகள் காஷ்மீர் பள்ளத்தாக்கின் புல்வெளிகள், புதர்கள் மற்றும் காடுகளில் காணப்பட்டன.

## MSTrIPES செயலி

- ஆனைமலை புலிகள் வளங்காப்பகத்தில் 2026 ஆம் ஆண்டு அகில இந்தியப் புலிகள் மதிப்பீட்டுக் கணக்கெடுப்பிற்கு MSTrIPES (புலிகளுக்கான கண்காணிப்பு அமைப்பு: தீவிரப் பாதுகாப்பு மற்றும் சூழலியல்) செயலி பயன்படுத்தப்படுகிறது.
- வன ஊழியர்கள் கைமுறையாக பதிவு செய்வதற்கு பதிலாக GPS மூலம் இயக்கப்பட்ட சாதனங்களைப் பயன்படுத்தி நிகழ்நேரத் தரவை உள்ளிடுவார்கள்.
- 2026 ஆம் ஆண்டு ஜனவரி 08 முதல் 14 ஆம் தேதி வரை புலிகள், இரை விலங்குகள், தாவரங்கள் மற்றும் இருப்பிட தூரம் ஆகியவை இந்த கணக்கெடுப்பில் உள்ளடக்கப் படும்.

- ஆனைமலை புலிகள் வளங்காப்பகம் தமிழ்நாட்டின் கோயம்புத்தூர் மற்றும் திருப்பூர் மாவட்டங்களில் 1,108 சதுர கிலோமீட்டர் பரப்பளவில் பரவியுள்ளது.
- அகில இந்திய புலிகள் மதிப்பீடு ஆனது நான்கு ஆண்டுகளுக்கு ஒரு முறை நடத்தப் படுகிறது.

## அடையாரில் ஆற்று நீர்நாய்

- அடையாறு ஆற்றில் ஒரு நீர்நாய் அரிதாக தென்பட்டது.
- அவை ஆறுகள், ஈரநிலங்கள், ஏரிகள், சதுப்பு நிலங்கள் மற்றும் நெல் வயல்கள் போன்ற நன்னீர் நிறைந்த பகுதிகளில் தென்பட்டன.
- அவை IUCN அமைப்பின் செந்நிறப் பட்டியலில் எளிதில் பாதிக்கப்படக்கூடியவையாக பட்டியலிடப்பட்டுள்ளன.
- உலகளவில் காணப்படும் 13 வகையான நீர்நாய்களில் 3 வகையான நீர்நாய்கள் இந்தியாவில் உள்ளன.

## காஷ்மீர் மார்க்கோர்

- இந்தியாவின் அரிதான காட்டு ஆடான காஷ்மீர் மார்க்கோர் ஆடுகளில் (காப்ரா பால்கோனேரி காஷ்மெரியன்சிஸ்), 200–300 இனங்கள் மட்டுமே எஞ்சியுள்ள நிலையில் உள்ளூர் அழிவை எதிர்கொள்கிறது.
- இது மார்கோரின் (காப்ரா ஃபால்கோனெரி) ஒரு கிளையினமாகும் என்பதோடு மேலும் IUCN செந்நிறப் பட்டியலில் ஒட்டு மொத்த இனத்திற்கும் அச்சுறுத்தல் நிலையை அண்மித்த இனம் என்ற நிலையைப் பகிர்ந்து கொள்கிறது.
- ஜம்மு & காஷ்மீரில் காணப்படுகின்ற இந்த இனம், முக்கியமாக காசினாக் தேசியப் பூங்கா, ஹிர்போரா வனவிலங்கு சரணாலயம், தட்டகுடி வனவிலங்குச் சரணாலயம் மற்றும் காரா கலி காப்பகம் ஆகியவற்றில் உள்ளது.
- ஒரு சுற்றுச்சூழல் குறிகாட்டியாக விளங்கும் காஷ்மீர் மார்கோர், பனிச்சிறுத்தைகள், சிறுத்தைகள் மற்றும் ஓநாய்களுக்கு இரையாக உள்ளது என்பதோடு மேலும் இது மலை தாவரங்கள் மற்றும் மண் ஆரோக்கியத்தைப் பராமரிக்க உதவுகிறது.
- "மார்கோர்" என்ற இப்பெயர் பண்டைய நாட்டுப்புறக் கதைகளைப் பிரதிபலிக்கின்ற "பாம்பு - கொலையாளி" என்று பொருள்படும் பாரசீக மொழியிலிருந்து வந்தது.

## பூமியின் பெருங்கடல் வெப்ப உள்ளடக்கம்

- பூமியின் பெருங்கடல் வெப்ப உள்ளடக்கம் (OHC) 2025 ஆம் ஆண்டில் கூடுதலாக ~23 ஜெட்டாஜூல் (ZJ) வெப்பத்தை உறிஞ்சுவதன் மூலம் ஒரு புதிய அளவை எட்டியது.
- இது தொடர்ச்சியாக ஒன்பதாவது ஆண்டாக பதிவான அதிகளவிலான வெப்பத்தைக் குறிக்கிறது.
- உலகளாவிய சராசரி கடல் மேற்பரப்பு வெப்பநிலை 1981–2010 ஆம் ஆண்டுகளின் சராசரியை விட ~0.5°C அதிகமாக இருந்ததுடன் பசுமை இல்ல வாயுக்களால் பிடிக்கப் பட்ட அதிகப்படியான வெப்பத்தில் கிட்டத்தட்ட 90% வெப்பத்தினைப் பெருங்கடல்கள் உறிஞ்சின.

- அதிகரித்தப் பெருங்கடல் அடுக்குகள், கடல் வெப்ப அலைகள், கடுமையான புயல்கள், பவளப் பாறைகள் வெளுப்பு மற்றும் கடல்வாழ் உயிரினங்கள் மற்றும் கடல் உற்பத்தித் திறனுக்கான அச்சுறுத்தல்கள் ஆகியவை இதன் தாக்கங்களில் அடங்கும்.
- புவி வெப்பமடைதலின் முதன்மை இடையகமாக பெருங்கடல்கள் இருப்பதையும், பருவநிலை தணிப்பு நடவடிக்கைகளுக்கான அவசரத் தேவையையும் இந்த ஆய்வு எடுத்துக்காட்டுகிறது.

## இரண்டு புதிய தவளை இனங்கள் - அருணாச்சலப் பிரதேசம்

- அருணாச்சலப் பிரதேசத்தில் இரண்டு புதிய தவளை இனங்களை அறிவியலாளர்கள் கண்டுபிடித்துள்ளனர்.
- இந்த இரண்டு இனங்களும் மெகோஃப்ரிடே குடும்பத்தின் கீழ் லெப்டோபிராச்சியம் இனத்தைச் சேர்ந்தவை.
- இந்தியாவின் தவளை மனிதன் என்றும் அழைக்கப் படும் டெல்லி பல்கலைக் கழகத்தின் பேராசிரியர் S. D. பிஜு இந்த ஆராய்ச்சிக்குத் தலைமை தாங்கினார்.
- புதிதாக அடையாளம் காணப்பட்ட இத்தவளைகள் சோமனின் மெலிந்த கை தவளை (லெப்டோ பிராச்சியம் சோமன்) மற்றும் மெச்சுகா மெலிந்த கை தவளை (லெப்டோ பிராச்சியம் மெச்சுகா) ஆகும்.

## தென்னை வேர் வாடல் நோய்

- தென்னை வேர் வாடல் நோய் கேரளா, தமிழ்நாடு மற்றும் கர்நாடகாவில் வேகமாகப் பரவி இலட்சக்கணக்கான தென்னை மரங்களை பாதிக்கிறது.
- இது பனைகளைப் பலவீனப்படுத்தி விளைச்சலைக் குறைக்கும் பைட்டோபிளாஸ்மா (புளோயம் குறைந்த நோய்க்கிருமி) காரணமாக ஏற்படும் ஒரு ஆபத்தான நோயாகும்.
- இந்த நோய், ஸ்டீபனிடிஸ் டைபிகா மற்றும் ப்ரூட்டிஸ்டா மோஸ்டா போன்ற சாறு உறிஞ்சும் பூச்சிகள் மூலம் பரவுகிறது.
- இதன் முக்கிய அறிகுறிகளில் பலவீனமான, தொங்கிய இலைகள், இலை நுனிகளில் இருந்து மஞ்சள் நிறமாக மாறுதல், நுனி இலைகள் சுருண்டு விழுதல், பூத்தலில் குறைபாடு, குரும்பை முன்கூட்டியே உதிர்தல் மற்றும் படிப்படியாக மரங்கள் பலவீனமடைதல் ஆகியவை அடங்கும்.

## சதுப்பு நில முதலை எண்ணிக்கை

- சமீபத்திய முதலை கணக்கெடுப்பு ஒடிசாவின் சிமிலிபால் தேசியப் பூங்காவில் முதலை எண்ணிக்கையில் அதிகரிப்பைக் காட்டியது.
- 2025 ஆம் ஆண்டில் 81 ஆக இருந்த மொத்த முதலை எண்ணிக்கை 2026 ஆம் ஆண்டில் 84 ஆக அதிகரித்தது.
- தியோ நதியில் 60 முதலைகளுடன் அதிக எண்ணிக்கை பதிவானது.
- கிழக்குத் தொடர்ச்சி மலைகளில் உள்ள ஒடிசாவின் மயூர்பஞ்ச் மாவட்டத்தில் அமைந்துள்ள இந்தப் பூங்கா, சுமார் 2,750 சதுர கிலோமீட்டர் பரப்பளவைக் கொண்டு உள்ளது.

- இந்தப் பூங்கா 2009 ஆம் ஆண்டு முதல் யுனெஸ்கோவின் உலக உயிர்க்கோளக் காப்பக வலையமைப்பின் ஒரு பகுதியாக இருந்து வருகிறது.
- புத்தபலங்கா மற்றும் தியோ போன்ற முக்கியமான ஆறுகள் இந்தப் பூங்கா வழியாகப் பாய்ந்து முதலை வாழ்விடங்களை ஆதரிக்கின்றன.
- முதலை எண்ணிக்கையில் அதிகரிப்பு, இராம்தீர்த்த சதுப்பு நில முதலை இனப் பெருக்க மையத்திலிருந்து வெளியிடப்படுவதுடன் தொடர்புடையது.

## உலகின் முதல் மலைகளின் பனி மாதிரிகள் களஞ்சியம்

- அண்டார்டிக் பீடபூமியில் உள்ள கான்கார்டியா ஆராய்ச்சி நிலையத்தில் உலகின் முதல் உலகளாவிய மலைகளின் பனி மாதிரிகள் களஞ்சியத்தை அறிவியலாளர்கள் திறந்து வைத்தனர்.
- இந்த மையம் பனிக்கட்டி மாதிரிகள் சரணாலயம் என்று அழைக்கப்படுகிறது என்பதோடு இது பிரான்சு, இத்தாலி மற்றும் சுவிட்சர்லாந்தைச் சேர்ந்த ஆராய்ச்சி நிறுவனங்களின் குழுவான ஐஸ் மெமரி அறக்கட்டளையால் உருவாக்கப்பட்டது.
- பனி மாதிரி காப்புப் பெட்டகம் என்பது சுருக்கப்பட்ட பனியில் உருவாக்கப்பட்ட ஒரு குகை என்பதோடு மேலும் இது நீண்ட காலமாகப் பனி மாதிரிகளைப் பாதுகாக்க -52 டிகிரி செல்சியஸில் பராமரிக்கப்படுகிறது.
- முதல் பனி மாதிரிகள் பிரான்சில் உள்ள மோன்ட் பிளாங்க் மற்றும் சுவிட்சர்லாந்தில் உள்ள கிராண்ட் காம்பின் மாசிஃப் ஆகியவற்றிலிருந்து எடுக்கப்பட்டு 50 நாட்களுக்கு மேல் அண்டார்டிகாவிற்கு கொண்டு செல்லப்பட்டன.
- கடந்த கால காலநிலை, வாயுக்கள், தூசி மற்றும் மாசுபடுத்திகள் பற்றிய தகவல்களை வைத்திருப்பதுடன் பனி மாதிரிகள் வளிமண்டல நேர காப்புகளாக செயல் படுகின்றன.
- 2015 ஆம் ஆண்டில் தொடங்கப்பட்ட பனிக்கட்டி மாதிரிகள் காப்புத் திட்டம், உலகெங்கிலும் உள்ள 10 பனிப்பாறைத் தளங்களிலிருந்து பனி மாதிரிகளை சேகரித்துள்ளது மற்றும் எதிர்கால ஆராய்ச்சிக்காக அதன் சேமிப்பை விரிவுபடுத்த திட்டமிட்டுள்ளது.

## பஃபர்ஃபிஷ் விஷமேற்றப் பாதிப்பு

- குஜராத்தின் வேராவலில் அறிவியல் பூர்வமாக உறுதிப்படுத்தப் பட்ட கோளமீன் / பஃபர்ஃபிஷ் விஷமேற்றம் தொடர்பான முதல் பாதிப்பு பதிவாகியுள்ளதாக இந்தியா தெரிவித்துள்ளது.
- டெட்ராடோன் கட்குட்டியா எனும் (தற்போது லியோடோன் கட்குட்டியா என வகைப்படுத்தப் பட்டுள்ளது) நன்னீர் வாழ் பஃபர்ஃபிஷ், டெட்ரோடோடாக்சினை (TTX) கொண்டுள்ளது.
- TTX என்பது கங்கை, பிரம்மபுத்திரா மற்றும் மகாநதி போன்ற ஆறுகளில் காணப்படும் ஒரு சக்திவாய்ந்த நரம்பியல் நச்சு ஆகும்.
- டெட்ரோடோடாக்சின் பஃபர்ஃபிஷ் திசுக்களில் வாழும் விப்ரியோ, சூடோமோனாஸ், ஏரோமோனாஸ் மற்றும் பேசிலஸ் போன்ற பாக்டீரியாக்களிலிருந்து தோன்றுவதாக நம்பப்படுகிறது.

- இந்தியாவில் தற்போது நன்னீர் வாழ் மீன் நச்சு கண்காணிப்பு திட்டம் இல்லை, இது பொது விழிப்புணர்வையும் சரியான நேரத்தில் தடுப்பையும் அவசியமாக்குகிறது.
- பஃபர்ஃபிஷ் சுற்றுச்சூழல் ரீதியாக மிகவும் முக்கியமானது என்றாலும், சுகாதார அபாயங்களைத் தடுக்கப் பாதுகாப்பான கையாளுதல் மற்றும் அது குறித்த கல்வி அவசியம் ஆகும்.

## இந்திய ஸ்கிம்மர் பறவை வளங்காப்புத் திட்டம்

- பம்பாய் இயற்கை வரலாற்றுச் சங்கம் (BNHS) டேராடூனில் தேசிய தூய்மை கங்கைக்கான திட்டத்தின் கீழ் ஒரு வளங்காப்பு திட்டத்தைத் தொடங்கியுள்ளது.
- கங்கைப் படுகையில் அழிந்து வரும் இந்திய ஸ்கிம்மர் பறவையையும் அதன் கூடு கட்டும் வாழ்விடங்களையும் பாதுகாப்பதே இந்தத் திட்டத்தின் நோக்கமாகும்.
- இது இந்திய ஸ்கிம்மர் பறவைகள் மற்றும் பிற நதி வாழ் பறவைகளுக்கு முக்கியமான கூடு கட்டும் இடங்களான நதி மணல் திட்டுகளில் கவனம் செலுத்துகிறது.
- மணல் சுரங்கம், நதி ஓட்ட மாற்றம் மற்றும் மனித தொந்தரவு போன்ற அச்சுறுத்தல்கள் கண்காணிப்பு, வாழ்விடப் பாதுகாப்பு மற்றும் சமூக ஈடுபாடு மூலம் நிவர்த்தி செய்யப் படுகின்றன.
- அவற்றின் கூடுகளைப் பாதுகாக்க, பறவைகளைக் கண்காணிக்க, அச்சுறுத்தல்களைக் குறைக்க மற்றும் தரவுச் சேகரிப்பில் உதவ உள்ளூர் மக்களுக்கு 'கூடு பாதுகாவலர்கள்' மற்றும் 'ஆற்றுப் பாதுகாவலர்கள்' என்ற நிலையில் அவர்கள் செயலாற்றப் பயிற்சி அளிக்கப்படும்.
- இந்தத் திட்டம் பிளாக்-பெல்லிட் டெர்ன், ரிவர் டெர்ன், ரிவர் லாப்விங், கிரேட் திக்-கினீ, லிட்டில் டெர்ன் மற்றும் லிட்டில் பிராட்டின்கோல் போன்ற எண்ணிக்கையில் குறைந்து வரும் பிற நதி வாழ் பறவைகளையும் ஆதரிக்கிறது.
- உலகின் இந்திய ஸ்கிம்மர் பறவைகளில் கிட்டத்தட்ட 90% இந்தியாவில் காணப் படுவதுடன், இந்த இனங்கள் உயிர்வாழ்வதற்கு அதன் வளங்காப்பு மிக முக்கியமானது ஆகும்.

## இராட்சத கரும்பவளப் பாறை கண்டுபிடிப்பு

- நியூசிலாந்தின் ஃபியோர்ட்லேண்டின் ஆழ்கடலில் 300–400 ஆண்டுகள் பழமையான ஒரு பெரிய கரும்பவளப் பாறையை அறிவியலாளர்கள் கண்டறிந்துள்ளனர்.
- சுமார் 13 அடி உயரமும் 15 அடி அகலமும் கொண்ட இது நியூசிலாந்தில் பதிவு செய்யப் பட்ட மிகப்பெரிய கரும்பவளப் பாறையாகும்.
- கரும்பவளப் பாறைகள் பெரும்பாலும் ஒவ்வொரு ஆண்டும் சில மில்லிமீட்டர்கள் என மிக மெதுவாக வளரக் கூடியது.
- பவளப்பாறை ஆனது ஆழ்கடல் வாழ் கடல் உயிரினங்களுக்கு வாழ்விடத்தையும் தங்குமிடத்தையும் வழங்குகிறது.
- இது நியூசிலாந்தின் வனவிலங்குச் சட்டத்தின் கீழ் சட்டப்பூர்வமாக பாதுகாக்கப் படுகிறது.

## தமிழ்நாட்டில் முதல் மாநில அளவிலான இரைபிடிப் பறவை மதிப்பீடு

- தமிழ்நாடு அதன் முதல் மாநில அளவிலான இரைபிடிப் பறவை மதிப்பீட்டை ஜனவரி 31 மற்றும் பிப்ரவரி 01, 2026 ஆகிய தேதிகளில் நடத்த திட்டமிட்டுள்ளது.
- மேம்பட்ட வனவிலங்குப் பாதுகாப்பு நிறுவனம் (AIWC) தமிழ்நாடு இரைபிடிப் பறவை ஆராய்ச்சி அறக்கட்டளையின் முன்னெடுப்பின் கீழ் இந்த மதிப்பீடு நடத்தப்பட உள்ளது.
- இந்தக் கணக்கெடுப்பு 50க்கும் மேற்பட்ட வனப் பிரிவுகளில் பகல் நேரங்களில் செயல் படும் மற்றும் இரவு வாழ் இரைபிடிப் பறவைகளை உள்ளடக்கியது.
- தமிழ்நாடு அக்ஸிபிட்ரிஃபார்ம்ஸ், ஃபால்கோனிஃபார்ம்ஸ் மற்றும் ஸ்ட்ரிஜிஃபார்ம்ஸ் வரிசைகளைச் சேர்ந்த 65க்கும் மேற்பட்ட இரைபிடிப் பறவை இனங்களை கொண்டு உள்ளது.
- இந்த மதிப்பீடு இரைபிடிப் பறவைகளின் பரவலைப் படிப்பது, அவற்றிற்கான அச்சுறுத்தல்களைக் கண்டறிவது மற்றும் எதிர்கால வளங்காப்புத் திட்டமிடலை ஆதரிப்பது ஆகியவற்றை நோக்கமாகக் கொண்டது.

## புதிய துடுப்புக்கால் பூச்சி இனங்கள்

- அறிவியலாளர்கள் லட்சத்தீவின் கவரட்டி உப்பங்கழியில் ஒரு புதிய சிறிய ஓட்டுடலி மீன் இனத்தைக் கண்டுபிடித்தனர்.
- இந்த இனம் கோப்போடா வகுப்பின் கீழ் லாவோபோன்டிடே குடும்பத்தைச் சேர்ந்தது.
- இந்தியா மற்றும் அறிவியலாளர்கள் S. பிஜாய் நந்தனை கௌரவிக்கும் வகையில் இதற்கு இந்தியாஃபோன்ட் பிஜாய் என்று பெயரிடப்பட்டுள்ளது.
- 1 மில்லி மீட்டருக்கும் குறைவான அளவிலான இந்த உயிரினம் மிகச் சிறியது, மேலும் இது மீயோஃபோனாவின் (வண்டல்களில் வாழும் சிறிய முதுகெலும்பில்லாத உயிரினங்கள்) ஒரு பகுதியாகும்.
- இது போன்ற ஹார்பாக்டிகாய்டு துடுப்புக்கால் பூச்சிகள் ஊட்டச்சத்துச் சுழற்சியில் உதவுகின்றன மற்றும் கடல் சுற்றுச்சூழல் மாற்றங்களின் குறிகாட்டிகளாக செயல் படுகின்றன.

## இந்தியாவில் முதன்முறையாக பதிவு செய்யப்பட்ட பிராண்டு முள்ளெலி

- பிராண்டு முள்ளெலி (பரேச்சினஸ் ஹைப்போமெலாஸ்) ஜம்மு மற்றும் காஷ்மீரில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.
- முதன்முதலில் 2024 ஆம் ஆண்டில் ரஜோரி-பூஞ்ச் பகுதியில் தென்பட்ட இது டிஎன்ஏ பகுப்பாய்வு மற்றும் உருவவியல் ஆய்வுகள் மூலம் உறுதிப்படுத்தப்பட்டது.
- இந்த இனம் முன்னர் ஆப்கானிஸ்தான், ஈரான், பாகிஸ்தான், சவுதி அரேபியா மற்றும் மத்திய ஆசியாவின் சில பகுதிகளில் அறியப்பட்டது.
- இந்தக் கண்டுபிடிப்பு பருவநிலை மாற்றம், வாழ்விட இணைப்பு மற்றும் உணவு கிடைக்கும் தன்மை காரணமாக அதன் சாத்தியமான வரம்பு விரிவாக்கத்தைக் குறிக்கிறது.
- இது காடுகள் மற்றும் விவசாய வயல்களுக்கு இடையிலான சுற்றுச்சூழல் மண்டலங்களில் காணப்பட்டது என்பதோடு மேலும் இவை கொறித்துண்ணிகளை உண்கின்றன.

## கும்பல்கர் வனவிலங்குச் சரணாலயம் - ராஜஸ்தான்

- சுற்றுச்சூழல், வனம் மற்றும் பருவநிலை மாற்ற அமைச்சகம் இராஜஸ்தானில் உள்ள கும்பல்கர் வனவிலங்குச் சரணாலயத்தைச் சுற்றுச்சூழல் தாங்கு மண்டலமாக (ESZ) அறிவித்தது.
- பலவீனமான சுற்றுச்சூழல் அமைப்புகளைப் பாதுகாக்க ஆரவல்லி மலைத்தொடரில் உள்ள சரணாலயத்தைச் சுற்றி 0–1 கிமீ பரப்பளவில் ESZ அமைந்துள்ளது.
- ESZ அந்தஸ்து திட்டமிடப்படாத மேம்பாடு, சுரங்கம் மற்றும் தொழில்துறை விரிவாக்கத்தைக் கட்டுப்படுத்த உதவுகிறது என்பதோடு சமநிலையான பாதுகாப்பு மற்றும் மனிதச் செயல்பாடுகளை உறுதி செய்கிறது.
- உள்ளூர் சமூகங்கள் கரிம வேளாண்மை, வேளாண் காடுகள் மற்றும் சுற்றுச்சூழலுக்கு உகந்த நடைமுறைகள் போன்ற நிலையான வாழ்வாதார முயற்சிகளால் மிகுந்தப் பயனடைவார்கள்.
- சுற்றுச்சூழல் தாங்கு மண்டலங்கள் பாதுகாக்கப்பட்ட பகுதிகளைச் சுற்றி மாறுநிலை மண்டலங்களாகச் செயல்பட்டு, அன்றாட வாழ்க்கையைத் தடுக்காமல் பல்லுயிரியலைப் பாதுகாக்கின்றன.

## இரண்டு புதிய அரிய ஈசல் இனங்கள்

- டெல்லி மற்றும் மேற்குத் தொடர்ச்சி மலைகளில் இரண்டு புதிய மிகவும் அரிதான ஈசல்/ எறும்பு ஈ இனங்களை அறிவியலாளர்கள் கண்டுபிடித்துள்ளனர்.
- இந்த இனங்களுக்கு மெட்டாடன் கோர்படேய் மற்றும் மெட்டாடன் ரீமெரி என்று பெயரிடப் பட்டுள்ளது.
- அவை மைக்ரோடோன்டினே (குடும்பம்: சிர்பிடே) என்ற துணைக் குடும்பத்தைச் சேர்ந்தவை.
- டெல்லியின் வடக்கு முகடு காட்டில் மெட்டாடன் கோர்படேய் காணப்பட்டது.
- தமிழ்நாட்டின் மேற்குத் தொடர்ச்சி மலைகளின் சிறுவாணி மலைகளில் மெட்டாடன் ரீமெரி கண்டுபிடிக்கப்பட்டது.

## புதிய சிறுகண் காலிலி இனங்கள்

- மகாராஷ்டிராவின் வடக்கு மேற்குத் தொடர்ச்சி மலையில் ஜெஜினோஃபிஸ் வால்மீகி என்ற புதிய சிறுகண் காலிலி இனத்தை இந்திய அறிவியலாளர்கள் கண்டுபிடித்து உள்ளனர்.
- இந்த இனம் முதன்முதலில் 2017 ஆம் ஆண்டில் மகாராஷ்டிராவின் சதாரா மாவட்டத்தில் உள்ள வால்மீகி பீடபூமியில் பதிவு செய்யப்பட்டது.
- சிறுகண் காலிலிகள், கைகால்கள் இல்லாத நிலத்தடி வாழ் இரு வாழ்விகள், அவை தங்கள் வாழ்நாளின் பெரும்பகுதியை நிலத்தடியில் செலவிடுகின்றன என்பதோடு மேலும் அவை பெரும்பாலும் மண்புழுக்கள் என்று தவறாகக் கருதப்படுகின்றன.
- இதன் கண்டுபிடிப்பு இடத்திற்கு அருகிலுள்ள வரலாற்றுச் சிறப்புமிக்க மகரிஷி வால்மீகி மந்திரின் பெயரால் இந்த இனத்திற்கு இப்பெயரிடப்பட்டது.

## இரண்டாவது நாடு தழுவிய டால்பின் கணக்கெடுப்பு

- ❖ மத்திய சுற்றுச்சூழல், வனம் மற்றும் பருவநிலை மாற்ற அமைச்சகம் (MoEFCC), உத்தரப் பிரதேசத்தின் பிஜ்னோரில் இருந்து இந்தியாவின் இரண்டாவது இந்திய அளவிலான டால்பின் கணக்கெடுப்பைத் தொடங்கியது.
- ❖ இந்த கணக்கெடுப்பு, டேராடூனில் உள்ள இந்திய வனவிலங்கு நிறுவனத்தினால் (WII) ஒருங்கிணைக்கப்பட்ட டால்பின் வளங்காப்புத் திட்டத்தின் ஒரு பகுதியாகும் என்பதோடு WWF இந்தியா, ஆரண்யாக், காகாரா, கோசி, மகாநந்தா, பிரம்மபுத்ரா, சுந்தரவனம், ஒடிசா மற்றும் சிந்து நதி அமைப்புகள் ஆகியவை இதில் அடங்கும்.
- ❖ முதல் முறையாக, சுந்தரவனம் மற்றும் ஒடிசாவில் உள்ள இராவடி/ஐராவதி டால்பின்களின் மதிப்பீட்டையும், கங்கை நதி டால்பின்கள் மற்றும் சிந்து நதி டால்பின்களுடன், வாழ்விடத் தரம் மற்றும் அச்சுறுத்தல்களை மதிப்பிடுவதையும் இது உள்ளடக்கியது.
- ❖ முதல் நாடு தழுவிய கணக்கெடுப்பில் (2021–2023) உத்தரப் பிரதேசம் மற்றும் பீகார் அதிக எண்ணிக்கையை கொண்டுள்ளதுடன் சுமார் 6,327 நதி டால்பின்கள் உள்ளதாக மதிப்பிடப்பட்டுள்ளது.

## அரியவகை ஆசிய காட்டு நாய் – செந்நாய்

- ❖ மத்தியப் பிரதேசத்தில் உள்ள ரத்தபானி புலிகள் காப்பகத்தில் முதல் முறையாக ஒரு அரிய வகை ஆசிய காட்டு நாய் (செந்நாய்) தென்பட்டது.
- ❖ இவ்வகை செந்நாய்கள் 14–20 கொண்ட கூட்டங்களாக வேட்டையாடும், மான், சாம்பார் மற்றும் புள்ளிமான் போன்றவற்றை உணவாகக் கொள்ளும் மிகவும் சமூகப் பழக்கமுள்ள வேட்டையாடும் விலங்குகளாகும்.
- ❖ இது 2026 ஆம் ஆண்டில் ரதபானியில் பதிவு செய்யப்பட்ட ஆறாவது அரிய வனவிலங்கு இனமாகும்.
- ❖ செந்நாய்கள், IUCN செந்நிறப் பட்டியலில் அருகி வரும் இனமாகப் பட்டியலிடப் பட்டு உள்ளது.
- ❖ இதற்கு முன்னர், செந்நாய்கள் முக்கியமாக கன்ஹா, பந்தவ்கர் மற்றும் பெஞ்ச் போன்ற சரணாலயங்களில் காணப்பட்டன ஆனால் இப்போது அவை ரத்தபானி போன்ற புதிய வனப்பகுதிகளுக்கும் பரவி வருகின்றன.

## இந்தியாவின் இரண்டாவது பெரிய கங்கை நீர் முதலை வாழ்விடம்

- ❖ சம்பல் நதிக்கு அடுத்தபடியாக, பீகாரில் உள்ள கண்டக் நதி இந்தியாவின் இரண்டாவது பெரிய கங்கை நீர் முதலைகள் வாழ்விடமாக மாறியுள்ளது.
- ❖ கண்டக் நதி பீகாரின் மேற்கு சம்பாரண் மாவட்டம் வழியாக இந்தியா-நேபாள எல்லையில் பாய்கிறது.
- ❖ முதிர்ந்த முதலைகளின் எண்ணிக்கை 2015ல் 54லிருந்து 2025ல் 400க்கும் அதிகமாக அதிகரித்தது என்பதோடு குட்டிகள் உட்பட மொத்த எண்ணிக்கை 1,000ஐத் தாண்டியது.
- ❖ 2015 மற்றும் 2025க்கு இடையில், 326 கிலோமீட்டர் நீளமுள்ள ஆற்றின் பகுதியில் சுமார் 944 முதலைகள் விடுவிக்கப்பட்டன.

- இந்த ஆறு வால்மீகி புலிகள் காப்பகத்தின் வழியாகச் செல்வதால், நீர்வாழ் உயிரினங்களுக்கு உகந்த சூழலை வழங்குகிறது.
- இந்தியாவின் முதல் கங்கை நீர் முதலை காப்பினப் பெருக்கத் திட்டம் 1975 ஆம் ஆண்டு ஒடிசாவில் உள்ள திக்கர்பாடாவில் தொடங்கப்பட்டது.

## தமிழ்நாட்டில் வனவிலங்குத் தாக்குதல்கள்

- கடந்த 10 ஆண்டுகளில் (2015–2025) தமிழ்நாட்டில் வனவிலங்குத் தாக்குதல்களால் 685 மனித உயிரிழப்புகள் ஏற்பட்டுள்ளன.
- இந்தத் தரவுகளை தமிழ்நாடு வனத்துறை வெளியிட்டுள்ளது.
- பெரும்பாலான உயிரிழப்புகள் காட்டு யானைகளால் (522) ஏற்பட்டன என்ற நிலையில் அதைத் தொடர்ந்து காட்டெருமை, காட்டுப்பன்றி, மான் மற்றும் கரடி ஆகியவற்றால் உயிரிழப்புகள் நிகழ்ந்துள்ளன.
- யானைத் தாக்குதல்களால் ஏற்பட்ட அதிகபட்ச உயிரிழப்புகள் 2019 ஆம் ஆண்டில் பதிவாகியுள்ளன (62 உயிரிழப்புகள்).
- தமிழ்நாட்டின் மேற்குத் தொடர்ச்சி மலை மற்றும் கிழக்குத் தொடர்ச்சி மலையின் சில மாவட்டங்களில் இந்த மோதல் தீவிரமாக உள்ளது.
- வாழ்விட இழப்பு, உணவு மற்றும் நீர்ப் பற்றாக்குறை, மற்றும் மனித குடியிருப்புகளின் விரிவாக்கம் ஆகியவை இந்த மோதலுக்கான முக்கிய காரணங்களாகும்.

# அறிக்கைகள் மற்றும் குறியீடுகள்

## NCB அறிக்கை 2025

- உலக சிமெண்ட் மற்றும் கான்கிரீட் சங்கம் (GCCA)- இந்தியா ஆனது, தேசிய சிமெண்ட் மற்றும் கட்டிடப் பொருட்கள் சபை (NCB), 2025 ஆம் ஆண்டு டிசம்பர் 26 ஆம் தேதியன்று NCB சபையின் 63வது உருவாக்க தினத்தின் போது "Carbon Uptake by Concrete" என்ற அறிக்கையை வெளியிட்டது.
- இந்தியப் பருவநிலை மற்றும் கட்டுமானச் சூழல்களின் கீழ் கார்பனேற்றம் மூலமாக கான்கிரீட் மூலம் கார்பன் டை ஆக்சைடு ($CO_2$) உறிஞ்சப்படுவதை இந்த அறிக்கை மதிப்பிடுகிறது.
- மொத்த மானுடவியல் சார் $CO_2$ உமிழ்வில் சிமெண்ட் துறை சுமார் 7% என்ற அளவிற்குப் பங்களிப்பதாகவும், அது குறைக்க மிக கடினமாக இருக்கும் ஒரு தொழில் துறையாக வகைப் படுத்தப் பட்டுள்ளதாகவும் இந்த அறிக்கை கூறுகிறது.
- கான்கிரீட் மூலம் கார்பன் உறிஞ்சுதலைச் சிறப்பாகக் கணக்கிட தரவுத் தளத்தை மேம்படுத்துதல் மற்றும் மதிப்பீட்டு முறைகளைச் செம்மைப்படுத்துதல் ஆகியவற்றை இது பரிந்துரைக்கிறது.

## நிலத்தடி நீர் வள மதிப்பீட்டு அறிக்கை 2025

- இந்தியாவின் நிலத்தடி நீர் நிலையை மதிப்பிடுவதற்காக ஜல் சக்தி அமைச்சகம் ஆனது 2025 ஆம் ஆண்டு மாறுநிலை நிலத்தடி நீர் வள மதிப்பீட்டு அறிக்கையை வெளியிட்டது.
- வருடாந்திர நிலத்தடி நீர் மீளேற்றம் ஆனது 448.52 பில்லியன் கன மீட்டராக (BCM) ஓரளவு அதிகரித்துள்ளது, அதே நேரத்தில் வருடாந்திர நீர் வெளியேற்றம் 247.22 BCM ஆக இருந்தது.
- நிலத்தடி நீர் பிரித்தெடுக்கும் அளவு 60.63% ஆகும் என்பதோடு, இது கிடைக்கக்கூடிய மொத்த வளங்களில் உறிஞ்சப்படும் நீரின் விகிதத்தைக் காட்டுகிறது.
- 6,746 மதிப்பீட்டு அலகுகளில் (தொகுதிகள்/மண்டலங்கள்/தாலுகாக்கள்), 73.4% பாதுகாப்பான நிலையிலும், 10.5% பகுதியளவு மோசமான நிலையிலும், 3.05% மோசமான நிலையிலும் மற்றும் 11.1% அதிகமாக சுரண்டப்பட்டவையாகவும் உள்ளன.
- அதிகமாக சுரண்டப்படும் பகுதிகள் முக்கியமாக வடமேற்கு இந்தியா (பஞ்சாப், ஹரியானா, டெல்லி, மேற்கு உத்தரப் பிரதேசம்), மேற்கு இந்தியா (இராஜஸ்தான், குஜராத்) மற்றும் தென்னிந்தியா (கர்நாடகா, தமிழ்நாடு, தெலுங்கானா, ஆந்திரப் பிரதேசம்) ஆகிய இடங்களில் உள்ளன.
- 1.8% பகுதிகள் நிலத்தடி நீர் சுத்திகரிப்பு இல்லாமல் குடிக்கவோ அல்லது பாசனத்திற்கு ஏற்றதாகவோ இல்லாத உப்புநீரைக் கொண்டதாக உள்ளன.

## உலக வானிலை பண்புக்கூறு குறித்த வருடாந்திர அறிக்கை 2025

- 2025 ஆம் ஆண்டானது, 2024 ஆம் ஆண்டில் அமைக்கப்பட்ட உலகளாவிய வெப்பநிலை பதிவை விட அதிகமாக இல்லாவிட்டாலும், இதுவரை பதிவு செய்யப்பட்ட வெப்பமான ஆண்டுகளில் ஒன்றாக இது இருக்கும்.
- 2015 ஆம் ஆண்டிலிருந்து, சில நிகழ்வுகள் சுமார் 10 மடங்கு அதிகமாக இருப்பதுடன் வெப்ப அலைகள் கணிசமாக மிகவும் தீவிரமாகி விட்டன.
- WWA 2025 அறிக்கையானது, அதன் மனிதாபிமான தாக்க அளவுருக்களைப் பூர்த்தி செய்த 157 தீவிர வானிலை நிகழ்வுகளை அடையாளம் கண்டுள்ளது.
- வெள்ளம் மற்றும் வெப்ப அலைகள் ஆகியவை ஒவ்வொன்றும் 49 நிகழ்வுகளுடன் மிகவும் அடிக்கடி நிகழ்ந்தவையாக உள்ளன என்ற ஒரு நிலையில் அதைத் தொடர்ந்து புயல்கள், காட்டுத்தீ மற்றும் வறட்சி ஆகியவை ஏற்பட்டுள்ளன.

## இமயமலை பருவநிலை நடவடிக்கை

- ஒருங்கிணைந்த மலை மேம்பாட்டுக்கான சர்வதேச மையம் (ICIMOD) ஆனது, இந்து குஷ் இமயமலை (HKH) பிராந்தியத்திற்கான பருவநிலை நிதி குறித்த அறிக்கையை வெளியிட்டது.
- HKH பிராந்தியத்தில் இந்தியா, சீனா, ஆப்கானிஸ்தான், பாகிஸ்தான், நேபாளம், வங்காளதேசம், மியான்மர் மற்றும் பூடான் ஆகியவை அடங்கும்.
- இந்தப் பிராந்தியத்தில் பருவநிலைத் தகவமைப்பு ஏற்பு மற்றும் தணிப்புக்கு இந்தியாவிற்கு ஆண்டிற்கு சுமார் 102 பில்லியன் அமெரிக்க டாலர் தேவைப்படுகிறது.
- பருவநிலை மாற்றம் தொடர்பான ஐக்கிய நாடுகளின் கட்டமைப்பு மாநாட்டின் (UNFCCC) 2020 ஆம் ஆண்டின் முதல் தீர்மான அறிக்கையின் அடிப்படையில், அனைத்து HKH

நாடுகளுக்கும் மொத்தமாக ஆண்டிற்கு சுமார் 768.68 பில்லியன் அமெரிக்க டாலர் நிதி தேவைப்படும்.

- சீனாவிற்கு ஆண்டிற்கு சுமார் 605 பில்லியன் அமெரிக்க டாலர்கள், பாகிஸ்தானுக்கு சுமார் 40.12 பில்லியன் அமெரிக்க டாலர்கள் மற்றும் வங்காளதேசம் மற்றும் நேபாளம் ஆகியவற்றிற்கு தலா 8.95 பில்லியன் அமெரிக்க டாலர்கள் தேவைப்படும்.
- பனிப்பாறை உருகுதல், பல்லுயிர்ப்பெருக்க இழப்பு மற்றும் தீவிர வானிலை நிகழ்வுகள் போன்ற அபாயங்களை இப்பகுதி எதிர்கொள்வதனால், பில்லியன் கணக்கான சுற்றுச்சூழல் அமைப்புகள், வாழ்வாதாரங்கள் மற்றும் நீர்வளங்களை அது அச்சுறுத்துகிறது.
- நன்னீர் விநியோகம், பல்லுயிர்ப் பெருக்கம், இயற்கை வளங்கள் மற்றும் நதியின் கீழ் மட்டத்தில் வாழும் மக்கள் தொகை மற்றும் தொழில்களை நிலைநிறுத்துவதற்கு HKH பகுதி மிகவும் முக்கியமானது.
- நிதி விநியோகத்தில் சீரற்ற தன்மையானது, சிறிய HKH நாடுகள் அவற்றின் மொத்த உள்நாட்டு உற்பத்தியுடன் ஒப்பிடும் போது முக்கியமான நிதி இடைவெளிகளை எதிர் கொள்வதால், அவை பருவநிலை மாற்றத் தாக்கங்களுக்கு மிகவும் பாதிக்கப்படக் கூடியதாக உள்ளது என்பதை எடுத்துக் காட்டுகிறது.

## மாநில நிதி குறித்த அறிக்கை 2023-24

- இந்தியத் தலைமை கணக்காளர் (CAG) இரண்டாவது ‘மாநில நிதி குறித்த அறிக்கை 2023-24’ என்ற அறிக்கையை வெளியிட்டார்.
- 2023-24 ஆம் நிதியாண்டிற்கான 28 மாநிலங்களின் நிதி நிலை குறித்த கண்ணோட்டத்தை இந்த அறிக்கை முன் வைக்கிறது.
- 67.87 லட்சம் கோடி ரூபாயாக இருந்த மாநிலங்களின் பொதுக் கடன் மொத்த மாநில உள்நாட்டு உற்பத்தியில் (GSDP) சுமார் 23% ஆகும்.
- 15வது நிதி ஆணையம் பரிந்துரைத்த, மொத்த மாநில உள்நாட்டு உற்பத்தியில் (GSDP) 3% என்ற நிதிப் பற்றாக்குறை அளவுருவினைப் பதினெட்டு மாநிலங்கள் கடந்துள்ளன.
- சம்பளம், ஓய்வூதியம் மற்றும் வட்டிக்கான வருவாய்ச் செலவினம் மொத்த வருவாய்ச் செலவினத்தில் சுமார் 60% ஆகும்.
- மத்திய வரிப் பகிர்வைச் சார்ந்திருப்பது 2014-15 ஆம் ஆண்டில் ~21 சதவீதத்திலிருந்து 2023-24 ஆம் ஆண்டில் ~30% ஆக உயர்ந்தது.
- வருவாய்ச் செலவினத்தில் மூலதனச் செலவு சுமார் 16% ஆகக் குறைவாகவே இருந்தது அதே நேரத்தில் வருவாய்ச் செலவு 83% ஆக அதிகமாக இருந்தது.

## நிதி ஆயோக் அறிக்கை 2025

- நிதி ஆயோக் அமைப்பானது வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற விவகார அமைச்சகத்துடன் இணைந்து "A Comprehensive Framework to Promote Affordable Housing" என்ற அறிக்கையைத் தயாரித்துள்ளது.
- அங்கீகரிக்கப்பட்ட மலிவு விலையிலான வீட்டுவசதித் திட்டங்களை உருவாக்கச் செய்பவர்களுக்கு 100% வரி விலக்கு மீண்டும் அறிமுகப்படுத்த பரிந்துரைத்தது.

- குறைந்த வருமான வீட்டுவசதிக்கான கடன் இடர் உத்தரவாத நிதித் திட்டத்தின் (CRGFTLIH) கீழ் கடன் வரம்பு இரட்டிப்பாக 40 லட்சம் ரூபாயாக முன்மொழியப் பட்டு உள்ளது.
- நிதிச் செலவுகளைக் குறைக்க, மனை விற்பனை முதலீட்டு அறக்கட்டளைகளிலிருந்து (REITs) வரும் மூலதன ஆதாயங்கள் மற்றும் வாடகை வருமானத்தில் வரி விலக்கு அளிக்க முன்மொழியப்பட்டுள்ளது.
- பொருளாதார ரீதியாக நலிவடைந்தப் பிரிவினர் (EWS) மற்றும் குறைந்த வருமானம் கொண்ட குழுவைச் சேர்ந்த (LIG) வாங்குபவர்களுக்கு சலுகை நிதிக்காக தேசிய வீட்டு வசதி வங்கி (NHB) வரி இல்லாத பத்திரங்களை வெளியிடலாம்.
- பிரதான் மந்திரி ஆவாஸ் யோஜனா - நகர்ப்புற 2.0 திட்டத்தின் கீழ் உள்ளவை உட்பட, மலிவு விலையிலான வீட்டு வசதித் திட்டங்களுக்கு முத்திரை வரி, பதிவுக் கட்டணம் மற்றும் நிலப் பயன்பாட்டு கட்டணங்களை மாற்றுதல் ஆகியவை விலக்கு அளிக்கப் படலாம்.

## ஐ.நா.வின் உலகப் பொருளாதார நிலை மற்றும் வாய்ப்புகள் அறிக்கை 2026

- இது ஐக்கிய நாடுகள் சபையின் பொருளாதார மற்றும் சமூக விவகாரங்கள் துறையால் (UN DESA) தயாரிக்கப்பட்டது.
- இது ஐக்கிய நாடுகளின் வர்த்தகம் மற்றும் மேம்பாட்டு மாநாடு (UNCTAD) மற்றும் ஐக்கிய நாடுகளின் ஐந்து பிராந்திய ஆணையங்களின் கூட்டாண்மையுடன் தயாரிக்கப் பட்டது.
- ஐ.நா. அறிக்கையின்படி, 2024 ஆம் ஆண்டில் உலகளாவிய இராணுவச் செலவினம் 2.7 டிரில்லியன் டாலராக அதிகரித்துள்ளது என்பதோடு இது "குறைந்தபட்சம் 1988ம் ஆண்டிலிருந்து காணப்படாத மிகக் கடுமையான வருடாந்திர அதிகரிப்பு" ஆகும்.
- இந்த அதிகரிப்பிற்கு, மொத்தச் செலவில் கிட்டத்தட்ட 75 சதவீதத்தைக் கொண்டுள்ள உலகின் முதல் 10 பெரிய செலவின நாடுகளே காரணமாகும்.
- பல வளரும் நாடுகள் அதிக கடன் சுமைகள், குறைந்த நிதிச் சுதந்திரம் மற்றும் மந்தமான வளர்ச்சி ஆகியவற்றால் தொடர்ந்து போராடி வருகின்றன.
- நிலையான வளர்ச்சி இலக்குகளை நோக்கிய முன்னேற்றம் இன்னும் வெகு தொலைவிலேயே உள்ளது.
- கூட்டாண்மையைப் புதுப்பிக்கவும், கூட்டு நடவடிக்கைகளை வலுப்படுத்தவும் 2025 ஆம் ஆண்டில் சர்வதேச சமூகத்தால் சில முக்கியமான நடவடிக்கைகள் எடுக்கப் பட்டன.
- இந்தக் கூட்டு நடவடிக்கைகளில் செவில்லா உறுதிப்பாடு (Sevilla Commitment), உலக சமூக உச்சி மாநாடு மற்றும் COP30 ஆகியவை அடங்கும்.
- வேலைவாய்ப்புகள், சமத்துவம் மற்றும் மனித உரிமைகளே அமைதி மற்றும் செழிப்பின் அடித்தளம் என்பதை உலக சமூக உச்சி மாநாடு மீண்டும் உறுதிப் படுத்தியது.
- மேம்பாட்டிற்கான நிதியுதவி குறித்த 4வது சர்வதேச மாநாடு (FfD4) 2025 ஆம் ஆண்டில் ஜூன் மாதம் ஸ்பெயினின் செவில்லாவில் நடைபெற்றது.
- வளரும் நாடுகளில் உள்ள 4 டிரில்லியன் டாலர் வருடாந்திர நிலையான வளர்ச்சி இலக்கு நிதிப் பற்றாக்குறையை ஈடுசெய்வதற்கான ஒரு பாதையை வகுத்த செவில்லா உறுதிப்பாட்டை ஏற்றுக் கொண்டது.

## UN DESA அறிக்கை 2025

- ஐக்கிய நாடுகள் சபையின் பொருளாதார மற்றும் சமூக விவகாரங்கள் துறையானது (UN DESA) 2026 ஆம் ஆண்டிற்கான உலகப் பொருளாதார நிலை மற்றும் வாய்ப்புகள் அறிக்கையை வெளியிட்டது.
- 2025-26 ஆம் நிதியாண்டிற்கான இந்தியாவின் மொத்த உள்நாட்டு உற்பத்தி (GDP) வளர்ச்சி 7.2% ஆக இருக்கும் என்று கணிக்கப்பட்டுள்ளது என்பதோடு இது இந்திய அரசாங்கத்தின் 7.4% கணிப்பை விடச் சற்று குறைவாகும்.
- இந்தியா இப்போது உலகின் நான்காவது பெரிய பொருளாதாரமாக உள்ளது.
- வலுவான நுகர்வு, பொது முதலீடு, சமீபத்திய வரிச் சீர்திருத்தங்கள் மற்றும் பணவியல் தளர்வு ஆகியவற்றால் இந்த வளர்ச்சி ஆதரிக்கப்படுகிறது.
- இந்தியாவின் மொத்த உள்நாட்டு உற்பத்தி 2026-27 ஆம் ஆண்டில் 6.6% ஆகவும், 2027-28 ஆம் ஆண்டில் 6.8% ஆகவும் வளரும் என்று கணிக்கப்பட்டுள்ளது.
- அமெரிக்காவின் நியூயார்க்கில் அமைந்துள்ள UN DESA, மேம்பாட்டுப் பிரச்சினைகள், பொருளாதாரம் மற்றும் சமூகப் பகுப்பாய்வு ஆகியவற்றில் ஈடுபடுகிறது.

## நிதி ஆயோக் அமைப்பின் வர்த்தக அறிக்கை 2026

- 2025–26 ஆம் நிதியாண்டின் முதல் (ஏப்ரல்–ஜூன் 2025) காலாண்டிற்கான "5வது காலாண்டு வர்த்தக கண்காணிப்பு அறிக்கையை" நிதி ஆயோக் அமைப்பானது 2026 ஆம் ஆண்டு ஜனவரி 06 ஆம் தேதியன்று வெளியிட்டது.
- இது தொழில்நுட்பம் சார்ந்த ஏற்றுமதிகள், சேவைகள் சார்ந்த வளர்ச்சி மற்றும் இறக்குமதிக் கட்டமைப்பில் ஏற்படும் மாற்றங்களை எடுத்துக்காட்டுகிறது.
- இந்த அறிக்கையின் கருத்துரு இந்தியாவின் வாகன ஏற்றுமதி என்பதாகும்.
- இந்த அறிக்கையானது வாகனங்கள், வாகனக் கூறுகள், உலகளாவியத் தேவை மற்றும் மதிப்புச் சங்கிலி ஒருங்கிணைப்பு ஆகியவற்றைப் பகுப்பாய்வு செய்கிறது.
- உலகளாவிய வாகனத் துறையில் ஏற்றுமதி போட்டித் தன்மை மற்றும் சந்தைப் பங்கை மேம்படுத்துவதற்கான கொள்கை நடவடிக்கைகளை இது பரிந்துரைக்கிறது.

## பாரத் பருவநிலை மன்றம் 2026

- எரிசக்தி மற்றும் வள நிறுவனம் (TERI) ஆனது, 2026 ஆம் ஆண்டு பாரத் பருவநிலை மன்றத்தில் "India's PV Manufacturing & Its Strategic Inflection Points" என்ற அறிக்கையை வெளியிட்டது.
- இந்த அறிக்கை பாலிசிலிக்கான் முதல் வேஃபர்கள், கலன்கள் மற்றும் தொகுதிகள் வரை இந்தியாவின் சூரிய ஒளிமின்னழுத்த (PV) உற்பத்தி சங்கிலியை ஆய்வு செய்கிறது.
- சீனா 98% வேஃபர்கள், 92% பாலிசிலிக்கான், 91.8% கலன்கள் மற்றும் 84.6% தொகுதிகளுடன் ஒரு பெரிய உலகளாவியப் பங்கைக் கொண்டுள்ளது.
- இந்தியாவில் ஆண்டிற்கு சுமார் 120 GW தொகுதி உற்பத்தி திறன் உள்ளது ஆனால் மிகக் குறைந்த மேம்பாட்டுத் திறன் உள்ளது.

- இந்தியாவின் சூரிய தொகுதி உற்பத்தித் திறன் 2030 ஆம் ஆண்டளவில் ஆண்டிற்கு 280 GW அளவைத் தாண்டும் என்று எதிர்பார்க்கப்படுகிறது, அதே நேரத்தில் கலன் உற்பத்தித் திறன் ஆண்டிற்கு சுமார் 171 GW ஆக உயரக்கூடும்.
- வலுவான உள்நாட்டுச் சூரிய மின்சக்தித் துறையை உருவாக்குவதற்கான தேசிய தூய எரிசக்தி உற்பத்தி அமலாக்கத் திட்டத்தை இந்த அறிக்கை ஆதரிக்கிறது.

## வருடாந்திர நிலத்தடி நீர் தர அறிக்கை 2025

- மத்திய நிலத்தடி நீர் வாரியம் (CGWB) 2025 ஆம் ஆண்டு வருடாந்திர நிலத்தடி நீர் தர அறிக்கையை வெளியிட்டது.
- இந்தியாவின் நிலத்தடி நீரில் 71.7% BIS (இந்தியத் தரநிலைகள் வாரியம்) வரம்புகளை பூர்த்தி செய்கிறது அதே நேரத்தில் 28.3% மாதிரிகள் ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட தர அளவுருக்களை மீறுகின்றன.
- சுமார் 20% மாதிரிகள் 45 மி.கி/லி என்ற பாதுகாப்பான வரம்பைக் கடந்துள்ளதுடன் நைட்ரேட் மிகவும் பரவலான மாசுபடுத்தியாக உள்ளது, இதற்கு முக்கிய காரணம் உரங்கள், கழிவுநீர் மற்றும் விலங்கு கழிவுகள் ஆகும்.
- பஞ்சாப் மாநிலத்தில் மிக உயர்ந்த அளவு பதிவாகியுள்ளதுடன் யுரேனியம் மாசுபாடு 30 ppb (பில்லியனுக்கு எத்தனை பாகங்கள்) என்ற பாதுகாப்பான வரம்பை விட அதிகமாக 6.71% (பருவமழைக்கு முன்) மற்றும் 7.91% (பருவமழைக்குப் பிந்தைய) மாதிரிகளில் கண்டறியப்பட்டது.
- ஃப்ளோரைடு மாசுபாடு (8.05% மாதிரிகள்) முக்கியமாகப் புவி சார்ந்ததாக உள்ளது (இயற்கையாக நிகழும்).
- இராஜஸ்தானில் அதிக ஃப்ளோரைடு அளவுகள் பதிவாகியுள்ளன அதே நேரத்தில் டெல்லியில் அதிக ஈய மாசுபாடு பதிவானது.
- சுமார் 94.30% நிலத்தடி நீர் மாதிரிகள் பாசனப் பயன்பாட்டிற்குச் சிறந்தவையாக உள்ளது என்பதுடன் இது விவசாயத்திற்கான ஒட்டு மொத்தமாக ஏற்ற தன்மையைக் காட்டுகிறது.

## பொறுப்புள்ள நாடுகளின் குறியீடு 2026

- உலக அறிவுசார் அறக்கட்டளை (WIF) பொறுப்புள்ள நாடுகளின் குறியீட்டை (RNI) வெளியிட உள்ளது.
- உலக நாடுகளை மதிப்பிடுவதற்கான இந்தியாவின் முதல் உலகளாவிய குறியீடு இதுவாகும்.
- RNI பொருளாதார அல்லது இராணுவ சக்திக்குப் பதிலாக பொறுப்பான நிர்வாகம், நிலைத்தன்மை மற்றும் உலகளாவிய பொறுப்பை மதிப்பிடுகிறது.
- இது ஜவஹர்லால் நேரு பல்கலைக்கழகம் (JNU), மும்பையில் உள்ள இந்திய மேலாண்மை கல்வி நிறுவனம் (IIM) மற்றும் டாக்டர் அம்பேத்கர் சர்வதேச மையம் ஆகியவற்றுடன் இணைந்து உருவாக்கப்பட்டுள்ளது.
- இந்தக் குறியீடு 154 நாடுகளை வெளிப்படையான மற்றும் உலகளவில் பெறப்பட்ட தரவுகளைப் பயன்படுத்தி மதிப்பிட்டது.

- RNI உள் நாட்டுப் பொறுப்பு (குடிமக்கள் நல்வாழ்வு, கண்ணியம், நீதி), சுற்றுச்சூழல் பொறுப்பு (பருவநிலை நடவடிக்கை, இயற்கை வள மேலாண்மை) மற்றும் வெளிப்புறப் பொறுப்பு (அமைதி, பலதரப்பு ஒத்துழைப்பு, உலகளாவிய நிலைத்தன்மை) ஆகிய மூன்று பரிமாணங்களைக் கொண்டுள்ளது.
- நெறிமுறை நிர்வாகம் மற்றும் நிலையான மேம்பாடு குறித்து நாடுகளை மதிப்பிடச் செய்வதற்கான மதிப்பு அடிப்படையிலான கட்டமைப்பை இது வழங்குகிறது.

## உலகளாவிய மதிப்பீட்டு அறிக்கை 2025

- பேரிடர் அபாயக் குறைப்பு குறித்த 2025 ஆம் ஆண்டு உலகளாவிய மதிப்பீட்டு அறிக்கையின் படி (GAR 2025), உலகளாவிய காட்டுத்தீயானது மொத்தப் பொருளாதார இழப்புகளில் சுமார் 106 பில்லியன் அமெரிக்க டாலர் இழப்புகளை ஏற்படுத்தியது.
- காட்டுத்தீ என்பது சமூக, பொருளாதார அல்லது சுற்றுச்சூழல் மதிப்புகளுக்கு தீங்கு விளைவிக்கும் எந்தவொரு எதிர்பாராத மற்றும் கட்டுப்பாடற்றத் தாவரங்களில் ஏற்படும் தீ ஆகும்.
- சுற்றுச்சூழல் பாதிப்புகளில் $CO_2$ உமிழ்வு, பல்லுயிர் இழப்பு மற்றும் பருவநிலை பின்னூட்டச் சுழல்கள் ஆகியவை அடங்கும்.
- மனிதப் பாதிப்புகளில் சுவாச மற்றும் இருதயக் கோளாறுகள் மற்றும் சமூகங்களின் இடம் பெயர்வு ஆகியவை அடங்கும்.
- பருவநிலை மாற்றம், நிலப் பயன்பாட்டு மாற்றங்கள், மனித நடவடிக்கைகள் மற்றும் எரிபொருள் கிடைக்கும் தன்மை காரணமாக காட்டுத்தீ அபாயங்கள் அதிகரித்து வருகின்றன.

## உலகளாவியப் பொருளாதார வாய்ப்புகள் அறிக்கை 2026

- உலக வங்கி உலகளாவிய வளர்ச்சியை மதிப்பிடுவதற்காக ஆண்டுதோறும் இரண்டு முறை வெளியிடப்படுகின்ற உலகளாவியப் பொருளாதார வாய்ப்புகள் (GEP) அறிக்கையை வெளியிட்டது.
- 2025-26 ஆம் நிதியாண்டிற்கான இந்தியாவின் வளர்ச்சிக் கணிப்பு 2025 ஆம் ஆண்டு ஜூன் மாதத்தில் கணிக்கப்பட்ட 6.3% அளவிலிருந்து 7.2% ஆக திருத்தப்பட்டது.
- இந்தியாவில் வளர்ச்சிக் காரணிகளில் வலுவான உள்ளூர் தேவை, அதிகரித்து வரும் தனியார் நுகர்வு, வரிச் சீர்திருத்தங்கள் மற்றும் கிராமப்புற வீட்டு வருமானம் அதிகரிப்பு ஆகியவை அடங்கும்.
- உலகளாவிய வர்த்தக வளர்ச்சி 2025 ஆம் ஆண்டில் 3.4% சதவீதத்திலிருந்து 2026 ஆம் ஆண்டில் 2.2% ஆகக் குறையும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.
- வளர்ந்து வரும் சந்தை மற்றும் வளர்ந்து வரும் பொருளாதாரங்களில் (EMDE) அரசாங்கக் கடன் 55 ஆண்டுகளில் இல்லாத அளவுக்கு மொத்த உள்நாட்டு உற்பத்தியில் கிட்டத்தட்ட 70% அளவினை எட்டியுள்ளது.

## ஏற்றுமதி தயார்நிலை குறியீடு 2024

- இந்திய மாநிலங்கள் மற்றும் ஒன்றியப் பிரதேசங்களின் ஏற்றுமதி தயார்நிலையை மதிப்பிடுவதற்காக நிதி ஆயோக் அமைப்பு 2024 ஆம் ஆண்டு ஏற்றுமதி தயார்நிலை குறியீட்டினை (EPI) வெளியிட்டுள்ளது.
- ஏற்றுமதி ஆயத்த குறியீடு (EPI) என்பது ஏற்றுமதி உள்கட்டமைப்பு, வணிக சுற்றுச்சூழல் அமைப்பு, கொள்கை ஆதரவு மற்றும் ஏற்றுமதி செயல்திறனை அளவிடும் ஒரு கூட்டு குறியீடாகும்.
- EPI 2024 என்பது நான்காவது குறியீடாகும் என்பதோடு இது முதலில் 2020 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதத்தில் தொடங்கப்பட்டது.
- இந்தக் குறியீடு அதிகாரப்பூர்வ அரசாங்கத் தரவைப் பயன்படுத்துகின்ற 4 தூண்கள், 13 துணைத் தூண்கள் மற்றும் 70 குறிகாட்டிகளை அடிப்படையாகக் கொண்டது.
- மாநிலங்கள் மற்றும் ஒன்றியப் பிரதேசங்கள் செயல்திறனை அடிப்படையாகக் கொண்டு முன்னிலையில் உள்ளவை, சவாலை எதிர்கொள்பவை மற்றும் ஆர்வ மிக்கவை என வகைப்படுத்தப்பட்டுள்ளன.
- மகாராஷ்டிரா, தமிழ்நாடு மற்றும் குஜராத் ஆகியவை பெரிய மாநிலங்களில் முன்னணியில் உள்ளன அதே நேரத்தில் உத்தரகாண்ட் மற்றும் ஜம்மு & காஷ்மீர் சிறிய மாநிலங்கள் மற்றும் ஒன்றியப் பிரதேச பிரிவுகளில் முன்னணியில் உள்ளன.

## உலகளாவிய அபாய அறிக்கை 2026

- உலகப் பொருளாதார மன்றம் (WEF) 2026 ஆம் ஆண்டு உலகளாவிய அபாய அறிக்கையை வெளியிட்டது.
- இது இணையவெளிப் பாதுகாப்பை இந்தியாவின் மிகப்பெரிய ஆபத்து கொண்டதாகவும், புவிசார் பொருளாதார மோதலை மிகவும் கடுமையான உலகளாவிய அச்சுறுத்தலாகவும் அடையாளம் கண்டுள்ளது.
- டிஜிட்டல் நிர்வாகம், நிதி தொழில்நுட்பம் மற்றும் முக்கியமான டிஜிட்டல் உள் கட்டமைப்பைச் சார்ந்திருப்பதால் இணையவெளிப் பாதுகாப்பு இந்தியாவின் மிகப் பெரிய ஆபத்தாக உள்ளது.
- புவிசார் பொருளாதார மோதல் என்பது புவிசார் அரசியல் நலன்களுக்காக வர்த்தக கட்டுப்பாடுகள், தடைகள், முதலீட்டு கட்டுப்பாடுகள் மற்றும் தொழில்நுட்பத் தடைகளைப் பயன்படுத்தும் நாடுகளைக் குறிக்கிறது.
- இந்தியாவிற்கான பிற முக்கிய ஆபத்துகளில் வருமானம் மற்றும் செல்வ சமத்துவமின்மை, பலவீனமான பொதுச் சேவைகள், பொருளாதார மந்தநிலைகள் மற்றும் அரசு சார்ந்த ஆயுத மோதல்கள் ஆகியவை அடங்கும்.
- 2026 ஆம் ஆண்டில் உலகளாவிய அபாயங்களில் ஆயுத மோதல்கள், தீவிர வானிலை, காலநிலை மாற்றம், தொழில்நுட்ப அச்சுறுத்தல்கள் மற்றும் இணையவெளிப் பாதுகாப்பின்மை ஆகியவை அடங்கும்.

## பெர்க்லி புவி அறிக்கை

- பெர்க்லி வருடாந்திர புவி வெப்பநிலை அறிக்கை, 2025 ஆம் ஆண்டானது இதுவரை பதிவு செய்யப்பட்ட மிக வெப்பமான லா நினா ஆண்டாகக் கண்டறிந்துள்ளது.
- லா நினா என்பது எல் நினோ தெற்கு அலைவு (ENSO) நிகழ்வின் குளிரான கட்டமாகும் என்பதோடு இது பொதுவாக உலக வெப்பநிலையைக் குறைக்கிறது.
- ENSO என்பது பூமத்திய ரேகை பசிபிக் பகுதியில் பதிவாகும் ஏற்ற இறக்கமான கடல் வெப்பநிலையால் ஏற்படும் ஒரு இயற்கை நிகழ்வு ஆகும் என்பதோடு இது தெற்கு அலைவு எனப்படும் வளிமண்டல மாற்றங்களுடன் தொடர்புடையது.
- லா நினாவின் போது, வர்த்தக காற்று வலுப்பெற்று, வெதுவெதுப்பான நீரை மேற்கு நோக்கித் தள்ளி, கிழக்கு பசிபிக் பகுதியில் குளிர்ந்த நீர் மேலுயர அனுமதிக்கிறது.
- இந்தியாவில், லா நினா பொதுவாக இயல்பை விட அதிகமான பருவ மழையையும், வடக்குப் பகுதிகளில் குளிர்ந்த குளிர்காலத்தையும், வங்காள விரிகுடாவில் வெள்ளம் மற்றும் சூறாவளிகளின் அதிக அபாயத்தையும் தருகிறது.
- அதன் எதிர் கட்டமான எல் நினோவானது, வர்த்தக காற்றைப் பலவீனப்படுத்துகிறது, கிழக்கு பசிபிக் பகுதியை வெப்பமாக்குகிறது, பருவமழைப் பொழிவை பலவீனப் படுத்துகிறது, வறட்சியைத் தூண்டுகிறது மற்றும் வெப்பமான கோடைகாலத்தை ஏற்படுத்துகிறது.

## வேலைவாய்ப்பு மற்றும் சமூகப் போக்குகள் அறிக்கை 2026

- சர்வதேச தொழிலாளர் அமைப்பு (ILO) வேலைவாய்ப்பு மற்றும் சமூகப் போக்குகள் அறிக்கை 2026 எனும் அறிக்கையை வெளியிட்டது.
- 2026 ஆம் ஆண்டில் உலகளாவிய வேலைவாய்ப்பின்மை விகிதம் 4.9% ஆக (சுமார் 186 மில்லியன் வேலைவாய்ப்பற்ற மக்கள்தொகை) இருக்கும் என்று கணிக்கப்பட்டுள்ளது.
- வேலைவாய்ப்பின்மைக்கு அப்பால், உலகளாவிய வேலைவாய்ப்பு இடைவெளியானது வேலைக்குச் செல்ல விரும்பும் ஆனால் அதை அணுக முடியாத அளவில் 408 மில்லியன் மக்களை எட்டும் என்று எதிர்பார்க்கப் படுகிறது.
- உலகளவில் ஒரு நாளைக்கு 3 அமெரிக்க டாலர்களுக்கும் குறைவாக சம்பாதிக்கின்ற சுமார் 284 மில்லியன் தொழிலாளர்கள் தீவிர வறுமையில் வாழ்கின்றனர்.
- உலகம் முழுவதும் இரண்டு பில்லியனுக்கும் அதிகமான தொழிலாளர்கள் முறைசாரா வேலையில் உள்ளனர்.
- இளைஞர் வேலைவாய்ப்பின்மை சுமார் 12.4% ஆகும் என்பதோடு மேலும் ஆண்களை விட 24% குறைவானப் பங்கேற்புடன் உலகளாவிய வேலைவாய்ப்பில் ஐந்தில் இரண்டு பங்கு மட்டுமே பெண்கள் பெறுகின்றனர்.

## சர்க்கரை-இனிப்பு பானங்கள் குறித்த WHO அறிக்கை

- சர்க்கரை-இனிப்பு பானங்கள் மற்றும் மதுபானங்கள் மீதான வரிகள் பல நாடுகளில் குறைவாகவே உள்ளன என்பதைக் காட்டும் உலகளாவிய அறிக்கைகளை WHO அமைப்பு வெளியிட்டது.

- குறைந்தது 116 நாடுகள் சர்க்கரைப் பானங்களுக்கு வரி விதிக்கின்றன, ஆனால் இந்த வரி சராசரியாக சுமார் 6–7% பங்கில் பொதுவாக சில்லறை விலையில் ஒரு சிறிய பங்கைக் கொண்டுள்ளது.
- 100% பழச்சாறுகள், இனிப்பு சேர்க்கப்பட்ட பால் மற்றும் குடிக்கத் தயாராக உள்ள தேநீர்/காபிகள் போன்ற பல உயர் சர்க்கரைப் பொருட்கள் பெரும்பாலும் வரியிலிருந்து விடுபடுகின்றன.
- சுமார் 167 நாடுகளில் மது வரிகள் விதிக்கப்படுகின்றன, ஆனால் பணவீக்கம் அல்லது வருமான வளர்ச்சிக்கு ஏற்ப வரிகள் ஈடுசெய்யப்படாததால் பல இடங்களில் விலைகள் குறைவாகவோ அல்லது மாறாமலோ உள்ளன.
- இந்த அறிக்கைகள் குறைந்த வரி அளவுகளை ஆரோக்கியமற்ற பானங்களின் நுகர்வு அதிகரிப்புடன் இணைக்கின்றன என்பதோடு இது உடல் பருமன், நீரிழிவு நோய், இருதய நோய்கள், புற்றுநோய்கள் மற்றும் காயங்களுக்குப் பங்களிக்கிறது.
- அதிகமாக மற்றும் சிறப்பாக வடிவமைக்கப்பட்ட வரிகள் தீங்கு விளைவிக்கும் பொருட்களின் நுகர்வைக் குறைக்கவும், பொது சுகாதாரத்தை மேம்படுத்தவும், சுகாதாரச் சேவைகளுக்கான வருவாயை உருவாக்கவும் உதவும்.

## MSME திட்டங்கள் குறித்த நிதி ஆயோக் அறிக்கை

- நிதி ஆயோக் 2026 ஆம் ஆண்டு ஜனவரியில் ஒரு அறிக்கையை வெளியிட்டது என்பதோடு இது செயல்திறனை மேம்படுத்தவும் நகலெடுப்பைக் குறைக்கவும் குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் துறை நிறுவனங்கள் (MSME) திட்டங்களை ஒன்றிணைப்பதை முன்மொழிகிறது.
- இந்த அறிக்கை 18 மத்திய MSME திட்டங்களைப் பகுப்பாய்வு செய்து ஒருங்கிணைந்த டிஜிட்டல் அணுகல், தொகுப்பு மேம்பாடு, திறன் திட்ட சீரமைப்பு மற்றும் சந்தைப் படுத்தல் ஆதரவு ஒருங்கிணைப்பை பரிந்துரைத்தது.
- இந்தியாவின் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் (GDP) MSME நிறுவனங்கள் சுமார் 29–30% பங்களிக்கின்றன மற்றும் சுமார் 28.7 கோடிக்கும் அதிகமான மக்களை வேலைக்கு அமர்த்துகின்றன.
- நாடு முழுவதும், பாதி கிராமப்புறங்களில் உள்ளதுடன் 6.3 கோடிக்கும் அதிகமான அலகுகள் உள்ளன என்பதோடு இவை இந்தியாவின் ஏற்றுமதியில் சுமார் 45–46% ஆனது MSME நிறுவனங்களிலிருந்து வருகின்றன.
- மையப்படுத்தப்பட்ட செயற்கை நுண்ணறிவு மூலம் இயக்கப்பட்ட வலை தளம், இணைக்கப் பட்ட தொகுப்புத் திட்டங்கள், திறன் திட்டப் பகுத்தறிவு மற்றும் ஒருங்கிணைந்த சந்தைப்படுத்தல் மற்றும் புதுமை ஆதரவு அமைப்பு ஆகியவை இதன் முக்கிய பரிந்துரைகளில் அடங்கும்.
- MSME நிறுவனங்கள் மற்றும் கிராமப்புற தொழில்முனைவோருக்குத் திட்ட விநியோகத்தை எளிமையாகவும், வேகமாகவும், பயனுள்ளதாகவும் மாற்றுவதே இதன் குறிக்கோள் ஆகும்.

## உலகளாவிய நீர் திவால்நிலை அறிக்கை 2026

- ஐக்கிய நாடுகளின் நீர், சுற்றுச்சூழல் மற்றும் சுகாதாரப் பல்கலைக்கழக நிறுவனம் (UNU-INWEH) உலகமானது உலகளாவிய நீர் திவால்நிலை சகாப்தத்தில் நுழைந்து உள்ளதாகக் கூறுகிறது.
- நீர் திவால்நிலை என்பது மனிதர்கள் பாதுகாப்பாக மீள் நிரப்பக்கூடியதை விட அதிகமான தண்ணீரைப் பயன்படுத்துவதாகும் என்பதோடு இது ஆறுகள், ஏரிகள், நீர்நிலைகள், ஈரநிலங்கள், மண் மற்றும் பனிப்பாறைகளுக்கு நீண்டகாலச் சேதத்தை ஏற்படுத்துகிறது.
- இது நீர் வளம் மீதான அழுத்தம் (அதிக தேவை, பெரும்பாலும் மீளக்கூடியது) மற்றும் நீர் நெருக்கடி (தற்காலிக அதிர்ச்சி, அவசர நடவடிக்கைகளால் சரி செய்யக் கூடியது) ஆகியவற்றிலிருந்து வேறுபட்டது.
- இதற்கான காரணங்களில் நீர் வளம் மெதுவாகக் குறைதல், பெரிய அணைகள் போன்ற உள்கட்டமைப்பினால் உந்தப்பட்ட அதிகப்படியான நீர்மட்டம், ஈரநிலங்கள் மற்றும் காடுகளின் சுற்றுச்சூழல் தரமிழப்பு மற்றும் பருவநிலையினால் பெருக்கப் பட்ட அதிகப்படியான நீர்மட்டம் ஆகியவை அடங்கும்.
- பல நீர் அமைப்புகள் மீளமுடியாத அளவிற்கு சேதமடையக் கூடும் என்றும், சுற்றுச்சூழல் அமைப்புகள், உணவுப் பாதுகாப்பு மற்றும் வாழ்வாதாரங்களைப் பாதிக்கலாம் என்றும் அறிக்கை எச்சரிக்கிறது.

## பொறுப்புள்ள நாடுகளின் குறியீடு 2026

- குடிமக்கள், சுற்றுச்சூழல் மற்றும் உலகளாவிய சமூகத்திற்கு உலக நாடுகள் எவ்வாறு பொறுப்புடன் செயல்படுகின்றன என்பதை மதிப்பிடுவதற்காக பொறுப்புள்ள நாடுகளின் குறியீடு (RNI) 2026 வெளியிடப்பட்டது.
- உலக அறிவுசார் அறக்கட்டளையின் (WIF) உதவியுடன் இந்தக் குறியீட்டை முன்னாள் குடியரசுத் தலைவர் இராம்நாத் கோவிந்த் புது டெல்லியில் அதிகாரப் பூர்வமாக வெளியிட்டார்.
- இந்தக் குறியீட்டில் இடம் பெற்ற 154 நாடுகளில் சிங்கப்பூர் முதலிடத்தைப் பிடித்தது.
- அமெரிக்கா மற்றும் சீனாவை விட முன்னிலையில் இந்தியா 16வது இடத்தைப் பிடித்தது.
- இந்தக் குறியீடு வழக்கமான அதிகார நடவடிக்கைகளிலிருந்து நெறிமுறை நிர்வாகம் மற்றும் பொறுப்பு மீது கவனம் செலுத்துகிறது.

## நம்பியோ பாதுகாப்புக் குறியீடு 2026

- உலகளவில் 304 நகரங்களை உள்ளடக்கிய நம்பியோ பாதுகாப்புக் குறியீடு 2026 தர வரிசை வெளியிடப்பட்டது.
- சீனாவின் கிங்டாவோ உலகின் பாதுகாப்பான நகரமாக தரவரிசைப்படுத்தப்பட்டது.
- கர்நாடகாவின் மங்களூரு இந்தியாவின் பாதுகாப்பான நகரமாக உருவெடுத்தது.
- வன்முறை குற்றம், சொத்து குற்றம் மற்றும் இரவில் தனியாக நடக்கும்போது பாதுகாப்பு உள்ளிட்டவை தொடர்பான கணக்கெடுப்பு பதில்களின் அடிப்படையில் பதிவு செய்யப்பட என்று பாதுகாப்பு மற்றும் குற்ற நிலைகளை இந்தக் குறியீடு அளவிடுகிறது.

- இந்தியாவின் முதல் ஐந்து பாதுகாப்பான நகரங்கள் மங்களூரு (74.4), அகமதாபாத் (68.5), ஜெய்ப்பூர் (65.3), கோயம்புத்தூர் (62.0) மற்றும் திருவனந்தபுரம் (61.0) ஆகும்.
- 55.8 என்ற சராசரிப் பாதுகாப்பு மதிப்பெண்ணுடன், மிதமான பாதுகாப்புப் பிரிவில் ஒட்டு மொத்தமாக, இந்தியா உலகளவில் 70வது இடத்தைப் பிடித்துள்ளது.
- டெல்லி, நொய்டா மற்றும் குருகிராம் போன்ற பெரிய பெருநகரப் பகுதிகள் இந்தியாவின் மிகக் குறைந்த பாதுகாப்பான நகரங்களில் இடம் பெற்றுள்ளன.
- 2026 ஆம் ஆண்டில் உலகளவில் பாதுகாப்பான நாடுகளில் ஐக்கிய அரபு அமீரகம் (86.0), கத்தார் (84.8) மற்றும் அன்டோரா (84.8) ஆகியவை அடங்கும்.
- பப்புவா நியூ கினியா, வெனிசுலா மற்றும் ஹைட்டி ஆகியவை மிகக் குறைந்த பாதுகாப்பான நாடுகளில் அடங்கும்.

## UNEP அறிக்கை 2026

- ஐ.நா. சுற்றுச்சூழல் திட்ட அமைப்பு இயற்கைக்கான நிதி நிலை 2026 அறிக்கையை வெளியிட்டது.
- இது இயற்கைக்கு எதிர்மறையான மற்றும் இயற்கைக்கு நேர்மறையான நிதிக்கு இடையிலான உலகளாவிய ஏற்றத்தாழ்வை எடுத்துக்காட்டுகிறது.
- 2023 ஆம் ஆண்டில், இயற்கைக்கு எதிர்மறையான நிதி சுமார் 7.3 டிரில்லியன் டாலர்களை எட்டிய அதே நேரத்தில் இயற்கை சார்ந்த தீர்வுகளில் முதலீடு சுமார் 220 பில்லியன் டாலர்களாக இருந்தது.
- தனியார் நிதி புதைபடிவ எரிபொருள்கள் மற்றும் கனரகத் தொழில்துறையில் குவிந்து உள்ளதுடன், இயற்கை சார்ந்தத் தீர்வுகளுக்கான நிதியில் கிட்டத்தட்ட 90% பொது மூலங்களில் இருந்து வருகிறது.
- ரியோ உடன்படிக்கை இலக்குகளை அடைய, இயற்கை சார்ந்த தீர்வுகளில் ஆண்டு முதலீடு 2030 ஆம் ஆண்டுக்குள் சுமார் 571 பில்லியன் டாலர்களாக உயர வேண்டும்.
- தீங்கு விளைவிக்கும் செயல்களிலிருந்து மூலதனத்தைத் திசை திருப்புதல், சுற்றுச் சூழலுக்கு தீங்கு விளைவிக்கும் மானியங்களை சீர்திருத்துதல், இயற்கை-இடர் வெளிப் படுத்தல்களைக் கட்டாயமாக்குதல் மற்றும் கலப்பு நிதியை விரிவுபடுத்துதல் ஆகியவற்றை இந்த அறிக்கை பரிந்துரைக்கிறது.

## ஆசிய உற்பத்திக் குறியீடு 2026

- 2026 ஆம் ஆண்டு ஆசிய உற்பத்திக் குறியீட்டில் (AMI) 11 ஆசியப் பொருளாதாரங்களில் இந்தியா 6வது இடத்தைப் பிடித்தது.
- AMI ஹாங்காங்கில் உள்ள ஆசியா முழுவதும் இயங்கும் ஆலோசனை நிறுவனமான டெசான் ஷிரா & அசோசியேட்ஸ் வெளியிட்டது என்பதோடு இது உற்பத்திப் போட்டித் தன்மையை மதிப்பிடுகிறது.
- இந்தக் குறியீடு 8 முக்கியத் தூண்கள் மற்றும் உள்கட்டமைப்பு, தொழிலாளர், சந்தை அணுகல், ஒழுங்குமுறை சூழல் மற்றும் விநியோகச் சங்கிலி மீள்தன்மை உள்ளிட்ட 43 துணை அளவுருக்களை உள்ளடக்கியது.
- இதில் மலேசியா 2வது இடத்தையும், அதைத் தொடர்ந்து வியட்நாம் 3வது இடத்தையும் பிடித்துள்ளது என்பதோடு இது அதிகரித்து வரும் பிராந்திய போட்டியைக் காட்டுகிறது.

## பசுமை மாற்றம் குறித்த நிதி ஆயோக் அறிக்கை

- சிமெண்ட், அலுமினியம் மற்றும் MSME துறைகளுக்கான கார்பன் நீக்கம் செய்வதற்கான வழித்தடங்களை கோடிட்டுக் காட்டும் அறிக்கைகளை நிதி ஆயோக் வெளியிட்டது.
- பொருளாதார நடவடிக்கைகளில் இருந்து கார்பன் டை ஆக்சைடு வெளியேற்றத்தைக் குறைப்பது அல்லது நீக்குவதை கார்பன் நீக்கம் குறிக்கிறது.
- இந்தியாவின் மொத்தப் பசுமை இல்ல வாயு வெளியேற்றத்தில் சிமெண்ட் சுமார் 6% மற்றும் அலுமினியம் சுமார் 2.8% பங்களிக்கிறது.
- 2022 ஆம் ஆண்டில் குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில்துறை நிறுவனங்கள் (MSME) சுமார் 135 மில்லியன் டன் அளவிற்குக் கார்பன் டை ஆக்சைடுக்கு சமமான அளவை வெளியிடுகின்றன.
- 2030 ஆம் ஆண்டுக்குள் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் உமிழ்வுத் தீவிரத்தை 45% குறைத்து 2070 ஆம் ஆண்டுக்குள் நிகர சுழி உமிழ்வை அடைவதற்கான இந்தியாவின் இலக்குகளை இந்த மாற்றம் ஆதரிக்கிறது.
- ஐரோப்பிய ஒன்றிய கார்பன் வரம்பு சீரமைப்பு செயல்முறை போன்ற வர்த்தக நடவடிக்கைகளால் எழும் ஏற்றுமதி அபாயங்களைக் குறைக்கவும் இது உதவுகிறது.

## இந்தியாவில் மின் கழிவுகள்

- நிதி ஆயோக் மற்றும் எரிசக்தி மற்றும் வளங்கள் நிறுவனம் (டெரி) ஆகியவை இணைந்து மின் கழிவுகள் மற்றும் லித்தியம்-அயன் பேட்டரி மறுசுழற்சி குறித்த அறிக்கையை வெளியிட்டன.
- சுழற்சிப் பொருளாதாரம் என்பது பொருட்கள் மற்றும் மூலப்பொருட்களைப் பகிர்ந்து கொள்வது, குத்தகைக்கு விடுவது, மீண்டும் பயன்படுத்துவது, பழுதுபார்ப்பது, புதுப்பிப்பது மற்றும் மறுசுழற்சி செய்வது ஆகியவற்றை உள்ளடக்கியது.
- இந்தியாவின் மின்னணுக் கழிவுகளில் சுமார் 78% முறைசாரா துறையால் பிரித்தெடுக்கப் படுத்தப்படுகிறது என்பதோடு இதில் 10-20% பொருட்கள் மட்டுமே மீட்கப்படுகின்றன.
- 2024ல் மின்னணுக் கழிவுகளின் உற்பத்தி சுமார் 6.19 மில்லியன் மெட்ரிக் டன்களை எட்டியது என்பதோடு மேலும் இது 2030க்குள் 14 மில்லியன் மெட்ரிக் டன்களாக உயரக் கூடும்.
- இந்தியாவின் மின்னணுக் கழிவு மேலாண்மை விதிகள் (EWMR), 2022 மற்றும் மின்கலன் கழிவு மேலாண்மை விதிகள் (BWMR), 2022 ஆகியவை மறு சுழற்சி மற்றும் சேகரிப்பை கட்டாயமாக்குகின்றன என்பதோடு மேலும் அவை நிலத்தில் கொட்டி அழிப்பதைத் தடை செய்கின்றன.
- விரிவாக்கப்பட்ட உற்பத்தியாளர் பொறுப்பை (EPR) விரிவுபடுத்துதல், மின்கலன் மறு சுழற்சியை இந்திய கார்பன் சந்தையில் ஒருங்கிணைத்தல், மற்றும் நுகர்வோர் விழிப்புணர்வு மற்றும் பணியாளர்களின் திறன்களை மேம்படுத்துதல் ஆகியவை சில பரிந்துரைகளில் அடங்கும்.

### உலகளாவிய முதலீட்டுப் போக்குகள் கண்காணிப்பு அறிக்கை

- ஐக்கிய நாடுகளின் வர்த்தகம் மற்றும் மேம்பாட்டு மாநாடு (UNCTAD) அமைப்பானது 2025 ஆம் ஆண்டிற்கான உலகளாவிய முதலீட்டுப் போக்குகள் கண்காணிப்பு அறிக்கையை வெளியிட்டது.
- உலகளாவிய நேரடி வெளிநாட்டு முதலீடு (FDI) 2025ல் 14% அதிகரித்து 1.6 டிரில்லியன் டாலராக உயர்ந்தது.
- உலகளாவிய நேரடி வெளிநாட்டு முதலீட்டு அதிகரிப்பில் 140 பில்லியன் டாலருக்கும் அதிகமான தொகை, உலகளாவிய நிதி மையங்கள் வழியாக வந்த அதிகப்படியான நிதி வரவுகளிலிருந்து கிடைத்தது.
- வளர்ச்சியடைந்த நாடுகளுக்கான நேரடி வெளிநாட்டு முதலீட்டு வரத்து 2025-ல் 43% அதிகரித்து 728 பில்லியன் டாலராக உயர்ந்தது.
- ஐரோப்பிய ஒன்றியம் 56% அதிகரிப்பைப் பதிவு செய்தது.
- ஆனால், வளரும் நாடுகளுக்கான முதலீட்டு வரத்து 2 சதவீதம் குறைந்து 877 பில்லியன் டாலராக ஆனது, இது உலகளாவிய நேரடி வெளிநாட்டு முதலீட்டில் 55 சதவீதமாகும்.
- UNCTAD என்பது 1964-ல் நிறுவப்பட்ட ஒரு ஐக்கிய நாடுகள் சபையின் அமைப்பாகும் என்பதோடு இதன் தலைமையகம் சுவிட்சர்லாந்தின் ஜெனீவாவில் அமைந்துள்ளது.

## மாநிலச் செய்திகள்

### எல்லை வரம்பிற்குட்படாத முதல் தகவல் அறிக்கை

- மேற்கு வங்காளத்தின் முர்ஷிதாபாத் மாவட்டத்தில் உள்ள சுட்டியைச் சேர்ந்த 19 வயது புலம்பெயர்ந்த தொழிலாளி ஜுயல் ராணா, ஒடிசாவின் சம்பல்பூரில் கொல்லப்பட்டார்.
- இந்தக் குற்றம் வேறொரு மாநிலத்தில் நடந்திருந்தாலும், மேற்கு வங்காளக் காவல் துறை சுட்டி காவல் நிலையத்தில் எல்லை வரம்பிற்குட்படாத முதல் தகவல் அறிக்கையைப் பதிவு செய்தது.
- குற்றம் நடந்த இடத்தைப் பொருட்படுத்தாமல், எந்த காவல் நிலையத்திலும் FIR பதிவு செய்ய எல்லை வரம்பிற்குட்படாத முதல் தகவல் அறிக்கை அனுமதிக்கிறது என்பதோடு மேலும் இதற்கு முதலில் "0" என்ற வரிசை எண் வழங்கப்படுகிறது.
- இதில் பதிவு செய்த பிறகு, எல்லை வரம்பிற்குட்படாத முதல் தகவல் அறிக்கை ஆனது ஒடிசாவில் உள்ள சம்பந்தப்பட்ட காவல் நிலையத்திற்கு மேலும் விசாரணைக்காக மாற்றப் படுகிறது.
- இந்த ஏற்பாடு விரைவான காவல் நடவடிக்கைக்கு உதவுவதோடு, அதிகார வரம்புகள் காரணமாக ஏற்படும் தாமதத்தைத் தவிர்க்கிறது.

## செயற்கை நுண்ணறிவு அடிப்படையிலான குறை தீர்க்கும் அமைப்பு

- டெல்லி அரசாங்கம், கான்பூர் இந்தியத் தொழில்நுட்பக் கல்விக் கழகத்துடன் (IIT) கூட்டு சேர்ந்து, செயற்கை நுண்ணறிவு அடிப்படையிலான குறை தீர்க்கும் அமைப்பை உருவாக்கியுள்ளது.
- இந்த அமைப்பு நுண்ணறிவு சார் குறை தீர்க்கும் கண்காணிப்பு அமைப்பு (IGMS) என்று அழைக்கப்படுகிறது.
- IGMS ஆனது பல குறை தீர்க்கும் வலை தளங்களை ஒரு ஒருங்கிணைந்த முகப்புப் பக்கத்தில் ஒருங்கிணைக்கும்.
- புகார்களை பகுப்பாய்வு செய்து கண்காணிக்க இது செயற்கை நுண்ணறிவு (AI) மற்றும் இயந்திர கற்றல் (ML) ஆகியவற்றைப் பயன்படுத்தும்.
- பொது சேவைகளில் மிகவும் விரைவான தீர்வு, சிறந்த ஒருங்கிணைப்பு மற்றும் அதிக வெளிப்படைத் தன்மையை செயல்படுத்துவதை இந்த அமைப்பு நோக்கமாகக் கொண்டுள்ளது.
- கான்பூர் IIT ஆனது அமைப்பின் ஒருங்கிணைப்பு, இணைய வெளிப் பாதுகாப்பு சோதனைகள் மற்றும் நீண்டகாலப் பராமரிப்பு ஆகியவற்றை ஆதரிக்கும்.

## கைமூர் வனவிலங்கு சரணாலயம் - புலிகள் சரணாலயம்

- கைமூர் வனவிலங்கு சரணாலயத்தை அந்த மாநிலத்தின் இரண்டாவது புலிகள் சரணாலயமாக மேம்படுத்துவதற்கான திருத்தப்பட்ட ஒரு திட்டத்திற்கு பீகார் அரசு ஒப்புதல் அளித்துள்ளது.
- இது அங்கீகரிக்கப்பட்டதும், மேற்கு சம்பாரன் மாவட்டத்தின் வால்மீகி புலிகள் சரணாலயத்திற்குப் (VTR) பிறகு பீகாரின் இரண்டாவது புலிகள் சரணாலயமாக இது இருக்கும்.
- 1972 ஆம் ஆண்டு வனவிலங்கு (பாதுகாப்பு) சட்டத்தின் 38V ஆம் பிரிவின் விதிகளின்படி புலிகள் சரணாலயங்கள் மாநில அரசுகளால் அறிவிக்கப்படுகின்றன.
- இந்த முன்மொழிவை தேசியப் புலிகள் வளங்காப்பு ஆணையம் அங்கீகரிக்க வேண்டும்.

## 'VijAIpatha' ஆய்வகங்கள்

- கர்நாடகாவில் தொடங்கப்பட்ட 'VijAIpatha', ஒரு சோதனை அடிப்படையிலான செயற்கை நுண்ணறிவு (AI) கல்வி முன்னெடுப்பு ஆகும்.
- இது அரசு பள்ளி மாணவர்களுக்கு AI, அறிவியல், தொழில்நுட்பம், பொறியியல் மற்றும் கணிதம் (STEM), எந்திரவியல், நிரல் குறியாக்கம் மற்றும் டிஜிட்டல் கண்டுபிடிப்புகளில் எதிர்காலத்திற்கு தயாரான திறன்களை வழங்குவதை நோக்கமாகக் கொண்டது.
- இந்த சோதனைத் திட்டத்தின் ஒரு பகுதியாக, ஹோசபேட் தாலுக்காவில் உள்ள அரசுப் பள்ளிகளில் ஐந்து உலகத் தரம் வாய்ந்த AI, STEM மற்றும் எந்திரவியல் ஆய்வகங்கள் அமைக்கப்படுகின்றன.

## 8வது மாநில ஊதியக் குழு

- 2026 ஆம் ஆண்டு ஜனவரி 01 ஆம் தேதியன்று இந்தியாவில் 8வது மாநில ஊதியக் குழுவை அமைத்த முதல் மாநிலமாக அசாம் மாறியுள்ளது.
- அசாமின் முன்னாள் தலைமைச் செயலாளர் சுபாஷ் தாஸ், இந்த ஆணையத்தின் தலைவராக நியமிக்கப்பட்டார்.
- 7வது ஊதியக் குழு ஆனது 2026 ஆம் ஆண்டு ஜனவரி 01 ஆம் தேதியன்று காலாவதியாகவுள்ள நிலையில், 8வது மாநில ஊதியக் குழு உருவாக்கப்பட்டது.
- மாநில அரசு ஊழியர்களின் சம்பளம், கொடுப்பனவுகள் மற்றும் ஓய்வூதியங்களை இந்த ஆணையம் திருத்தியமைக்கும்.
- ஊதியக் குழு பரிந்துரைகளைச் செயல்படுத்துவதற்கு முன் மாநில அரசின் ஒப்புதல் தேவையாகும்.

## இந்தியாவின் முதல் குடிசைப்பகுதி இல்லாத நகரம்

- திட்டமிடப்பட்ட நகர்ப்புற மேம்பாடு மற்றும் வீட்டு வசதித் திட்டங்கள் மூலம் சூரத் இந்தியாவின் முதல் முழுமையான குடிசைப் பகுதி இல்லாத நகரமாக மாற உள்ளது.
- சூரத் மாநகராட்சிக் கழகம் (SMC) குடிசைப் பகுதிகளை நிரந்தரக் குடியிருப்பு கட்டிடங்களாக மாற்றுவதன் மூலம் அப்பகுதி சார் மறுமேம்பாட்டில் கவனம் செலுத்தி யுள்ளது.
- தகுதி வாய்ந்த குடும்பங்களுக்கு மலிவு விலையில் வீடுகளை வழங்குவதில் பிரதான் மந்திரி ஆவாஸ் யோஜனா (PMAY) முக்கியப் பங்கு வகித்துள்ளது.
- பொருளாதார ரீதியாக பலவீனமான பிரிவுகளைச் சேர்ந்த சுமார் ஆயிரக்கணக்கான குடும்பங்கள் அடிப்படைக் குடிமை வசதிகளுடன் கூடிய நிரந்தர வீடுகளுக்கு மாற்றப் பட்டுள்ளனர்.
- குஜராத்தில் சூரத் ஒரு முக்கிய ஜவுளி மற்றும் வைர செயலாக்க மையமாகும் என்ற நிலையில் இது ஒவ்வோர் ஆண்டும் மிக அதிக எண்ணிக்கையிலானப் புலம்பெயர்ந்த மக்களை ஈர்க்கிறது.

## ISO இணையவெளிப் பாதுகாப்பு சான்றிதழ்

- திரிபுரா மாநிலப் பொதிகள் அனுப்பும் மையம் (SLDC) ISO/IEC 27001:2022 சான்றிதழைப் பெற்றது.
- வடகிழக்கு இந்தியாவில் இந்த இணையவெளிப் பாதுகாப்பு சான்றிதழைப் பெற்ற முதல் பொதி அனுப்பும் மையம் இதுவாகும்.
- இந்த மையம் திரிபுரா மாநில மின்சாரக் கழக லிமிடெட் (TSECL) நிறுவனத்தின் கீழ் செயல்படுகிறது.
- ISO/IEC 27001:2022 என்பது தகவல் பாதுகாப்பு மேலாண்மை அமைப்புகளுக்கான (ISMS) சர்வதேச தரநிலையாகும்.
- இந்தச் சான்றிதழ் மின் பகிர்மான கட்டமைப்புக் கட்டுப்பாட்டு அமைப்புகள் மற்றும் தரவு வலையமைப்புகளின் இணையவெளிப் பாதுகாப்பை வலுப்படுத்துகிறது.

- இது முக்கியமான மின்சார உள்கட்டமைப்பு மற்றும் தேசிய மின் பகிர்மான கட்டமைப்பு நிலைத்தன்மையின் பாதுகாப்பை மேம்படுத்துகிறது.

## புரோட்டான் சிகிச்சை

- புற்றுநோய் சிகிச்சைக்காக அசாம் ஒரு புரோட்டான் சிகிச்சை இயந்திரத்தை வாங்க உள்ளது.
- பொது சுகாதார அமைப்பில் புரோட்டான் சிகிச்சையை வழங்கும் இந்தியாவின் முதல் மாநிலமாக அசாம் மாற உள்ளது.
- புரோட்டான் சிகிச்சை இயந்திரத்தின் மதிப்பிடப் பட்ட செலவினம் 500 கோடி ரூபாய் ஆகும்.
- புரோட்டான் சிகிச்சை என்பது ஊடு கதிர்களுக்குப் பதிலாக புரோட்டான் கற்றைகளைப் பயன்படுத்தும் ஒரு மேம்பட்ட கதிரியக்க சிகிச்சையாகும்.
- தற்போது, இந்தியாவில் புரோட்டான் சிகிச்சை மையங்கள் தனியார் மருத்துவ மனைகளில் மட்டுமே கிடைக்கின்றன.
- இந்த முன்னெடுப்பு மேம்படுத்தப் பட்ட புற்றுநோய்ப் பராமரிப்பை மேம்படுத்தச் செய்வதையும் இதற்காக வடகிழக்குப் பிராந்தியத்திற்கு வெளியே நோயாளிகளின் பயணத்தைக் குறைப்பதையும் நோக்கமாகக் கொண்டுள்ளது.

## சூரிய உதய விழா 2026

- அருணாச்சலப் பிரதேச மாநில அரசானது தனது முதல் புத்தாண்டு சூரிய உதய விழாவை 2026 ஆம் ஆண்டில் அஞ்சாவ் மாவட்டத்தில் உள்ள டோங் என்ற கிராமத்தில் நடத்தியது.
- இந்த விழா இந்தியாவின் முதல்/ஆரம்பகால சூரிய உதயத்தைக் குறிக்கும் வகையில் "First to Rise, First to Celebrate" என்ற கருத்துருவினை அடிப்படையாகக் கொண்டது.
- டோங் கிராமம் இந்தியாவின் கிழக்கு திசையில் உள்ள கிராமம் என்பதோடு மேலும் ஒவ்வோர் ஆண்டும் இந்தியாவில் சூரிய உதயத்தை முதலில் காணும் இடமுமாகும்.
- "அலோ பிரபாத் - விடியலின் நடனம்" என்ற ஒரு முக்கிய நிகழ்வானது மேயர் மற்றும் மிஷ்மி பழங்குடியினரால் நிகழ்த்தப் பட்டது.

## இந்தூர் நீர் மாசுபாடு நெருக்கடி

- மத்தியப் பிரதேசத்தின் இந்தூரில் உள்ள பகீரத்புரா பகுதியில் நகராட்சி நீர் விநியோகக் குழாய்கள் மூலம் விநியோகிக்கப்படும் மாசுபட்ட குடிநீரால் நீர் மாசுபாடு சூழல் ஏற்பட்டுள்ளது.
- இந்த மாசுபட்ட நீரானது குடியிருப்பாளர்களிடையே வாந்தி மற்றும் வயிற்றுப்போக்கு பாதிப்பினை ஏற்படுத்தியுள்ளது.
- இதில் ஆறு பேர் இறந்துள்ளதாகவும் சுமார் 200க்கும் மேற்பட்டோர் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாகவும் மாவட்ட அதிகாரிகள் கூறியுள்ளனர்.
- நீர் விநியோகம் என்பது தொற்றுக்கான ஒரு ஆதாரமாக இருப்பதை மாவட்ட நிர்வாகம் உறுதிப்படுத்தியது.

- ❖ மாசுபாட்டைக் கட்டுப்படுத்திட வேண்டி குழாய்கள் மற்றும் குழாய்க் கிணறுகளில் குளோரினேற்றம் செய்யப்பட்டது.

## 2025 ஆம் ஆண்டில் பதிவான உறுப்பு தானங்கள்

- ❖ 2025 ஆம் ஆண்டில் 198 உறுப்பு தானங்கள் பதிவானதுடன் கர்நாடகாவில் அதிகபட்ச உறுப்பு தானங்கள் பதிவாகியுள்ளது.
- ❖ இந்தத் தரவை ஜீவசர்த்தகதே எனும் கர்நாடகாவின் மாநில உறுப்பு மற்றும் திசு மாற்று அமைப்பு (SOTTO) பதிவு செய்தது.
- ❖ தமிழ்நாடு மற்றும் தெலுங்கானாவிற்கு அடுத்தபடியாக, உறுப்பு தானங்களில் கர்நாடகா இந்தியாவிலேயே மூன்றாவது இடத்தில் உள்ளது.
- ❖ சிறுநீரகங்கள் மற்றும் கருவிழிப்படலங்கள் கர்நாடக மாநிலத்தில் பெருமளவில் தானமாகப் பெறப்பட்ட உறுப்புகளாகும்.
- ❖ உறுப்பு தானம் செய்பவர்களின் எண்ணிக்கை 2024 ஆம் ஆண்டில் 162 ஆகவும், 2023 ஆம் ஆண்டில் 178 ஆகவும் அதிகரித்தது.

## பிறப்பின் போதான பாலின விகிதம் – ஹரியானா

- ❖ ஹரியானாவில் 2025 ஆம் ஆண்டில் பிறப்பின் போதான பாலின விகிதம் (SRB) 923 ஆக பதிவாகியுள்ளது என்பதோடு இது கடந்த ஐந்து ஆண்டுகளில் மிக உயர்ந்ததாகும்.
- ❖ 2024 ஆம் ஆண்டில் 910 ஆக இருந்த பிறப்பின் போதான பாலின விகிதம் (SRB) 2025 ஆம் ஆண்டில் 923 ஆக அதிகரித்துள்ளது.
- ❖ 2025 ஆம் ஆண்டில் ஹரியானாவில் மொத்தம் 5,19,691 பிறப்புகள் பதிவு செய்யப்பட்டன.
- ❖ பஞ்ச்குலா மாவட்டம் 971 உடன் மாநிலத்தில் அதிகபட்ச பிறப்பு விகிதத்தினைக் (SRB) கொண்டுள்ளது.
- ❖ PC-PNDT சட்டம் (கருத்தரிப்பதற்கு முந்தைய மற்றும் பிறப்புக்கு முந்தைய பாலினம் அறிதல் நுட்பங்கள் சட்டம்) கடுமையாக அமல்படுத்தப்பட்டதைத் தொடர்ந்து இந்த முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது.

## துண்டிக்கும் உரிமை மசோதா 2025 – கேரளா

- ❖ தனியார் துறை ஊழியர்களை அலுவலக நேரத்திற்குப் பிறகு பணி சார்ந்த தகவல் தொடர்புகளிலிருந்துப் பாதுகாக்க வேண்டி, 2025 ஆம் ஆண்டு துண்டிக்கும் உரிமை மசோதாவினை கேரளா அரசு அறிமுகப்படுத்தியுள்ளது.
- ❖ இந்த மசோதா ஊழியர்கள் அதிகாரப்பூர்வ வேலை நேரத்திற்கு அப்பால் வேலை தொடர்பான அழைப்புகள், மின்னஞ்சல்கள், செய்திகள் மற்றும் மெய்நிகர் கூட்டங்களைப் புறக்கணிக்க அனுமதிக்கிறது.
- ❖ வேலை நேரத்திற்குப் பிறகு துண்டிக்கப்பட்டதற்காக ஊழியர்களை தண்டிக்கவோ அல்லது ஒழுங்குமுறை நடவடிக்கைக்கு உட்படுத்தவோ முடியாது.
- ❖ இது நிறைவேற்றப்பட்டால், இது போன்ற ஒரு சட்டத்தை இயற்றிய முதல் இந்திய மாநிலமாக கேரளா மாறும்.

- பிரான்ஸ், ஸ்பெயின், இத்தாலி, ஜெர்மனி மற்றும் பெல்ஜியம் போன்ற நாடுகளில் ஏற்கனவே இதே போன்ற சட்டங்கள் உள்ளன.

## போராம்தேவ் வழித்தட மேம்பாட்டுத் திட்டம்

- போராம்தேவ் வழித்தட மேம்பாட்டுத் திட்டம் ஆனது, சத்தீஸ்கர் மாநிலம் கபிர்தாம் மாவட்டத்தில் உள்ள போராம்தேவ் தாமில் தொடங்கப்பட்டது.
- இந்தத் திட்டம் மத்திய அரசின் சுதேச தரிசனத் திட்டம் 2.0 திட்டத்தின் கீழ் செயல் படுத்தப் படுகிறது.
- இந்த திட்டத்தின் மதிப்பிடப்பட்ட செலவினம் 146 கோடி ரூபாயாகும்.
- "சத்தீஸ்கரின் கஜுராஹோ" என்று அழைக்கப்படும் போராம்தேவ் கோயில், அதன் பண்டைய கல் கட்டிடக்கலை, நுணுக்கமான சிற்பங்கள் மற்றும் சமய முக்கியத்துவத்திற்குப் பெயர் பெற்றது.
- இந்தத் திட்டம் புனித யாத்திரை உள்கட்டமைப்பை மேம்படுத்துதல், அணுகல் மற்றும் பார்வையாளர் அனுபவத்தை மேம்படுத்துதல் மற்றும் தளத்தின் கலாச்சார மற்றும் கட்டிடக்கலை மரபைப் பாதுகாப்பதை நோக்கமாகக் கொண்டுள்ளது.

## இரண்டு குழந்தைகள் சட்டம் - தெலுங்கானா

- உள்ளாட்சித் தேர்தல்களில் போட்டியிடுவதற்கான இரண்டு குழந்தைகள் விதிமுறையை ரத்து செய்யும் மசோதாவை தெலுங்கானா சட்டமன்றம் நிறைவேற்றி உள்ளது.
- 1994 ஆம் ஆண்டு இயற்றப்பட்ட முந்தையச் சட்டம், இரண்டு குழந்தைகளுக்கு மேல் பெற்ற வேட்பாளர்களை தகுதி நீக்கம் செய்தது.
- இந்தப் புதிய சட்டம் தெலுங்கானா பஞ்சாயத்து ராஜ் (திருத்தம்) மசோதா, 2026 என்று பெயரிடப்பட்டுள்ளது.
- இந்த மசோதா, இதே விவகாரத்தில் வெளியிடப்பட்ட முந்தைய அவசரச் சட்டத்திற்கு மாற்றாக அமைகிறது.
- இந்த மசோதாவை பஞ்சாயத்து ராஜ் அமைச்சர் தனசாரி அனசுயா சீதக்கா அறிமுகப் படுத்தினார்.
- இந்தத் திருத்தம், குழந்தைகளின் எண்ணிக்கையைப் பொருட்படுத்தாமல், அனைத்து தகுதியுள்ள குடிமக்களும் அங்குள்ள பஞ்சாயத்து ராஜ் தேர்தல்களில் போட்டியிட அனுமதிக்கிறது.

## முதல் வணிக ரீதியான வெப்பமண்டல டிரவுட் மீன் பண்ணை

- இந்தியா தனது முதல் வணிக ரீதியான வெப்பமண்டல மறுசுழற்சி வழியிலான மீன் வளர்ப்பு அமைப்பு (RAS) அடிப்படையிலான ரெயின்போ டிரவுட் மீன் பண்ணையை தெலுங்கானாவில் தொடங்கியுள்ளது.
- திறன் மிகு பசுமை மீன் வளர்ப்பு பண்ணை மற்றும் ஆராய்ச்சி நிறுவனம் ஐதராபாத்தில் திறக்கப்பட்டது.

- இந்தத் திட்டம் தெலுங்கானாவின் ரங்கா ரெட்டி மாவட்டத்தில் உள்ள கந்துகூர் மண்டலத்தில் அமைந்துள்ளது.
- இது பாரம்பரியமாக குளிர்ந்த இமயமலைப் பகுதிகளில் மட்டுமே வளர்க்கப்படும் ரெயின்போ டிரவுட் மீனின் ஆண்டு முழுவதுமான வளர்ப்பினை செயல்படுத்துகிறது.
- மீன் வளர்ச்சிக்கு ஏற்ற சூழல்களைப் பேணுவதற்கு RAS கட்டுப்படுத்தப்பட்ட நீர் சுழற்சியைப் பயன்படுத்துகிறது.
- இந்த முன்னெடுப்பு மீன்வளத் துறையில் தொழில்நுட்பத்தால் இயக்கப்படும் மீன் வளர்ப்பு மற்றும் திறன் மேம்பாட்டை ஆதரிக்கிறது.

## முசி ஆற்றங்கரை மேம்பாட்டுத் திட்டம்

- தெலுங்கானாவின் ஐதராபாத்தில் உள்ள முசி நதியைப் புத்துயிர் பெறச் செய்ய முசி நதிக்கரை மேம்பாட்டுத் திட்டம் திட்டமிடப்பட்டுள்ளது.
- இந்தத் திட்டம் சுற்றுச்சூழல் மறுசீரமைப்பு, நகர்ப்புறங்களைப் புதுப்பித்தல் மற்றும் ஆற்றங்கரையோரங்களில் பொதுப் பயன்பாட்டு இடங்களை உருவாக்குதல் ஆகியவற்றில் கவனம் செலுத்துகிறது.
- இந்த மேம்பாடு ஆனது விரிவான திட்ட அறிக்கைகள் (DPRகள்) உட்பட பல கட்டங்களுக்கான முதன்மைத் திட்டமிடலுடன், ஆற்றின் பரந்த நெடும்பகுதியில் மேற் கொள்ளப்பட உள்ளது.
- இந்தத் திட்டத்தின் சில பகுதிகளுக்கு ஆதரிப்பதற்காக ஆசிய மேம்பாட்டு வங்கி (ADB) 4,100 கோடி ரூபாய் கடனுக்கு முதன்மை ஒப்புதல் அளித்துள்ளது.

## நெறிமுறை கற்றல் முன்னெடுப்பு

- அசாம் மாநில ஆளுநர் சன்ஸ்கார் ஷாலா என்ற விழுமியம் அடிப்படையிலான கல்வித் திட்டத்தைத் தொடங்கி வைத்துள்ளார்.
- இது 4 முதல் 14 வயது வரையிலான குழந்தைகளுக்காக ஒழுக்க விழுமியங்கள் மற்றும் நெறிமுறை நடத்தைகளை மேம்படுத்துவதற்காக வடிவமைக்கப்பட்டுள்ளது.
- இந்தத் திட்டம் இந்தியக் கலாச்சார மரபுகள், ஒழுக்கம் மற்றும் சமூகப் பொறுப்பை சிறு வயதிலேயே கற்பிப்பதை நோக்கமாகக் கொண்டுள்ளது.
- இது பண்பு வளர்ப்பில் கவனம் செலுத்துவதன் மூலம் முறையான பள்ளிக் கல்வியை நிறைவு செய்வதை நோக்கமாகக் கொண்டுள்ளது.
- இந்தத் திட்டம் கௌஹாத்தியில் உள்ள லோஹியா லயன்ஸ் அரங்கத்தில் தொடங்கப் பட்டது.
- கல்வி கற்றலுடன் விழுமியங்களின் முக்கியத்துவத்தையும் இந்த முன்னெடுப்பு எடுத்துக் காட்டுகிறது.

## கிராம சபைகளுக்கான PESA விதிகள்

- ஜார்க்கண்ட் அமைச்சரவையானது, 1996 ஆம் ஆண்டு பஞ்சாயத்துகள் (திட்டமிடப் பட்டப் பகுதிகளுக்கு விரிவுப்படுத்துதல்) சட்டத்தின் (PESA) கீழ், மாநிலத்தில் கிராம சபைகளுக்கு அதிகாரமளிக்கின்ற விதிகளை அங்கீகரித்தது.

- இந்த விதிகள் கிராம சபைகளுக்கு சிறு வன விளைபொருட்கள், உள்ளூர்ப் பகுதி மேம்பாட்டுத் திட்டங்கள் மற்றும் கிராமப்புறங்களில் நீர் வள மேலாண்மை ஆகியவற்றின் மீது அதிகாரத்தை வழங்குகின்றன.
- இந்த விதிகள் அதிகப் பழங்குடி மக்கள் தொகையைக் கொண்ட ஐந்தாவது அட்டவணை பகுதிகளுக்குப் பொருந்தும்.
- கிராம சபைகள் மாவட்ட நிர்வாகத்தால் அறிவிக்கப்பட்டு வரையறுக்கப்படும்.
- 2001 ஆம் ஆண்டு ஜார்க்கண்ட் பஞ்சாயத்து ராஜ் சட்டத்தின் கீழ் நடைபெறும் பஞ்சாயத்து ராஜ் தேர்தல்களை இந்த விதிகள் பாதிக்காது.
- 13 மாவட்டங்கள் முழுமையாக ஐந்தாவது அட்டவணை பகுதிகளின் கீழ் உள்ளன, அதே நேரத்தில் இரண்டு மாவட்டங்களில் உள்ள சில தொகுதிகள் பகுதியளவு பட்டியலிடப் பட்ட பகுதிகளாக அறிவிக்கப்பட்டுள்ளன.
- துறைகள் மற்றும் பங்குதாரர்களுடன் விரிவான ஆலோசனைகளுக்குப் பிறகு இந்த விதிகள் அங்கீகரிக்கப்பட்டன என்பதோடு மேலும் முறையான அறிவிப்புக்குப் பிறகு இவை நடைமுறைக்கு வரும்.

## வெண்டைக்காய் உற்பத்தி

- 2023–24 ஆம் ஆண்டில் 93,955 ஹெக்டேர் பரப்பளவில் சாகுபடி செய்யப்பட்டு சுமார் 11.68 லட்சம் டன்கள் உற்பத்தி செய்யப்பட்டதுடன், குஜராத் மாநிலமானது இந்தியாவின் முன்னணி வெண்டைக்காய் உற்பத்தியாளராக உள்ளது.
- சௌராஷ்டிரா-கட்ச் பகுதியில் 15% பரப்பளவில் வெண்டைக்காய் உற்பத்தி செய்யப் படுகிறது என்பதோடு மேலும் அப்பகுதி மொத்த வெண்டைக்காய் உற்பத்தியில் 13% பங்கினைக் கொண்டுள்ளது.
- 2024–25 ஆம் ஆண்டில், சௌராஷ்டிரா மற்றும் கட்சின் 12 மாவட்டங்களில் சுமார் 14,000 ஹெக்டேர் பரப்பளவில் வெண்டைக்காய் பயிரிடப்பட்டது என்பதோடு இது 1.5 லட்சம் டன் மகசூலை அளித்தது.
- 2024–25 ஆம் ஆண்டில் இந்தியாவின் மொத்தக் காய்கறி உற்பத்தியில் குஜராத் 7.66% பங்களித்தது.
- சிறந்த உற்பத்தித்திறன், மேம்படுத்தப் பட்ட வேளாண் நடைமுறைகள் மற்றும் ஆதரவான அரசாங்கக் கொள்கைகள் காரணமாக குஜராத்தில் தோட்டக் கலை சாகுபடி வளர்ந்து வருகிறது.

## நீரியல் இயக்க விசைச் சுழலி தொழில்நுட்பம்

- நீரியல் இயக்க விசைச் சுழலி தொழில்நுட்பத்தைப் பயன்படுத்திச் சுமார் 185 மெகா வாட் மின்சாரம் உற்பத்தி செய்ய என்று திரிபுரா அரசு 10 நதி தளங்களை அடையாளம் கண்டுள்ளது.
- நீரியல் இயக்க விசைச் சுழலி தொழில்நுட்பம் ஆறுகள் மற்றும் கால்வாய்கள் போன்ற பாயும் நீரின் இயக்க ஆற்றலில் இருந்து மின்சாரத்தை உற்பத்தி செய்கிறது.
- இந்தச் சுழலிகள் அணைகள் அல்லது சேமிக்கப்பட்ட நீர் எதுவும் இல்லாமல் செயல் படுகின்றன என்பதோடு மேலும் நேரடியாக நதி ஓடையில் வைக்கப்படுகின்றன.

- இங்கு பாயும் நீர் ஆனது சுழலியின் தகடுகளைச் சுழற்றும் போது மின்சாரம் உற்பத்தி செய்யப் படுகிறது என்பதோடு இது இயக்க ஆற்றலை மின்சாரமாக மாற்றுகிறது.
- இந்தத் தொழில்நுட்பம் குறைந்தபட்சச் சுற்றுச்சூழல் தாக்கத்தை ஏற்படுத்துவதோடு, நீர்த் தேக்க அமைப்புகளால் நிலம் மூழ்குவதற்கு வழிவகுக்காது.

## இயற்கையோடு இயைந்த நலமான வாழ்வியல் கொண்ட இந்தியாவின் முதல் மாவட்டம் - கேயி பன்யோர்

- அருணாச்சலப் பிரதேசத்தில் உள்ள கேயி பன்யோர் மாவட்டம் இயற்கையோடு இயைந்த நலமான வாழ்வியல் கொண்ட இந்தியாவின் முதல் (பயோ-ஹேப்பி) மாவட்டமாக மாற உள்ளது.
- இந்தத் திட்டத்தை M.S. சுவாமிநாதன் ஆராய்ச்சி அறக்கட்டளை (MSSRF) ஆனது மாவட்ட நிர்வாகத்துடன் இணைந்து செயல்படுத்தி வருகிறது.
- பயோ-ஹேப்பி என்பது புகழ்பெற்ற வேளாண் அறிவியலாளர் டாக்டர் M.S. சுவாமி நாதன் உருவாக்கிய ஒரு கருத்தாக்கமாகும்.
- இது பல்லுயிர்ப் பெருக்கத்தினை வளங்காத்தல் மற்றும் பயன்படுத்துவதன் மூலம் மனித நல்வாழ்வில் கவனம் செலுத்துகிறது.
- இந்தத் திட்டம் அந்த மாவட்டத்தின் வாழ்வாதாரங்கள், வேளாண்-பல்லுயிர் பெருக்கம் மற்றும் சுற்றுச்சூழல் ஆரோக்கியத்தைப் பற்றி ஆய்வு செய்யும்.

## மசாலாப் பொருட்கள் வர்த்தகப் பாதைகளின் வலையமைப்பு

- கேரளா மாநிலம் சர்வதேச மசாலாப் பொருட்கள் வர்த்தகப் பாதைகள் பாரம்பரிய வலையமைப்பை அறிமுகப்படுத்தியது.
- இந்த முன்னெடுப்பானது கேரளாவை உலகச் சந்தைகளுடன் இணைக்கும் வரலாற்று மசாலாப் பொருட்கள் வர்த்தகப் பாதைகளை புதுப்பிப்பதை நோக்கமாகக் கொண்டு உள்ளது.
- கொச்சியில் நடைபெற்ற மூன்று நாட்கள் அளவிலான சர்வதேச மசாலாப் பொருட்கள் வர்த்தகப் பாதைகள் மாநாட்டின் போது இது வெளியிடப்பட்டது.
- முசிரிஸ் பாரம்பரியத் திட்டம் கேரளா முழுவதும் "மசாலாப் பொருட்களின் வர்த்தகப் பயணங்கள்" என்று அழைக்கப்படும் 33 பாரம்பரியப் பாதைகளை அறிமுகப் படுத்தி உள்ளது.
- இந்த வலையமைப்பு ஆராய்ச்சி, பாரம்பரியப் பாதுகாப்பு, அருங்காட்சியக மேம்பாடு மற்றும் காப்பக ஆவணங்களை ஊக்குவிக்கிறது.
- கேரளாவிலிருந்து வரும் மசாலாப் பொருட்கள் ஐரோப்பா, மேற்கு ஆசியா மற்றும் கிழக்கு ஆப்பிரிக்கா முழுவதும் வர்த்தகம், வரிகள் மற்றும் கலாச்சாரப் பரிமாற்றங்களில் வரலாற்று ரீதியாக தாக்கத்தை ஏற்படுத்தின.

## ஆந்திரப் பிரதேசம் - அமராவதி தலைநகர்

- மத்திய உள்துறை அமைச்சகம் ஆனது அமராவதியை ஆந்திரப் பிரதேசத்தின் ஒரே தலைநகராக அங்கீகரித்தது.

- அமராவதி 2024 ஆம் ஆண்டு ஜூன் 02 ஆம் தேதியன்று அதிகாரப்பூர்வமாக அம்மாநில தலைநகராக மாறியது.
- அமராவதியின் தலைநகராக அந்தஸ்தை வலுப்படுத்த சட்டப்பூர்வ பாதுகாப்புகள் வழங்கப் படுகின்றன.
- 2014 ஆம் ஆண்டு ஆந்திரப் பிரதேச மறுசீரமைப்புச் சட்டத்தின் கீழ் ஒதுக்கப்பட்ட மத்திய நிறுவனங்கள் அமராவதியில் அதன் அலுவலகங்களை நிறுவும்.

## தேசிய ஜவுளித் துறை அமைச்சர்கள் மாநாடு 2026

- இந்த மாநாடு அசாம் அரசின் ஒத்துழைப்புடன் ஜவுளித் துறை அமைச்சகத்தால் குவஹாத்தியில் நடத்தப்பட்டது.
- இந்த மாநாட்டின் நோக்கம், இந்தியாவின் ஜவுளித் துறையை வலுப்படுத்துவது, ஏற்றுமதியை அதிகரிப்பது, வேலைவாய்ப்புகளை உருவாக்குவது, நிலையான வளர்ச்சியை ஊக்குவிப்பது, பாரம்பரிய ஜவுளிகளைப் பாதுகாப்பது மற்றும் 2030-ஆம் ஆண்டுக்குள் இந்தியாவை ஒரு உலகளாவிய ஜவுளி மையமாக மாற்றுவது ஆகியவை ஆகும்.
- இம்மாநாட்டின் கருப்பொருள் "இந்தியாவின் ஜவுளித் துறை: வளர்ச்சி, பாரம்பரியம் மற்றும் புத்தாக்கத்தை நெய்தல்" என்பதாகும்.
- இது ஏற்றுமதியை அதிகரித்தல், வேலைவாய்ப்பை உருவாக்குதல், கைத்தறி மற்றும் கைவினைப் பொருட்களைப் பாதுகாத்தல், தொழில்நுட்ப மற்றும் நவீன கால இழைகளை ஊக்குவித்தல் மற்றும் நிலைத்தன்மையை உறுதி செய்தல் ஆகியவற்றில் கவனம் செலுத்துகிறது.
- பிரதமரின் மெகா ஒருங்கிணைந்த ஜவுளிப் பகுதிகள் மற்றும் ஆடைப் பூங்காக்கள் (PM MITRA) மற்றும் ஒருங்கிணைந்த மதிப்புச் சங்கிலி மேம்பாடு போன்ற முதன்மைத் திட்டங்கள் முன்னிலைப்படுத்தப்படுகிறது.
- இந்த பிரத்யேக மாநாடானது, வடகிழக்கு பிராந்தியத்தின் ஜவுளித் திறன்கள், எரி, முகா மற்றும் மல்பெரி பட்டு வகைகள், பெண்களால் நடத்தப்படும் நிறுவனங்கள் மற்றும் மேம்படுத்தப் பட்ட சந்தை அணுகல் உள்ளிட்டவை குறித்து ஆராய்கிறது.

## நாகௌரி அஸ்வகந்தா - புவிசார் குறியீடு

- ராஜஸ்தானின் நாகௌர் மாவட்டத்தில் விளையும் நாகௌரி அஸ்வகந்தாவிற்கு இந்திய அரசு புவிசார் குறியீட்டை வழங்கியுள்ளது.
- சோஜத் மருதாணிக்குப் பிறகு, புவிசார் குறியீடு பெறும் ராஜஸ்தானின் இரண்டாவது விவசாயப் பொருள் இதுவாகும்.
- நாகௌரி அஸ்வகந்தாவானது நாகௌரின் வறண்ட காலநிலை மற்றும் மணற்பாங்கான பகுதியில் நன்கு வளர்கிறது.
- இது அதிக மருத்துவ குணம் கொண்ட அதன் நீளமான மற்றும் தடித்த வேர்களுக்காக பிரபலமாக அறியப்படுகிறது.

## சாகர் தீவு பாலத் திட்டம்

- மேற்கு வங்க அரசானது, சாகர் தீவை பிரதான நிலப்பகுதியுடன் இணைப்பதற்காக முரிகங்கா ஆற்றின் மீது 5 கி.மீ நீளமுள்ள பாலத்தைக் கட்டும் பணியைத் தொடங்கியுள்ளது.
- இந்தப் பாலம் காகத்வீப்பில் உள்ள தொகுதி 8-ஐ சாகர் தீவில் உள்ள கச்சுபேரியாவுடன் இணைக்கும்.
- இந்தத் திட்டத்தின் மொத்த செலவு ₹1,670 கோடி ஆகும்.
- சாகர் தீவு சுந்தரவனக் கழிமுகத்தின் மிகப்பெரிய தீவாகும்.
- இந்தத் தீவில் ஆண்டுதோறும் மகர சங்கராந்தியின் போது கங்காசாகர் மேளா நடத்தப் படுகிறது.

## இந்தியாவின் முதல் முழுமையான காகிதமில்லா மாவட்ட நீதிமன்றம்

- கேரளாவின் வயநாடு மாவட்டத்தில் உள்ள கல்பேட்டா நீதித்துறை மாவட்டம், நாட்டின் முதல் காகிதமில்லா மாவட்ட நீதிமன்றமாக மாறியுள்ளது.
- இது ஒரு முழுமையான காகிதமில்லா நீதிமன்ற அமைப்பாகச் செயல்பட உள்ளது, இது இந்தியாவின் நீதித்துறை டிஜிட்டல்மயமாக்கல் முயற்சிகளில் ஒரு முக்கிய மைல்கல்லைக் குறிக்கிறது.
- இந்தப் புதிய அமைப்பின் கீழ், வழக்குகளைத் தாக்கல் செய்வது முதல் இறுதித் தீர்ப்புகளை வழங்குவது வரை, மாவட்ட நீதித்துறையில் உள்ள அனைத்து நீதிமன்றங்களும் முழுமையாக டிஜிட்டல் முறையில் செயல்படும்.
- விசாரணைக்கு முந்தைய நடவடிக்கைகள், சாட்சியங்களைப் பதிவு செய்தல், இடைக்கால மனுக்கள் மற்றும் இறுதித் தீர்ப்பு உட்பட நீதித்துறைச் செயல்முறையின் ஒவ்வொரு கட்டமும் இப்போது மின்னணு முறையில் நடத்தப்படும்.
- இந்த அமைப்பு செயற்கை நுண்ணறிவு அடிப்படையிலான நீதித்துறை உதவி கருவிகளையும் ஒருங்கிணைக்கிறது.
- இந்த முழுயான அமைப்பு முற்றிலுமாக கேரள உயர் நீதிமன்றத்தால் உருவாக்கப் பட்டுள்ளது.
- தலைமை நீதிபதி சூர்ய காந்த் மிஸ்ரா இந்த மாற்றத்தை நீதி வழங்குவதில் ஓர் அடிப்படை மாற்றம் என்று விவரித்து, அதை "பசுமை நீதித்துறை" என்று அழைத்தார்.

## ICJS 2.0 தேசிய தரவரிசைகள்

- உள்துறை அமைச்சகத்தின் கீழ் செயல்படும் தேசிய குற்ற ஆவணக் காப்பகம் (NCRB), ஒருங்கிணைந்த குற்றவியல் நீதி அமைப்பு (ICJS) 2.0 தரவரிசைகளின் இரண்டாவது பதிப்பை வெளியிட்டது.
- சமீபத்திய ICJS 2.0 தரவரிசையில், உத்தரகாண்ட் 93.46 புள்ளிகளுடன் முதலிடம் பிடித்தது.
- அதைத் தொடர்ந்து ஹரியானா 93.41 புள்ளிகளுடனும், அசாம் 93.16 புள்ளிகளுடனும் உள்ளன.

- ஒருங்கிணைந்த குற்றவியல் நீதி அமைப்பு, காவல்துறை, நீதிமன்றங்கள் மற்றும் சிறைகளுக்கு இடையே தடையற்ற தரவுப் பகிர்வைச் செயல்படுத்துகிறது.
- உத்தரகாண்ட் காவல்துறை இரண்டு முக்கிய சாதனைகளைப் படைத்துள்ளது.
- அவை ICJS (ஒருங்கிணைந்த குற்றவியல் நீதி அமைப்பு) தரவரிசையில் முதலிடம் பிடித்ததும், 2025 ஆம் ஆண்டின் பிரயாக்ராஜ் மகா கும்பத்தின் போது உத்தரகாண்ட் மாநிலப் பேரிடர் மீட்புப் படையின் (SDRF) முன்மாதிரியான செயல்பாடும் ஆகும்.

## ஆரளம் வனவிலங்கு சரணாலயத்தின் பெயர் மாற்றம்

- கேரள மாநில அரசு ஆரளம் வனவிலங்கு சரணாலயத்தை அதிகாரப்பூர்வமாக ஆரளம் பட்டாம்பூச்சி சரணாலயம் எனப் பெயர் மாற்றம் செய்துள்ளது.
- இது இம்மாநிலத்தில் உள்ள இந்தியாவின் முதல் பட்டாம்பூச்சி சரணாலயம் ஆகும்.
- இந்த அறிவிப்பு வனவிலங்கு (பாதுகாப்பு) சட்டம், 1972ன் கீழ் வெளியிடப்பட்டது.
- இந்தப் பிராந்தியம் பெரிய அளவிலான பட்டாம்பூச்சி இடம்பெயர்வு மற்றும் சேற்றுப் பள்ளம் ஆகியவற்றிக்குப் பெயர் பெற்றது என்பதோடு மேலும் இது அட்டவணை 1ல் உள்ள தேவாங்கின் ஒரு சிறப்பு வாழ்விடமாகவும் உள்ளது.
- இது கர்நாடகாவில் உள்ள பிரம்மகிரி வனவிலங்கு சரணாலயம், கொட்டியூர் வனவிலங்கு சரணாலயம் மற்றும் வடக்கு வயநாடு வனப் பிரிவு ஆகியவற்றுடன் எல்லைகளைப் பகிர்ந்து கொள்கிறது.
- கண்ணூர் மாவட்டத்தில் உள்ள ஒரு முக்கியமான நதியான சீங்கண்ணி ஆறு, பிரம்மகிரி மலைத்தொடர்களில் உற்பத்தியாகி, ஆரளத்தின் அடர்ந்த காடுகளின் வழியாகப் பாய்கிறது.

## மேற்கு வங்காளத்தின் ஹால்டியாவில் புதிய கடற்படைத் தளம்

- கொல்கத்தாவிலிருந்து சுமார் 100 கிலோமீட்டர் தொலைவில் உள்ள மேற்கு வங்காளத்தின் ஹால்டியாவில் இந்திய கடற்படை ஒரு புதிய தளத்தை நிறுவ உள்ளது.
- அதிகரித்து வரும் சீன கடற்படையின் இருப்பு மற்றும் வங்காளதேசம் மற்றும் பாகிஸ்தான் தொடர்பான வளர்ந்து வரும் பிராந்தியப் பாதுகாப்புச் சூழ்நிலைகளுக்கு மத்தியில், வடக்கு வங்காள விரிகுடா பகுதியில் இந்தியாவின் கடல்சார் இருப்பை வலுப்படுத்துவதை இது நோக்கமாகக் கொண்டுள்ளது.
- இந்தியாவின் தற்போதைய கடற்படைப் பிரிவுகள் மும்பையில் (மகாராஷ்டிரா) மேற்கு கடற்படைப் பிரிவு, விசாகப்பட்டினத்தில் (ஆந்திரப் பிரதேசம்) கிழக்கு கடற்படைப் பிரிவு மற்றும் கொச்சியில் (கேரளா) பயிற்சிக்கான தெற்கு கடற்படைப் பிரிவு ஆகியன ஆகும்.
- இது அந்தமான் மற்றும் நிக்கோபார் தீவுகளில் முக்கிய தளத்தைக் கொண்டுள்ளது.
- ஹால்டியா ஹால்டி நதிக்கு அருகில் ஹூக்ளி ஆற்றில் அமைந்துள்ளது.

## பூரியின் பாதுகாப்பான குழாய் நீர்

- ஒடிசாவில் உள்ள பூரி கொதிக்கவோ அல்லது வடிகட்டவோ அவசியமில்லாமல் நேரடியாக குடிக்கப் பாதுகாப்பான குடிநீரை வழங்கும் இந்தியாவின் முதல் நகரமாக அதிகாரப் பூர்வமாக மாறியுள்ளது.

- பூரி நகரின் இந்த சாதனை, நுகர்வோர் விவகாரங்கள், உணவு மற்றும் பொது விநியோக அமைச்சகத்தின் கீழ் உணவு மற்றும் நீர் சான்றிதழ் குறித்த உச்ச நிலை சான்றளிக்கும் அமைப்பான இந்தியத் தரநிலைகள் வாரியத்தின் (BIS) இணைக்கத்துடன் உள்ளது.
- இந்தப் பணி, பாதுகாப்பான நீர் அணுகலுக்கான மையத்தின் 2015 ஆம் ஆண்டு அடல் புத்துயிர்ப்பு மற்றும் நகர்ப்புற மாற்றத்திற்கான திட்டத்தின் (AMRUT) ஒரு பகுதியாகும்.
- 2017 ஆம் ஆண்டில், 'குழாய்வழி குடிநீர்' என்ற முன்னோடியான முன்னெடுப்பினை அறிமுகப் படுத்திய இந்தியாவின் முதல் மற்றும் ஒரே மாநிலமாக ஒடிசா ஆனது.
- 2025 ஆம் ஆண்டின் இறுதியில், 3 லட்சம் மக்கள்தொகை கொண்ட பூரி நகர், ஏற்கனவே 24x7 நேரமும் குடிப்பதற்கு பாதுகாப்பான குழாய் நீரை வழங்கும் முதல் நகரமாக இருந்தது.
- 1908 ஆம் ஆண்டில், அமெரிக்காவின் ஜெர்சி நகரம் அதன் நீர் விநியோக அமைப்புகளைத் தொடர்ந்து கிருமி நீக்கம் செய்த உலகின் முதல் நகரமாக மாறியது.

## உலகளாவிய கல்வி மையம்

- ஒடிசாவின் புவனேஸ்வரில் உள்ள கலிங்கா தொழில்துறை கல்வி மையம் (KIIT), சர்வதேச மாணவர்களை ஈர்ப்பதில் இந்தியாவில் ஐந்தாவது இடத்தைப் பிடித்தது.
- உலகளாவிய ஆசிரியத் திட்டங்கள், உலகளாவிய தரத்திலான திட்டங்கள் மற்றும் இந்தியா ட்ரெக் போன்ற முயற்சிகள் கல்விப் பரிமாற்றம் மற்றும் உலகளாவிய ஈடுபாட்டை ஊக்குவிக்கின்றன.
- வெளிநாட்டு மாணவர்களை ஈர்ப்பதில் இந்தியாவின் முதல் பத்து மாநிலங்களில் மேற்கு வங்கம், தெலுங்கானா மற்றும் ஆந்திரப் பிரதேசம் ஆகியவற்றை விட ஒடிசா முன்னணியில் உள்ளது.

## போடா தியோஹர் 2025

- ஒரு மாத கால "போடா தியோஹர்" திருவிழா, இமாச்சலப் பிரதேசத்தின் நஹானில் தொடங்கப் பட்டது.
- இது "மாகோ கோ தியோஹர்" என்றும் அழைக்கப்படுகிறது.
- இந்த திருவிழா ஹதி பழங்குடியினரின் பழமையான பண்புகள் மற்றும் மிகவும் தனித்துவமான கலாச்சாரத்தின் ஒரு பகுதியாகும்.
- இது உத்தரகாண்டின் ஜான்சர் பாபர் பழங்குடிப் பகுதியிலும் கொண்டாடப்படுகிறது.
- இந்த விழா ஹாதி கலாச்சாரத்தில் பெண்களின் முக்கியத்துவத்தைக் குறிக்கிறது.
- ஹாதி சமூகம் 2023 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதத்தில் ஒரு பட்டியலிடப்பட்டப் பழங்குடியினராக அறிவிக்கப்பட்டது.
- இந்தியச் சட்டத்தின் கீழ் பல கணவர் முறை சட்ட விரோதமானது என்றாலும், இமாச்சலப் பிரதேச வருவாய் சட்டம் ஹாதி பழங்குடியினரின் ஜோடிதராவின் பாரம்பரியத்தை சட்டப் பூர்வமாக்கியுள்ளது.

## இந்தியாவின் பணக்கார உள்ளாட்சி அமைப்பு

- பிரஹன்மும்பை மாநகராட்சி கழகம் (BMC) நாட்டின் மிகப்பெரிய நிதி ஒதுக்கீடு அளிக்கும் ஆணையங்களில் ஒன்றாகும்.
- 2025–26 ஆம் நிதியாண்டிற்கு, BMC 74,427 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீட்டினை முன்மொழிந்துள்ளது, இது இதுவரை இல்லாத அளவுக்கு அதிகமாகும்.
- அதன் மூலதனச் செலவு மட்டும் சுமார் 43,162 கோடி ரூபாயாகும்.
- பெங்களூருவின் BBMP தோராயமாக சுமார் 19,900 கோடி ரூபாய் ஒதுக்கீட்டில் செயல் படுகிறது.
- 2025–26 ஆம் ஆண்டிற்கான கோவாவின் மொத்த நிதி ஒதுக்கீடு 28,162 கோடி ரூபாய் ஆகும்.

## ஸ்வச் ஜல் அபியான் - மத்தியப் பிரதேசம்

- இந்தூரில் நீர் மாசுபாட்டால் ஏற்பட்ட சம்பவம் கடுமையான பொது சுகாதார கவலைகளை எழுப்பியதைத் தொடர்ந்து மத்தியப் பிரதேச மாநில அரசு ஸ்வச் ஜல் அபியானைத் தொடங்கியது.
- மாநிலம் முழுவதும் பாதுகாப்பான மற்றும் சுத்தமான குடிநீரை உறுதி செய்வதை இந்தப் பிரச்சாரம் நோக்கமாகக் கொண்டுள்ளது.
- இந்த இயக்கம் கசிவுகள் மற்றும் கழிவுநீர்-குடிநீர் பாதைச் சந்திப்புகளைக் கண்டறிய தானியங்கி/ரோபோ தொழில்நுட்பம் மற்றும் புவியிடத் தகவல் அமைப்பு வரைபடங்களைப் பயன்படுத்துகிறது.
- இந்தத் திட்டத்தில் வழக்கமான நீர் தரச் சோதனை மற்றும் சுத்திகரிப்பு நிலையங்கள் மற்றும் சேமிப்புத் தொட்டிகளை சுத்தம் செய்தல் ஆகியவை அடங்கும்.
- விரைவான தீர்வுக்காக குடிமக்கள் 'ஜல் சன்வாய்' (தண்ணீர் குறைதீர் விசாரணைகள்) மூலம் பிரச்சினைகளைப் புகாரளிக்கலாம்.

## கத்புட்லி — இராஜஸ்தானின் பாரம்பரியப் பொம்மைக் கலை

- மரப் பொம்மை (காத் = மரம், புட்லி = பொம்மை) என்று பொருள்படும் கத்புட்லி, இராஜஸ்தானின் பழமையான நாட்டுப்புறக் கலை வடிவங்களில் ஒன்றாகும்.
- ஜெய்ப்பூரில் உள்ள கத்புட்லி நகரில் சுமார் 250 குடும்பங்கள் இந்தப் பொம்மைகளை உருவாக்கிப் பாதுகாத்து, பிரகாசமான ஆடைகளைத் தைத்து, உணர்வு வெளிப்பாடு மிக்க முகங்களை வரைகின்றனர்.
- இராஜபுத்திர மன்னர்கள், போர் வீரர்கள், நாட்டுப்புற நாயகர்கள் மற்றும் நெறிமுறைக் கதைகளை விவரிக்க நாடோடி/பயணக் கலைஞர்களால் பொம்மலாட்டங்கள் பயன்படுத்தப் படுகின்றன.
- இராஜஸ்தானின் கலாச்சாரம் மற்றும் சமூக அடையாளத்தைப் பிரதிபலிக்கும் இந்த நிகழ்ச்சிகளில் சரங்கள், நாட்டுப்புற இசை மற்றும் தாளக் கதைகள் இடம் பெறுகின்றன.
- கத்புட்லிகள் உலகெங்கிலும் உள்ள உள்ளூர் வீடுகள், கலாச்சாரக் கண்காட்சிகள் மற்றும் மேடைகளில் காட்சிப் படுத்தப்படுகின்றன என்பதோடு இது பாரம்பரியத்தை உயிர்ப்புடன் வைத்திருக்கின்றன.

## மலையாள மொழி மசோதா 2025

- கேரளச் சட்டமன்றம் மலையாளத்தை மாநிலத்தின் ஒரே அதிகாரப்பூர்வ மொழியாக மாற்றும் 2025 ஆம் ஆண்டு மலையாள மொழி மசோதாவினை நிறைவேற்றியது.
- இந்த மசோதா, அரசு நிர்வாகம், கல்வி, நீதித்துறை, பொதுத் தொடர்பு, வணிகம் மற்றும் டிஜிட்டல் தளங்களில் மலையாளத்தைப் பயன்படுத்துவதை கட்டாயமாக்குகிறது.
- அனைத்து அரசுப் பள்ளிகளும் 10 ஆம் வகுப்பு வரை மலையாளத்தை முதல் மொழியாகக் கற்பிக்க வேண்டும்.
- மேலும், மொழியியல் சிறுபான்மை மாணவர்கள் தங்கள் தாய்மொழியைப் படிப்பதற்கான விதிகளும் உள்ளன.
- மசோதாக்கள், அவசரச் சட்டங்கள் மற்றும் நீதிமன்றத் தீர்ப்புகள் மலையாளத்தில் அறிமுகப் படுத்தப்படும் அல்லது மொழி பெயர்க்கப்படும் என்பதோடு மேலும் அதிகாரப் பூர்வ கடிதப் போக்குவரத்து முதன்மையாக மலையாள மொழியில் மேற் கொள்ளப் படும்.
- டிஜிட்டல் கருவிகள் மற்றும் மென்பொருள் தகவல் தொழில்நுட்பம் மற்றும் இணைய ஆளுகையில் மலையாள மொழியில் மேற்கொள்ளப்படும் என்பதோடு மலையாள மொழி மேம்பாட்டு இயக்குநரகம் ஆனது இதன் அமலாக்கத்தினை மேற் பார்வையிடும்.
- கன்னட மொழி பேசும் சிறுபான்மையினருக்கான கவலைகள் தொடர்பாக இந்த மசோதா கர்நாடகாவின் எதிர்ப்பை எதிர்கொண்டுள்ளது அதே நேரத்தில் கேரளா அரசியலமைப்பின் 29 மற்றும் 30வது சரத்துகளின் கீழ் சிறுபான்மையினரின் உரிமைகளைப் பாதுகாப்பதாகக் கூறுகிறது.

## பத்ரகாளி கல்வெட்டு

- பத்ரகாளி கல்வெட்டு, சோமநாதர் கோயிலின் வரலாற்றுடன் இணைக்கப்பட்ட 12 ஆம் நூற்றாண்டின் முக்கியமான கல்வெட்டுப் பதிவாக சிறப்பிக்கப் படுகிறது.
- பத்ரகாளி கல்வெட்டு குஜராத்தின் பிரபாஸ் படானில், பத்ரகாளி கோயிலின் சுவரில் அமைந்துள்ளது.
- கி.பி 1169 ஆம் ஆண்டில் செதுக்கப்பட்ட இது வாலபி சம்வத் 850 மற்றும் விக்ரம் சம்வத் 1255 உடன் ஒத்திருக்கிறது.
- இந்தக் கல்வெட்டு பல்வேறு காலக் கட்டங்களில் சோமநாதர் கோயிலின் கட்டுமானம் மற்றும் புனரமைப்பு பற்றிய வரலாற்று விவரங்களை வழங்குகிறது.
- இது சோலங்கி வம்சத்தின் குறிப்பாக மன்னர் குமாரபாலரின் ஆட்சிக் காலத்தில் பெறப் பட்ட ஆதரவு குறித்த பதிவுகளைக் கொண்டுள்ளது.
- இந்தக் கல்வெட்டு, சோலங்கி ஆட்சியாளரின் ஆன்மீக குருவான பரம் பசுபத ஆச்சார்ய ஸ்ரீமான் பவப்ரிஹஸ்பதியின் புகழாரமாகும்.

## அக்கா படே திட்டம்

- பெண்கள் மற்றும் குழந்தைகளின் பாதுகாப்பை நன்கு மேம்படுத்துவதற்காக வேண்டி கர்நாடகாவின் தட்சிண கன்னடா மாவட்டத்தில் அக்கா படே திட்டம் தொடங்கப் பட்டது.

- அக்கா படே என்பது பெண்கள் மற்றும் குழந்தைகள் மேம்பாட்டுத் துறை (DWCD) மற்றும் காவல் துறையால் கூட்டாகச் செயல்படுத்தப்படும் ஒரு சிறப்புப் பாதுகாப்பு முன்னெடுப்பு ஆகும்.
- ஒவ்வொரு அக்கா படே குழுவிலும் துன்பத்தில் உள்ள பெண்கள் மற்றும் குழந்தைகளுக்கு உதவ பயிற்சி பெற்ற ஐந்து பெண் ஊர்க்காவல் படை காவலர்கள் இருப்பர்.
- பள்ளிகள், கல்லூரிகள், பேருந்து மற்றும் இரயில் நிலையங்கள், விடுதிகள், சுற்றுலா தலங்கள் மற்றும் சமய இடங்கள் ஆகிய பகுதிகளில் இவர்கள் பணியமர்த்தப்படுவர்.

## பிரபாஸ் படான் கல்வெட்டுகள் மற்றும் சோம்நாத் கோயில்

- பிரபாஸ் படான் குஜராத்தின் கிர் சோம்நாத் மாவட்டத்தில் அரேபிய கடலுக்கு அருகில் அமைந்துள்ளது.
- பிரபாஸ் படான், சோம்நாத் கோயிலின் வரலாற்றுடன் தொடர்புடைய கல்வெட்டுகள், செப்புத் தகடுகள் மற்றும் நினைவுக் கற்களைக் கொண்டுள்ளது.
- இந்தக் கல்வெட்டுப் பதிவுகள் சோம்நாத்தின் நீண்ட கால சமய முக்கியத்துவத்தையும், இப்பகுதியில் நிலவிய அரச ஆதரவையும் காட்டுகின்றன.
- கி.பி. 1169 என்ற தேதியிட்ட பத்ரகாளி கல்வெட்டு, சோலங்கி மன்னர் குமாரபாலரின் ஆட்சிக் காலத்தில் சோம்நாத் கோயிலின் கட்டுமானம் குறித்த தகவல்களை கொண்டு உள்ளது.
- சத்யா, திரேதா, துவாபரா மற்றும் கலி ஆகிய நான்கு யுகங்களிலும் சோம்நாத் மகாதேவ் கோயில் மீண்டும் கட்டப்பட்டதாக இந்தக் கல்வெட்டு கூறுகிறது.
- இந்தக் கல்வெட்டுகளுடன் தொடர்புடைய கலைப் பொருட்கள் சூரிய கோயில் வளாகத்திற்கு அருகிலுள்ள பிரபாஸ் படான் அருங்காட்சியகத்தில் பாதுகாக்கப் பட்டு உள்ளன.

## இராஜஸ்தானின் முதல் இயற்கை வேளாண் பஞ்சாயத்து

- இராஜஸ்தானில் உள்ள பமன்வாஸ் கங்கர் கிராமப் பஞ்சாயத்து, மாநிலத்தின் முதல் முழுமையான இயற்கை வேளாண் பஞ்சாயத்தாக மாறியது.
- கோட்புட்லி-பெஹ்ரூர் மாவட்டத்தில் அமைந்துள்ள இந்தப் பஞ்சாயத்து ஏழு குக்கிராமங்களைக் கொண்டுள்ளது.
- இயற்கை உரங்கள், தழைக் கூளம், பயிர் சுழற்சி மற்றும் உயிரியல் பூச்சிக் கட்டுப்பாடு ஆகியவற்றைப் பயன்படுத்துவதுடன் அனைத்து வேளாண் நிலமும் தற்போது இரசாயனம் இல்லாததாக மாறியுள்ளது.
- கால்நடைகள் சுற்றுச்சூழல் மற்றும் சுகாதார நலன் சார்ந்த நடைமுறைகளைப் பின்பற்றி வளர்க்கப்படுகின்றன.
- ஜனவரி 2, 2026 அன்று, இரசாயனம் இல்லாத வேளாண்மையை பராமரிப்பதாக இந்தப் பஞ்சாயத்து பகிரங்கமாக உறுதியளித்தது.
- 2026 ஆம் ஆண்டின் இறுதிக்குள் இராஜஸ்தானில் உள்ள 300 பஞ்சாயத்துகளில் இதனை அமல்படுத்துவதை ஊக்குவிப்பதை இந்த முன்னெடுப்பு நோக்கமாகக் கொண்டு உள்ளது.

## இந்தியாவின் முதல் CKD பதிவேடு

- மார்ச் 31, 2026 ஆம் தேதிக்குள் விரிவான நாள்பட்ட சிறுநீரக நோய் (CKD) பதிவேட்டைத் தொடங்கும் முதல் இந்திய மாநிலமாக ஒடிசா மாற உள்ளது.
- இந்தப் பதிவேடு, CKD பரவல் குறித்த நம்பகமானத் தரவை உருவாக்கும் மற்றும் ஆதார அடிப்படையிலான கொள்கை வகுப்பிற்கு உதவும்.
- தேசியத் தகவல் மையம் (NIC) இந்தப் பதிவேட்டிற்காகப் பிரத்தியேக மென்பொருளை உருவாக்கி வருகிறது.
- இந்தப் பதிவேடு, ஆரம்ப சுகாதார நிலையங்கள் முதல் மருத்துவக் கல்லூரிகள் வரையிலான CKD பாதிப்புகளை உள்ளடக்கி, ஏற்கனவே உள்ள தரவுகளில் உள்ள இடைவெளிகளை நிரப்பும்.
- ஒடிசாவில் CKD பாதிப்பு 15 வயதுக்கு மேற்பட்டவர்களில் சுமார் 14% ஆகும் என்ற நிலையில் சுமார் 60% பாதிப்புகள் நீரிழிவு மற்றும் உயர் இரத்த அழுத்தத்துடன் தொடர்புடையவையாக உள்ளன.
- கடந்த மூன்று ஆண்டுகளில் ஒடிசாவில் 19,888 CKD பாதிப்புகளும் 4,718 இறப்புகளும் பதிவாகியுள்ளன.

## ஆமே பதிபா ஆமா பசாரே திட்டம் – ஒடிசா

- தாய்மொழியில் ஆரம்பகாலக் குழந்தைப் பருவக் கல்வியை வழங்குவதற்காக ஒடிசா அரசு 'ஆமே பதிபா ஆமா பசாரே' திட்டத்தைத் தொடங்கியது.
- இந்தத் திட்டம் 3 முதல் 6 வயதுடைய குழந்தைகளுக்கான ஐந்து ஆண்டு முயற்சி ஆகும்.
- இது முதலில் கியோஞ்சர், காந்தமால், கஜபதி, ராயகடா, நபரங்பூர் மற்றும் மல்கன்கிரி மாவட்டங்களில் செயல்படுத்தப்படும்.
- முண்டா, குய், சௌரா, குவி, கோண்டி மற்றும் கோயா போன்ற பழங்குடியின மொழிகளில் கற்பித்தல் செய்யப்படும்.
- அங்கன்வாடி பணியாளர்கள் மொழி சார்ந்தப் பயிற்சி மற்றும் கற்றல் நூல்களைப் பெறுவார்கள்.
- இந்தத் திட்டம் தேசிய கல்விக் கொள்கை (NEP) 2020 மற்றும் அரசியலமைப்பின் சரத்து 350A (ஆரம்பக் கல்வி நிலையில் தாய்மொழியில் பயிற்றுவித்தல்) ஆகியவற்றுடன் ஒத்துப் போகிறது.

## க்ருஹா லட்சுமி டிஜிட்டல் சந்தைப்படுத்துதல் வலை தளம் – கர்நாடகா

- கர்நாடகா, பெண் தொழில்முனைவோர் தயாரித்த தயாரிப்புகளை இயங்கலை தளம் மூலம் ஊக்குவிப்பதற்காக க்ருஹா லட்சுமி டிஜிட்டல் சந்தைப்படுத்துதல் வலை தளத்தினை அறிமுகப்படுத்தியது.
- இது பெண்கள் மற்றும் குழந்தைகள் மேம்பாட்டுத் துறையால் செயல்படுத்தப்படும் ஒரு மாநில அரசின் முன்னெடுப்பாகும்.
- பெண்கள் தலைமையிலான நிறுவனங்களுக்கு அரசாங்கத்தால் ஆதரிக்கப்படும் இணைய வணிகச் சந்தையை இந்த தளம் வழங்குகிறது.

- இது பெண்கள், குறிப்பாக கிராமப்புறப் பெண்கள் மற்றும் கைவினைஞர்கள், உள்ளூர் சந்தைகளுக்கு அப்பால் உள்ள பகுதிகளில் பொருட்களை விற்க உதவுகிறது.
- இந்த முன்னெடுப்பு கர்நாடகாவில் பெண்கள் தொழில்முனைவு, டிஜிட்டல் உள்ளடக்கம் மற்றும் வருமானம் ஈட்டுவதை ஆதரிக்கிறது.

## ஸ்பிடுக் கஸ்டர் விழா – லடாக்

- லடாக்கின் லே அருகே உள்ள ஸ்பிடுக் மடாலயத்தில் ஸ்பிடுக் கஸ்டர் விழா மேற்கொள்ளப் படுகிறது.
- இது அமைதி மற்றும் செழிப்பைக் கொண்டாடும் ஒரு கலாச்சார விழாவாகும்.
- இந்த விழா லேவிலிருந்து சுமார் 8 கி.மீ தொலைவில் அமைந்துள்ள ஸ்பிடுக் மடாலயத்தில் நடைபெறுகிறது.
- இது ஜெ சோங்க்காபா (1357–1419) நிறுவிய திபெத்திய பௌத்தத்தின் கெலுக்பா வம்சத்தினை நினைவு கூர்கிறது.
- தீயதை நன்மை வென்றதைக் குறிக்கும் வகையில் தீமைகளின் உருவப் பொம்மையை எரிப்பதன் மூலம் இந்தத் திருவிழா முடிவடைகிறது.

## பாண்டுரு காதி – புவிசார் குறியீடு

- பாண்டுரு காதி ஆந்திரப் பிரதேசத்தின் ஸ்ரீகாகுளம் மாவட்டத்தில் உள்ள பாண்டுரு கிராமத்தில் இருந்து உருவானது.
- இது பாரம்பரியமாக கையால் நெய்யப்பட்ட புவிசார் குறியீடு (GI) வழங்கப்பட்ட பருத்தி துணியாகும்.
- பாண்டுரு காதி உள்ளூரில் "பட்நூலு" என்று அழைக்கப்படுகிறது.
- இந்த துணி உள்ளூரில் வளர்க்கப்படும் மலை பருத்தி, புனாசா பருத்தி மற்றும் சிவப்பு பருத்தியைப் பயன்படுத்தி முழுவதுமாக கையால் நெய்யப்படுகிறது.
- பருத்தியை சுத்தம் செய்ய வாலுகா மீனின் தாடை எலும்பைப் பயன்படுத்துவது இதன் தனித்துவமான அம்சமாகும்.

## இந்தியாவின் முதல் சூரிய சக்தியில் இயங்கும் ATM வேன்

- திரிபுரா கிராம வங்கியானது, சூரிய சக்தியில் இயங்கும் ATM வேனை அறிமுகப் படுத்திய இந்தியாவின் முதல் பிராந்திய கிராமப்புற வங்கி (கிராம வங்கி) ஆனது.
- சூரிய சக்தியில் இயங்கும் இந்த ATM வேன் குறைந்த மின்சாரத்தில் தொலைதூரப் பகுதிகளில் வங்கிச் சேவைகளை வழங்குகிறது.
- இந்த முன்னெடுப்பு நிர்வாகம், புதுமை மற்றும் பொது சேவை வழங்கலில் சிறந்து விளங்குவதற்காக SKOCH குழுமத்தின் வெள்ளி விருதை வென்றது.
- சூரிய சக்தியால் இயங்கும் ATMகள் நிலையான மற்றும் கட்டமைப்பு சாரா வங்கி தீர்வுகளை வழங்க உதவுகின்றன.

## AI ஆய்வகங்களின் விரிவாக்கம் - உத்தரப் பிரதேசம்

- உத்தரப் பிரதேசத்தில் செயற்கை நுண்ணறிவு (AI) சூழல் அமைப்பை வலுப்படுத்த லக்னோவைச் சேர்ந்த IndiaAI மற்றும் உத்தரப் பிரதேச மேம்பாட்டு அமைப்புகள் கார்ப்பரேஷன் லிமிடெட் (UPDESCO) ஆகியவை ஒரு புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டன.
- இந்த முன்னெடுப்பினைச் செயல்படுத்துவதற்கான மாநில முதன்மை முகமை UPDESCO ஆகும்.
- உத்தரப் பிரதேசம் முழுவதும் 65 தரவு மற்றும் AI ஆய்வகங்கள் அமைக்கப்பட திட்டமிடப்பட்டுள்ளன என்பதோடு லக்னோ மற்றும் கோரக்பூரில் இரண்டு ஆய்வகங்களும், பிலிபிட்டில் ஒரு தொழில்துறைப் பங்குதாரரின் ஒரு ஆய்வகமும் செயலில் உள்ளன.
- இந்த ஆய்வகங்கள் AI-தயார் நிலையிலான கணினி வளங்கள், மென்பொருள், தரவுத் தொகுப்புகள் மற்றும் கற்றல் தொகுதிகளைக் கொண்டிருக்கும்.
- மாணவர்கள் இதன் மூலம் நேரடிப் பயிற்சி, திட்ட அடிப்படையிலான கற்றல் மற்றும் AI திறன் மேம்பாட்டைப் பெறுவார்கள்.
- இந்தத் திட்டம் AI திறன் இடைவெளியைக் குறைத்து AI கண்டுபிடிப்பு மற்றும் டிஜிட்டல் உள்ளடக்கத்தை ஊக்குவிப்பதை நோக்கமாகக் கொண்டுள்ளது.

## அழியாத மை

- மகாராஷ்டிராவின் மாநில தேர்தல் ஆணையம் ஆனது, ஜில்லா பரிஷத் மற்றும் பஞ்சாயத்து சமிதி தேர்தல்களுக்கு மார்க்கர்-பேனா மை துடைக்கப்படக் கூடியதாக உள்ளது என்ற புகார்களைத் தொடர்ந்து பாரம்பரியமாக பயன்படுத்தப்படும் அழியாத மைக்கு மாற முடிவு செய்துள்ளது.
- மீண்டும் வாக்களிப்பதைத் தடுக்க வாக்களித்த பிறகு வாக்காளரின் விரலில் அழியாத மை தடவப்படுகிறது.
- தேர்தல் மோசடியைத் தடுக்க வேண்டி இந்தியா 1962 ஆம் ஆண்டில் (மூன்றாவது பொதுத் தேர்தல்) இதைப் பயன்படுத்தத் தொடங்கியது.
- இந்த மையில் வெள்ளி நைட்ரேட் உள்ளது என்பதோடு இது தோல் மற்றும் ஒளியுடன் வினை புரிந்து நீண்ட கால இருண்ட கறையை உருவாக்குகிறது.
- அகற்றப்படக் கூடிய மார்க்கர் பேனாக்களைப் போலல்லாமல் பாரம்பரிய மையானது நம்பகத் தன்மை மற்றும் தேர்தல் ஒருமைப்பாட்டை உறுதி செய்கிறது.

## ஹோப் தீவில் புதிய விண்வெளி நிலையம்

- ஆந்திரப் பிரதேச முதல்வர் ஹோப் தீவில் ஒரு புதிய விண்வெளி நிலையம் அமைக்கப் படும் என்று அறிவித்தார்.
- இந்த விண்வெளி நிலையம் முக்கியமாக விண்வெளி நகர முன்னெடுப்பின் கீழ் தனியார் ஏவுதளப் பணிகளை ஆதரிக்கும்.
- இது சதீஷ் தவான் விண்வெளி மையம் (SDSC) மற்றும் குலசேகரப்பட்டினம் சிறிய செயற்கைக்கோள் ஏவுதளம் (SSLV) வளாகத்துடன் இந்தியாவின் வளர்ந்து வரும் விண்வெளி உள்கட்டமைப்பின் ஒரு பகுதியாகும்.

- இந்த மையம் வணிக மற்றும் தனியார் ஏவு பணிகளுக்கான சிறிய மற்றும் நடுத்தர எடை சுமப்பு கல ஏவுதள வாகனங்களில் கவனம் செலுத்தும்.
- ஹோப் தீவு வங்காள விரிகுடாவில் காக்கிநாடா கடற்கரையில், கோரிங்கா வனவிலங்குச் சரணாலயத்திற்கு அருகில் அமைந்துள்ளது.
- அதன் அமைவிடம் திறம் மிக்க கிழக்கு நோக்கிய ஏவு வாகன ஏவுதல்களுக்கு உதவுகிறது மற்றும் இந்தியாவின் தனியார் விண்வெளித் துறை வளர்ச்சியை ஆதரிக்கிறது.

## லம்பாடா பழங்குடியினர்

- தெலுங்கானாவில் உள்ள லம்பாடா சமூகத்தின் பட்டியலிடப்பட்ட பழங்குடியினர் (ST) அந்தஸ்து குறித்த பிரச்சினை மீண்டும் உச்ச நீதிமன்றத்தை எட்டியுள்ளது.
- பஞ்சாரர்கள் என்றும் அழைக்கப்படும் லம்பாடிகள், தெலுங்கானா, ஆந்திரப் பிரதேசம், கர்நாடகா, மகாராஷ்டிரா, இராஜஸ்தான் மற்றும் மத்தியப் பிரதேசத்தில் காணப்படும் ஒரு பழங்குடியினச் சமூகமாகும்.
- அவர்கள் பாரம்பரியமாக தானியங்கள் மற்றும் உப்பு போன்ற பொருட்களை கொண்டு செல்லும் நாடோடி வணிகர்களாக இருந்தனர்.
- அவர்கள் லம்பாடி என்றும் அழைக்கப்படும் இந்தோ-ஆரிய மொழியான கோர் போலி மொழியைப் பேசுகிறார்கள்.
- லம்பாடிகள் நாயக் என்ற கிராமத் தலைவரின் தலைமையில் தாண்டாக்கள் என்று அழைக்கப்படும் தனித்தனி குக்கிராமங்களில் வாழ்கின்றனர்.
- சில மாநிலங்களில் அவர்கள் பட்டியலிடப்பட்டப் பழங்குடியினராக அங்கீகரிக்கப் படுகிறார்கள் என்ற நிலையில் மற்றவற்றில் இதரப் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் (OBC) என வகைப்படுத்தப் படுகிறார்கள்.

## குய்லின்-பாரே நோய்க்குறி

- மத்தியப் பிரதேசத்தின் நீமுச் மாவட்டத்தில் உள்ள மனாசா நகரில் குய்லின்-பாரே நோய்க்குறி (GBS) பரவல் சமீபத்தில் பதிவாகியுள்ளது.
- GBS என்பது ஒரு அரிய நரம்பியல் கோளாறாகும் என்பதோடு இதில் உடலின் நோயெதிர்ப்பு அமைப்பு புற நரம்பு மண்டலத்தை (மூளை மற்றும் முதுகுத் தண்டுக்கு வெளியே உள்ள நரம்புகள்) தவறாக மாற்றி தாக்குகிறது.
- GBS பெரும்பாலும் உள்ளங்கால்கள் மற்றும் கால்களில் பலவீனம், கூச்ச உணர்வு அல்லது உணர்வின்மையுடன் தொடங்குகிறது என்பதோடு இது கைகள் மற்றும் முகத்திற்குப் பரவக் கூடும் என்ற நிலையில் மேலும் இது தசை பலவீனம் அல்லது பக்கவாதமாக முன்னேறலாம்.
- மாநில அரசுச் சிறப்புப் பிரிவுகள், கட்டுப்பாட்டு அறைகள் மற்றும் சுகாதார குழுக்கள், ASHA பணியாளர்கள் மற்றும் அங்கன்வாடி ஊழியர்களின் நோய் கண்டறிதல் ஆய்வுகளுடன் ஒரு கண்டறிதல் மற்றும் சிகிச்சை இயக்கத்தைத் தொடங்கியுள்ளது.
- இதன் கீழ் அதிகாரிகள் சிகிச்சை செலவுகளை ஈடு செய்து, புதிய பாதிப்புகளை முன் கூட்டியே அடையாளம் காண வீடு வீடாக நோய் கண்டறிதல் நடவடிக்கைகளை நடத்துகிறார்கள் என்ற நிலையில் மேலும் தொற்றுநோயின் மூலத் தோற்றம் குறித்து ஆய்வு செய்கிறார்கள்.

## ஜம்மா பேன் நிலப் பதிவுகள்

- கர்நாடகா அரசானது, குடகு மாவட்டத்தில் ஜம்மா பேன் நிலங்களை சீர்திருத்த அதன் நில வருவாய் சட்டத்தைத் திருத்தியது.
- கர்நாடக நில வருவாய் (இரண்டாவது திருத்தம்) சட்டம், 2025, ஜனவரி 7, 2026 அன்று ஆளுநரின் ஒப்புதலைப் பெற்றது.
- ஜம்மா பேன் நிலங்கள் கூர்க் மன்னர்களாலும் பின்னர் ஆங்கிலேயர்களாலும் வழங்கப் பட்ட பரம்பரை உடைமைகளாகும், அவை பெரும்பாலும் நெல் வயல்கள் மற்றும் காடுகள் நிறைந்த மேட்டு நிலங்கள் உட்பட இராணுவ சேவைக்காக வழங்கப்பட்டன.
- மரபார்ந்தப் பதிவுகள் அசல் மூதாதையர்களை உரிமையாளர்களாகப் பட்டியலிட்டு உள்ளதால், நில பட்டா மாற்றம், பரம்பரை, விற்பனை மற்றும் வங்கி கடன் அணுகலில் சட்ட சிக்கல்களை உருவாக்குகிறது.
- இந்தத் திருத்தம், உரிய விசாரணைக்குப் பிறகு உரிமைகள் பதிவேட்டில் உள்ள முரண்பாடுகளை சரி செய்ய தாசில்தார்களுக்கு அதிகாரம் அளிக்கிறது.
- இது குடகின் பதிவுகளை கர்நாடக நில வருவாய் சட்டம், 1964 உடன் இணைக்கிறது மற்றும் புதுப்பிக்கப்பட்ட, சட்டப்பூர்வ நில உரிமைக்காக பூமி டிஜிட்டல் மயமாக்கலை ஆதரிக்கிறது.

## புகையிலை பொருட்கள் மீதான தடை

- ஒடிசா அரசு ஆனது ஜனவரி 23, 2026 அன்று குட்கா, பான் மசாலா மற்றும் அனைத்து புகையிலை மற்றும் நிக்கோடின் பொருட்களுக்கும் முழுமையான தடையை அறிவித்தது.
- இந்தத் தடையானது, பொதி செய்யப்பட்ட மற்றும் பொதி செய்யப்படாத பொருட்களின் உற்பத்தி, விற்பனை, சேமிப்பு, போக்குவரத்து மற்றும் விநியோகத்தை உள்ளடக்கியது.
- எந்தவொரு வடிவத்திலும் அல்லது பெயரிலும் விற்கப்படும் புகையிலை அல்லது நிக்கோடின் கொண்ட அனைத்து மெல்லக் கூடிய பொருட்களுக்கும் இந்தத் தடை பொருந்தும்.
- இந்த நடவடிக்கை, உச்ச நீதிமன்றத்தின் நாடு தழுவிய குட்கா மற்றும் பான் மசாலா மீதான தடையை முழுமையாக நிறைவேற்றுவதை உறுதி செய்கிறது.
- புகையிலை பொருட்கள் மீதான அதிக சரக்கு மற்றும் சேவை வரி மற்றும் கலால் வரிகள் பிப்ரவரி 1, 2026 முதல் அமலுக்கு வரும்.

## பகுரும்பா துவோ 2026

- பிரதமர் அசாமின் கௌஹாத்தியில் நடைபெற்ற பகுரும்பா துவோ 2026 கலாச்சார நிகழ்ச்சியில் கலந்து கொண்டார்.
- பகுரும்பா துவோ என்பது போடோ சமூகத்தின் பாரம்பரிய பகுரும்பா நடனத்தின் ஒரு மாபெரும் கலாச்சார நிகழ்ச்சியாகும்.
- அசைவுகள் அழகாகவும், வண்ணத்துப்பூச்சிகள், பறவைகள், இலைகள் மற்றும் பூக்களின் அசைவுகளால் ஈர்க்கப்பட்டதாகவும் இருப்பதால் இது "வண்ணத்துப்பூச்சி நடனம்" என்று அழைக்கப்படுகிறது.

- வண்ணமயமான கையால் நெய்யப்பட்ட டோக்னா, ஜ்வம்க்ரா (ஃபாஸ்ரா) மற்றும் அரோனை ஆகியவற்றை அணிந்து போடோ பெண்கள் இந்த நடனத்தினை குழுக்களாக நிகழ்த்துகின்றனர்.
- இந்த நடனத்துடன் ஆண் இசைக்கலைஞர்கள் சிஃபுங் (மூங்கில் புல்லாங்குழல்), காம் (டிரம்), செர்ஜா மற்றும் தர்கா போன்ற பாரம்பரிய இசைக்கருவிகளை வாசிக்கிறார்கள்.
- 2026 ஆம் ஆண்டில், 10,000க்கும் மேற்பட்ட போடோ கலைஞர்கள் ஒன்றாக இணைந்து இந்த நடனத்தினை நிகழ்த்தினர் என்ற நிலையில் இது அமைதி, கருவுறுதல், மகிழ்ச்சி மற்றும் கூட்டு நல்லிணக்கத்தைக் குறிக்கும் மற்றும் பிவிசாகு (போடோ புத்தாண்டு) போன்ற பண்டிகைகளுடன் இணைகிறது.

## மாநில நுண்ணுயிரி - பேசிலஸ் சப்டிலிஸ்

- கேரளா தனது மாநில நுண்ணுயிரியாக பேசிலஸ் சப்டிலிஸை அதிகாரப்பூர்வமாக அறிவித்துள்ளதுடன் ஒரு நுண்ணுயிரியலுக்கான சிறப்பு மையத்தையும் (CoEM) மாநிலத்திற்கு அர்ப்பணித்துள்ளது.
- இந்தியாவில் மாநில நுண்ணுயிரியை அறிவித்த முதல் மாநிலம் கேரளா ஆகும்.
- பேசிலஸ் சப்டிலிஸ் என்பது மனித குடல், சுற்றுச்சூழல் மற்றும் நொதிக்கப்பட்ட உணவுகளில் காணப்படும் ஒரு புரோபயாடிக் பாக்டீரியம் ஆகும்.
- இது மரபணு ரீதியாக திறமையான வெப்பத்தை தாங்கும் வித்திகளை உருவாக்குகிறது என்பதோடு நுண்ணுயிரியல் மற்றும் உயிரி தொழில்நுட்பத்தில் ஒரு மாதிரி உயிரினமாகவும் செயல்படுகிறது.
- அதன் முழுமையாக வரிசைப்படுத்தப்பட்ட மரபணுத் தொகுப்பானது தொழில்துறை உயிரித் தொழில்நுட்பம் மற்றும் ஆராய்ச்சியில் பயன்படுத்தப்படுகிறது.
- இது குடல் ஆரோக்கியத்தை மிக நன்கு பேணி, குடல் கட்டுப்படுத்தும் அமைப்புகளை வலுப்படுத்துகிறது என்பதோடு தீங்கு விளைவிக்கும் நோய்க் கிருமிகளையும் தடுக்கிறது.

## லக்குண்டியில் புதிய கற்காலச் சின்னங்கள்

- கர்நாடக மாநிலம், கதக் மாவட்டத்தில் உள்ள லக்குண்டி கிராமத்தில் உள்ள கோட்டே வீரபத்ரேஸ்வரர் கோவிலில் சமீபத்தில் மேற்கொள்ளப்பட்ட அகழ்வாராய்ச்சிகளில் புதிய கற்காலத்தைச் சேர்ந்த கலைப்பொருட்கள் கண்டெடுக்கப்பட்டுள்ளன.
- இந்திய தொல்லியல் துறையின் (ASI) கண்டுபிடிப்புகளில் உடைந்த சாம்பல் நிற களிமண் பானை, ஒரு கற்கோடரி, சோழிகள், சிலுவை வடிவ பீடம் மற்றும் ஜீனரின் உருவம் செதுக்கப்பட்ட ஒரு கல் பீடம் ஆகியவை அடங்கும்.
- வரலாற்று ரீதியாக லோக்கிக்குண்டி என்று அழைக்கப்பட்ட லக்குண்டி, 10 முதல் 13 ஆம் நூற்றாண்டுகளில் கல்யாணி சாளுக்கியர்கள் மற்றும் ஹொய்சாலர்களின் கீழ் ஒரு பிரதானமான மையமாக இருந்தது.
- இந்தக் கண்டுபிடிப்புகள், வரலாற்றுக்கு முந்தைய காலம் முதல் இடைக்காலத்தின் முற்பகுதி வரை தொடர்ச்சியான மனித வாழ்விடங்கள் இருந்ததைக் காட்டுகின்றன.

### பொது சிவில் சட்ட (திருத்த) அவசரச் சட்டம், 2026

- வெளிப்படைத்தன்மை, டிஜிட்டல் பதிவு மற்றும் பெண்களுக்கு அதிகாரமளித்தலை மேம்படுத்தும் நோக்கில், உத்தரகாண்ட் அரசு பொது சிவில் சட்ட (திருத்த) அவசரச் சட்டம், 2026-ஐ அமல்படுத்தியுள்ளது.
- இந்திய அரசியலமைப்பின் 213வது பிரிவின் கீழ் பிறப்பிக்கப்பட்ட இந்த அவசரச் சட்டம் உடனடியாக அமலுக்கு வந்தது.
- இது தற்போதைய பொது சிவில் சட்டச் சட்டம் (UCC), 2024-இல் உள்ள தெளிவின்மைகளை நீக்கவும், புதிய குற்றவியல் சட்டங்களுடன் இணங்கிச் செல்லவும், நடைமுறை, நிர்வாக மற்றும் தண்டனைச் சீர்திருத்தங்களை அறிமுகப் படுத்துகிறது.
- இந்தத் திருத்தங்கள் டிஜிட்டல்வழி திருமணப் பதிவு, பதிவு தொடர்பான அதிகாரங்கள் மற்றும் மேல்முறையீட்டு வழிமுறையை வலுப்படுத்துகின்றன.
- UCC சட்டம் அமல்படுத்தப்பட்டதிலிருந்து, ஒரே ஆண்டில் ஐந்து லட்சத்திற்கும் மேற்பட்ட திருமணங்கள் ஆன்லைனில் பதிவு செய்யப் பட்டுள்ளன.

## பிரபலமானவர்கள், விருதுகள், மற்றும் நிகழ்வுகள்

### முன்னாள் வங்காளதேசப் பிரதமர் - கலீதா ஜியா

- வங்காள தேசத்தின் முன்னாள் பிரதமர் பேகம் கலீதா ஜியா சமீபத்தில் காலமானார்.
- மூன்று முறை பிரதமராக பதவி வகித்த ஜியா வங்காளதேசத்தின் முதல் பெண் பிரதமர் ஆவார்.
- 1991 ஆம் ஆண்டில், சுதந்திரமான மற்றும் நியாயமான தேர்தலை மேற்பார்வையிடச் செய்வதற்காக வங்காளதேசத்தில் பாராளுமன்ற வடிவிலான அரசாங்கத்தையும், இடைக்கால அரசாங்க அமைப்பையும் அறிமுகப்படுத்தினார்.

### ஜோஹ்ரான் மம்தானி – நியூயார்க்

- வரவிருக்கும் மேயர் ஜோஹ்ரான் மம்தானி நூற்றாண்டுகள் பழமையான குர் ஆனை மையமாக வைத்து பதவியேற்க உள்ளார்.
- நியூயார்க் நகர மேயர் ஒருவர் பதவியேற்க இஸ்லாத்தின் புனித நூலைப் பயன்படுத்திய முதல் சந்தர்ப்பமாக இது இருக்கும்.
- 34 வயதான அவர், ஜனநாயகக் கட்சியைச் சேர்ந்தவர் என்பதோடு பல தலைமுறைகளில் அந்த நகரத்தின் இளம் மேயர் ஆவார்.
- அந்தப் பதவியை வகிக்கும் முதல் முஸ்லிம், முதல் தெற்காசிய நபர் மற்றும் முதல் ஆப்பிரிக்க வம்சாவளியைச் சேர்ந்த நபர் இவர் ஆவார்.
- அவரது முன்னோடிகளில் பெரும்பாலோர் பைபிளை முன்னிலையாகக் கொண்டு பதவியேற்றனர்.

- கூட்டாட்சி, மாநில மற்றும் நகர அரசியலமைப்புகளை நிலை நிறுத்துவதற்கான சத்தியப் பிரமாணத்திற்கு எந்த ஒரு சமய உரையையும் பயன்படுத்த வேண்டிய அவசியமில்லை.
- திரைப்படத் தயாரிப்பாளர் மீரா நாயர் மற்றும் கல்வியாளர் மற்றும் எழுத்தாளர் மஹ்மூத் மம்தானி ஆகியோரின் மகனாக உகாண்டாவின் கம்பாலாவில் மம்தானி பிறந்தார்.
- அவர் 2018 ஆம் ஆண்டில் அமெரிக்கக் குடிமகனாக மாறினார்.

## மொழிப்போர் தளபதி L. கணேசன்

- மூத்த திராவிடத் தலைவரும், திமுக உயர்மட்ட நடவடிக்கைக் குழு உறுப்பினருமான L. கணேசன் சமீபத்தில் காலமானார்.
- 1989 ஆம் ஆண்டில் மு.கருணாநிதி முதலமைச்சராக இருந்தபோது இவர் பாராளுமன்றச் செயலாளராகப் பணியாற்றினார்.
- இவர் 1965 ஆம் ஆண்டு இந்தி மொழி எதிர்ப்புப் போராட்டத்தின் முக்கிய நபராக இருந்தார்.
- இவர் 1967 ஆம் ஆண்டில் ஒரத்தநாடு தொகுதியிலிருந்து தமிழ்நாடு சட்டமன்றத்திற்கு உறுப்பினராக முதன்முதலில் தேர்ந்தெடுக்கப்பட்டார்.
- அவர் சட்டமன்ற உறுப்பினராகவும் பணியாற்றினார் என்பதோடு மேலும் 2004 ஆம் ஆண்டில் திருச்சிராப்பள்ளி தொகுதியில் மக்களவை உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப் பட்டார்.
- அவசரநிலையின் போது, அவர் தனது அரசியல் நடவடிக்கைகளுக்காக சிறையில் அடைக்கப் பட்டார்.
- சுதந்திரத்திற்குப் பிறகு தமிழக அரசியலில் மக்களவை (M.P.), மாநிலங்களவை (M.P.), தமிழ்நாடு சட்டப் பேரவை (M.L.A.) மற்றும் தமிழ்நாடு சட்ட மேலவை (M.L.C.) ஆகியவற்றில் பிரதிநிதித்துவப்படுத்தப்பட்ட ஒரே அரசியல்வாதி இவரே ஆவார்.

## IFFCO சாகித்ய சம்மான் 2025

- இந்திய விவசாயிகள் உரக் கூட்டுறவு லிமிடெட் (IFFCO), இந்தி மொழி எழுத்தாளர் மைத்ரேயி புஷ்பாவுக்கு IFFCO சாகித்ய சம்மான் 2025 விருதை வழங்கியுள்ளது.
- இந்த விருது இந்தி மொழி இலக்கியத்திற்கு, குறிப்பாக கிராமப்புற வாழ்க்கை தொடர்பான படைப்புகளுக்கு அவர் ஆற்றியப் பங்களிப்பை அங்கீகரிக்கிறது.
- IFFCO இளம் இலக்கிய விருது 2025 அங்கிதா ஜெயினுக்கு வழங்கப்பட்டது.
- IFFCO சாகித்ய சம்மான் விருது 2011 ஆம் ஆண்டில் நிறுவப்பட்டது.
- இந்த விருது ஒரு பாராட்டுப் பத்திரம், நினைவுப் பரிசு மற்றும் 11 லட்சம் ரூபாய் ரொக்கப் பரிசை உள்ளடக்கியது.

## மிக நீண்ட கால பதவி வகித்த கர்நாடக முதல்வர்

- 2026 ஆம் ஆண்டு ஜனவரி 07 ஆம் தேதி D. தேவராஜ் உர்ஸின் பதவிக் கால சாதனையை முறியடித்து, சித்தராமையா கர்நாடகாவின் மிக நீண்ட காலம் பதவி வகித்த முதல்வர் என்ற பெருமையைப் பெற்றுள்ளார்.

- அவர் காங்கிரஸ் தலைவர் மற்றும் சிறுபான்மையினர், பிற்படுத்தப்பட்டோர் மற்றும் தலித்துகளைப் பிரதிநிதித்துவப்படுத்தும் ஒரு முக்கிய AHINDA தலைவர் ஆவார்.
- D. தேவராஜ் உர்ஸ் இரண்டு முறை ஏழு ஆண்டுகள் மற்றும் 239 நாட்கள் அம்மாநில முதலமைச்சராகப் பணியாற்றினார்.
- சித்தராமையா முன்னதாக 2013 முதல் 2018 ஆம் ஆண்டு வரை முதலமைச்சராக முழு பதவிக் காலம் பணியாற்றினார் என்பதோடு மேலும் 2023 ஆம் ஆண்டு மே மாதம் முதல் மீண்டும் பதவி வகித்து வருகிறார்.
- பாக்யா திட்டங்கள் என்றும் பின்னர் ஐந்து உத்தரவாதங்கள் என்றும் கூறப்பட்ட அவரது நலத்திட்ட முயற்சிகள் ஏழைகளுக்கு மிக ஆதரவான ஒரு பெரிய கொள்கை அமலாக்கமாகக் கருதப்படுகின்றன.
- நிலச் சீர்திருத்தங்கள், இட ஒதுக்கீடு மற்றும் அதிகாரப் பரவலாக்கலுக்குப் பிறகு கர்நாடகாவில் நான்காவது மறைமுக சமூக-அரசியல் புரட்சியாக உத்தரவாதத் திட்டங்கள் கருதப்படுகின்றன.
- நிதித்துறையிலும் பணியாற்றுகின்ற சித்தராமையா பதினாறு மாநில நிதி ஒதுக்கீட்டு அறிக்கைகளை தாக்கல் செய்துள்ளார்.
- 2025–26 ஆம் ஆண்டு கர்நாடக நிதி ஒதுக்கீடு முதல் முறையாக நான்கு லட்சம் கோடி ரூபாயைத் தாண்டியது.

## மாதவ் காட்கிலின் மறைவு

- புகழ்பெற்ற இந்தியச் சூழலியலாளர் மாதவ் காட்கில் காலமானார்.
- மாதவ் காட்கில் (1942–2026) மேற்குத் தொடர்ச்சி மலைகளில், குறிப்பாக நீலகிரி உயிர்க் கோளக் காப்பகத்தில் (NBR) சுற்றுச்சூழல் ஆராய்ச்சியில் முக்கியப் பங்கு வகித்தார்.
- யுனெஸ்கோ அமைப்பின் மனிதன் மற்றும் உயிர்க்கோளம் (MAB) திட்டத்தின் கீழ் இந்தியாவின் முதல் உயிர்க்கோளக் காப்பகமான நீலகிரி உயிர்க்கோளக் காப்பகத்திற்கான கருத்து ஆவணத்தை அவர் எழுதியுள்ளார்.
- பெங்களூருவில் உள்ள இந்திய அறிவியல் நிறுவனத்தில் (IISc) சுற்றுச்சூழல் அறிவியல் மையத்தை அவர் நிறுவினார்.
- அவர் மேற்குத் தொடர்ச்சி மலை சூழலியல் நிபுணர் குழுவின் (WGEEP) தலைவராக இருந்தார் என்ற நிலையில் அக்குழு 2011 ஆம் ஆண்டில் தனது அறிக்கையைச் சமர்ப்பித்தது.
- மேற்குத் தொடர்ச்சி மலைகளின் பல்லுயிர் முக்கியத்துவம் மற்றும் வளங்காப்புத் தேவைகளை எடுத்துக்காட்டுவதற்கு அவரது பணி உதவியது.

## பரிமாற்ற முடியாத அமைதிக்கான நோபல் பரிசு

- வெனிசுலாவில் ஜனநாயக உரிமைகள் மற்றும் அமைதியான மாற்றத்தை ஊக்குவித்ததற்காக மச்சாடோ 2025 ஆம் ஆண்டிற்கான அமைதிக்கான நோபல் பரிசை வென்றார்.
- சமீபத்தில் வெனிசுலா எதிர்க்கட்சித் தலைவர் மரியா கொரினா மச்சாடோ தனது பரிசை முன்னாள் அமெரிக்க அதிபர் டொனால்ட் டிரம்பிற்கு வழங்க முன்வந்தார்.

- ❖ ஆனால் நார்வே நோபல் குழு, அமைதிக்கான நோபல் பரிசைப் பகிர்ந்து கொள்ளவோ, மாற்றவோ அல்லது ரத்து செய்யவோ முடியாது என்று கூறியது.
- ❖ பரிசு அறிவிக்கப்பட்டவுடன், அந்த முடிவு நோபல் அறக்கட்டளையின் சட்டங்களின் கீழ் இறுதியானது மற்றும் நிரந்தரமானது என்று நோபல் குழு தெளிவுபடுத்தியது.
- ❖ இருப்பினும், பரிசுத் தொகையைப் பெறுபவரின் விருப்பப் படி பயன்படுத்தலாம், ஆனால் பட்டம் மாற்றப் படாது.

## IREDA சிறப்பு விருது

- ❖ IREDA (இந்திய புதுப்பிக்கத்தக்க எரிசக்தி மேம்பாட்டு நிறுவனம்) தொடர்ந்து ஐந்தாவது ஆண்டாக 'சிறந்த' MoU மதிப்பீட்டைப் பெற்றது.
- ❖ IREDA ஆனது 2024–25 ஆம் நிதியாண்டில் (FY) புதிய மற்றும் புதுப்பிக்கத்தக்க எரிசக்தி அமைச்சகத்தால் (MNRE) 100 மதிப்பெண்களில் 96.42 மதிப்பெண்களை பெற்றது.
- ❖ ஒவ்வொரு ஆண்டும் அரசு நிறுவனங்களின் செயல்திறனை மதிப்பிடுவதற்கு இந்த MoU பயன்படுத்தப்படுகிறது.
- ❖ IREDA என்பது இந்தியாவில் புதுப்பிக்கத்தக்க எரிசக்தி திட்டங்களுக்கு நிதியளிக்கும் ஒரு வங்கி சாரா நிதி நிறுவனம் (NBFC) ஆகும்.
- ❖ IREDA அதன் செயல்திறனை மேம்படுத்துவதற்கு முன்பு 2019–20 ஆம் நிதியாண்டில் 'முறையான' மதிப்பீட்டைப் பெற்றது.

## 83வது கோல்டன் குளோப் விருதுகள் 2026

- ❖ 83வது ஆண்டு கோல்டன் குளோப் விருதுகள் அமெரிக்காவின் கலிபோர்னியாவில் நடைபெற்றன என்பதோடு இது 2025 ஆம் ஆண்டில் வெளியிடப்பட்ட சிறந்த திரைப் படங்கள் மற்றும் தொலைக்காட்சி நிகழ்ச்சிகளை அங்கீகரிக்கிறது.
- ❖ இந்த விருதுகளை ஹாலிவுட் வெளிநாட்டுப் பத்திரிகையாளர் சங்கம் (HFPA) வழங்குகிறது.
- ❖ சிறந்த பாட்காஸ்ட் பிரிவு அறிமுகப்படுத்தப்பட்டது என்பதோடு மேலும் ஆமி போஹ்லர் குட் ஹேங் வித் ஆமி போஹ்லருக்காக விருதினை வென்றார்.
- ❖ ஒன் பேட்டில் ஆஃப்டர் அனதர் திரைப்படம் நான்கு விருதுகளை வென்றது என்பதோடு மேலும் டீனேஜ் என்ற தொலைக்காட்சி தொடரும் நான்கு விருதுகளை வென்றது.
- ❖ சிறந்த நடிகர் (நாடகம்) தி சீக்ரெட் ஏஜென்ட்டிற்காக வாக்னர் மௌராவுக்கும், சிறந்த நடிகை (நாடகம்) ஹேம்னெட்டுக்காக ஜெஸ்ஸி பக்லிக்கும் வழங்கப் பட்டது.
- ❖ எந்த இந்தியத் திரைப்படமும் இந்த விருதிற்குப் பரிந்துரைக்கப் படவில்லை.

## சுனிதா வில்லியம்ஸ் ஓய்வு

- ❖ சுனிதா வில்லியம்ஸ் டிசம்பர் 27, 2025 அன்று நாசாவிலிருந்து ஓய்வு பெற்றார்.
- ❖ 27 ஆண்டுகள் பணியாற்றிய அவர் சர்வதேச விண்வெளி நிலையத்தில் (ISS) மூன்று விண்வெளிப் பயணங்களை முடித்துள்ளார்.

- வில்லியம்ஸ் மொத்தம் 608 நாட்கள் விண்வெளியில் கழித்தார் என்ற நிலையில் இதில் 62 மணி நேரம் 6 நிமிடங்கள் நீடித்த ஒன்பது விண்வெளி நடைப்பயணங்கள் அடங்கும்.
- விண்வெளியில் மராத்தான் ஓடிய முதல் நபர் இவர்தான் என்பதோடு மேலும் சர்வதேச விண்வெளி நிலையத்தில் எக்ஸ்பெடிஷன் 33 பணியையும் இவர் முன்னெடுத்து நடத்தினார்.
- வில்லியம்ஸ் NEEMO போன்ற நாசா பயிற்சித் திட்டங்களில் பங்கேற்று, சந்திரப் பயணங்களுக்கு விண்வெளி வீரர்களைத் தயார்படுத்த உதவினார்.

## பத்ம விருதுகள் 2026

- 2026 குடியரசு தினத்தை முன்னிட்டு 131 பத்ம விருதுகளை வழங்குவதற்கு இந்தியக் குடியரசுத் தலைவர் ஒப்புதல் அளித்துள்ளார்.
- பத்ம விருதுகள் இந்தியாவின் உயரிய குடிமகன் விருதுகளில் ஒன்றாகும் என்பதோடு இவை பத்ம விபூஷன், பத்ம பூஷன் மற்றும் பத்மஸ்ரீ என மூன்று பிரிவுகளில் வழங்கப் படுகின்றன.
- 2026 ஆம் ஆண்டுக்கான பட்டியலில் 5 பத்ம விபூஷன், 13 பத்ம பூஷன் மற்றும் 113 பத்மஸ்ரீ விருதுகள் அடங்கும்.
- கலை, பொது விவகாரங்கள், மருத்துவம், இலக்கியம், அறிவியல், விளையாட்டு மற்றும் சமூகப் பணி போன்ற துறைகளில் சிறப்பான சேவை புரிந்தவர்களை இந்த விருதுகள் அங்கீகரிக்கின்றன.
- இந்த பட்டியலில் 19 பெண்கள், 6 வெளிநாட்டினர் / வெளிநாடு வாழ் இந்தியர்கள் / இந்திய வம்சாவளியினர்/ வெளிநாட்டு இந்தியக் குடியுரிமை பெற்றவர்கள் மற்றும் 16 மறைவுக்குப் பிந்தைய விருதுகள் அடங்கும்.
- கலைத்துறைக்கு ஆற்றியப் பங்களிப்புகளுக்காக என். ராஜம் மற்றும் தர்மேந்திர சிங் தியோல் (மறைவுக்குப் பின்) பத்ம விபூஷன் விருது பெற்றனர்.
- கலை மற்றும் வர்த்தகத் துறைகளில் ஆற்றிய சாதனைகளுக்காக அல்கா யாக்னிக், மம்மூட்டி மற்றும் உதய் கோடக் ஆகியோருக்கு பத்ம பூஷன் விருது வழங்கப்பட்டது.

## பத்மஸ்ரீ விருது - கிருஷ்ணன்

- ஆதிவாசி கலைஞர் ஆர். கிருஷ்ணன் (பிரபலமாக 'கிட்னா' என்று அழைக்கப்படுபவர்) அவர்களுக்கு மறைவுக்குப் பின் பத்மஸ்ரீ விருது வழங்கப்பட்டது.
- ஆர். கிருஷ்ணன் தமிழ்நாட்டின் நீலகிரியில் உள்ள ஆலு குறும்பர் பழங்குடி சமூகத்தைச் சேர்ந்தவர்.
- பண்டைய பாறை ஓவியத் தளங்களால், குறிப்பாக நீலகிரியில் உள்ள வெள்ளரிக் கோம்பையில் காணப்படும் ஓவியங்களால் ஈர்க்கப்பட்ட துணி ஓவியங்களுக்காக என அவர் அறியப்பட்டார்.
- அவர் தனது கலைப் படைப்புகளில் இயற்கைச் சாயங்கள் மற்றும் இழைகளிலிருந்து தயாரிக்கப்பட்ட கரிம சாயங்களைப் பயன்படுத்தினார்.
- 2025 ஆம் ஆண்டு மார்ச் மாதத்தில் காலமான இவரின் பணிகள் அலு குறும்பர் கலை மற்றும் கலாச்சாரத்தைப் பாதுகாப்பதற்குப் பங்களித்தது.

## விஜய் குமார் - பத்மஸ்ரீ விருது

- மூத்தக் காவல்துறை அதிகாரி கே. விஜய் குமார், காவல்துறையில் ஆற்றிய சிறப்பான பணிக்காக பத்மஸ்ரீ விருதினைப் பெற்றார்.
- 2004-ஆம் ஆண்டு நடந்த 'ஆபரேஷன் ககூன்' மூலம் வனக் கொள்ளையன் வீரப்பனைப் பிடித்த சிறப்பு அதிரடிப் படைக்கு இவர் தலைமை தாங்கினார்.
- 2010 தந்தேவாடா தாக்குதலுக்குப் பிறகு, அவர் மத்திய ரிசர்வ் காவல் படையின் (CRPF) தலைமை இயக்குநராகப் பணியாற்றினார்.

## வீரதீரச் செயலுக்கான அண்ணா பதக்கம் 2026

- 2026 ஆம் ஆண்டு ஜனவரி 26 அன்று சென்னையில் நடைபெற்ற 77வது குடியரசு தின விழாவின் போது, பீட்டர் ஜான்சனுக்கு வீரதீரச் செயலுக்கான அண்ணா பதக்கம் மரணத்திற்குப் பின் வழங்கப்பட்டது.
- ஜூன் 2025ல் கன்னியாகுமரி மாவட்டத்தில் உள்ள தாமிரபரணி ஆற்றில் மூழ்கிய இரண்டு இளைஞர்களைக் காப்பாற்றும் முயற்சியில் அவர் உயிரிழந்தார்.
- திடீர் வெள்ளத்தின் போது மக்களை மீட்டதற்காக மூன்று தீயணைப்பு மற்றும் மீட்புப் பணி வீரர்கள், வி. சங்கர், எஸ். ரமேஷ்குமார் மற்றும் பி. சுரேஷ் ஆகியோரும் கௌரவிக்கப் பட்டனர்.
- அண்ணா வீரதீர விருதானது, ஒரு லட்சம் ரூபாய் ரொக்கப் பரிசு, 9,000 ரூபாய் மதிப்புள்ள பதக்கம் மற்றும் ஒரு சான்றிதழ் ஆகியவற்றை உள்ளடக்கியது.

## அசோக சக்ரா விருது 2026 - சுபான்ஷு சுக்லா

- இந்திய விமானப்படை குழுத்தலைவர் மற்றும் விண்வெளி வீரரான சுபான்ஷு சுக்லாவுக்கு, 2026 ஆம் ஆண்டு குடியரசு தினத்தன்று இந்தியாவின் மிக உயரிய அமைதிக் கால வீரதீர விருதான அசோக சக்ரா விருது வழங்கப்பட்டது.
- சர்வதேச விண்வெளி நிலையத்திற்கான (ISS) ஆக்சியம் திட்டம் 4 பயணத்தின் போது அவர் வெளிப்படுத்திய வீரம் மற்றும் துணிச்சலைப் பாராட்டி இந்த விருது வழங்கப் பட்டது.
- சுக்லா முதன்மைப் பணி விமானியாகப் பணியாற்றி, முக்கியமான சுற்றுப்பாதை செயல்பாடுகளின் போது பாதுகாப்பையும் அதன் வெற்றியையும் உறுதி செய்தார்.
- 1984-ல் ராகேஷ் சர்மாவின் விண்வெளி பயணத்திற்குப் பிறகு, சர்வதேச விண்வெளி நிலையத்திற்குச் சென்ற முதல் இந்தியர் என்ற பெருமையை அவர் பெற்றார் என்பதோடு இது மனிதர்களை உள்ளடக்கிய விண்வெளிப் பயணத்தில் இந்தியாவின் மீள்வருகையைக் குறித்தது.
- சர்வதேச விண்வெளி வீரர்கள் இடம்பெற்றிருந்த ஆக்சியம்-4 பயணமானது அறிவியல் சோதனைகள், தொழில்நுட்ப விளக்கங்கள் மற்றும் ஒத்துழைப்பு ஆகியவற்றில் கவனம் செலுத்தியது.

## பத்மஸ்ரீ 2026 - ஏ.இ.முத்துநாயகம்

- மூத்த விண்வெளி விஞ்ஞானி டாக்டர் ஏ. இ. முத்துநாயகம், இந்தியாவின் விண்வெளித் திட்டத்திற்கு அவர் ஆற்றிய பங்களிப்புகளுக்காக 2026 ஆம் ஆண்டில் பத்மஸ்ரீ விருது வழங்கி கௌரவிக்கப்பட்டுள்ளார்.
- இவர் இந்தியாவின் திரவ ராக்கெட் உந்துவிசைத் திட்டத்தின் முன்னோடியாக அறியப் படுகிறார்.
- அவர் 1939 ஆம் ஆண்டு ஜனவரி 11 ஆம் தேதி தமிழ்நாட்டின் நாகர்கோவிலில் பிறந்தார்.
- பிஎஸ்எல்வி (துருவ செயற்கைக்கோள் செலுத்து வாகனம்) மற்றும் ஜிஎஸ்எல்வி (புவி ஒத்திசைவு செயற்கைக்கோள் செலுத்து வாகனம்) ஆகியவற்றில் பயன்படுத்தப்படும் விகாஸ் எஞ்சினை உருவாக்குவதில் அவர் முக்கியப் பங்கு வகித்தார்.
- அவர் இஸ்ரோவின் திரவ உந்துவிசை அமைப்புகள் மையத்தின் (LPSC) நிறுவன இயக்குநராகவும் இருந்தார்.

## தமிழ்ப் பேரறிஞர் டி. ஞானசுந்தரம் மறைவு

- டி. ஞானசுந்தரம் மத்திய செம்மொழித் தமிழாய்வு நிறுவனத்தின் துணை இயக்குநராகப் பணியாற்றினார்.
- இவர் தனது வாழ்நாளை செம்மொழித் தமிழ் மற்றும் வைணவ மரபுகளை ஆய்வு செய்வதில் அர்ப்பணித்தார்.
- இவர் இராமாயணம், கம்பராமாயணம் மற்றும் திவ்யப் பிரபந்தம் குறித்துப் பல ஆய்வு நூல்களைப் படைத்துள்ளார்.
- இவர் தமிழ்நாடு அரசின் இலக்கிய மாமணி விருதை (2024) பெற்றார்.

## அஜித் பவார் மறைவு

- 2026 ஆம் ஆண்டு ஜனவரி 28 அன்று மகாராஷ்டிராவின் பாராமதியில் நடந்த ஒரு பாம்ப்பார்டியர் லியர்ஜெட் 45 விமான விபத்தில் மகாராஷ்டிர துணை முதல்வர் அஜித் பவார் உயிரிழந்தார்.
- 1991ல், முதன்முதலில் பாராமதி தொகுதியிலிருந்து மகாராஷ்டிர சட்டமன்ற உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்பட்ட அவர் எட்டு முறை அத்தொகுதியை பிரதிநிதித்துவப் படுத்தினார்.
- 2023 ஆம் ஆண்டில், அவர் பாஜக தலைமையிலான கூட்டணியுடன் இணைவதன் மூலம் தேசியவாத காங்கிரஸ் கட்சிக்குள் (NCP) ஒரு பிளவை ஏற்படுத்தினார்.
- பிப்ரவரி 2024ல், இந்தியத் தேர்தல் ஆணையம் அஜித் பவாரின் பிரிவை அதிகாரப்பூர்வ தேசியவாத காங்கிரஸ் கட்சியாக அங்கீகரித்தது.
- அதே ஆண்டில், அவர் ஆறாவது முறையாக மகாராஷ்டிராவின் துணை முதல்வராகப் பதவியேற்றார்.

# விளையாட்டுச் செய்திகள்

## கேலோ இந்தியா கடற்கரை விளையாட்டுப் போட்டிகள் 2026

- 2026 ஆம் ஆண்டிற்கான கேலோ இந்தியா கடற்கரை விளையாட்டுப் போட்டியின் (KIBG) ஒட்டுமொத்த சாம்பியனாக கர்நாடகா உருவெடுத்துள்ளது.
- இது தாத்ரா & நகர் ஹவேலி மற்றும் டாமன் & டையூவின் ஒன்றியப் பிரதேசமான டையூவின் கோக்லா கடற்கரையில் நடைபெற்றது.
- இந்த விளையாட்டுப் போட்டிகளின் உருவச் சின்னம் 'பியர்ல்' என்ற ஒரு துடிப்பான டால்பின் ஆகும்.
- கர்நாடகா 3 தங்கம், 2 வெள்ளி மற்றும் 6 வெண்கலப் பதக்கங்களுடன் முதலிடத்தில் இருந்தது.
- தமிழ்நாடு 3 தங்கம், 2 வெள்ளி மற்றும் 3 வெண்கலப் பதக்கங்களுடன் 2வது இடத்தைப் பிடித்தது.
- மணிப்பூர் 3 தங்கம், 2 வெள்ளி மற்றும் 2 வெண்கலப் பதக்கங்களுடன் 3வது இடத்தைப் பிடித்தது.
- அஷ்மிதா சந்திரா மற்றும் துருபத் ராமகிருஷ்ணா தங்கம் வென்றதன் மூலம் கர்நாடகா திறந்த நிலை நீச்சலில் முன்னிலை பெற்றது.
- செபக் தக்ராவில், மணிப்பூர் மகளிர் அணி தங்கத்தையும், தமிழ்நாடு ஆடவர் அணி தங்கத்தையும் வென்றது.
- பென்காக் சிலாட் போட்டியில் மத்தியப் பிரதேசம் மூன்று தங்கப் பதக்கங்களை வென்றது.

# முக்கிய தினங்கள்

## உலக பிரெய்லி தினம் 2026 - ஜனவரி 04

- பிரெய்லி மற்றும் பார்வை குறைபாடுள்ளவர்களின் உரிமைகள் பற்றிய விழிப்பு உணர்வை ஊக்குவிப்பதே இதன் நோக்கம் ஆகும்.
- இது முதன்முதலில் 2019 ஆம் ஆண்டில் கொண்டாடப்பட்டது.
- லூயிஸ் பிரெய்லியின் பிறந்த நாளைக் குறிக்கும் விதமாக இந்த நாள் அனுசரிக்கப் படுகிறது.
- தொடுவதன் மூலம் படிக்கவும் எழுதவும் பயன்படுத்தப்படும் பிரெய்லி முறையை லூயிஸ் பிரெய்லி கண்டுபிடித்தார்.

## தேசிய பறவைகள் தினம் 2026 – ஜனவரி 05

- பறவைகள் வளங்காப்பு மற்றும் பறவை வாழ்விடங்களைப் பாதுகாப்பது குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்துவதை இந்த நாள் நோக்கமாகக் கொண்டுள்ளது.

- பறவைகள் சுரண்டப்படுவதை எதிர்ப்பதற்காக வேண்டி, குறிப்பாக செல்லப்பிராணி வர்த்தகத்தில், பறவைகள் நலக் கூட்டணியால் 2002 ஆம் ஆண்டில் இந்த நாள் நிறுவப் பட்டது.
- அறிவியல் ரீதியாக பாவோ கிறிஸ்டடஸ் என்று அழைக்கப்படுகின்ற இந்திய மயில், 1963 ஆம் ஆண்டு பிப்ரவரி 01 ஆம் தேதியன்று அதிகாரப்பூர்வமாக இந்தியாவின் தேசியப் பறவையாக ஏற்றுக் கொள்ளப் பட்டது.
- மயில் 1972 ஆம் ஆண்டு வனவிலங்கு பாதுகாப்புச் சட்டத்தின் கீழ் பாதுகாக்கப் படுகிறது.
- இந்திய மயில் IUCN அமைப்பின் செந்நிறப் பட்டியலில் தீவாய்ப்புக் கவலை குறைந்த இனமாக பட்டியலிடப்பட்டுள்ளது.

## போர்களால் ஆதரவிழந்தவர்களுக்கான உலக தினம் 2026 - ஜனவரி 06

- போர் மற்றும் ஆயுத மோதல்கள் காரணமாக பெற்றோரை இழந்த குழந்தைகள் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்துவதே இந்த நாளின் நோக்கமாகும்.
- முதன்முதலில் 2002 ஆம் ஆண்டில் அனுசரிக்கப்பட்ட இது SOS Enfants en Détresse (பிரான்சு) அமைப்பினால் தொடங்கப்பட்டது.
- இது போர்களால் ஆதரவிழந்தவர்கள் எதிர்கொள்ளும் உடல், சமூக மற்றும் உளவியல் ரீதியான சவால்களை எடுத்துக்காட்டுகிறது.
- இது போரால் பாதிக்கப்பட்ட குழந்தைகளுக்குப் பாதுகாப்பு, பராமரிப்பு, மறுவாழ்வு மற்றும் நீண்டகால ஆதரவைக் கோருகிறது.

## பூமியின் சுழற்சி தினம் 2026 – ஜனவரி 08

- 2026 ஆம் ஆண்டு ஜனவரி 08 ஆம் தேதியன்று அனுசரிக்கப் படுகின்ற பூமியின் சுழற்சி தினமானது லியோன் ஃபூக்கோவின் ஊசல் அலைவு இயக்கத்தின் செயல்விளக்கத்தின் (1851) 175 ஆம் ஆண்டு நிறைவினைக் குறிக்கிறது.
- பூமி அதன் அச்சில் சுழல்கிறது என்பதை சோதனை ரீதியாக நிரூபித்தப் பிரெஞ்சு இயற்பியலாளர் லியோன் ஃபூக்கோவை இந்த நாள் நினைவு கூர்கிறது.
- பூமியின் சுழற்சியை அதன் மாறிவரும் அலைவு திசையின் மூலம் காட்டுவதற்காக, நீண்ட தொங்க விடப்பட்ட ஈயப் பந்தான ஃபூக்கோவின் ஊசலை அவர் பயன்படுத்தினார்.
- பூமி சுமார் 24 மணி நேரத்தில் ஒரு முழு சுழற்சியை நிறைவு செய்கிறது என்பதோடு இது பகல் மற்றும் இரவை உருவாக்குகிறது.
- இந்தக் கண்டுபிடிப்பு வானியல், வானிலை முறைகள் மற்றும் பெருங்கடல் நீரோட்டங்கள் பற்றிய அறிவியல் புரிதலை மேம்படுத்த உதவியது.

## உலக இந்தி தினம் 2026 - ஜனவரி 10

- இந்த நாள், 1975 ஆம் ஆண்டு நாக்பூரில் நடைபெற்ற முதல் உலக இந்தி மாநாட்டைக் நினைவு கூருகிறது.
- 30 நாடுகள் பங்கேற்ற இந்த மாநாடு அப்போதையப் பிரதமர் இந்திரா காந்தியால் தொடங்கி வைக்கப்பட்டது.

- முன்னாள் பிரதமர் டாக்டர் மன்மோகன் சிங் பதவிக் காலத்தில், 2006 ஆம் ஆண்டு ஜனவரி 10 ஆம் தேதி இது முதன்முறையாக அதிகாரப்பூர்வமாக கடைப்பிடிக்கப் பட்டது.
- வெளியுறவுத் துறை அமைச்சகமும் வெளிநாடுகளில் உள்ள இந்தியத் தூதரகங்களும் இந்த நாளை ஆண்டுதோறும் கடைப்பிடிக்கின்றன.
- இந்தத் தேதி, 1949 ஆம் ஆண்டு ஜனவரி 10 ஆம் தேதி ஐக்கிய நாடுகள் பொதுச் சபையில் (UNGA) இந்தி முதன்முறையாகப் பயன்படுத்தப்பட்ட ஒரு வரலாற்று நிகழ்வுடன் தொடர்புடையது.
- 1949 ஆம் ஆண்டில் தேவநாகரி எழுத்துருவில் உள்ள இந்தி இந்தியாவின் அதிகாரப் பூர்வ ஆட்சி மொழியாக ஏற்றுக் கொள்ளப் பட்டதைக் குறிக்கும் வகையில் செப்டம்பர் 14 அன்று இந்தி திவாஸ் அனுசரிக்கப்படுகிறது.

## பிரவாசி பாரதிய திவாஸ் 2026

- பிரவாசி பாரதிய திவாஸ் (PBD) ஆனது ஒவ்வோர் ஆண்டும் ஜனவரி 09 ஆம் தேதியன்று இந்திய அரசாங்கத்தினால் அனுசரிக்கப்படுகிறது.
- 1915 ஆம் ஆண்டு தென்னாப்பிரிக்காவில் இருந்து மகாத்மா காந்தி இந்தியா திரும்பியதை இது குறிக்கிறது.
- 200க்கும் மேற்பட்ட நாடுகளில் வாழும் இந்திய நாட்டின் புலம்பெயர்ந்தோரை இந்த நாள் கௌரவிக்கிறது.
- சுமார் 35 மில்லியன் வெளிநாடு வாழ் இந்தியர்கள் உள்ளதுடன், இந்தியாவில் உலகின் மிகப்பெரிய எண்ணிக்கையிலான வெளி நாடு வாழ் இந்தியர்கள் உள்ளனர்.
- வெளிநாடு வாழ் இந்தியர்கள் ஒவ்வோர் ஆண்டும் 120 பில்லியன் அமெரிக்க டாலர்களுக்கு மேல் இந்தியாவிற்கு அனுப்புகிறார்கள்.
- சிறந்த வெளிநாடு வாழ் இந்தியர்களை அங்கீகரிப்பதற்காக இந்த நாளில் பிரவாசி பாரதிய சம்மான் விருது (PBSA) வழங்கப்படுகிறது.

## தேசிய இளையோர் தினம்/யுவ திவாஸ் 2026 - ஜனவரி 12

- இது சுவாமி விவேகானந்தரின் கருத்துக்களால் இளையோர்களை ஊக்குவிப்பதையும், தேசத்தைக் கட்டியெழுப்புவதை ஊக்குவிப்பதையும் நோக்கமாகக் கொண்டுள்ளது.
- இது இந்திய அரசால் அதிகாரப்பூர்வமாக அறிவிக்கப்பட்டு 1984 ஆம் ஆண்டில் முதன் முதலில் அனுசரிக்கப்பட்டது.
- இது சுவாமி விவேகானந்தரின் பிறந்த நாளைக் குறிக்கும் வகையில் கொண்டாடப் படுகிறது.
- இளையோர்களிடையே இளையோர் தலைமைத்துவம், ஒழுக்கம் மற்றும் தேசிய சேவையை மேம்படுத்துவதை இந்த நாள் நோக்கமாகக் கொண்டுள்ளது.

## தேசிய சாலைப் பாதுகாப்பு வாரம் 2026 - ஜனவரி 11/17

- சாலைப் பாதுகாப்பு விழிப்புணர்வை ஊக்குவிப்பதையும் சாலை விபத்துகள் மற்றும் இறப்புகளைக் குறைப்பதையும் இந்த நாள் நோக்கமாகக் கொண்டுள்ளது.

- இது முதன்முதலில் 1989 ஆம் ஆண்டில் சாலைப் போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலை அமைச்சகத்தால் (MoRTH) அறிமுகப்படுத்தப்பட்டது.
- பாதுகாப்பான வாகனம் ஓட்டுதல், பாதசாரிகள் பாதுகாப்பு மற்றும் சிறந்த சாலை உள்கட்டமைப்பை ஊக்குவிப்பதற்காக இது அனுசரிக்கப்படுகிறது.
- 2026 ஆம் ஆண்டின் கருத்துரு, "Sadak Suraksha Jeevan Raksha" (Road Safety, Life Safety) என்பதாகும்.

## இராணுவ தினம் 2026 - ஜனவரி 15

- சுதந்திரத்திற்குப் பிறகு 1949 ஆம் ஆண்டில் இந்திய இராணுவம் முழுமையாக இந்தியத் தலைமையின் கீழ் வந்த நாளை இது குறிக்கிறது.
- இந்த நாளில், ஃபீல்ட் மார்ஷல் K. M. கரியப்பா இந்திய இராணுவத்தின் முதல் இந்தியத் தளபதியானார்.
- கடைசி பிரிட்டிஷ் தளபதி ஜெனரல் சர் F. R. R. புச்சரிடமிருந்து அவர் பொறுப்பினை ஏற்றார்.
- தேசத்தினைப் பாதுகாப்பதில் இந்திய இராணுவ வீரர்களின் சேவை மற்றும் தியாகங்களை இந்த நாள் கௌரவிக்கிறது.

## தேசிய புத்தொழில் நிறுவன தினம் 2026 - ஜனவரி 16

- ஸ்டார்ட்அப் இந்தியா முன்னெடுப்பின் 10 ஆண்டுகளைக் குறிக்கும் வகையில் ஜனவரி 16, 2026 அன்று இத்தினம் அனுசரிக்கப்பட்டது.
- இந்தியாவில் தொழில்முனைவு மற்றும் புதுமைகளை ஊக்குவிப்பதற்காக 2016 ஆம் ஆண்டில் இந்த முன்னெடுப்பு தொடங்கப்பட்டது.
- இது தொழில் துறை மற்றும் உள்நாட்டு வர்த்தக ஊக்குவிப்புத் துறையால் (DPIIT) செயல்படுத்தப் படுகிறது.
- இந்தியாவில் பல்வேறு துறைகளில் 2,00,000க்கும் மேற்பட்ட DPIIT அங்கீகரிக்கப்பட்ட புத்தொழில் நிறுவனங்கள் உள்ளன.
- பொருளாதார வளர்ச்சியில் புத்தொழில் நிறுவனங்களின் பங்கை அங்கீகரிக்க 2022 ஆம் ஆண்டில் இந்த நாள் அதிகாரப் பூர்வமாக அறிவிக்கப்பட்டது.

## உலகளாவிய தடுப்பு ஊடுகதிரியல் தினம் 2026 - ஜனவரி 16

- அறுவை சிகிச்சை அல்லாத சிகிச்சை வாய்ப்புகள் மற்றும் நோயாளிப் பாதுகாப்பு குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்துவதே இந்த நாளின் நோக்கமாகும்.
- இந்த நாள் 1964 ஆம் ஆண்டு மேற்கொள்ளப்பட்ட முதல் வெற்றிகரமான ஆஞ்சியோ பிளாஸ்டியை நினைவு கூர்கிறது.
- இந்தச் செயல்முறை தடுப்பு ஊடு கதிரியலின் தந்தை என்று அழைக்கப்படும் டாக்டர் சார்லஸ் டாட்டரால் செய்யப்பட்டது.
- தடுப்பு ஊடுகதிரியல் (IR) படம் மூலம் வழி காட்டப்பட்ட, குறைந்தபட்ச ஊடுருவும் நடைமுறைகளைப் பயன்படுத்துகிறது.

- இரத்தக் குழாய் நோய்கள், புற்றுநோய், பெண்களின் ஆரோக்கியம் மற்றும் வலி பாதிப்புகளுக்குச் சிகிச்சையளிக்க IR உதவுகிறது.

## கோக்போரோக் தினம் 2026 / திரிபுரி மொழி தினம் 2026 - ஜனவரி 19

- 1979 ஆம் ஆண்டு கோக்போரோக் மொழி ஆனது அதிகாரப்பூர்வ மாநில மொழியாக அங்கீகரிக்கப் பட்டதை இந்த நாள் குறிக்கிறது.
- கோக்போரோக் திரிபுரி மக்களின் தாய்மொழி ஆகும்.
- இது திபெத்திய-பர்மிய மொழி குடும்பத்தைச் சேர்ந்தது.
- 2026 ஆம் ஆண்டின் அனுசரிப்பு இந்த மொழியின் அதிகாரப்பூர்வ அங்கீகாரத்தின் 48வது ஆண்டு நிறைவைக் குறித்தது.
- இந்த நாள் பழங்குடி மொழி, கலாச்சாரம் மற்றும் இலக்கியத்தைப் பாதுகாப்பதை ஊக்குவிக்கிறது.

## தேசிய பேரிடர் மீட்புப் படை உருவாக்க தினம் 2026 – ஜனவரி 19

- தேசிய பேரிடர் மீட்புப் படை (NDRF) ஆனது 2006 ஆம் ஆண்டு ஜனவரி 19 அன்று 2005 ஆம் ஆண்டு பேரிடர் மேலாண்மைச் சட்டத்தின் கீழ் உருவாக்கப்பட்டது.
- NDRF ஆனது உள்துறை அமைச்சகத்தின் (MHA) கீழ் செயல்படுகிறது.
- அவசரகாலச் சூழ்நிலைகளில் விரைவான மற்றும் சிறப்புப் பேரிடர் நடவடிக்கையை உறுதி செய்வதே NDRF படையின் முக்கிய நோக்கமாகும்.
- நாடு முழுவதும் இயற்கை மற்றும் மனிதனால் உருவாக்கப்பட்ட பேரிடர்களின் போது தேடுதல், மீட்பு, வெளியேற்றம் மற்றும் நிவாரண நடவடிக்கைகளை இந்தப் படை கையாள்கிறது.

## திரிபுரா, மணிப்பூர் மற்றும் மேகாலயா மாநில உருவாக்க தினம் - ஜனவரி 21

- திரிபுரா, மணிப்பூர் மற்றும் மேகாலயா ஆகியவை 54 ஆண்டு கால மாநில அந்தஸ்தை நிறைவு செய்வதுடன் ஜனவரி 21, 2026 அன்று தங்கள் உருவாக்கத் தினத்தைக் கொண்டாடுகின்றன.
- இந்த மூன்று மாநிலங்களும் 1971 ஆம் ஆண்டு ஜனவரி 21 ஆம் தேதியன்று வடகிழக்கு பகுதிகள் மறுசீரமைப்புச் சட்டத்தின் கீழ் முழு அளவிலான மாநிலங்களாக மாறின.
- மாநிலமாக மாறுவதற்கு முன்பு, திரிபுரா மற்றும் மணிப்பூர் ஆகியன ஒன்றியப் பிரதேசங்களாக இருந்தன என்பதோடு மேலும் மேகாலயா அசாமின் ஒரு பகுதியாக இருந்தது.
- இந்தச் சட்டம் வடகிழக்குப் பிராந்தியத்தை நிர்வாகச் சுயாட்சி மற்றும் சட்டமன்ற அதிகாரங்களை வழங்குவதற்காக மறுசீரமைத்தது.
- சுயாட்சி, கலாச்சார அடையாளம் மற்றும் பிராந்திய வளர்ச்சியில் மாநிலங்களின் பயணத்தை இந்த உருவாக்க நிறுவன தினம் குறிக்கிறது.

## தேசியப் பெண் குழந்தைகள் தினம் 2026 - ஜனவரி 24

- பெண் குழந்தைகளின் உரிமைகள், கல்வி, சுகாதாரம் மற்றும் அதிகாரமளிப்பை மேம்படுத்துவதை இந்த நாள் நோக்கமாகக் கொண்டுள்ளது.
- இந்த நாள் 2008 ஆம் ஆண்டு பெண்கள் மற்றும் குழந்தைகள் மேம்பாட்டு அமைச்சகத்தால் (MWCD) தொடங்கப்பட்டது.
- 1966 ஆம் ஆண்டு இந்த நாளில், இந்திரா காந்தி இந்தியாவின் முதல் பெண் பிரதமரானார்.
- பாலினப் பாகுபாடு, குழந்தைப் பாலின விகிதம் மற்றும் கல்விக்கான அணுகல் போன்ற பிரச்சினைகளை இந்த நாள் எடுத்துக்காட்டுகிறது.

## சர்வதேச கல்வி தினம் 2026 - ஜனவரி 24

- கல்வியை ஒரு அடிப்படை மனித உரிமையாக அங்கீகரிப்பதற்காக இது அனுசரிக்கப் படுகிறது.
- அனைவருக்கும் உள்ளடக்கிய, சமமான மற்றும் தரமான கல்வி மற்றும் வாழ்நாள் முழுவதும் கற்றலை ஊக்குவிப்பதை இந்த நாள் நோக்கமாகக் கொண்டுள்ளது.
- இந்த நாள் 2018 ஆம் ஆண்டில் ஐக்கிய நாடுகள் சபையின் பொதுச் சபையால் (UNGA) அறிவிக்கப்பட்டது.
- இத்தினத்தின் முதல் அனுசரிப்பு 2019 ஆம் ஆண்டில் உலக அளவில் நடைபெற்றது.
- "கல்வியை இணைந்து உருவாக்குவதில் இளைஞர்களின் சக்தி" என்பது இதன் கருப் பொருள் ஆகும்.

## தேசிய சுற்றுலா தினம் 2026 - ஜனவரி 25

- சுற்றுலாத் துறையின் முக்கியத்துவத்தை எடுத்துக்காட்டும் வகையில் இது அனுசரிக்கப் படுகிறது.
- பொருளாதார வளர்ச்சி, கலாச்சாரப் பரிமாற்றம், வேலைவாய்ப்பு மற்றும் நிலையான சுற்றுலாவை மேம்படுத்துவதை இந்த நாள் நோக்கமாகக் கொண்டுள்ளது.
- பொறுப்பான மற்றும் உள்ளடக்கிய சுற்றுலா நடைமுறைகளை ஊக்குவிப்பதில் இந்த நாள் கவனம் செலுத்துகிறது.
- சுற்றுலா போக்குவரத்து, விருந்தோம்பல், கைவினைப் பொருட்கள் மற்றும் உள்ளூர் வாழ்வாதாரங்கள் போன்ற துறைகளை இத்தினம் ஆதரிக்கிறது.

## தேசிய வாக்காளர் தினம் 2026 - ஜனவரி 25

- இந்த நாள் இந்தியத் தேர்தல் ஆணையம் நிறுவப்பட்ட தினத்தைக் குறிக்கிறது.
- இந்தியாவில் ஒவ்வொரு ஆண்டும் வாக்காளர் விழிப்புணர்வையும் அவர்கள் தேர்தலில் பங்கேற்பதையும் ஊக்குவிக்கும் வகையில் இத்தினம் கொண்டாடப்படுகிறது.
- இந்தியத் தேர்தல் ஆணையம் 1950 ஆம் ஆண்டு ஜனவரி 25 அன்று நிறுவப்பட்டது.
- தேசிய வாக்காளர் தினம் முதன்முதலில் 2011 ஆம் ஆண்டு ஜனவரி 25 அன்று கொண்டாடப் பட்டது.

- 2026 ஆம் ஆண்டிற்கான கருப்பொருள்: "My India, My Vote" (என் இந்தியா, என் வாக்கு) என்பதாகும்.

## சர்வதேச சுங்கத் தினம் 2026 - ஜனவரி 26

- இந்த தினமானது, பின்னாளில் உலக சுங்க அமைப்பாக (WCO) மாறிய சுங்க ஒத்துழைப்புக் குழுவின் (1953) முதல் அமர்வைக் குறிக்கிறது.
- 183 உறுப்பு நாடுகளைக் கொண்டுள்ள உலக சுங்க அமைப்பின் தலைமையகம் பெல்ஜியத்தில் உள்ள பிரஸ்ஸல்ஸில் அமைந்துள்ளது.
- சுங்க அதிகாரிகள் சர்வதேச வர்த்தகத்திற்கு வசதிகளை ஏற்படுத்துவதுடன் வருவாயைச் சேகரித்து, எல்லைப் பாதுகாப்பையும் உறுதி செய்கிறார்கள் என்பதோடு மேலும் கடத்தல் மற்றும் சட்டவிரோதப் பரிமாற்றத்தைத் தடுக்கின்றனர்.

## தியாகிகள் தினம் 2026 - ஜனவரி 30

- இது ஷாஹீத் திவாஸ் அல்லது சர்வோதய தினம் என்றும் அழைக்கப்படுகிறது.
- 2026 ஆம் ஆண்டு ஜனவரி 30 ஆம் தேதி, MK காந்தியின் 78வது நினைவு தினம் அனுசரிக்கப் படுகிறது.
- MK காந்தி மற்றும் பிற சுதந்திரப் போராட்ட வீரர்களை கௌரவிக்கும் வகையில் 1949 ஆம் ஆண்டு தியாகிகள் தினம் அதிகாரப் பூர்வமாக அறிவிக்கப்பட்டது.
- 30 ஜனவரி 1948 அன்று புது தில்லியில் நாதுராம் கோட்சேவால் காந்தி படுகொலை செய்யப்பட்டார்.
- இந்தியாவில் உள்ள பிற தியாகிகள் தினங்களில் மார்ச் 23 (பகத் சிங், ராஜ்குரு, சுக்தேவ்), 19 மே (பாஷா ஷாஹித் திவாஸ் - வங்காள இயக்கத்தின் மொழி தியாகிகள்), மற்றும் 19 நவம்பர் (ஜான்சியின் ராணி லட்சுமிபாயின் பிறந்த நாள்) ஆகியவை அடங்கும்.

## இமாச்சலப் பிரதேச மாநில தினம் 2026 - ஜனவரி 26

- 1948 ஆம் ஆண்டு ஏப்ரல் 15 அன்று இமாச்சலப் பிரதேசம் ஒரு தலைமை ஆணையர் மாகாணமாக மாறியது.
- 1950 ஆம் ஆண்டு ஜனவரி 26 அன்று, இந்திய அரசியலமைப்புச் சட்டம் நடைமுறைக்கு வந்த பிறகு, அது ஒரு பகுதி C மாநிலமாக மாறியது.
- 1956 ஆம் ஆண்டில், பகுதி A, B, மற்றும் C வகைப்பாடு ரத்து செய்யப்பட்டது, மேலும் இமாச்சலப் பிரதேசம் ஒரு ஒன்றியப் பிரதேசமாக மாறியது.
- 1966 ஆம் ஆண்டு நவம்பர் 1 அன்று, பஞ்சாபில் இருந்து மலைப் பகுதிகள் (காங்ரா, குலு, லாஹவுல்-ஸ்பிதி) இமாச்சலப் பிரதேசத்துடன் இணைக்கப்பட்டன.
- 1970 ஆம் ஆண்டின் இமாச்சலப் பிரதேச மாநிலச் சட்டத்தின் கீழ், 1971 ஆம் ஆண்டு ஜனவரி 25 அன்று அது முழு மாநில அந்தஸ்தைப் பெற்று, இந்தியாவின் 18வது மாநிலமாக ஆனது.
- "இமாச்சலப் பிரதேசம்" என்ற பெயருக்கு "பனியின் மடி" என்று பொருள் என்பதோடு மேலும் இது ஜம்மு காஷ்மீர், லடாக், பஞ்சாப், ஹரியானா, உத்தரகாண்ட் மற்றும் சீனாவுடன் எல்லைகளைப் பகிர்ந்து கொள்கிறது.

## தூய்மையான ஆற்றலுக்கான சர்வதேச தினம் 2026 – ஜனவரி 26

- இது 2023 ஆம் ஆண்டில் ஐக்கிய நாடுகள் பொதுச் சபையால் (UNGA) பிரகடனப்படுத்தப் பட்டது.
- இந்த நாள், 2009 ஆம் ஆண்டில் சர்வதேச புதுப்பிக்கத்தக்க எரிசக்தி முகமை (IRENA) நிறுவப்பட்டதைக் குறிக்கிறது.
- மக்களுக்கும் பூமிக்கும் நன்மை பயக்கும் வகையில், தூய்மையான ஆற்றலுக்கு ஒரு நியாயமான மற்றும் அனைவரையும் உள்ளடக்கிய மாற்றத்தை ஏற்படுத்துவதற்காக விழிப்புணர்வை ஏற்படுத்துவதையும் நடவடிக்கைகளைத் திரட்டுவதையும் இது நோக்கமாகக் கொண்டுள்ளது.
- தூய்மையான ஆற்றலில் சூரிய ஆற்றல், காற்று ஆற்றல் மற்றும் நீர் மின்னாற்றல் போன்ற புதுப்பிக்கத்தக்க எரிசக்தி ஆதாரங்கள் அடங்குவதுடன் இவை பசுமை இல்ல வாயு வெளியேற்றத்தைக் குறைக்கவும் காலநிலை மாற்றத்தை எதிர்த்துப் போராடவும் உதவுகின்றன.

# இதரச் செய்திகள்

## படத்ரவா தான்

- படத்ரவா தான் மறுசீரமைப்புத் திட்டம் சமீபத்தில் தொடங்கப்பட்டது.
- படத்ரவா தான் ஆனது, அசாமில் உள்ள மிக முக்கியமான மதத் தலங்களில் ஒன்றாகும், என்பதோடு இது சங்கரதேவாவின் பிறப்பிடமாக உள்ளார்ந்தக் கலாச்சார மதிப்பைக் கொண்டுள்ளது.
- சங்கர்தேவா (1449–1568) ஒரு புகழ்பெற்ற சீர்திருத்தவாதி, கவிஞர் மற்றும் சமூகச் சிந்தனையாளர் ஆவார்.
- 'ஏக் சரண் நாம் தர்மம்' (நவ-வைணவ நம்பிக்கை) என்ற போதனையை போதித்துப் பரப்புவதற்காக முதன்முதலில் கீர்த்தன் கர் (சத்ரா) அமைப்பை அவர் நிறுவினார்.
- மனித பலி அல்லது நர பலி போன்ற இடைக்காலத்தின் பிற்போக்குத் தனமான நடைமுறைகளிலிருந்து அசாம் மக்களை அவர் மீட்டார்.
- சங்கரி நடனம் மற்றும் சத்ரிய நடனம் என அழைக்கப்படும் ஒரு பாரம்பரிய நடன வடிவத்தை அவர் உருவாக்கினார்.
- இந்தியாவின் சங்கீத நாடக அகாடமியானது, 2000 ஆம் ஆண்டில் இதை ஒரு பாரம்பரிய நடன வடிவமாக அங்கீகரித்தது.

## ரோஹ்தாஸ்கர் கோட்டை

- ரோஹ்தாஸ் கோட்டை என்றும் அழைக்கப்படுகின்ற ரோஹ்தாஸ்கர் கோட்டை பீகாரில் உள்ள சோன் நதிக்கரையில் அமைந்துள்ளது.
- இந்தியாவிலும் உலகிலும் உள்ள மிகப்பெரிய கோட்டைகளில் ஒன்றான இக்கோட்டை சுமார் 26 மைல்களுக்கு மேலான பரப்பில் பரவியுள்ளது.

- இந்தக் கோட்டையானது 1500 மீட்டர் உயரமுள்ள ஒரு மலையில் மிகப்பெரிய தற்காப்பு சுவர்களுடன் அமைந்துள்ளது.
- சூரிய வம்சத்தைச் சேர்ந்த இராஜா ஹரிச்சந்திரரால் கட்டப்பட்ட இக்கோட்டைக்கு, அவரது மகன் ரோஹிதாஷ்வாவின் பெயரிடப்பட்டது.

## மின்சார வேளாண் டிராக்டர்களுக்கான இந்திய தரநிலை

- மத்திய நுகர்வோர் விவகாரங்கள், உணவு மற்றும் பொது விநியோக அமைச்சர், புது டெல்லியில் IS 19262:2025 என்ற மின்சார வேளாண் பயன்பாட்டு இழுவை வாகனங்கள் (டிராக்டர்) சோதனைக் குறியீட்டை வெளியிட்டார்.
- இந்திய தரநிலை (IS) ஆனது இந்தியத் தரநிலைகள் வாரியத்தினால் (BIS) உருவாக்கப் பட்டது.
- சீரான சோதனை நெறிமுறைகள் மூலம் வேளாண் பயன்பாட்டிற்கான மின்சார இழுவை வாகனங்களின் பாதுகாப்பு, நம்பகத்தன்மை மற்றும் செயல்திறனை உறுதி செய்வதை இது நோக்கமாகக் கொண்டுள்ளது.
- IS 19262:2025 ஆனது PTO சக்தி, இழு தண்டு திறன், மண்டலங்கள் மற்றும் கப்பிகளின் செயல்திறன், அதிர்வு அளவீடு மற்றும் கூறுகள் மற்றும் ஒருங்கு சேர்ப்புகளின் ஆய்வுக்கான சோதனைகளைக் குறிப்பிடுகிறது.
- இந்தத் தரநிலை IS 5994:2022 - வேளாண் பயன்பாட்டு டிராக்டர்கள்: சோதனைக் குறியீடு மற்றும் தொடர்புடைய வாகனத் தரநிலைகள், மின்சார இழுவை வாகனங்களுக்கு ஏற்றவாறு மாற்றியமைக்கப்பட்டது.
- மின்சார இழுவை வாகனங்கள் டீசல் என்ஜின்களுக்குப் பதிலாக மின் கலன்களில் இயங்கும் மின்சார மோட்டார்களைப் பயன்படுத்துவதால் அவை குறைக்கப்பட்ட உமிழ்வு, குறைந்த இயக்கச் செலவுகள், அமைதியான செயல்பாடு மற்றும் குறைந்த பராமரிப்பு ஆகியவற்றை வழங்குகின்றன.

## பிப்ரவா நினைவுச்சின்னங்கள்

- புனித பிப்ரவா நினைவுச்சின்னங்களின் கண்காட்சி டெல்லியில் நடைபெற்றது.
- அவை புத்தரின் பூதவுடலுடன் தொடர்புடையவை என்று நம்பப்படுகிறது.
- உத்தரப் பிரதேசத்தின் பிப்ராவாவில், பிரித்தானிய கட்டிடக் கலை பொறியியலாளர் வில்லியம் கிளாக்ஸ்டன் பெப்பே 1898 ஆம் ஆண்டு பிப்ராவா நினைவுச் சின்னங்களைக் கண்டுபிடித்தார்.
- பெரும்பாலான நினைவுச்சின்னங்கள் பிரித்தானியக் காலனித்துவ அதிகாரிகளிடம் ஒப்படைக்கப்பட்டு 1899 ஆம் ஆண்டு கல்கத்தாவில் (தற்போதைய கொல்கத்தா) உள்ள இந்திய அருங்காட்சியகத்தில் வைக்கப்பட்டன.
- இருப்பினும், 1878 ஆம் ஆண்டு இந்தியப் புதையல் சட்டத்தின் கீழ், கண்டுபிடிப்புகளில் ஐந்தில் ஒரு பங்கை தக்க வைத்துக் கொள்ள பெப்பே அனுமதிக்கப்பட்டார்.
- அதைத் தொடர்ந்து வந்த ஆண்டுகளில், நினைவுச்சின்னங்களின் பகுதிகள் தாய்லாந்து, மியான்மர் மற்றும் இலங்கை போன்ற புத்த மதப் பெரும்பான்மை கொண்ட நாடுகளுக்கு பரிசாக வழங்கப்பட்டன.

- 2025 ஆம் ஆண்டில், சுமார் 127 ஆண்டுகளுக்குப் பிறகு அந்த நினைவுச் சின்னங்கள் இந்தியாவிற்கு நிரந்தரமாகத் திரும்புவதை உறுதி செய்யும் ஓர் ஒப்பந்தம் குறித்து இந்திய அரசாங்கம் பேச்சுவார்த்தை நடத்தியது.

## பிரம்மஞான சபையின் 150வது சர்வதேச மாநாடு

- 'One World, One life - The spirit of new humanity' என்ற கருத்துருவின் கீழ், பிரம்மஞான சபையின் 150வது சர்வதேச மாநாடு அடையாறில் கொண்டாடப்பட்டது.
- பிரம்மஞான சபையானது, 1875 ஆம் ஆண்டு நியூயார்க் நகரில் மேடம் H.P. பிளாவட்ஸ்கி மற்றும் கர்னல் H.S. ஓல்காட் ஆகியோரால் தொடங்கப்பட்டது.
- பிரம்மஞான சபை 1882 ஆம் ஆண்டு டிசம்பர் 19 ஆம் தேதியன்று சென்னையின் அடையாருக்கு மாற்றப்பட்டது.
- 1889 ஆம் ஆண்டில் இந்த சங்கத்தில் இணைந்த டாக்டர் அன்னி பெசன்ட், 1903 ஆம் ஆண்டில் அதன் தலைவரானார்.

## ஐக்கிய நாடுகள் சபையின் சர்வதேச ஆண்டு 2026

- ஐக்கிய நாடுகள் சபை (ஐ.நா.) 2026 ஆம் ஆண்டினை சர்வதேச மேய்ச்சல் நிலங்கள் மற்றும் கால்நடை வளர்ப்பாளர்களின் ஆண்டாக அறிவித்துள்ளது.
- இது விழிப்புணர்வை ஏற்படுத்துவதையும் ஆரோக்கியமான மேய்ச்சல் நிலங்கள் மற்றும் நிலையான மேய்ச்சல் நிலங்களின் மதிப்பை ஆதரிப்பதையும் நோக்கமாகக் கொண்டுள்ளது.
- 2026 ஆம் ஆண்டு ஆனது சர்வதேச பெண் விவசாயிகள் ஆண்டாகவும் (IYWF 2026) அறிவிக்கப் பட்டுள்ளது.
- இது விழிப்புணர்வை ஏற்படுத்தி, பாலின இடைவெளிகளை நிரப்பவும், உலகளவில் பெண்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்துவதற்குமான பல்வேறு நடவடிக்கைகளை ஊக்குவிக்கும்.
- நிலையான மேம்பாட்டிற்கான ஒரு குறிப்பிடத்தக்க சக்தியாக தன்னார்வத் தொண்டு நிறுவனத்தை ஊக்குவிப்பதற்கும் அங்கீகரிப்பதற்கும், 2026 ஆம் ஆண்டை நிலையான மேம்பாட்டிற்கான சர்வதேசத் தன்னார்வலர்கள் ஆண்டாக (IVY) ஐக்கிய நாடுகள் சபை அறிவித்தது.

## ப்ளூ கிராஸ் ஆஃப் இந்தியா - விலங்கு நலனில் 60 ஆண்டுகள்

- கேப்டன் V. சுந்தரம் 1959 ஆம் ஆண்டில் சென்னையின் தியாகராய நகரில் சிக்கித் தவித்த இரண்டு நாய்க்குட்டிகளை மீட்டார்.
- அவரும் அவரது மனைவி உஷா சுந்தரமும், காயமடைந்த மற்றும் கைவிடப்பட்ட விலங்குகளுக்காக வீட்டில் தற்காலிகக் கொட்டில்களைக் கட்டினார்கள்.
- இந்த அமைப்பு விலங்கு உதவி சங்கமாகத் தொடங்கி 1964 ஆம் ஆண்டில் ப்ளூ கிராஸ் ஆஃப் இந்தியா (BCI) ஆகப் பதிவு செய்யப்பட்டது.
- BCI அமைப்பின் ஸ்தாபன உறுப்பினர்களில் சுந்தரம், அவரது குடும்பத்தினர் மற்றும் தெய்வசிகாமணி போன்ற ஆரம்பகால ஆதரவாளர்கள் அடங்குவர்.

- BCI ஆனது 1964 ஆம் ஆண்டில் தெரு நாய்களுக்கான விலங்குப் பிறப்புக் கட்டுப்பாடு (ABC) திட்டத்தைத் தொடங்கியது.
- உலக சுகாதார அமைப்பு ஆனது 1990 ஆம் ஆண்டில் ABC திட்டத்தின் கீழ் ரேபிஸ் (வெறி நாய்க் கடி நோய்) எதிர்ப்பு தடுப்பூசிக்கு (ABC-AR) ஒப்புதல் அளித்தது.
- சென்னை மாநகராட்சிக் கழகமானது 1996 ஆம் ஆண்டில் தெரு நாய்களைக் கொல்வதை நிறுத்தி விட்டு ABC திட்டத்தை ஏற்றது.
- இந்திய அரசானது 2001 ஆம் ஆண்டில் விலங்குப் பிறப்புக் கட்டுப்பாடு (நாய்கள்) விதிகளின் கீழ் நாடு தழுவிய அளவிலான ABC நடவடிக்கையினைக் கட்டாயமாக்கியது.
- BCI ஆனது தங்குமிடங்கள், கால்நடைப் பராமரிப்பு, விலங்குகளின் தத்தெடுப்பு இயக்கங்கள் மற்றும் காயமடைந்த அல்லது ரேபிஸ் பாதிப்பு உள்ளதாக சந்தேகிக்கப் படும் விலங்குகளுக்குச் சிகிச்சை அளிக்கிறது.

## சோம்நாத் கோயில் - 1000 ஆம் ஆண்டு

- பிரதமர் "Somnath: 1,000 years of unbroken faith" என்ற தலைப்பிலான ஒரு கட்டுரையை வெளியிட்டார்.
- 2026 ஆம் ஆண்டில், கி.பி 1026 ஆம் ஆண்டில் கஜினி முகமதுவால் சோம்நாத் கோயில் மீது நடைபெற்ற முதல் தாக்குதலின் 1,000 ஆண்டுகள் நிறைவடைகிறது.
- சோம்நாத் கோயில் குஜராத்தில் வேராவல் அருகே பிரபாஸ் படானில் அமைந்துள்ளது.
- இது பாரம்பரியமாக சிவபெருமானின் 12 ஜோதிர்லிங்கங்களில் முதலாவதாகக் கருதப் படுகிறது.
- கி.பி 1026 ஆம் ஆண்டின் தாக்குதலுக்குப் பிறகு, அந்தக் கோயில் கிட்டத்தட்ட ஓராயிரம் ஆண்டுகளில்/ஒரு மில்லினியத்தில் அழிக்கப்பட்டு பல முறை மீண்டும் கட்டமைக்கப் பட்டது என்பதோடு இது அந்த நம்பிக்கையின் மீள்தன்மை மற்றும் தொடர்ச்சியைக் குறிக்கிறது.
- இந்தக் கோயில் சாளுக்கியர் (சோலங்கி) காலத்தில் புனரமைக்கப்பட்டது, பின்னர் 18 ஆம் நூற்றாண்டில் மராட்டிய ஆதரவின் கீழ் மீண்டும் மீட்டெடுக்கப்பட்டது.
- இந்தியா சுதந்திரம் அடைந்ததைத் தொடர்ந்து, 1951 ஆம் ஆண்டில் அதன் மறு கட்டமைப்பு தொடங்கப்பட்டு தற்போதைய கட்டமைப்பு ஆனது சாளுக்கியக் கட்டிடக் கலை பாணியில் மீண்டும் கட்டப்பட்டது.
- சர்தார் வல்லபாய் படேல் சோமநாதத்தை தேசிய மறுமலர்ச்சியின் அடையாளமாகக் கருதியதோடு, அதன் நவீன மறுகட்டமைப்பில் முக்கியப் பங்கு வகித்தார்.

## தட்சசீலாவில் குஷானர் கால நாணயங்கள்

- பாகிஸ்தானியத் தொல்பொருள் ஆராய்ச்சியாளர்கள் தட்சசீலாவிற்கு அருகிலுள்ள யுனெஸ்கோ அமைப்பினால் பட்டியலிடப் பட்ட இடத்தில் அரிய நாணயங்கள் மற்றும் அலங்கார கற்களைக் கண்டெடுத்துள்ளனர்.
- ஆரம்பகால நகர்ப்புறக் குடியேற்றத்தின் மிக முக்கியமான தொல்பொருள் தளமான பண்டைய பீர் மௌண்டில் இவை கண்டெடுக்கப் பட்டன.
- லேபிஸ் லாசுலி என அடையாளம் காணப்பட்ட இந்த அலங்காரக் கற்கள் கிமு 6 ஆம் நூற்றாண்டைச் சேர்ந்தவையாகும்.

- இந்த இடத்தில் காணப்படும் வெண்கல நாணயங்கள் குஷான வம்சத்தைச் சேர்ந்தவை மற்றும் கிபி 2 ஆம் நூற்றாண்டைச் சேர்ந்தவையாகும்.
- குஷான காலத்தின் ஆட்சியாளரான பேரரசர் வாசுதேவரின் ஒரு உருவமானது இந்த நாணயங்களில் பொறிக்கப்பட்டுள்ளன.

## கால்நடை மேய்ச்சல் நிலங்களுக்கான சர்வதேச ஆண்டு

- ஐக்கிய நாடுகள் சபையானது (UN) 2026 ஆம் ஆண்டினைக் கால் நடை மேய்ச்சல் நிலங்கள் மற்றும் மேய்ப்பர்களுக்கான சர்வதேச ஆண்டாக அறிவித்துள்ளது.
- கார்பன் பிரித்தெடுத்தல், பல்லுயிர் மற்றும் பருவநிலை மீள்தன்மைக்கு முக்கியமான புல்வெளிகள் மற்றும் புல் நிலக் காடுகள் மீது கவனம் செலுத்தப்படுகிறது.
- புல்வெளிகள் ஆனது வேளாண்மை, தோட்டங்கள், ஊடுருவல் இனங்கள், புதைபடிவ எரிபொருள் பிரித்தெடுத்தல் மற்றும் தீக்கட்டுப்பாட்டு கொள்கைகளால் பல்வேறு அச்சுறுத்தல்களை எதிர்கொள்கின்றன.
- கட்டுப்படுத்தப்பட்ட பயிர் எரிப்பு மற்றும் மேய்ச்சல் போன்ற பூர்வீக நடைமுறைகள் சுற்றுச்சூழல் அமைப்பின் ஆரோக்கியத்தைப் பராமரிக்க உதவுகின்றன என்றாலும் அவை பெரும்பாலும் கவனிக்கப்படுவதில்லை.
- உலகளாவிய மற்றும் இந்தியக் கொள்கைகள் புல்வெளிகளைப் பருவநிலைத் திட்டங்களிலும் பாரிசு உடன்படிக்கையின் தேசிய அளவில் தீர்மானிக்கப்பட்டப் பங்களிப்புகளிலும் (NDCs) ஒருங்கிணைப்பதை நோக்கமாகக் கொண்டுள்ளன.
- புல்வெளிகளை கார்பன் உறிஞ்சும் இடங்களாக அங்கீகரிப்பது பருவநிலைத் தணிப்பு மற்றும் மேய்ச்சல் வாழ்வாதாரங்கள் ஆகிய இரண்டையும் ஆதரிக்கும்.

## ஒருங்கிணைந்த தரப்படுத்தல் இணையதளம்

- இந்தியத் தர நிர்ணய அமைப்பின் (BIS) நிறுவன தினம் 2026 ஆம் ஆண்டு ஜனவரி 6 அன்று கொண்டாடப் படுகிறது.
- இந்த நிகழ்வில் மத்திய அரசு, புதிய இந்தியத் தர நிர்ணய அமைப்பின் (BIS) ஒருங்கிணைந்த தரப்படுத்தல் இணையதளத்தின் பீட்டா பதிப்பை அறிமுகப் படுத்தி உள்ளது.
- மேலும் இந்த நிகழ்வில் கல்வியறிவு, திறன்கள் மற்றும் அதிக தாக்கத்தை ஏற்படுத்தும் தகுதிகளை அங்கீகரிப்பதற்கான ஒரு கட்டமைக்கப்பட்ட முன்னெடுப்பான BIS-SAKSHAM (கல்வியறிவு, திறன்கள் மற்றும் அதிக தாக்கத்தை ஏற்படுத்தும் தகுதிகளை அங்கீகரிப்பதற்கான திட்டம்) எனும் வருடாந்திர சிறப்பு அங்கீகாரத் திட்டமும் இந்த நிகழ்வில் தொடங்கப்பட்டது.
- "SHINE - தரநிலைகள் அதிகாரம் பெற்ற பெண்களுக்குத் தகவல் அளித்து வளர உதவுதல்" என்பது BISன் ஒரு புதிய திட்டமாகும் என்பதோடு இது இந்தியாவின் தர நிலைப் பயணத்தில் பெண்களை மையத்தில் கொண்டுள்ளது.
- BIS என்பது நுகர்வோர் விவகாரங்கள், உணவு மற்றும் பொது விநியோக அமைச்சகத்தின் கீழ் உள்ள நுகர்வோர் விவகாரங்கள் துறையின் கீழ் செயல்படும் இந்தியாவின் தேசிய அளவிலான தர நிர்ணய அமைப்பாகும்.

## காஷ்மீரில் உள்ள ஜெஹான்போரா புத்த வளாகம்

- ஜம்மு & காஷ்மீரின் பாரமுல்லாவில் உள்ள சுமார் 2,000 ஆண்டுகள் பழமையான ஜெஹான்போரா புத்த ஸ்தூபி வளாகம் அறிவியல் பூர்வமாக அகழாய்வு செய்யப் பட்டுள்ளது.
- குஷானர் காலத்தினைச் சேர்ந்த (கிபி 1-3 ஆம் நூற்றாண்டு) இந்த இடம் 10 ஏக்கர் பரப்பளவில் பரவியுள்ளது.
- இதில் பல ஸ்தூபிகள், அப்சிடல் சைத்யாக்கள் (பிரார்த்தனை மண்டபங்கள்), விகாரங்கள் (துறவிகள் குடியிருப்புகள்), நகர்ப்புறக் குடியிருப்புகள் மற்றும் கலைப் பொருட்கள் உள்ளன.
- காஷ்மீரைக் காந்தாரத்துடன் (ஆப்கானிஸ்தான்-பாகிஸ்தான் பகுதி) இணைக்கும் பண்டையப் பட்டு வர்த்தகப் பாதையினூடே ஜெஹான்போரா அமைந்துள்ளது.
- பௌத்த சமயமானது, காஷ்மீரில் பேரரசர் அசோகரின் (கி.மு. 3 ஆம் நூற்றாண்டு) கீழ் தொடங்கி கனிஷ்கர் மற்றும் ஹுவிஷ்கர் ஆகியோரின் கீழ் குஷானர் ஆட்சியின் போது செழித்து வளர்ந்தது.

## பெங்களூரு–கடப்பா–விஜயவாடா வழித்தடம்

- ஆந்திரப் பிரதேசத்தின் புட்டபர்த்தி அருகே பெங்களூரு–கடப்பா–விஜயவாடா பொருளாதார வழித்தடத்தை (NH-544G) கட்டமைக்கும் போது இந்தியத் தேசிய நெடுஞ்சாலை ஆணையம் (NHAI) நான்கு கின்னஸ் உலக சாதனைகளைப் படைத்தது.
- மூன்று வழிப் பாதையில் 9.63 கி.மீ நீளமான தொடர்ச்சியான பிட்டுமினஸ் கான்கிரீட் (BC) இடுதலையும், சுமார் 24 மணி நேரத்தில் அதிக அளவு BC (10,655 மெட்ரிக் டன்) இடுதலையும் NHAI மேற்கொண்டது.
- தொடர்ந்து 57,500 மெட்ரிக் டன் BC அமைத்ததற்கும், 52 கி.மீ நீளமுள்ள மூன்று வழிப் பாதையை இடையூறு இல்லாமல் அமைத்ததற்கும் என்று மேலும் இரண்டு சாதனைகள் படைக்கப் பட்டன.
- கர்நாடகா மற்றும் ஆந்திரப் பிரதேசத்தை இணைக்கும் இந்த 343 கி.மீ தடம் ஆனது, ஆறு வழிப் பாதை அணுகல் கொண்ட கட்டுப்பாடுடன் கூடிய நெடுஞ்சாலையாகும்.

## BRICS 2026 வலைத்தளம் மற்றும் முத்திரைச் சின்னம்

- 2026 ஆம் ஆண்டிற்கான இந்தியாவின் BRICS தலைமைத்துவத்தின் அதிகாரப்பூர்வ வலைத் தளம் மற்றும் முத்திரைச் சின்னம் சமீபத்தில் வெளியிடப்பட்டது.
- இந்தக் குழுவின் 20வது ஆண்டு நிறைவை ஒட்டி, 2026 ஆம் ஆண்டில் இந்தியா BRICS தலைமைப் பொறுப்பை ஏற்கும்.
- இதன் கருத்துரு 'Building for resilience, innovation, cooperation, and sustainability' என்பதாகும்.
- BRICS என்பது வளர்ந்து வரும் சந்தைகள் மற்றும் வளர்ந்து வரும் பொருளாதாரங்களுக்கிடையேயான ஒத்துழைப்புக்கான ஒரு தளமாகும்.
- முத்திரைச் சின்னம் ஆனது அனைத்து உறுப்பினர் நாடுகளின் வண்ணங்களுடன் பாரம்பரியம் மற்றும் நவீனத்துவத்தைக் கலந்து பன்முகத் தன்மையில் ஒற்றுமையைக் குறிக்கிறது.

- இந்தியாவின் தலைமைப் பொறுப்பின் போது கூட்டங்கள், முன்னெடுப்பு மற்றும் விளைவுகள் குறித்த தகவல்களை இந்த வலைத்தளம் வழங்கும்.

## கம்பளி காண்டாமிருகத்திலிருந்து மரபணு மீட்பு

- பனி யுக சாம்பல் ஓநாய்க்குட்டியின் வயிற்றில் காணப்பட்ட செரிக்கப்படாத இறைச்சியிலிருந்து கம்பளி காண்டாமிருகத்தின் மரபணுவை அறிவியலாளர்கள் மீட்டனர்.
- சுமார் 14,400 ஆண்டுகளுக்கு முன்பு வாழ்ந்த இந்த ஓநாய்க்குட்டி, வடகிழக்கு சைபீரியாவின் டுமாட் கிராமத்திற்கு அருகிலுள்ள நிரந்தர உறைபனியில் பாதுகாக்கப் பட்ட நிலையில் கண்டுபிடிக்கப்பட்டது.
- கம்பளி காண்டாமிருகங்களின் எண்ணிக்கை அழிவின் விளிம்பினை எட்டும் வரை மரபணு ரீதியாக வளம் மிக்கதாக இருந்ததாக ஆய்வில் தெரியவந்துள்ளது.
- ஆராய்ச்சியாளர்கள் இனவிருத்திக்கான எந்த அறிகுறிகளையும் கண்டறியவில்லை, இது விரைவான எண்ணிக்கை சரிவைக் குறிக்கிறது.
- ஆய்வின்படி, இந்த அழிவு முக்கியமாக பனி யுகத்தின் இறுதியில் பருவநிலை வெப்ப மயமாதலுடன் தொடர்புடையது.

## ஹென்லே கடவுச் சீட்டுக் குறியீடு 2026

- 2026 ஆம் ஆண்டு ஹென்லே கடவுச் சீட்டுக் குறியீட்டில் இந்தியா 80வது இடத்தில் உள்ளது.
- இந்தியக் கடவுச் சீட்டுக் வைத்திருப்பவர்கள் முன் நுழைவு இசைவு சீட்டு இல்லாமல் 55 நாடுகளுக்கு பயணிக்கலாம் (நுழைவு இசைவுச் சீட்டு இல்லாமல், வருகையின் போதான நுழைவு இசைவுச் சீட்டு அல்லது இணைய நுழைவு இசைவுச் சீட்டு).
- இந்தியாவானது நைஜீரியா மற்றும் அல்ஜீரியாவுடன் சேர்ந்து இதில் 80வது இடத்தைப் பகிர்ந்து கொள்கிறது.
- இந்தக் குறியீடு சர்வதேச விமானப் போக்குவரத்துச் சங்கத்தின் (IATA) தரவைப் பயன்படுத்தி பயணச் சுதந்திரத்தின் அடிப்படையில் கடவுச் சீட்டுகளை தரவரிசைப் படுத்துகிறது.
- சிங்கப்பூர் 192 நாடுகளுக்கான பயண அணுகலுடன் ஒரு வலுவான கடவுச் சீட்டினைக் கொண்டுள்ளது அதே நேரத்தில் ஆப்கானிஸ்தான் 24 நாடுகளுக்கான அணுகலுடன் பலவீனமான கடவுச் சீட்டினைக் கொண்டுள்ளது.

## லோக்பால் தினம் 2026

- இந்திய லோக்பால் அமைப்பு அதன் உருவாக்கத் தினத்தை ஜனவரி 16, 2026 அன்று கொண்டாடியது.
- 2013 ஆம் ஆண்டு லோக்பால் மற்றும் லோக் ஆயுக்தாக்கள் சட்டத்தின் 3 ஆம் பிரிவு, ஜனவரி 16, 2014 அன்று நடைமுறைக்கு வந்ததை இந்த நாள் குறிக்கிறது.
- இந்திய லோக்பால் நாட்டின் உச்ச நிலை ஊழல் எதிர்ப்பு அமைப்பாகும்.
- அரசு ஊழியர்களுக்கு எதிரான ஊழல் புகார்களை விசாரிப்பதற்கான அதிகார வரம்பை லோக்பால் கொண்டுள்ளது.

## பராக்கிரம் திவாஸ் 2026

- நேதாஜி சுபாஷ் சந்திர போஸின் பிறந்தநாளைக் குறிக்கும் வகையில் பராக்கிரம் திவாஸ் (தைரிய நாள்) ஜனவரி 23, 2026 அன்று அனுசரிக்கப்பட்டது.
- நேதாஜி சுபாஷ் சந்திர போஸ் ஜனவரி 23, 1897 அன்று ஒடிசாவின் கட்டாக்கில் பிறந்தார்.
- அவர் இந்திய தேசிய இராணுவத்தின் (INA) தலைவராக இருந்தார் என்பதோடு மேலும் "டெல்லி சலோ" என்ற முழக்கத்தையும் அவர் முன் வைத்தார்.
- அவர் 1938 மற்றும் 1939 ஆம் ஆண்டுகளில் இந்தியத் தேசிய காங்கிரஸின் தலைவராக தேர்ந்தெடுக்கப்பட்டார்.
- இந்திய அரசு ஜனவரி 19, 2021 அன்று பராக்கிரம் திவாஸை அதிகாரப் பூர்வமாக அறிவித்தது.

## ஹைட்ரஜன் அழுத்த உயர்த்தி எந்திரத்தின் பாதுகாப்பு மதிப்பீடு

- அறிவியல் மற்றும் தொழில்துறை ஆராய்ச்சி சபை - மத்திய சுரங்க மற்றும் எரி பொருள் ஆராய்ச்சி நிறுவனம் (CSIR-CIMFR) இந்தியாவின் முதல் ஹைட்ரஜன் அழுத்த உயர்த்தி - வெளியீட்டு எந்திரத்தின் முழு-அமைப்பு பாதுகாப்பு மதிப்பீட்டை நடத்தி உள்ளது.
- உத்தரப் பிரதேசத்தின் கிரேட்டர் நொய்டாவில் உள்ள தேசிய அனல் மின் கழக லிமிடெட்டில் இந்த மதிப்பீடு செய்யப்பட்டது.
- ஹைட்ரஜன் எரிபொருள் நிலையங்களுக்கு அதிக அழுத்தத்தில் ஹைட்ரஜனை அழுத்தி வழங்குவதற்கு ஹைட்ரஜன் அழுத்த உயர்த்தி எந்திரங்கள் அவசியம் ஆகும்.
- இந்த அமைப்பு, மிகவும் வெடிக்கும் தொழில்துறை சூழல்களைக் குறிக்கின்ற எரிவாயு குழு IIC நிலைமைகளின் கீழ் சோதிக்கப்பட்டது.
- மிகவும் விரிவான ஆய்வில் தீத்தடுப்பு சாதனங்கள், பாதுகாப்பு ஊடு பிணைப்புகள், அலாரங்கள் மற்றும் அழுத்த வெளியீட்டு அமைப்புகள் ஆகியவை அடங்கும்.

## உலகின் மிகப் பழமையான குகை ஓவியம்

- இந்தோனேசியாவில் கண்டுபிடிக்கப்பட்ட உலகின் மிகப் பழமையான குகை ஓவியம் குறித்து ஆராய்ச்சியாளர்கள் அறிக்கை வெளியிட்டுள்ளனர்.
- இந்த ஓவியம், இந்தோனேசியாவின் சுலவேசியில் உள்ள சுண்ணாம்புக்கல் குகைகளில் காணப்படும் ஒரு சிவப்பு கை அச்சின் படம் ஆகும்.
- யுரேனியம்-தொடர் பகுப்பாய்வைப் பயன்படுத்தி மேற்கொள்ளப்பட்ட அறிவியல் காலக் கணிப்பின்படி, இந்தக் கை அச்சு சுமார் 67,800 ஆண்டுகள் பழமையானது எனத் தெரியவந்துள்ளது.
- இதுவரை அறியப்பட்ட ஐரோப்பிய குகை ஓவியங்களை விட இது கிட்டத்தட்ட 30,000 ஆண்டுகள் பழமையானது.

★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★